தமிழ்நாட்டுக் கிறித்துவம்

தொகுதி இரண்டு

ம. சோ. விக்டர்

தமிழ்நாட்டுக் கிறித்துவம்

(கி.பி. 1500 முதல்)

தொகுதி - இரண்டு

ம. சோ. விக்டர்

யாத்திசைப் பதிப்பகம்

50, அண்ணா நகர்

அரியலூர் – 621 713

அலைபேசி: 98432 73914

தமிழ்நாட்டுக் கிறித்துவம் – வரலாற்று நூல்
(கி.பி. 1500 முதல்)
பகுதி II

Dr. Ma.So. Victor, M.A., Ph.D.,
Cell : 9843273914

© ஆசிரியர்

முதல் பதிப்பு : ஜூலை 2005
இரண்டாம் பதிப்பு : சனவரி 2013

பக்கம் : 240
படிகள் : 1200

பதிப்பு :
யாத்திசைப் பதிப்பகம்
50, அண்ணா நகர்
அரியலூர் - 621 713
அலைபேசி: 98432 73914

வடிவமைப்பு :
எஸ். தனசேகர்

விலை : **200. 00**

அச்சிட்டோர்:
ஸ்ரீராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ்
15, தானப்ப தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 044-42664695, 90031 81586

Website : http://www.cict.in
Email : ramsay2@rediffmail.com
ramasamy.k@cict.in

Phones (O): 044-28448841
044-28442716
Fax : 044-28448888

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
இந்திய அரசு, மனித வள மேம்பாட்டு அமைச்சகம், உயர் கல்வித்துறை, மொழிகள் பிரிவு)
எண். 6, பாலாறு இல்லம், காமராசர் சாலை, சேப்பாக்கம், சென்னை - 600 005, இந்தியா

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(Government of India, Ministry of Human Resource Development, Department of Higher Education, Languages Division)
No. 6, Kamarajar Salai, Chepauk, Chennai - 600 0050, India

F.No. 11-264/CICT/2011-12/

Prof. K. RAMASAMY
Officer in Charge

This is to certify that Dr. Ma.So. Victor, M.A., Ph.D., known to me for the last twenty years, is a reputed scholar and researcher, who has been working on the ancientness and classicality of the Tamil language for the last twenty-five years. He has written about forty well-researched books running to more than 10,000 pages on the impact of Tamil Culture and Civilization on the Western nations during the pre-historic days as well as on the achievement of the ancient Tamils in various branches of knowledge including science, mathematics, astronomy, theology and sociology.

Dr. Ma.So. Victor is a very distinguished etymologist, who has been steadily making substantial contributions to ancient Tamil studies. He has explained with suitable illustrative examples how the roots of several hundreds of words in world's languages are to be found in Tamil. He has presented learned papers in numerous seminars and conferences and published scholarly articles in a number of

standard journals and magazines. He has now been invited to give lectures by the Tamil Organisations in Italy, France, Germany, Norway and other European nations.

Central Institute of Classical Tamil, Chennai, has granted a sum of Rs.2,50,000/- for his research project on "Tamil and Western Semitic Famlily of Languages".

We hope and trust that Dr. Ma.So. Victor will receive the international encouragement he deserves.

K.Ramasamy

(K. RAMASAMY)

தமிழ்நாட்டுக் கிறித்துவம் – பகுதி II

(CHRISTIANITY IN TAMIL NADU)

(கி.பி. 1500 முதல்)

உள்ளே...

ஆசிரியர் உரை 11

தோற்றுவாய் 15

1. கொழை 17
2. அய்யம்பேட்டை 20
3. கைக்கோளர் யாவர் ? 22
4. வரதராசன் பேட்டை 31
5. கொழையில் கிறித்துவம் - தோமையார் காலம் 35
6. ஐரோப்பிய விடைத் தொண்டர்கள் 41
7. வீரெங்கராயர் வம்ச வரலாறு 45
8. மரபு வழிப்பட்டியல் 52
9. மரிய நாதராயர் - குறிப்புகள் பற்றிய கண்ணோட்டம் 53
10. இந்தியாவில் ஆயங்கள் 64
11. ஐரோப்பியக் குழுக்கள் 70
12. தமிழ்நாடு கி.பி. 1670 - படம் 74
13. 1600களில் தமிழகம் 75
    - சேதுபதி மன்னர்கள்
    - விசுவநாத நாயக்கன்
    - விரப்பநாயக்கன்
    - முத்துகிருட்டிணப்ப நாயக்கன்
    - முத்துவீரப்ப நாயக்கன்
    - திருமலை நாயக்கன்
    - சொக்கநாத நாயக்கன்
    - முத்துவீரப்ப நாயக்கன்
    - இராணி மங்கம்மாள்
    - உடையார் பாளையம் அரசு
    - அரியலூர் அரசு
    - செஞ்சி அரசு
14. செஞ்சி நாட்டில் கிறித்துவம் 104
15. அய்யம் பேட்டையில் கிறித்துவம் 110

16. சமயக்குழுக்களிடையே நிலவிய போட்டிகள் 118

17. அய்யம் பேட்டை - மரபுவழிகள் 123

- வீரெங்கராயன்
- தொண்டைமான்
- ஈஸ்திரியன்

18. பிற வகையறாக்கள் 142

- காங்கேயன்
- செம்பை
- திண்ணப் பிரியன்
- கண்டியன்
- கலிங்கத்தான்
- சேய்ப் பிள்ளையான்
- முனித்திரியன்
- களத்துப் பிரியன்
- கச்சிராயன்
- ஆபரணத்தான்
- கத்தாழன்
- சேங்கண்டிச் சல்வி

19. அருளானந்தர் காலம் - படம் 157

20. அய்யம் பேட்டையில் கிறித்துவத் தொண்டர்கள் 158

21. ஜான் - டி - பிரிட்டோ 165

22. வீரமா முனிவர் 171

25. இயேசு அவையினரும் பிரெஞ்சுக் குருமார்களும் 199

- இயேசு அவை
- இக்னேசியஸ் லொயோலா
- இயேசு அவை முடக்கம்
- பிரெஞ்சுக் குருமார்கள்
- தென்னூர் - புதிய குடியிருப்பு

23. நூறாண்டுக் காலக் குழப்பம் 185

24. குழப்பத்தின் விளைவுகள் 194

25. கிறித்துவமும் சாதியும் 199

26. சிறுபான்மைக் கிறித்துவர் 231

✧✧✧

ஆசிரியர் உரை

தமிழ் நாட்டுக் கிறித்துவம் பகுதி - 2 எனும் இந்நூல் ஏற்கனவே வெளியிடப்பட்ட தமிழ் நாட்டுக் கிறித்துவம் பகுதி-1 என்னும் நூலின் தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்றது. இருபது நூற்றாண்டுகளில் வளர்ந்த தமிழ்நாட்டுக் கிறித்துவத்தை ஒரு சில பகுதிகளில் நூல்களாக வெளியிட இயலாது. எடுக்கப்பட்ட செய்திகளைவிட விடுக்கப்பட்டவை ஏராளம். கடந்த இருபது நூற்றாண்டுகளில் கிறித்துவம் வளர்ந்த வரலாற்றை 20 நூல்களாக வெளியிட்டால், ஓரளவுக்கு முழுமையான வரலாறு கிட்டும். அம்முயற்சியில் இறங்க மனம் உண்டு என்றாலும், அம்முயற்சிக்கு பக்கவலமாய் இருக்கப் பலரின் கூட்டுதவித் தேவையாகும். இதுபற்றியெல்லாம் சிந்திக்கவும், கிறித்தவர்களுக்கும் மற்றவருக்கும் கிறித்துவ வரலாற்றைத் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணமும் இன்று எவருக்குமில்லை. எல்லாப் பொறுப்புகளும் தன்னலப்பட்டுப் போய்விட்ட நிலையில் இவைபற்றி சிந்திக்க, தகுதிவாய்ந்த தலைமைகளுக்கு நேரமில்லை. இன்னமும் கூட வீரமாமுனிவருடைய மடல்களும் குறிப்புகளும் படிக்கப்படாமல், பழங்குப்பைகளாய் வெளிநாட்டு ஆவணக் காப்பகங்களில் உறங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் படித்து வெளியிட வேண்டுமென நினைப்போரிடம் பணம் இல்லை, பணம் தந்து உதவக் கூடிய பொறுப்பிலுள்ளவர்களுக்கு நல்ல மனமில்லை. தொடர்ந்து இதுபற்றிப் பேசுபவர்களும் எழுதுபவர்களும் கூட மதியீனர்களாகவே கருதப்படலாம்.

தமிழ்நாட்டுக் கிறித்துவம் பற்றிய ஆய்வுகள், குறிப்பாக கி.பி. ஒன்று முதல் பதினான்கு நூற்றாண்டுகள் வரையிலான கால அளவுகளில் நடைபெற்ற நிகழ்வுகளைத் தமிழ்நாட்டுக் வரலாற்றில் தோண்டி எடுக்க வேண்டியுள்ளது. கிறித்துவ மெய்யியல் கொள்கைகள், தமிழ்நாட்டு அனைத்து சமயங்

களிலும் நிழலாடுவதை மேலெழுந்த வாரியாகக் காண முடிகிறது. சைவ, வைணவ, புத்த, சமண சமயங்களை ஊன்றி ஆய்ந்து, கிறித்துவத்தின் தாக்கங்கள், இச்சமயங்களிலெல்லாம் எவ்வாறு பரவிக் கிடக்கின்றன என்பதை வெளிப்படுத்த வேண்டும். இந்த ஊக்கங்களுக்கு உதவும் ஊன்றுகோல்கள் இன்று காணப்பட வில்லை யென்பது, பெருங்குறையாகும். குறிப்பாகத் தமிழகத் திலுள்ள ஆயர் பெருமக்கள் இத்தகைய ஆய்வுகளுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். ஒவ்வோரு பங்குத் தளமும் உருவான உண்மையான வரலாற்றைத் தோண்டியெடுக்க வேண்டும். குளிர் நாட்டினின்றும் வந்துற்ற ஐரோப்பியத் துறவிகள், தமிழகத்தின் வெப்பம், மழை, பனி, மாறுபட்ட உணவுப் பழக்கங்கள், புரியாத மொழி, பொல்லாத பகைவர், என்ற புறத்தாக்குதல் களையெல்லாம் பொருட்படுத்தாது, காடுகள் மலைகள் கழனிகள், கால்வாய்கள் வழியே கால்கள் கடுக்க நடந்து சென்று, கிறித்துவத்தைப் பரப்பிய பாங்கு, இன்றைய சமயத்தலைவர் களுக்கு மூலமான வழிகாட்டுதல்களாகும். ஒற்றைக் கள்ளி மரத்தின் கீழே ஒரு மழைக்காலத்தைக் கழித்த வீரமாமுனிவரின் நெஞ்சுரத்தைச் சொற்களால் சொல்ல இயலுமோ? பிணிக்கப் பட்ட கைகளுடன் குதிரையிலமர்ந்தவர், இழுத்துச் செல்ல, எங்கும் நிற்காமல் 80 கிலோமீட்டர் தொலைவு ஓடிச் சென்ற பிரிட்டோவின் கால்கள், கால காலத்துக்கும் தொழக் கூடியவை களல்லவா? சினத்தின் அறிகுறியே என்னவென்று அறியப்படாத அந்த செம்முகத்துக்குச் சொந்தக்காரர் சேவியர் அல்லவா? காரி உமிழ்ந்தவர்களிடமும் கருணைகாட்டிய நெஞ்சங்கள் கிறித்துவ வரலாற்றில் ஏராளம் ஏராளம். ஒப்பிட்டுப் பார்த்தால் நெஞ்சு விம்பி, வீங்கி, வெடித்து விடும் போல் தோன்றுகிறது.

கிறித்துவம் தமிழகத்தில் அறியப்பட்டதற்கு 300 ஆண்டு களுக்கும் பிறகே, உரோம் நகருக்கும் பிற ஐரோப்பிய நாடு களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது என்பதால், கிறித்துவத்தின் மூத்த குடியும் தமிழ்க்குடியே எனலாம். இயேசுக் கிறித்துவின் மார்பிலேயே விரலைவிட்டு ஆட்டிப்பார்த்த வியத்தகு மாமனிதர் தோமையார் வழிவந்த கிறித்துவர்கள் தமிழர்கள்தாம். வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நாட்டுக் கிறித்துவம், வாழும் கிறித்துவர்களுக்கு வழிகாட்டியாய் அமையும் நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. உள்ளக் குமுறல்கள் உணர்ச்சிப் பிழம்பு களாய் சில விடங்களில் சிலிர்த்துக் கொண்டு எழுகின்றன.

இக்குமுறல்களும் கூட, நெறிமுறைகளுக்குட்பட்ட சொல்லாட்சி இலக்கணத்தின் அடிப்படையிலேயே சொல்லப்பட்டுள்ளன.

இந்நூலில், கொழை - அய்யம்பேட்டை (இன்றைய பெரம்பலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், வரதராசன் பேட்டை) என்ற இரட்டை ஊர்களைப் பற்றியச் செய்திகள், விரித்துக் கூறப்பட்டுள்ளன என்றாலும், தமிழகத் திலுள்ள எந்தப் பங்குத் தளத்தின் வரலாறும் இதுபோன்ற நிகழ்வுகளைக் கொண்டவைகளே என்பதால், இதனைத் தமிழ்நாட்டுக் கிறித்துவ வரலாறாகவே கொள்ளல் வேண்டும். இதில் கூறப்பட்டுள்ள செய்திகளில் சிலவற்றை குறைகளாகக் கொள்ளாமல், சொல் மருத்துவமாகக் கொள்ள வேண்டு கிறேன். வாளால் அறுத்துச் சுட்ட போதும், மருத்துவன் பால் மாளாத காதல் கொள்ளும் நோயாளன் நிலையில் இந்நூலை நோக்குதல் சிறப்பானது.

இந்நூலை வடிவமைத்து அச்சிட்டு உதவிய ஸ்ரீராக வேந்திரா லேசர் பிரிண்டர்ஸ் நிறுவனத்துக்கும் அவர்களுக்கும் எனது நன்றி..

அரியலூர்

– ம.சோ. விக்டர்

தோற்றுவாய்

இடைக்கால வல்லாண்மைச் சோழர்களான இராச இராசனும் அவனது மைந்தன் இராசேந்திரனும், ஈழத்தின் மேலும், கடாரத்தின் மேலும் படையெடுத்த காலங்களில், வன்னியர்கள் என்ற மரபைச் சேர்ந்த போர் மறவர்கள், சோழர் படையில் வில்லாளர்களாகப் போர் புரிந்தனர். கி.பி. 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கங்கைகொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகரம் சோழர்களுக்காக உருவாக்கப்பட்டது. இந்நகரைத் தோற்றுவித்ததில் பெரும் பணியாற்றியவர்களும், அவ்வன்னிய இன மக்களே. தலைநகரைச் சுற்றி வாழ்ந்திருந்த அம்மக்கள் சோழப் பேரரசின் நற்குடிகளாகவே விளங்கினர். கங்கைகொண்ட சோழபுரம், உருவாக்கப்பட்ட போது, அந்நாட்டுக்கு வடக்கே பலகாதத் தொலைவு வரையிலும் பரவியிருந்த தண்டக அடவியெனும் காட்டுப் பகுதியின் சிறு பகுதியே அழிக்கப்பட்டது. பாண்டியனின் மீன்கொடியைச் சுருட்டி வெற்றி கண்டதின் வாயிலாக, மீன் சுருட்டிய சோழ புரமும், வெற்றிமேல் வெற்றி கொண்ட சோழர்களைப் போற்ற செயங்கொண்ட சோழபுரமும், முறையே வடக்கிலும் மேற் கிலும் உருவாக்கப்பட்டன.

தலைநகருக்கு வடக்கே திருமுட்டம் என்ற பகுதியை உள்ளடக்கி, விளந்தை எனும் ஊரில் கச்சிராயன் எனும் படைத்தலைத் தலைவன், பேரரசின் கீழ் ஆண்டுவந்தான். கச்சிராயன் வன்னியர் மரபைச் சார்ந்தவனே.[1] விளந்தையில் குறும்படையொன்றை நிலை நிறுத்தி, சோழர்களுக்குத் தேவை யான காலத்தில் அனுப்பிவந்தான். படைவீரர்கள் தங்கியிருந்த பகுதிகள் முறையே, சேனைப்பள்ளம் என்றும், சூரைப்பள்ளம் என்றும் அழைக்கப்பட்டன. விளந்தைக்கு வடக்கே இராசேந்திர சோழன் பெயரில் நகர் ஒன்று உருவாக்கப்பட்டு

1. இடைக்காலச் சோழர்கள், சதாசிவ பண்டாரத்தார்.

அது இராசேந்திரப் பட்டணம் எனப்பட்டது. விளந்தைக்குக் கிழக்கே வெள்ளாறு மற்றும் வீராணம் ஏரிவரையில் தண்டக அடவியே தழைத்திருந்தது. இது தண்டகாரண்யம் என்று வடமொழியில் கூறப்பட்டது.

கி.பி. 15, 16ஆம் நூற்றாண்டுகளில், சோழப் பேரரசு நிலை குலைந்துபோன காலை, ஆந்திரத்து நாயக்கர்களின் ஆளுகையின் கீழ், மேற்கண்டப் பகுதிகள் வந்துற்றன. தமிழ் நாட்டை, மதுரை - தஞ்சை - செஞ்சி என்றவாறு பிரித்துக் கொண்ட நாயக்கர்களின் மரபுகள், அதுவரையில் வழக்கிலில்லாத புதிய நடைமுறைகளைத் தமிழகத்தில் புகுத்தினர். இக்காலை, காஞ்சித் தலைவனொருவனுக்கு, செயங்கொண்ட சோழ புரத்தைச் சுற்றிய பகுதிகள் பரிசாக அளிக்கப்பட்டன. தெலுங்கனான அப்படைத் தலைவன், தனக்குக் கிடைத்த நாட்டை, உடையார் பாளையம் நாடு எனப் பெயரிட்டுக் கொண்டு ஆண்டான். நாயக்கர்களின் நாடான செஞ்சியின் ஒரு பகுதியான உடையார் பாளையம், செஞ்சியினின்றும் பிரிக்கப்பட்டது. நடுத்திட்டு என அழைக்கப்பட்ட அணைக்கரையினின்றும் வடக்கே வெள்ளாறு வரையில் எல்லையாகக் கிழிக்கப்பட்ட கோடு, இரு அரசுகளுக்கும் பிணக்குகள் தோன்ற வாய்ப்பளித்து, அது 200 ஆண்டு கால வரை நீடித்தது. விளந்தைக்கு கிழக்கே அரைக்காத தொலைவில் அமைந்திருந்த எல்லைக் கோட்டுக்கு அருகில், செஞ்சியின் பகுதியாக, கொழை எனும் சிற்றூர் அமைந்திருந்தது. இன்று அது சாவடிக் குப்பம் என அழைக்கப் படுகிறது. இரு அரசுகளின் வணிகப் பொருட்கள் இங்கே எடை போடப்பட்டு வரிவிதிக்கப்பட்டன. இந்த அலுவலகம் சாவடி என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டதால், அவ்வூர் சாவடிக் குப்பம் என்றும் சொல்லப்பட்டது.

அருளானந்தர் என்று இத்தமிழ் கூறும் நல்லுலகத்தால் அழைக்கப்பட்ட ஜான் டி பிரிட்டோ என்னும் இயேசு அவைத் துறவி, தமிழகத்தில் தனது சமயப் பணிகளைத் தொடங்கிய முதல் ஊர் கொழை எனப்படுவதாகும். வீரமாமுனிவரும் தனது முதல் பணிகளை இங்குதான் தொடங்கினார். பிற்காலக் கிறித்துவ வரலாற்றின் மையப்பகுதியான கொழையைச் சுற்றி யுள்ள பகுதிகளில் அறியப்பட்ட நிகழ்வுகளை உள்ளடக்கி இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

✧✧✧

1

கொழை

கொழை என்னும் பெயர் இன்றும் கூட வழக்கில் உள்ளதைக் காணும்போது, இப்பெயர் நெடிய நாட்களுக்கு முன்பே வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தெளியலாம். தமிழகத்திலுள்ள ஒவ்வொரு ஊரும் ஏதோவொரு செய்தி அல்லது நிகழ்வின் தொடர்பாகவே அறியப்படுவதால், கொழை என்ற சொல்லும் ஏதோவொரு பொருளைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். கொழை என்ற சொல், கொழுமை அல்லது செழுமை என்ற பொருளின் திரிபுச் சொல்லாக இருக்க வேண்டும். கொள் என்ற மூலச் சொல்லுக்கு, ஏற்றுக் கொள்ளுதல் என்பது பொருளாகும். கொள் - கொழு - கொழுமை - கொழுத்த என்றவாறு விரிவடையும். கொழுமை = செழித்து வளர்ந்த நிலை. கொழுமை என்ற சொல்லே, கொழை எனத் திரிந்தது எனக் கருதலாம். நீர் வளமும் நிலவளமும் நிறையப் பெற்ற பகுதி கொழை எனச் சொல்லப்பட்டது என்பது, பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. குழை என்ற சொல்லே, கொழை எனத் திரிந்ததாகவும் கொள்ள இடமிருப்பினும் குழை என்பது, வழி, பாதை, தடம் என்ற பொருளில் சொல்லப் படுவதாகும். அடவியின் ஊடே செல்லும் வழியும் குழை என்றே சொல்லப்படும்.

இவ்வூருக்கு வந்த ஐரோப்பியச் சமயப் பணியாளர்கள், தமிழ் எழுத்தான ழகரத்தை ஒலிக்க இயலாத நிலையில், கொலை என்றே இவ்வூரினைப் பதிவு செய்தனர். கொலை என்ற தமிழ்ச் சொல்லுக்குக் கொல்லுதல் என்ற பொருளுண்டு என்பதை ஐரோப்பியர் அறியவில்லை. ஆனால் கிறித்துவ வரலாற்றை எழுதிய தமிழர்களும் கூட, ஐரோப்பியக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, கொழை என்ற ஊர்ப்பெயரின் செய்திகளை அறியாமலேயே, இவர்களும் கொலை என்றே

எழுதி வைத்துள்ளனர்.[2] தூய அருளானந்தரைப் பற்றிய நூலை எழுதிய ஆசிரியர் ஒருவர், இன்னும் ஒரு படி மேலே சென்று, அருளானந்தர் பிற்காலத்தில் கொலை செய்யப்படுவார் என்பதை அறிந்திருந்த இறைவன், முதன்முதலாக அவரைக் கொலை என்ற ஊருக்கு அனுப்பலானார் என்று எழுதுகிறார். இவர்களின் அறியாமையை என்னென்று சொல்வது!

குழை என்ற தமிழ்ச்சொல், இளகுதல் - துவளுதல் - வாடுதல் - தளர்வுறுதல் என்ற பொருளிலும் அறியப்படுவதால், குழைந்து சேறும் நீருமாக உள்ள நிலம் குழைநிலம் என்றும் சொல்லப்பட்டு, குழை - கொழையாக மாறியிருக்க வேண்டும். எப்படியிருப்பினும் கொழை என்பது, தனித்தமிழ்ச் சொல்லான குழை அல்லது கொழுமை என்ற சொற்களின் திரிபுச் சொல்லே என்பது உறுதி.

இயேசு அவையினரின் மடல்களில் கொழை (கொலை) என்ற ஊர் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொழைக்கு அருகிலுள்ள வீராணம் என்ற ஊரிலிருந்து ஒரு மடலும், திருமுட்டத்திலிருந்து ஒரு மடலும் பதிவுகளில் காணப்படுகின்றன. இவைகளும் கூட, கொழையிலிருந்தே எழுதப்பட்டவைகளாகக் கொள்ளலாம். கி. பி. 1690வரையிலும், கொழை பற்றிய தகவல்களைத் தரும் ஐரோப்பியர்கள், பிறகு எந்தத் தகவலையும் அளிக்கவில்லை. கி. பி. 1676ஆம் ஆண்டில், கொழையிலிருந்து ஆந்திரே பிரயர் என்பார், பால் ஒலிவா என்பவருக்கு எழுதிய மடலும்,[3] மீண்டும் அவரே, கி.பி. 1678ஆம் ஆண்டில் வீராணத்திலிருந்து எழுதிய மடலும் அறியக் கிடக்கின்றன.[4] வீராணம் என்பது ஏரியைக் குறித்த சொல்லேயின்றி ஊரினைக் குறிப்பதாகாது எனக் கருதி, இக்குறிப்பும் மடலும் கொழையிலிருந்தே எழுதப்பட்டதாகக் கொள்ளலாம். தொடக்கத்தில் கி.பி. 1665ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள், பிரயர், புரொயென்சா என்பாருக்கு எழுதிய மடல், திருமுட்டத்திலிருந்து எழுதப்பட்டதாக அறியப் படுகின்றது.[5] இதுவும் கூட, கொழையிலிருந்து எழுதப்பட்ட தாகவே கொள்ளல் வேண்டும். ஆந்திரே பிரேயர் என்ற துறவி, கி. பி. 1665 முதல் 1778 வரையிலான காலத்தில் கொழையில்

2. ஓரியூரின் ஒளிவிளக்கு, சி.கே. சுவாமி.
3. The History of Nayaks, R. Sathiyanatha Ayyar, p. 211.
4. Ibid, p. 213.
5. வரலாறும் வழக்காறும், அ. மரியசூசை, ப. 32.

பணியாற்றியுள்ளார் என்பது தெளிவாகிறது. ஆகவே, கொழை என்ற சிற்றூர், ஐரோப்பியர்கள் அவ்விடத்திற்கு வருமுன்னரே அறியப்பட்டிருந்தது என்பது தெளிவு.

கொழை, செஞ்சி நாயக்கரின் ஆளுகைக்குட்பட்டிருந்த மேற்கு எல்லையில் அமைந்திருந்த ஊர் என்பது தெளிவு. அங்கு சுங்கச் சாவடி அமைக்கப்பட்டிருந்ததும் கண்கூடு. இன்றைக்கு, கடலூர் - பெரம்பலூர் மாவட்ட எல்லையாகக் காணப்படும் கோடு, 400 ஆண்டுகட்கு முன்பு, செஞ்சி - உடையார் பாளையம் அரசுகளிடையே வகுக்கப்பட்டதாகும். இவ்விரு அரசுகளும் இவ்வெல்லைக் கோடு பற்றிய பிணக்குகளைக் கொண்டிருந் தாலும், கி.பி. 1817[6] ஆம் ஆண்டில் இந்த எல்லைக் கோடு, ஆங்கில அரசால் உறுதிப்படுத்தப்பட்டது. விடுதலை பெற்ற இந்தியாவில், திருச்சி - தென்னாற்காடு மாவட்ட எல்லை யாயிற்று. தற்போது கடலூர் - பெரம்பலூர் மாவட்ட எல்லை யாக உள்ளது. தற்போது வரதராசன் பேட்டை என்ற ஊரின் வட பகுதியிலுள்ள அந்தோனியார் புரம் என்ற பகுதியின் தெருவே அந்த எல்லைக்கோடாக உள்ளது. அத்தெருவின் மேற்குப் பகுதி யிலுள்ள வீடுகள் பெரம்பலூர் மாவட்டத்தையும், கிழக்குப் பகுதியிலுள்ள வீடுகள் கடலூர் மாவட்டத்தையும் சார்ந்தவை. ஒரே தெருவில் வாழும் எதிர்வீட்டுக்காரர்கள், இருமாவட்டங் களைச் சேர்ந்தவர்களாக அறியப்படுவது விந்தையான நிகழ்வு தான். இந்த எல்லைக் கோட்டுக்குக் கிழக்கேயுள்ள பகுதி கொழை என்றும், மேற்கேயுள்ள பகுதி வரதராசன் பேட்டை என்றும் அறியப்படுகின்றன.

வரதராசன் பேட்டை என்ற பெயர் கடந்த 100 ஆண்டு களில் மாற்றம் பெற்றுள்ளதாகவும், அதற்கு முன்பு அவ்வூர் அய்யம்பேட்டை என்றே அழைக்கப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.[7] ஆங்கிலேயர், இந்தியா முழுதும் நில அளவுக் கணக்கெடுப்பு நடத்திய காலத்தில் (கி.பி. 1801), அய்யம் பேட்டையை மேற்கு எல்லையாகவும், கொழையைக் கிழக்கு எல்லையாகவும் கொண்டு அளவை செய்யப்பட்டது. எனவே, கொழை - அய்யம்பேட்டை ஆகிய இரண்டும் அடுத்தடுத்து இருந்த இருவேறு ஊர்கள் என்பது தெளிவாகின்றது.

✧✧✧

---

6. The Aristocracy of Southern India, A. Vadivelu, p. 216
7. Father Beschi, Rev. L. Besse, p. 10.

2

அய்யம்பேட்டை

ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு வருகைதந்த பிறகு, கடல் வாணிகத்திலும் உள்நாட்டு வணிகத்திலும் கவனம் செலுத்தினர். ஐரோப்பியர் தமிழகம் வருமுன்னரே, தமிழகத்தில் பல வணிகக் குழுக்கள் இருந்தன. இவை கி. பி. 300 ஆண்டுகளுக்குப் பிறகு பரவலாக அறியப்படுகின்றன. கிறித்துவர்களின் தொடர்புடைய மணிகிராமம், இசுலாமியர்களின் தொடர்பு கொண்ட அஞ்சு வண்ணம், கருநாடகத்தின் திசை ஆயிரத்து ஐநூற்றுவர், தமிழகத்தின் நாட்டார், நகரத்தார் போன்ற வணிகக் குழுக்கள் பரவலாக அறியப்பட்டவை. இக்குழுவினர், நாயக்க மன்னர் களின் ஆட்சிக் காலத்திலும், சிறப்புற்றிருந்தனர். [8] நாயக்கர் காலத்தில் புதுப்புதுத் தொழில்கள் தோன்றியதோடு, அத்தொழில் களை நாயக்கர்கள் ஊக்குவித்தனர். நாயக்கர் காலத்தில் தமிழகத் திற்கு வந்த ஐரோப்பியர்கள், குறிப்பாகப் போர்த்துக்கீசியர்கள், கிழக்குமேற்குக் கடற்கரைகளில் பெரிதும் நடமாடினர். உள் நாட்டில் பெருகும் தொழில்களைக் கண்காணித்து அத்தொழில் வழிப் பொருட்களை விலைக்கு வாங்கினர். அவை களில் ஒன்று துணி வகைகள் ஆகும்.

அக்காலத்தில் (கி.பி. 16ஆம் நூற்றாண்டுகளில்) தமிழகத் தில் நெய்யப்பட்ட காலிகோ என்ற வகையான துணிகளுக்கு ஐரோப்பாவில் நல்ல விலை கிடைத்தது. இதனால் ஐரோப்பிய மற்றும் இந்திய வணிகர்கள், துணிநெய்வோரை அணுகித் தங்களது தேவைகளை விளக்கினர் போர்த்துக்கீசியர்களின் குறிப்புகளின்படி, தமிழகத்தில் 59 இடங்களில் துணிகள் பெரு மளவில் நெய்யப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாயின.

8. The Medieval Merchant Guilds of south India, Meera Abraham, p. 99.

இந்த 59 இடங்களில் திருமுட்டம் என்ற ஊரின் பெயரும் காணப்படுகின்றது.[9] இங்கு விற்பனையான துணிகள் பறங்கிப் பேட்டைத் துறைமுகத்தின் வழியே ஏற்றுமதி செய்யப்பட்ட தாகச் செய்திகள் கூறுகின்றன. திருமுட்டம் ஒரு வணிக நகரம் என்பதற்கான வேறுச் சான்றுகள் கிடைக்கவில்லை. திருமுட்டம், நாயக்க மன்னர்களின் காலத்தில் கட்டப்பெற்ற வைணவக் கோயிலால் சிறப்புற்றிருந்தது என்பது மட்டுமே அவ்வூரைப் பற்றியச் செய்தியாகும்.

நாயக்க மன்னர்கள் காலத்தில்தான் பேட்டை என்ற பெயரில் வணிக விற்பனையோடு தொடர்புகொண்ட சந்தைகள் உருவாக்கப்பட்டன.[10]

இடைக்காலச் சோழர்கள் காலத்தில் இவை போன்ற சந்தைப் பேட்டைகள் இருந்தன என்பதற்கானச் சான்றுகளும் இல்லை. விற்பனைக் கூடங்கள் இருந்தன, ஆனால் அவை பேட்டைகள் என்று அழைக்கப்படவில்லை. திருமுட்டம், விளந்தைப் பகுதிகளில் பேட்டை என்றோர் இடமும், அய்யம் பேட்டை என்றோர் இடமும் கட்டப்பெறுகின்றன. பேட்டையை விட அய்யம்பேட்டை பெருவணிகக் கூடமாக இருந்தது என அறியலாம். கைக்கோளர் என்ற வகுப்பார் அய்யம்பேட்டை யில் இருந்ததற்கானச் சான்றுகள் தெளிவாக உள்ளன.

✧✧✧

---

9. Portuguese in the Tamil Coast, S. Jeya seela stephen, p. 142 (a), Map No.4.
10. Winslow Dictionary, p. 815.

3

கைக்கோளர்கள் யாவர்?

கைக்கிளவர் என்றும், கைக்குளர் என்றும் கூறப்படும் கைக்கோளர்கள் நெசவுத்தொழில் செய்து வந்தவர்கள் என்று செய்திகள் கூறுகின்றன. கைக்கோளர்கள், செங்குந்தர்கள் என்றும், அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தெலுங்கர்களே என்றும். நாயக்க மன்னர்கள் தமிழகம் வந்தபோது, நெசவுத் தொழில் செய்ய அழைத்து வந்தனர் என்றும் சிலர் கருதுகின் றனர். மற்றும் சிலர். கைக்கோளர்கள் தமிழர்களேயென்றும், இடைக்காலச் சோழர் படையில் பணியாற்றியவர்கள் என்றும், சோழப்படையில் பள்ளிப்படை (வன்னியர்பிரிவு) என்ற பிரிவு இருந்ததைப் போன்று, கைக்கோளர் படை என்ற பிரிவும் இருந்ததாகவும் கூறுவர் வளைந்த தடியொன்றைக் கையில் கொண்டு, எதிரியின் தலையைத் தாக்குமாறு சுழற்றி விடுவது இவர்களுக்குக் கைவந்த கலையென்றும் சொல்லப்படுகின்றது. கைக்கோள் என்பதும் செங்குந்தம் என்பதும் போர்க் கருவிகளே எனக் கூறுவர் போரில்லாக் காலங்களில், கைக்கோளர்கள் நெசவுத் தொழில் செய்து வந்தாகவும் கூறப்படுகின்றது. கை கோளக்கள், தெலுங்கர்கள் என்ற கருத்தைவிட. தமிழர்கள் என்ற கருத்தே சரியானதாகவுள்ளது.

பொதுவாகப் பேட்டை என்ற சொல்லில் முடியும் ஊர்கள் யாவும் வணிகத் தொடர்புடையவைகளே என்பதால். அய்யம் பேட்டையும் ஒரு வணிகக் கூடமே என்பது தெளிவு தமிழகத் தில் பேட்டை என்ற பெயரில் முடியும் ஊர்கள் பெருமளவில் உள்ளன. என அறியலாம் சோழர்களின் படையில் பணியாற்றிய கைக்கோளர்கள், தலைநகருக்கு அருகிலேயே குடியிருப்பு களைக் கொண்டிருந்தனர் என்பதை, அய்யம்பேட்டைக்கு அருகிலிருந்த சேனைப்பள்ளம். சூரப்பள்ளம் போன்ற பெயர் களால் அறியலாம். அந்த வகையில் அய்யம்பேட்டையிலும்

கைக்கோளர்கள் கி.பி. 10 ஆம் நூற்றாண்டுக் காலந் தொட்டுக் குடியிருந்து வந்தனர் எனக் கருதலாம். திருமுட்டம் என்று குறிப்பிடப்படும் நெசவுத் தொழில் ஊர், உண்மையில் அய்யம் பேட்டையே எனக் கருத இடமுண்டு. அய்யம் பேட்டையை விட திருமுட்டம் சமய அளவில் புகழ் பெற்றிருந்ததால், அய்யம் பேட்டைக் கைக் கோளர்கள். திருமுட்டத்துக் கைக் கோளர்களாகச் சொல்லப்பட்டனர். அய்யம் பேட்டையின் குடிமக்களும் கைக்கோளர்களே எனக் கருதலாம்

அய்யம்பேட்டை என்ற பெயர் தஞ்சைக்கருகில் ஓரிடத் திலும் தற்போது நாம் குறிப்பிடும் இடத்திலும். இரு இடங்களில் அறியப்படுகின்றது. தஞ்சைக்கருலுள்ள அய்யம்பேட்டை கி.பி. 1800 ஆண்டுகளில் ஆண்டு வந்த தஞ்சை மன்னன் சரபோசியின் அமைச்சர்களில் ஒருவனான ராமய்யன் என்ற பிராமணன் பெயரால் அழைக்கப்படுவதாகவும். அவ்வூரும் ஒரு வணிக இடமே என்றும் மராட்டிய மன்னர்கள் பற்றிய குறிப்புகளில் காணப்படுகின்றது.[11] ஆனால் கொழைக்கு அருகிலுள்ள அய்யம் பேட்டை என்ன காரணத்தால் அவ்வாறு அழைக்கப்பட்டது என்பதற்கான தெளிவான குறிப்புகள் எதுமில்லை. அய்யம் பேட்டையில் இருந்த கைக்கோளர்களின் துணிகளை வாங்கவும் கைக்கோளர்கள் தங்கள் துணிகளை வெளியூரில் சென்று விற்கவுமாக இது வணிக ஊராக இருந்தது என்பதில் ஐயமில்லை

சங்க காலத்திலிருந்து வணிகர்களின் தெய்வமாக சாத்தன் என்பவன் அறியப்படுகின்றான்.

சாத்தனை வணிகர்கள் வழிபட்டதால், வணிகர்களையே சாத்தன் என்ற பெயரால் அழைக்கும் வழக்கும் தமிழகத்தில் இருந்தது. சீத்தலைச்சாத்தன் என்ற மணிமேகலையின் ஆசிரியர் வணிகரே. அவரது தந்தையார் கூலவாணிகர் என அறியப்படு கின்றார். கூலம் என்பது தவசங்களைக் குறித்த தமிழ்ச் சொல் லாகும். நெல்லை மாவட்டத்தில் சாத்தன்கள் சேர்ந்து ஊர் நலனுக்காக வெட்டிய குளம் ஒன்று, சாத்தன் குளம் என அழைக்கப்பட்டது. தற்போது அது சாத்தான் குளம் என்று வேறு பொருளில் அறியப்படுகின்றது. வணிகர்களின் தெய்வ மாகிய சாத்தனை பிராமணர்கள் சாஸ்தா என்று திரித்துக் கூறி அதற்குப் பல கதைகளையும் கூறிவைத்தனர்.

---

11. மராட்டியர் வரலாறு, தமிழ்ப் பல்கலைக்ழகம், தஞ்சாவூர், ப.

சாத்தன் என்ற தெய்வம். அய்யன் என்றும் அய்யனார் என்றும் வீரனார் என்றும் அழைக்கப்பட்டது. இன்றும் ஊர்ப் புறத்தே காவல் தெய்வமாகக் கருதப்படும் அய்யனாரை புறம் பணையான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.[12] புறப்பணை யான் வாழ்கோட்டம் என்பது அய்யனார் கோவிலே. அய்யனார் ஊர்க்காவல் தெய்வமாகக் கருதப்பட்டது பிற்கால வழக்கே யன்றி உண்மையில் அய்யனார் ஒரு வணிகக் கடவுளே. மாரிக் காலம் முடிந்தது. தைத்திங்களில் தங்களது வணிகத்தைத் தொடங்கி, அடுத்த மழைக்காலம் வரையில் ஊர் ஊராக வணிகர்கள் செல்வர். அவ்வாறு அவர்கள் வாணிகப் பயணம் மேற்கொள்ளும் முன்னதாக, தங்களது. ஊரிலிருந்த அய்யனாருக்குப் படையல் செய்து, தங்களது வணிகப் பயணம் இனிதே முடியவும், பெருமளவிலான பொருளை ஈட்டவும், வழி படுவர். பயணம் முடிந்து ஊர் திரும்பியதும் மீண்டும் நன்றிப் படையல்களைச் செய்வர். இப்படையல் பெரியவிழா போன்றே நடைபெற்றன. ஆடு மாடு கோழி போன்றவைகளைக் காவு கொடுத்தனர். தங்கள் வணிகத்தின் ஊர்தியான குதிரையை அய்யனார் முன்நிறுத்தி, அக்குதிரைக்கும் படையல் செய்து வழிபாடு நடத்துவர். குதிரைகள் இல்லாத அய்யனார் கோவில் தமிழகத்தில் இல்லை எனலாம். அய்யனார், வணிகர்களின் தெய்வமே என்பதை அக்குதிரைகளே சிலைகளாக நின்று சான்றளிக்கும் வகையில் உள்ளன.

இவ்வாறு, வணிகர்களின் தெய்வமாகக் கருதப்பட்ட அய்யனாரை, பிற்காலத்தில் பிராமணர்கள் அய்யப்பன் என்று கதைகள் பின்னி சிவனுக்கும் அரிக்கும் பிறந்தவனாகக் கூறி வைத்தனர். சாத்தன்[13] சாஸ்தா ஆனதும், அய்யன் அய்யப்பன் ஆனதும், பிற்காலச் செய்திகளாகும். அய்யப்பன் சாஸ்தா போன்ற தெய்வப் பெயர்கள் சங்ககால இலக்கியங்களில் காணப் படவில்லை யென்பதும் அவை தமிழகத்தில் பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட சைவ வைணவப் பினக்குகளைச் சரிக்கட்டத் தோற்றுவிக்கப்பட்டவைகளே என்பதும் வரலாறாகும்[14] வணிகர்

12. சிலப்பதிகாரம், 9:12, (புறம்பணையான் என்பான் சாதவாகனன் என்ற கருத்து தவறானதாகும்.)
13. மேலதே, 25:66
14. Ayyanar : A Mythological person said to have sprung from Vishnu and Siva. - Winslow. p. 195.

களுக்காக வணிகர்களே உருவாக்கிக் கொண்ட தெய்வமே அய்யனார் கடவுளாகும். அக்காலத்தில் எந்தக் கோவிலும் ஊருக்கு உள்ளே கட்டப்படுவதில்லை வடகிழக்கு மூலையான (சனி மூலை) ஈசானிய மூலையிலேயே கோவில்களைக் கட்டினர். இன்றிருக்கும் தஞ்சைப் பெரிய கோயிலும் கூட தஞ்சை நகருக்கு நேரான வடகிழக்கு மூலையில் கட்டப்பட்டதே. இன்று நகர்ப் பெருக்கம், கோவிலை ஊரின் நடுவே உள்ளது போல் காட்டுகிறது.

கொழைக்குமேற்கேயிருந்த அய்யம்பேட்டை, அய்யனார் பேட்டை என்றே வழங்கப்பட்டிருக்க வேண்டும் அய்யன் என்பது பிராமணனைக் குறித்த பிற்காலச் சொல்லாகும், தஞ்சைக்கருகில் உள்ள அய்யம்பேட்டை, ஒரு பிராமணனின் பெயரால் கி.பி. 1800 ஆண்டுகளுக்குப் பிறகே உருவான ஊராகும். ஆனால் கொழை அய்யனார் பேட்டை கி.பி. 1000 ஆயிரம் ஆண்டுகளிலேயே, சோழர் கால குடியிருப்பு நகரமாக விளங்கிய தாகும் இவ்விரு அய்யம் பேட்டைகளுக்குமான பெயர்க் காரணங் களும் வெவ்வேறானவை என்பதை உணர்தல் வேண்டும்

இன்று உடையார் பாளையம், பரணம், இரும்பிலிக்குறிச்சி போன்ற பகுதிகளில் உள்ளோர், அய்யம் பெருமாள் என்ற பெயரைச் சூடிக் கொள்கின்றனர். பரணம் என்ற ஊருக்கு அருகிலுள்ள அய்யனார் கோவில் அக்காலத்தில் புகழ் பெற்ற தாகும்.

தொடக்கத்தில் வணிகத் தெய்வமாக அறியப்பட்ட அய்யனார், பிற்காலத்தில் புறம்பணையான் என்ற ஊர்ப்புறக் கடவுளாகவும், பொதுமக்களின் தெய்வமாகவும் வழிபடப் பட்டான். பெருமாள் என்பது பொதுவாக வைணவக் கடவுளைக் குறித்தாலும் பெரும் + ஆள் என்ற பொருளில், பெரியவர் என்பதே பொருளாகும். அவ்வகையில்,

அய்யனார், அய்யம்பெருமாள் ஆனார். அய்யம் பெருமாளுக்கு அய்யம் பேட்டையில் தற்போதுள்ள பழைய கோயில் இருந்த இடத்தில், கோவில் இருந்ததாகவும், அதனை இடித்துவிட்டு அவ்விடத்திலேயே கிறித்துவக் கோயில் கட்டப் பட்டதாகவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.[15] இதன்

15. வரலாறும் வழக்காறும், அ. மரிய சூசை, ப.13.

வழியில் பார்க்கும்போது இவ்விடத்துக்குத் தென்மேற்கேதான் அய்யம்பேட்டை என்ற ஊர் நிலைபெற்றிருந்திருக்க வேண்டும். அந்த ஊரின் வடக்குப் பகுதியில் கைக்கோளர்கள் குடியிருந்திருக்க வேண்டும். இன்று அறியப்படும் கைக்கோளர் தெரு என்ற ஊரமைப்பும், பேட்டை என்ற பின்னொட்டுச் சொல்லமைப்பும், அய்யனார் கோவில் இருந்ததைப் பற்றியச் செவிவழிச் செய்திகளும், அய்யம்பேட்டை சோழர் காலத்து வணிக நகரம் எனவும், அது நாயக்கர் காலத்திலும் தொடர்ந்திருந்தது என்பதையும் போர்த்துக்கீசிய ஆவணங்களும் அறிவிக்கின்றன. அய்யனார் பேட்டை என்பதே அய்யம் பேட்டை என அழைக்கப்பட்டது. பிற்காலத்தில், அய்யம் பேட்டைக்கும் கொழைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட எல்லைக் கோடுகள், அய்யம்பேட்டையை உடையார் பாளையத்திலும், கொழையைக் செஞ்சியிலும் இணைந்தன.

கைக்கோளர்கள் கி.பி. 1750ஆண்டுககள் வரையில் அய்யம்பேட்டையில் வாழ்ந்திருந்தனர் எனக் கொள்ளலாம். பிறகு அவர்கள் மேற்கு நோக்கிச் சென்றுவிட்டதாகக் கருத இடமுண்டு. கி.பி. 1760 ஆண்டுகளில் ஆங்கிலேயே பிரெஞ்சுக் காரர்களிடையே தேன்றிய வணிகப் போட்டிகள், அய்யம் பேட்டைக் கைக்கோளர்களையும் குடிபெயர வைத்தது. எனக் கருதலாம் இக்காலத்தில் புதுச்சேரியின் ஆளுநராக இருந்த தூய்ப்ளே, உடையார் பாளையம் மன்னரிடம் வணிக ஒப்பந்தம் செய்து கொண்டதாக, அனந்தரங்கம் பிள்ளையின் நாள் குறிப்புகள் கூறுகின்றன.[16] காலிகோ (calico)என்னும் துணி வகைகளை நெய்து தரும்படி, தூய்ப்ளே மன்னரிடம் கேட்டுக் கொண்டதாக அச்செய்தி கூறுகிறது. இதன் அடிப்படையில் உடையார் பாளையம் பகுதியிலிருந்த, குறிப்பாக அய்யம் பேட்டையிலிருந்த கைக்கோளர்களை உடையார் பாளையத் துக்கு அருகிலேயே குடியிருக்க மன்னர் ஆணையிட்டார். அதன் விளைவாகச் சுற்றுப்புறத்து நெசவாளர்கள், உடையார் பாளையத் தைச் சுற்றிலும் குடியமர்த்தப்பட்டனர். இன்று அறியப்படும் செங்குந்தபுரம். போன்ற நெசவாளர்களின். குடியிருப்புகள், தூய்ப்ளே காலத்தில் உருவாக்கப்பட்டவைகளே.[17]

---

16. துபாஷி அனந்த ரங்கப் பிள்ளையின் நாள் குறிப்புகள்

17. மேலதே.

கங்கை கொண்டசோழபுரத்தைச் சுற்றியிருந்த ஊர்களில் வாழ்ந்திருந்தோரில் பெரும்பாலானவர்கள் வன்னிய இன மக்களே என்பதால் அய்யம் பேட்டையிலும் வன்னியர்கள் வாழ்ந்திருக்க வாய்ப்புகளுண்டு. ஏனெனில் வன்னியர் இனத்தைச் சார்ந்த கச்சிராயன் என்ற படைத்தலைவன் பொறுப்பில், விளந்தைப் பகுதிகள் விடப்பட்டிருந்தன. என்பதைச் சோழர் காலச் செய்திகள் தெரிவிக்கின்றன. அய்யம் பேட்டையில் வன்னியர்கள் வாழ்ந்திருந்ததற்கானச் செய்திகள் உள்ளன. கைக்கோளர்கள் வாழ்ந்திருந்த பகுதியில் இன்று கண்டியர்கள் என்ற பெயர் கொண்ட வன்னிய இனமக்கள் வாழ்ந்து வருவதோடு அப்பகுதிக்குக் கண்டியங்குப்பம் என்ற பெயரும் உள்ளது என்பதால், இந்த வன்னியர்களின் குடியேற்றம் பிற்காலத்திலேயே அவ்விடத்தில் நிகழ்வுற்றிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.[19]

நாயக்கர்கள் காலத்தில் அய்யம்பேட்டையைச் சுற்றிலும் சிலுவைச்சேரி. திருக்களப்பூர், பேட்டை, விளந்தை, திருமுட்டம், கொழை போன்ற ஊர்கள் இருந்ததற்கானச் சான்றுகள் உள்ளன.[20] இன்று அறியப்படும் ஆதிவராக நல்லூர், இராமாபுரம், மேட்டுக்குப்பம், புதுக்குப்பம், தென்னூர் போன்ற குடியிருப்புகள் பிற்காலத்தில் உருவானவைகளே. எனவே அய்யனார் கோவிலில் இருந்ததும், பேட்டைச் சந்தைகள் நடைபெற்றவையுமான செய்திகளின் அடிப்படையில், அய்யனார் பேட்டை அய்யம்பேட்டை எனவும், சொல்லப்பட்டது என அறியலாம். இன்று, அய்யம் பேட்டை என்ற பெயர் மாற்றப்பட்டு, அரசு அவணங்களில் வரதராசன் பேட்டை என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், நாட்டுப்புற மக்கள், இவ்வூரை இன்னும் அய்யம் பேட்டை என்றே அழைக்கின்றனர்.

கி.பி. 1600 ஆண்டுகளில், அய்யம்பேட்டையைச் சுற்றிலும் காடுகளே மிகுந்திருந்தன. இவ்வூருக்குக் கிழக்கே ஒரு காத அளவில் வீராணம் என்ற பெரும் ஏரி விரிந்து நீண்டிருந்தது.

---

18. உடையார் பாளையம் வரலாற்றுச் செவிவழிச் செய்திகள்.
19. கங்கை கொண்ட சோழபுரத்துக்குத தெற்கேயுள்ள கண்டியங் கொல்லையிலிருந்து அய்யம்பேட்டைக்கு வந்தவர்களே கண்டியர் என்பார் என்ற கருத்தும் உண்டு.
20. Aristocracy of South India, p. 198.

இன்று சிற்றூர்களாக அறியப்படும் இராமபுரம், கொண்ட சமுத்திரம், மாமங்கலம், அறந்தாங்கி, காடுவெட்டி, கோயில் வாழ்க்கை, தண்டாரங் குப்பம் ஆகியவை காட்டுப் பகுதி களாகவே இருந்தன. திருக்களப்பூர் மட்டும் ஊராக அறியப் பட்டது. இப்பகுதிகள் யாவும் தண்டக அடவி என அறியப் பட்டன. யானை, சிறுத்தை, காட்டுப்பன்றி போன்ற விலங்குகள் இங்கு வாழ்ந்திருந்தன. மேற்கே உடையார் பாளையம், தொடக்கத்தில் காடாகவே இருந்து பின்னர் அழிக்கப்பட்டு நகரமாக்கப்பட்டது. ஆனாலும் உடையார் பாளையத்துக்கு மேற்கே தந்தனூர், மணகெதி, இரும்பிலிக் குறிச்சி, இடையக் குறிச்சி, அகரம், இலையூர் என வடக்கே வெள்ளாற்றங்கரை வரையில் இக்காடு விரிவடைந்திருந்தது. இக்காடுகளில் வழிப்பறிக் கள்வர்கள் மிகுந்து காணப்பட்டனர். பிற்றை நாளில், இக்கள்வர்களையெல்லாம் ஒழித்துவிட்டதாக உடையார் பாளைய மன்னரின் குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன. இக்காட்டு வழிகளில் புதியவர் நுழைந்து மீள இயலாது என்று சொல்லப் பட்டது. பிற்காலத்தில் வீரமாமுனிவர், இக்காட்டு வழி யினூடே தான் ஏலாக் குறிச்சியிலிருந்து அய்யம்பேட்டை விருத்தாசலம், கோனான் குப்பம் போன்ற ஊர்களுக்குச் சென்ற தாகக் கூறுவர்.

கி.பி. 1000-1400 ஆண்டுகளில், சோழப் பேரரசின் தலை நகராக கங்கை கொண்ட சோழபுரம் விளங்கியதால், அடுத் திருந்த பல ஊர்கள் சிறப்புடன் திகழ்ந்தன அரசாங்க அலுவலகங்கள். வணிக நிறுவனங்கள் தவசக் கொள்முதல் நிலையங்கள் எனப் பல ஊர்கள் அறியப்படுகின்றன. கங்கை கொண்ட சோழபுரம் என்ற தலைநகரம் குறுக்கிலும் நெடுக்கிலுமாக 3 கல் பரப்பளவில் இருந்ததாகக் கூறப்படு கின்றது. தலைநகரோடு சாலைவழியாக அடியிற்கண்ட ஊர்கள் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. மீன் சுருட்டி, கண்டியங் கொல்லை, கோடாலி கருப்பூர், சோழமாதேவி, பழூர், செயங் கொண்ட சோழபுரம், நாக மங்கலம், காமரச வல்லி, கீழப் பழுவூர், ஆரியலுருக்கு அருகில் இன்று சிற்றூராக விளங்கும் கொல்லாபுரம், சென்னிவனம், திட்டக்குடி, முதுகுன்றம், (விருத்தாச்சலம்), விளந்தை, இராசேந்திரப்பட்டணம் போன் றவை, நகரங்களாக அறியப்பட்டிருந்தன. பேரூர்களாக மெய்க் காவல் புத்தூர், வாணதிரையன் பட்டணம், மண்மலை,

கல்லாத்தூர், திருக்களப்பூர், அய்யம்பேட்டை திருமுட்டம், (ஸ்ரீமுஷ்ணம்), கூடலையாற்றூர், உடையார் குடி, (காட்டு மன்னார் கோயில்) ஆகியவை விளங்கின. இன்று அறியப்படும் அணைக்கரை (Lower Anaicut) நடுத்திட்டு என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இவைகளன்றி ஏராளமான சிற்றூர்களும் அங்காங்கே இருந்தன. உடையார்பாளையம் மன்னருக்குத் திரை செலுத்தியதாக 300க்கும்மேற்பட்ட ஊர்களைக் காட்டு கின்றனர்.

கி.பி.1300 ஆண்டுகளில், இப்பகுதியில் வாழ்ந்திருந்தோரில் பெரும்பாலோர் வன்னியர் இன மக்களேயாவர். இவர்களை யடுத்து ஆதி தமிழரும் கைக்கோளர்களும் நத்தமர்களும் கைவினைத் தொழிலாளரும், ஆங்காங்கே சில பிராமணர்களும் வாழ்ந்திருந்தனர் நாயக்கர்கள் காலம் வரையில், செட்டி, இரெட்டி, ஒட்டர்கள் போன்ற தெலுங்கு பேசும் இனத்தார் இங்கு வாழ்ந்த்திருக்கவில்லை. இக்கால அளவுகளில் கிறித்து வர்கள் இப்பகுதியில் வாழ்ந்திருந்ததற்கானச் சான்றுகள் இல்லை. தலைநகரில் வெளிநாட்டினின்று வணிகத் தொடர்பாக வந்து போனவர்களில் சிலர் கிறித்துவராயிருந்திருக்கலாம். இசுலாமி யரும் இப்பகுதியில் வாழ்ந்திருந்ததாகச் செய்திகள் இல்லை. இசுலாமியரின் வருகை, இப்பகுதிகளில் படையெடுப்பு, வணிகத் தொடர்புகளால் நிகழ்வுற்றவைகளே

இராசேந்திர சோழன் அமைச்சரவையில், வெளிநாட்டு வணிகம் தொடர்பான அமைச்சன் ஒருவனுடைய குறிப்பு, தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும், எசாலம் செப்புப் பட்டயங்களிலும் காணப்படுகின்றது.[21] அக்குறிப்பில் அவனது பெயர், "கங்கைகொண்ட சோழபுரத்து ராசவிச்சாதிரப் பெருந் தெருவில் சோனகன் இராசேந்திர சோழக் கந்திருவர் பேரரையன் பரஞ்சோதி", என்று காணப்படுகின்றது இதில் ஒன்று கூட அவனது இயற்பெயர் இல்லை என்று அறியப்படுகின்றது. பரஞ்சோதி என்பது அவனுக்குக் சூட்டப்பட்ட பெயராகும் இதற்கு வெளிநாட்டின் ஒளி என்பதே பொருளாகும் இதற்கு அடைமொழியாகப் பல பெயர்கள் நீண்டுள்ளன. சோனகன் என்று அறியப்படும் சொல்லால், இவன் ஒரு யூதனாகவோ

21. எசாலம் செப்பேடுகள் பற்றிய ஆய்வுச் செய்தி, ஏ. சுப்பராயலு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

அல்லது சிரியன் கிறித்துவனாகவோ இருந்திருக்க வேண்டும். இவனை ஓர் இசுலாமியன் என்று காட்டப் பலரும் முனைந் துள்ளனர். இது தவறான சிந்தனை என்பதை அவர்கள் உணர வில்லை. கந்திருவன் என்ற சொல்லுக்கு இசை நாட்டியம் ஆகிய துறைகளில் தேர்ந்தவன் என்றும் அதனைப் பிறருக்குக் கற்றுத் தருபவன் என்றும் பொருள் கூறுகின்றனர். அவனை இசுலாமியன் என அழைப்பது தவறான கண்ணோட்டமாகும். கிறித்துவ வணிக அமைப்பான மணிகிராமம் என்ற சிரிய-தமிழக நாடுகளுக்கிடையே நிலவி வந்த கூட்டு வணிகத்தோடு பரஞ்சோதி தொடர்புகொண்டிருக்க வேண்டும். அவனை யூதன் என்பதை விட, சிரியன் கிறித்துவ திருச்சபையைச் சார்ந்தவன் என்பதற்கானச் சான்றுகள் உள்ளன.

✧✧✧

4

வரதராசன் பேட்டை

அய்யம்பேட்டை என்ற ஊர், என்ன கரணியம்பற்றி வரத ராசன் பேட்டை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது, எந்த ஆண்டிலிருந்து இம்மாற்றம் தொடங்கியது என்பதற்கானச் சான்றுகள் தெளிவாக இல்லை. 1924ஆம் ஆண்டு, அய்யம் பேட்டை என அச்சு வைக்கப்பட்ட அஞ்சல் அட்டையொன்று (திருச்சியிலிருந்து அனுப்பப்பட்டது) அய்யம்பேட்டை அஞ்சல் அலுவலக ஊழியர் ஒருவரிடமிருந்ததை நூலாசிரியரே பார்த்துள்ளார். எனவே, 1924 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் வரதராசன் பேட்டை என்ற பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

1899ஆம் ஆண்டில், குடந்தை ஆயம் என்ற புதிய மறை மாவட்டம் கத்தோலிக்கத் திருச்சபையினரால் ஏற்படுத்தப் பட்டது. இந்த ஆயத்தில் தஞ்சை, திருச்சி தென்னாற்காடு மாவட்டப் பகுதிகளில் அடங்கியிருந்தன. இதன் ஆளுமை வரம்பில் அய்யம்பேட்டையும், தஞ்சாவூர் அய்யம்பேட்டையும் வந்துற்றன. ஒரு பெயரில் இரண்டு ஊர்கள், ஒரே நேர்வாகத்தில் (நிர்வாகத்தில்) இருப்பது குழப்பத்தை ஏற்படுத்தியதாகவும், எனவே அய்யம்பேட்டை (வடக்கு) என்று புதிய அடைச்சொல் சேர்க்கப்பட்டதாகவும் கூறுவர். ஆனால், அய்யம்பேட்டைக்கு வரதராசபுரம் என்ற பெயர் 1865ஆம் ஆண்டிலேயே இருந்த தாக, 1907ஆம் ஆண்டு எழுதப்பட்ட புக்லே என்பாரின் மடலை மேற்கோள் காட்டி, தந்தை அ. மரிய சூசை விளக்குகிறார்.[22] மீண்டும் அய்யம்பேட்டை எனவும், வரதராசன்பேட்டை எனவும் மாறிமாறியும் அல்லது இரண்டையும் ஒரு கால அளவிலேயே பயன்படுத்தியும் வந்துள்ளதும் தெரிய வருகின்றது.

---

22. வரலாறும் வழக்காறும் ப.13.

வரதராசன் பேட்டை என்ற பெயர் மாற்றம் ஆங்கில அரசு அலுவலர்களாலோ அல்லது உடையார்பாளைய அரசு அலுவலர்களாலோ மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும் ஏனெனில் அக்கால ஆட்சியாளர்களாக ஆங்கிலேயர்களும், திரை பெறுபவர்களாக உடையார்பாளையத்தாரும் இருந்தனர் அய்யம்பேட்டையில் வரதராசப்பெருமாள் கோவில் இருந்த தற்கானச் சான்றுகள் ஏதுமில்லை. அய்யனார் கோவிலையே பெருமாள் கோவில் எனக் கொண்டாலும் கூட,* ஆலமரம் என்ற "ஸ்தல விருட்சம்", பெருமாள் கோவிலுக்கு முன்பு இருப் பதற்கு வாய்ப்பில்லை. ஆலமரம் சிவனுக்குரியது. பெருமாளுடன் தொடர்புபடுத்தவும், அய்யம்பேட்டையில் வைணவர்கள் வாழ்ந்திருந்தற்கானச் சான்றுகளும் இல்லை இதன் அடிப்படை யில் பார்க்கும்போது குடந்தை ஆயம் கருதிய பெயர்க்குழப்பம் பற்றி அறிந்த உடையார் பாளையத்தார் தமது முன்னோரின் தெய்வமான (காஞ்சி) வரதராசப் பெருமாள் பெயரையை அய்யம் பேட்டைக்கு வைத்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. இவ்வாறு, அய்யம்பேட்டை - வரதராசன் பேட்டை யாக மாற்றப்பட்டது. இப்பெயர் மாற்றம் நிகழ்வுற்ற 1865 அல்லது 1925 என்ற இரு கால அளவுகளில் கூட, அய்யம் பேட்டையில் கிறித்துவர் அல்லாத இந்து அல்லது பிற சமயத் தார் ஒருவர்கூடக் குடியிருக்கவில்லை என்பதும் தெளிவு. பெயர் மாற்றம் என்பது ஆள்வோர் தரப்பில் செய்யப்பட்டதேயின்றி, ஊர் மக்களுக்கும் பெயர் மாற்றத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதும் தெளிவு. கைக்கோளர்கள் வாழ்ந்திருந்த காலத்தே அவர்கள் பெருமாளை வழிபட்டதற்கானச் சான்று களும் இல்லையென்பதோடு, அவர்கள் அனைவருமே ஊரை விட்டுச் சென்று, மேற்கேயிருந்த அகரம் என்ற ஊரில் குடியேறி விட்ட செய்தியும் நோக்கத்தக்கது. அத்துடன் கைக்கோளர்கள் யாரும் கிறித்துவராகச் சமயத்துக்கு மாறவில்லை என்பதும் அறியக்கிடக்கின்றது.

எனவே, தந்தை அ. மரிய சூசை குறிப்பிடும் செய்தியின் படி, பாரிசு சமயப் பரப்பாளர்கள் தரும் குறிப்புகளில், பெயர் மாற்றம் நிகழ்ந்த ஆண்டு 1925 எனக் கொள்ளுதல் சரியானது.

---

* அய்யம்பெருமாள்வேறு தெய்வம், வரதராசப் பெருமாள் வேறு தெய்வம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அய்யம்பெருமாள், அய்யனாரையும், வரதராசப்பெருமாள் மகாவிஷ்ணுவையும் குறிப்பனவாகும்.

வரதராசன் பேட்டை, தற்போது ஆண்டிமடம் சட்ட மன்றத்தொகுதிக்குட்பட்ட ஒரே பேரூராட்சி நகரமாகும். 1981ஆம் ஆண்டின் அரசாணைப்படி, ஊராட்சியாக இருந்து பேரூராட்சியாக உயர்த்தப்பட்டது. இதில் தென்னூர், பொன்னாங்காணம்' உள்ளிட்ட, தென்பகுதிகளும் அடங்கும் வரதராசன் பேட்டையானது சமய எல்லையில் விரிந்துள்ள தால், கடலூர் மாவட்டத்திலுள்ள அந்தோணியார் புரம், கண்டியங்குப்பம், சலேத்துமாதா கோயில் ஆகிய பகுதிகளும், திருமுட்டம் பேரூராட்சியைச் சார்ந்த தோலாங்குப்பம், புதுக் குப்பம் போன்ற பகுதிகளும், கவரைப்பாளையம் ஊராட்சி யைச் சார்ந்த மணக்கொல்லைப் பகுதியும், அதற்கு வடக்கே யுள்ள தஞ்சாவூரான் சாவடியும், ஒரு சமயத் தலைவரின் ஆளுமை யின்கீழ் உள்ளன. தென்னூரில் தனியாகவார் ஆலயமும் அதற் கான குருமார்களும் உள்ளனர். வரதராசன் பேட்டையில் வாழும் அனைத்துப் பகுதியிலுள்ள மக்களும் வன்னியர் கிறித்துவ மரபு மக்களே இவர்களுடன் கிறித்துவ ஆதிதமிழர் வகுப்பாரும் இதே ஊரில் வாழ்கின்றனர். கம்மாளத் தொழில் செய்வோரும் கிறித்துவரே. ஒவ்வொரு சமயக் குருமார்களின் ஆளுமை எல்லைக்குட்பட்ட பகுதிகளை பங்குகள் என அழைக்கின்றனர். பங்கு என்பதும் தமிழ்ச் சொல்லே. பகு-பகுதி-பகுத்தல் என்ற மூலச்சொல்லினின்றும். பகுத்துக் கொடுக்கப்பட்ட பகுதியே பங்கு எனப்பட்டது. வரதராசன் பேட்டைப் பங்கில் 11 ஆயிரம் கிறித்துவர்களும் தென்னூர்ப் பங்கில் 6 ஆயிரம் கிறித்துவர்களும் வாழ்கின்றனர்.[23] ஆக, 17ஆயிரம் கிறித்துவ மக்களை உள் ளடக்கிய இவ்வூர், குடந்தை ஆயத்தின் மிகப் பெரிய பங்காகும்.

வரதராசன் பேட்டையில் வாழ்ந்திருந்த மக்களே மக்கள் தொகைப் பெருக்கம், வேளாண்மைக்கான நில நெருக்கடி போன்ற பல்வேறு காரணங்களால் இவ்வூரின் வெளிப் பகுதி களில் தமக்கென ஊர்களை அமைத்துக்கொண்டு வாழ்கின் றனர். இவை முறையே கூவத்தூர், பட்டணங்குறிச்சி, மேல நெடுவாய், கீழநெடுவாய், அருளானந்தபுரம், ஆண்டிமடம் எனப்படுகின்றன. இப்பகுதியில் வாழும் கிறித்துவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரம் அளவில் உள்ளது. இவர்களில் ஆதி தமிழர் வகுப்புக் கிறித்துவர்கள் 5000 பேர் உள்ளனர். தகுதி யுடைய வாக்காளர்களாக 15,000க்கு மேற்பட்ட கிறித்துவர்கள்

23. தினகரன் நாளிதழ் வெளியிட்ட பெரம்பலூர் மாவட்ட மலர்.

இங்கு உள்ளனர். இவர்களே ஒரு வேட்பாளரின் வெற்றி தோல்வியைக் கொடுப்பவர்கள் என்பதால், தேர்தல் காலங்களில் அரசியல் அமைப்புகள், மேற்கண்ட ஊர்களைச் சிறப்பாக முற்றுகையிடும். தாங்களே இத்தொகுதியில் ஏதாவதொரு அரசியல் இயக்கத்தின் சார்பில் போட்டியிட எவரும் முன் வருவதில்லையாதலால், இங்கு வாழும் கிறித்துவர்கள், பிறரைச் சார்ந்தே அரசியல் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

வரதராசன் பேட்டை நகரைச் சார்ந்தவர்களில், 70க்கும் மேற்பட்ட கத்தோலிக்க குருமார்களும், 1000க்கும் மேற்பட்ட கன்னியர்களும், சமயத்தின் பல்வேறு அவைகளிலும், பிரிவுகளிலும் பணியாற்றி வருவது, இவ்வூருக்குப் பெருமை சேர்ப்பதாகும்.[24] இந்த அளவில், தமிழகத்திலுள்ள ஊர்களிலிருந்து இத்தகைய ஈடுபாடு வேறெங்கும் காணப்படவில்லை யென்பதும் ஒரு வரலாற்று நிகழ்வாகும். இவர்களில் பலர், இந்தியாவின் வெளி மாநிலங்களிலும், இவர் வெளிநாடுகளிலும் கூடப் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் பலர் பல்வேறு துறைகளில் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்ற பெரும் சிந்தனையாளர்கள் என்பதும் சொல்லப்பட வேண்டிய செய்தியாகும். இவ்வூரில் கல்வி கற்க வாய்ப்புக் கிடைக்காத, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலிருந்து, மேதகு அந்தோணி ஆனந்தராயர் என்ற சமய அறிஞர், புதுவை-கடலூர் பேராயராக உயர்ந்துள்ளார் என்பதில் இவ்வூர் மக்கள் பெருமை கொள்கின்றனர்.[25]

✧✧✧

---

24. வரதராசன் பேட்டையில் கிடைத்த தகவல்கள்

25. தினகரன் வழிகாட்டி மலர்.

5

கொழையில் கிறித்துவம்

தமிழகக் கிறித்துவ வரலாற்றில், கொழை என்பது ஒரு சிறிய ஊர் என்பதும், இங்குக் கிறித்துவம் தழைத்தது பெரிய வரலாற்று நிகழ்வாக கருத இயலாது என்பதும் ஒரு புறமிருக்க, ஊரின் வரலாறே உலக வரலாறாவது போல், கொழையின் வரலாறு, தமிழகக் கிறித்துவ வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டது என்பதால், கொழை சிறப்புக்குரிய தாகின்றது. பொதுவாகத் தமிழகத்தின் கிறித்துவ வரலாற்றை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.[26] அவை,

1. தோமையாருடன் தொடர்புடைய காலம்
   (கி.பி.52முதல் 400வரை)
2. இடைக்காலம்
   (கி.பி.400 முதல் 1500வரை)
3. ஐரோப்பியர் சமயம் பரப்பிய காலம்
   (கி.பி.1500முதல் 1900வரை)
4. இந்தியக் கிறித்துவ காலம்
   (கி.பி.1900முதல்)

கி. பி. 1900வரையிலும் தமிழ் நாட்டில் கிறித்துவர்களாக மாறிய தமிழர்கள் சமயத் தொண்டர்களாக இருந்தனரேயன்றி, சமயத் தலைமையை அவர்கள் ஏற்கவில்லை. கடந்த 20ஆம் நூற்றாண்டில் தான், தமிழ்க் கிறித்துவர்களைத் தமிழர்களே ஆள்கின்ற சூழல்கள் தோற்றுவிக்கப்பட்டன. மேற்கண்ட கால அளவுகளில், ஐரோப்பியக் காலம் தான், கொழையில் கிறித்துவம் வித்திடப்பட்ட காலமாகக் கொள்ள வேண்டும்.

---

26. Christianity in India and Pakistan, p.3.

தோமையார் காலம்:

இயேசு கிறித்துவின் பன்னிரு தலைமைத் தொண்டர்களில் ஒருவரான தோமா என்கின்ற தோமையார், கி.பி. 52ஆம் ஆண்டில், தமிழகம் வந்ததாகக் கருதப்படுகின்றது. தோமையார் தமிழகம் வந்தது பற்றிய வரலாற்றுச் செய்திகள் எவையும் தமிழகத்தில் கிடைக்கவில்லையாயினும் சிரியா நாட்டின் அந்தியோக நகரில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பல ஆவணங்கள், தோமையாரின் தமிழகம் பயணத்தை உறுதி செய் கின்றன. இன்று கேரளத்தில் அறியப்படும் சிரியன் கிறித்துவத் திருச்சபையினர் தரும் பல்வேறு தகவல்களும், இச்செய்தி களுக்கு வலுசேர்க்கின்றன. கி.பி. 52ஆம் ஆண்டில், தோமையார் தமிழகத்தின் மேற்குக் கடற்கரைத் துறைமுகமான முசிறியில் வந்திறங்கினார். முசிறியின் ஒரு நிலத்திட்டான மலையங்கரை யில் (Malankara) சின்னாட்கள் ஓய்வு மேற்கொண்டார். பின்னும் கிழக்குக் கடற்கரை வழியே மயிலாப்பூரை அடைந்தார். வழியில் பலரை கிறித்துவத்துக்கு மாற்றினார். மீண்டும் சேரநாடு சென் றார். சீனாவுக்கு சென்று வந்ததாகத் தகவல்கள் கூறுகின்றன. தனது வாழ்வின் இறுதிக் காலத்தில் (கி.பி. 74) மீண்டும் மயிலையில் தங்கி சமயம் பணியாற்றியபோது, சமயம் பகைவர் களால் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது தொண்டர்கள், தோமையாரை மயிலையிலேயே அடக்கம் செய்தனர். அவரது கல்லறை கி.பி.15ஆம் நூற்றாண்டு வரையிலும் தோமையாரின் தொண்டர்கள் வழிவந்த பல்வேறு தலைமுறையினரால் பாதுகாக்கப்பட்டு வந்தது. கி.பி.15ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த ஐரோப்பியர், அப்பாதுகாப்புப் பொறுப்பைத் தாமே மேற்கொண்டனர். அங்கு சிறப்பான பேராலயத்தையும் எழுப்பினர். தோமையார் தமது காலத்தில் 70,000 பேரை, கிறித்துவத்துக்கு மாற்றியதாகச் சில செய்திகள் கூறுகின்றன. தோமையார் மறைந்த பிறகு, மயிலையைச் சுற்றி யிருந்த பகுதிகள், நாகப்பட்டணத்துக்கு அருகிலிருந்த பல குப்பங்கள், குளச்சல் உள்ளிட்ட குமரி மாவட்டப் பகுதிகள் கேரளத்தின் கொச்சி உள்ளிட்ட பல பகுதிகள் பலவும் கிறித்துவ சமயம் தழைத்திருந்த செய்திகளைத் தெரிவிக்கின்றன. தோமை யாருக்கும் பிறகு அவரது மனைவியும் மக்களும் மயிலை யிலேயே வாழ்ந்திருந்து, சமயம் பணிகளாற்றி மறைந்ததாகவும் சில செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன.[27]

---

27. மேலதே.

தோமையாரைத் தொடர்ந்து. பன்னாட்டு வணிகனான களை தோமா (Canai Thoma) என்ற சிரிய காட்டு வணிகன், சிரியாவில் ஏற்பட்ட குழப்பங்களின் அடிப்படையில், கி.பி. 3ஆம் நூற்றாண்டில் 75 சிரியக் குடும்பங்களுடன் முசிறித் துறைமுகத்தில் வந்திறங்கியதாகச் செய்திகள் கூறுகின்றன. இவன் பன்னாட்டு வணிகனாயிருந்தால் சேர மன்னர்களின் அன்பினைப் பெற்றதோடு சேர நாட்டின் வெளி நாட்டு வணிகத் தொடர்புகளுக்கும் உதவி செய்தான். தோமா தமிழகம் வந்த போது தன்னுடன் ஆயர் ஒருவரையும் அழைத்து வந்தான். அந்த ஆயர். தமிழகத்தின் கிறித்துவச் சமயத் தலைமையை ஏற்று செயல்பட்டு வந்தார். இவ்வாறு ஆயர்கள் சிரிய நாட்டினின்றே தமிழகம் வருவதும், அவர்களே தமிழகக் கிறித்துவர்களை வழி நடத்துவதும், சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த ஆயர்களின் வருகை பல்வேறு கரணியங்களால், பலமுறை தடைப்படுத்தப்பட்டன என்றாலும், தொடர்ந்து அந்தியோக் கியா (சிரியா)விலிருந்து ஆயர்கள் வந்த வண்ணமிருந்தனர்.[28]

இந்நிலையில் தமிழகத்தின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் வாழ்ந்திருந்த கிறித்துவர்களுக்குச் சரியான வழிகாட்டுதல்கள் இல்லாமற் போகவே, ஆயனில்லா ஆடுகள் போல் அம்மக்கள் பொழுதும் வருந்தினர். பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழல்களால், மயிலைக் கிறித்துவர்கள் மயிலையில், தமது சமயக் கடமைகளைச் செய்ய இயலாத சூழல்கள் தோன்றவே அவர்களில் பெரும்பாலோர் தமது பாதுகாப்பைக் கருதி சேர நாடு சென்று அங்கேயே தங்கி வாழ்ந்தனர்.[29] மயிலை யில், தோமையாரின் கல்லறைக்குப் பாது காவலாயிருந்த ஒரு சில குடும்பங்கள் மட்டுமே தங்கியிருந்தன என்று சில செய்திகள் கூறுகின்றன. அப்போது இந்தியக் கிறித்துவம், சிரியன் கிறித்துவத் தலையிடம் இருந்தது. தோமையார் மறைவுக்குப் பிறகு, தமிழகத்தில் கிறித்துவத்தைக் கட்டிக் காத்தவர்கள் இந்தச் சிரியன் கிறித்துவர்களே. இந்தத் திருச்சபையில் தமிழர் பெரும்பாலோராகவும், சிரிய நாட்டினர் சிறுபான்மையின ராகவுமிருந்தனர். கி.பி. 15 ஆம் நூற்றாண்டு வரை, இந்தியக் கிறித்துவத்தைக் காத்து வந்தவர்களும் இவர்களே என்பது

28. மேலதே.

29. மேலதே.

மிகையன்று. கி.பி 7ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு அரபிக் கடல் கிறித்துவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து இசுலாமியர்களின் கைக்கு மாறியது.[30] இதனால் கிறித்துவ குழுக்களின் வணிகம் தடைப்பட்டதோடு. சிரிய நாட்டுத் தொடர்புகளும் துண்டிக்கப் பட்டன. ஆயர்களின் வருகை தடை செய்யப்பட்டது. சில காலங்களில் தரைவழியாகவே, ஆயர்களில் சிலர் தமிழகம் வந்தார்கள் என்ற செய்தியும் வியப்புக்குரியதே. ஏனெனில், சிரிய நாட்டினின்று தரைவழியாக பாரசீகம், சிந்து, குசராத்துப் பகுதி களின் ஊடே, மேற்குக்கரை வழியே அக்காலத்தில் பயணம் மேற்கொள்வதென்பது, பாதுகாப்பற்றது என்பது தெளிவு. இக்காலங்களில் சேரநாடு தமிழகத்தினின்றும் பிரிந்து போனது. சேர அரசும் கள்ளிக்கோட்டை, கொச்சி திரு விதாங்கூர் என்ற மூன்று அரசுகளாகப் பிரிந்து போயிற்று. கள்ளிக்கோட்டை திருவிதாங்கூர் அரசுகள் இசுலாமியர்களையும், கொச்சி அரசு கிறித்துவர்களையும் சார்ந்து நின்றன.[31] திருவிதாங்கூர் அரசு சிறியதென்பதால் அதைச் சார்ந்து இருவரும் செயல்பட வில்லை. இருந்தாலும் கிறித்துவர்களிடம் பகைமை பாராட்டி வந்த திருவிதாங்கூர் அரசை, பிற்காலத்தில் பிரான்சிசு சேவியர் என்ற மாபெரும் சமயத் தொண்டர் சரிப்படுத்தி அவர்களைக் கிறித்துவர்களுக்கும் பாதுகாவலாயிருக்குமாறு மாற்றிவிட்டார் என்றே செய்திகள் கூறுகின்றன.

கி.பி. 1499ஆம் ஆண்டில் வாஸ்கோடகாமா என்ற போர்த்துக்கீசிய மாலுமி, இந்தியாவுக்கும் வர புதிய கடல்வழி யைக் கண்டார். இந்தியக் கிறித்துவ வரலாற்றிலும், பிற்கால இந்திய வரலாற்றிலும் பெரும் திருப்பங்களை ஏற்படுத்திய இந்நிகழ்வு, ஐரோப்பியக் கிறித்துவத் தொண்டர்களைத் தமிழகத்திற்கு அழைத்துவர வழிகோலியது. கி.பி. 1500 முதல் கி.பி. 1900 வரையிலான ஐரோப்பியர் சமயப் பணிகள் பற்றிய வரலாறு பல திருப்பங்களையும் சுவையான செய்திகளையும் உள்ளடக்கியது எனலாம். இந்த 400 ஆண்டுகளில் தமிழகத் திலும் இந்தியாவின் வடபகுதிகளிலும் கிறித்துவம் பரவ வாய்ப்புகள் தோன்றின. இக்காலங்களில் தமிழகத்திலும் வருகை தந்த கிறித்துவ சமயத் தொண்டர்கள், தங்கள் ஐரோப்பிய மரபு களையெல்லாம் மறந்து, தமிழர்களாகவே மாறி, கிறித்துவ

30. மேலதே.

31. Paruguse in the Tamil Coast.

சமயத்தை வளர்த்தனர். பிரான்சிசு சேவியர், இராபர்ட்டி நொபிலி, பல்தசார் டிகோசுதா, அருளானந்தர், விரமாமுனிவர் போன்ற சிலர் சிறப்புமிக்கச் சமயத் தொண்டர்களாவர் இவர் களின் பணிக் காலங்களில் தான் இதுவரையில் கடற்கரைப் பகுதிகளில் அறியப்பட்டிருந்த கிறித்துவம் உள்காட்டிலும் வேரூன்றியது எனலாம்.[32]

கொழையில் கிறித்துவம் தோன்றியது ஐரோப்பியத் தொண்டர்களின் காலத்தில் தான் என்பதும் சிறப்பான செய்தி யாகும். இயேசு அவையினர் என்று கருதப்பட்ட ஐரோப்பிய சமயத் தொண்டர்கள் கி.பி. 1500 முதல் கி.பி. 1773 வரையிலும் தமிழகத்தில் பணியாற்ற அனுமதிக்கப் பட்டிருந்தனர். உண்மை யில் இக்கால அளவுகளில் பல இலக்க கணக்கான மக்களைக் கிறித்திவத்தின்பால் இவர்கள் திருப்பினர். இப்பணிகளை இவர்கள் தங்களது கடமையாகக் கருதாமல், ஒரு வகையான வெறியுடன் செயல்பட்டனர். இத்தொண்டர்களின் பணிக்கு ஈடாக வேறெந்த சமயப் பணியாளர்களும் செயல்பட்டனர் என்றும் கூறவியலாது. தமிழகக் கிறித்துவம் இயேசு அவை யினருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது என்பது வரலாற்று உண்மையாகும். கி.பி. 1773ஆம் ஆண்டுக்குப் பிறகு, இவர் களைத் திரும்பவும் அழைத்துக்கொள்ள போப்பாண்டவர் பிறப்பித்த ஆணை இயேசு அவையினரை அதிர்ச்சிக்குள்ளாக் கியது.[32] இந்த ஆணையின் அதிர்வுகள் எவ்வாறு கொழை உள்ளிட்ட அய்யம்பேட்டையிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது என்பதை அடுத்துவரும் பக்கங்களில் காணலாம்.

ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு வருகைதருமுன்னர், இந்தியா என்பது மிகப்பெரும் கிறித்துவ நாடென்றும். தோமை யார் வழியில் இந்தியா கிறித்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் இந்தியாவின் பேரரசுகள் யாவும் கிறித்துவ அரசுகளே என்றும் தவறாகக் கருதிக்கொண்டிருந்தனர்.[33] கி.பி. 700 முதல் 1500 வரையிலான காலங்களில் இந்தியாவைப் பற்றிய எந்தச் செய்திகளும் ஐரோப்பியர்களுக்கு கிடைக்காமற்போயின. வாஸ்கோடகாமாவும் கூட இந்திய கிறித்துவத்துக்கு, போர்த்துக் கீசிய மன்னரைத் தலைமையேற்க வைப்பதின் வழியே

---

32. குடந்தை மறைமாவட்டப் பொன்விழா மலர், ப.2.

33. Early Christianity in India.

இந்தியாவின் சமய, வணிக, பொருளியல் தொடர்பானவை களில் தமது மேலண்மையை விரிவாக்கலாம் என்று கருதினார். ஆனால் இந்தியாவுக்குள் நுழைந்த காமாவுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. தாம் நினைத்தவாறு கிறித்துவம் இந்தியாவின் பெரிய சமயமன்று என்பதையும், கிறித்துவர்கள் என அறியப் பட்ட ஒரு சிலரும், ஐரோப்பிய வணக்க முறைகளைப் பின் பற்றாமல் இந்தியர்கள் போன்றே கிறித்துவ வழிபாட்டு முறை களை கொண்டிருக்கின்றனர் என்பதையும் கண்டார்.[34] இந்தியக் கிறித்துவர்களிடம் பல்வேறு வகையில் முரண்பட்ட ஐரோப் பியர், ஒரு காலத்தில் அவர்களைத் தமது பகைவர்களாகவும் கருதினர். (மேலும் விளக்கங்களுக்கு ஆசிரியரின் தமிழ் நாட்டுக் கிறித்துவம் பகுதி I என்றநூலைக் காண்க,)

உள்நாட்டுக் கிறித்துவர்களின் ஒத்துழைப்பு இல்லாத நிலையில் தமிழகத்தின் வெப்பம், வழக்காறுகள், உணவு முறை கள், குடியிருப்புகள் போன்ற அனைத்தும் தாங்களுக்குச் சரிப்பட்டுவராத நிலைகளிலும், இயேசு அவையினர் தமது சமயப் பணிகளை எதிர் கொண்டனர்.

✧✧✧

34. Ibid.

6

ஐரோப்பிய விடைத் தொண்டர்கள்

தமிழறிஞர் தேவநேயப் பாவாணர், கிறித்துவ சமயத் தொண்டர்களையும் பரப்பாளர்களையும் விடையூழிர்கள் என்ற தமிழ்ச் சொல்லால் குறிப்பிடுகின்றார்[35] விடை என்பதற்கு விளக்கம் என்பது பொருளாகும். இயேசு கிறித்துவைப் பற்றி விளக்கம் அளிக்கும் ஊழியர்கள் என்பதே விடையூர்கள் என்ற சொல்லுக்கும் பொருளாகும் (Mission = பணி Missionaries.- பணியாளர்)

கிறித்துவ சமயத்தை உலகெங்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற உணர்வு, மார்ட்டின் உலூத்தர் என்பார். கத்தோலிக்கத் திருஅவைக்கு எதிராகப் புறப்பட்ட நாளிலிருந்தே உருப்பெறத் தொடங்கியது. இக்னேசியஸ் இலயோலா என்னும் படைத்தலைவர், ஐரோப்பிய எல்லைகளைக் கடந்து கிறித்துவ சமயத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற உணர்வால் உந்தப்பட்டு, இயேசுஅவை (Society of Jesus) என்ற சமயப்பணி இயக்கத்தைத் தோற்றுவித்தார். இப்பணிக்கு ஏற்ற வகையில் வாசுகோடகாமாவின் கடல்வழிக் கண்டுபிடிப்பு, இந்தியாவை ஐரோப்பாவுடன் இணைத்தது.

கி.பி. 1514ஆம் ஆண்டில், போப்பாண்டவர் இந்தியாவில் சமயப் பணிகள் தொடங்குவது தொடர்பாக தோமார் (Tomar) நகரத்துக் தலைமைக் குருவிடம் பேசி, போர்த்துக்கல் நாடு இப்பணிகளுக்கு உறுதுணையாய் இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார் அதன்படி 3.11.1534 ஆம் ஆண்டில், போப் பாண்டவர் மூன்றாம் சின்னப்பர் (பால்) இந்தியாவின் புது ஆயம் (Diocese) தொடங்க அனுமதியளித்து, தாம்பிரான்சிசுகோ தெ மெல்லோ (Dom franasco de Mello) என்பாரை முதல்

35. தமிழர் வரலாறு, பாவாணர்.

ஆயராகவும் பணித்தார்.[36] ஆனால் இவர் இந்தியாவுக்குப் புறப்படு முன்பாகவே இறந்து போனார். எனவே தாம் தாவோ அல்போன்சு தெ அல்புகர்க் (Dom toao alphonsus de albuquerque) என்பாரை ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் 25.3.1539ஆம் ஆண்டில் கோவா வந்திறங்கினார். இவ்வாறு இந்திய மண்ணில் சமயப் பணிகளை மேற்கொள்ள போப் பாண்டவருக்கும் போர்த்துக்கீசிய மன்னர்களுக்கும் இடையே பல ஒப்பந்தங்கள் கைச் சாற்றிடப்பட்டன. அவைகளுள் முதன்மையானது பாத்ரோஅதோ (padro-ado) என்பதாகும்.[37] இதற்குப் பிறகும் பல ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வொப்பந்தங்களின் அடிப்படையில்,

1. போர்த்துக்கீசிய மன்னர் தாம் மானுவல், கொலைகிழக்கு நாடான இந்தியா உள்ளிட்ட பிற கிழக்கு நாடுகளின் கிறித்துவ சமயப் பரப்புதல் தொடர்பான தலைவராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டார்.

2. சமயப் பரப்பாளர்களைப் போர்த்துக்கீசிய கப்பல்களில் கொண்டு செல்வது, இந்தியாவில் கோயில்கள் கட்டுவது, பணியாளர்களின் செலவுகளை ஏற்றுக் கொள்வது என அனைத்துச் செலவுகளையும் மன்னர் ஏற்றுக்கொள்வார்.

3. இந்தியாவுக்கு அனுப்பப்படும் ஆயர் குருமார் போன்றோரை மன்னரே தேர்வுசெய்து கொள்வார். அவர்களுக் கான அனைத்து செலவுகளும் மன்னருடையதே.

4. கிறித்துவர் அல்லாதவர் நாடுகளைப் போரிட்டு வென்று தமது ஆளுமையின்கீழ்க் கொண்டுவர மன்னருக்கு உரிமை வழங்கப்பட்டது.

5. அவ்வாறு வென்றெடுக்கப்பட்ட நாடுகளில், சமயப் பணி யாளர்களை அமர்த்த, மன்னருக்கு உரிமை அளிக்கப் பட்டது.

சுருக்கமாகச் சொல்லப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் மன்னருக்கு முழு ஆளுமை வழங்கப்பட்டது. இவ்வொப்பந்தங்கள் பிற்காலத்தில் போப்பாண்டவருக்கே பெரிய தலைவலியாக வரப்போவதை, அவர் அப்போது உணர

---

36. Portuiguse in the Tamil Coast. p.277.

37. Ibid.

வில்லை என்பதை, பிற்கால நிகழ்வுகள் மெய்ப்பித்தன. இவ்வாறு ஒட்டுமொத்தமான அதிகாரங்கள் மன்னனுக்கு அளித்ததில் பல்வேறு பின்னணி நிகழ்வுகள் உள்ளன. அவையாவன:

1. இந்தியாவுக்குப் போர்த்துக்கீசியர்கள் கடல்வழியைக் கண்டதின் வாயிலாக, வாணிகம் பெருக 1500 - 1525 ஆண்டுகளிலேயே, ஐரோப்பாவின் பணக்கார நாடாக போர்த்துக்கல் மாறியது. அடுத்த ஒரு நூற்றாண்டில், அதன் கருவூலம் நிரம்பி வழிந்தது.

2. ஐரோப்பிய மன்னர்களின் தலைமைப் பொறுப்பையும் கூட, போர்த்துக்கல் மன்னருக்குக் கொடுக்க அந்நாடுகள் முன்வந்தன.[38]

3. வலிமைமிக்க கப்பற்படையையும், கலங்களையும் (Ships) போர்த்துக்கல் பெற்றிருந்தது.

4. போப் பாண்டவரே வலிய வந்து மன்னரிடம் உறவு கொள்ளும் அளவுக்கு, நிலைமை மாறியது.

5. போப்பாண்டவர் தன்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதில், மன்னருக்கு சொல்லொண்ணா மகிழ்வு ஏற்பட்டது.

தொடக்கத்தில், போர்த்துக்கீசிய மன்னரும், கத்தோலிக்கத் திரு அவையின் வளர்ச்சியில் உள்ளபடியே விருப்பம் கொண்டு தான் செயலில் இறங்கினார். மன்னர் இந்திய நாட்டின் சமயப் பணிகளுக்காக, பிரான்சீசுக்கன் துறவிகளையும், இயேசு அவைத் துறவிகளையும் தெரிந்து கொண்டார். இவர்களில் அந்தோனியோ தெ பத்ராவோ (Fr. Antonio de padrao) என்பாரையும், பிரான்சிசு சேவியரையும் (Fr. Francisco de yasu Xavier) குறிப்பிட்டுச்சொல்லலாம். பின்னர் வந்த என்றி என்றிக் (Fr. Henrique Henriques), இராபர்ட் - டி நொபிலி (Robert - de Nobili) போன்றோரும் சிறப்பாகப் பணியாற்றினர். இவரது தொண்டரே பல்த சார் தெகொசுதா (Balthazaar de Costa) என்பவராவார்.[38] இவரைப் பற்றிய செய்திகள் பல கொழை என்ற பகுதியுடன் தொடர்புடையவைகளாகும்.

---

38. William B. Green Lee, The voyage of pedro Alvares Cabral to Brazil and India, London, 1938, p. 49.
Portuguise in the Tamil Coast p. 290 .

கொழைப் பகுதியில் முதன் முதலாகக் கிறித்துவர்கள் அறியப்பட்டது எந்த ஆண்டில் என்பதை விளக்கச் சரியான சான்றுகள் உள்ளன. கி.பி. 1660களில் தான் கொழையின் கிறித்துவர்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன என்றாலும் அதற்கு முன்பே அப்பகுதியில் கிறித்துவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதற்கானச் சிலச் செவிவழிச் செய்திகள் கிடைத்துள்ளன. அவர்கள் கொழையில் இல்லாமல் அய்யம்பேட்டை எல்லையிலே வாழ்ந்திருந்ததாகவும் அறியக் கிடக்கின்றது. வரத ராசன் பேட்டையில் வாழ்ந்திருந்து, கடந்த 1964ஆம் ஆண்டில் உயிர்நீத்த, திரு. மரியநாதராயர் என்பவர் தமது கைப்பட எழுதி வைத்துள்ள குறிப்புகள், நூலாசிரியரிடம் உள்ளது. அக்குறிப்பு களை அப்படியே அடியில் கொடுத்துள்ளோம்.

✧✧✧

7

+

A. M. D. G.

வீரெங்கராயர் வம்சத்தின் வரலாறு.[39]

வரதராசன் பேட்டை, வி. மலையப்ப வாத்தியார் சிரேஷ்ட குமாரன், வி.எம்.ஜே. மரிய நாதராயரால் எழுதி வைக்கப்பட்டது.

+

A. M. D. G.

வீரெங்கராயர் வம்சத்தின் வரலாற்றை பாரம்பரை மூல மாய் அறிந்து கொண்டதை, வீ.நா. பாப்பு நாட்டார் பேரன், வீ. ஞானக் கலீஸ்த்து படையாட்சியாலும், வீ.நா. அப்புசாமி படையாட்சியாலும், வாய்மொழியாய் சொல்லக் கேட்டுக் கொண்டதைக் கொண்டும், என் தகப்பனார் வீ. மலையப்ப வாத்தியார் பலதடவை என்னிடம் சொல்லி வந்ததை அனு சரித்தும் நான் எழுதி வைத்தேன். அடியில் காணும் சம்பவங்கள் கூடவும் குறைவாகவும் இருக்காலம்.

ஆதியில் சிறுகனத்தூர், பொன்பரப்பி என்னும் கிராமத்தில் ஞானியார் வம்சத்தில் வீரெங்கராயர் வாழ்ந்து வந்தார், அந்த ஊரில் உள்ள சாமுண்டி அம்மன் கோவிலிருக்கும் குல தெய்வமாகிய வீரனாருக்கு வருஷா வருஷா, விதப் பிரகாரம் ஒவ்வொரு குடும்பத்தாரும், தலைச்சன் ஆண் குழந்தையை வெட்டி காவ்கொடுத்து வருவது வழக்கம். வீரெங்கராயர் வீதம் வந்த காலத்தில் வெகுகாலம் பிள்ளையில்லாமல் இருந்து பிறந்த முதல் ஆண் குழந்தையை, வெட்டி பலி கொடுக்க மன மில்லாமல் தன் பெண்சாதிப் பிள்ளையோடு, பிரயாணப்பட்டு, தன் அடிமை பரையன் நெஞ்சடையன் என்கிற தச்சனை மிலாறு கொண்டு இழுத்து, அடி மறைத்து வரச்சொல்லி விருத்தாஜலம் மேல கோபுர வாசற்படியண்டை வந்து தங்கினார்கள். அங்கு

---

39. மரிய நாதராயர் தம் கைப்பட எழுதியுள்ள குறிப்புகள்.

தங்கியிருந்த காலத்தில் 3 ஆண்களும், 3 பெண்களையும் பெற்று ஆக 6 பிள்ளைகளோடு வாழ்ந்து வரும் நாளில், அவ்விடம் குடியிருப்புக்கு நல்ல வசதியில்லாததால் அந்த இடத்தைவிட்டு கார்மாங்குடியில் சில காலம் தங்கியிருந்து, பிறது தெற்கு முகமாக வந்து, இப்போதிருக்கும் ஐயம் பேட்டை ஏரிக்கும் கிழக்கே. கிழக்குத் தெரு என்று சொல்லப்படும் தெருவின் நடுவில், இப்போது சூரபடையாட்சி குடியிருக்கும் இடத்தில் குடியிருந்து வந்தார்கள்.

வீடுகட்ட மனை அஸ்திவாரம் செய்து மறுநாள் பார்க்கும் போது. அதில் நண்டு குஞ்சுகள் ஏராளமாய் நகருவதைப் பார்த்து நமது குடும்பம், இந்த நண்டு குஞ்சுகள் போல் பலுகி விருத்தியாகும் என்று சந்தோஷப்பட்டு அந்த இடத்திலேயே தங்கிவிட்டார்கள். இச்சம்பவத்தை முன்னிட்டுதான் பரத்தச்சன் ஜெஞ்சடையன் குடும்பத்தில் கலியாணம் நடக்கும்போது இந்த இடத்தில் முதலில் மாலைபோட்டுக் கொள்ளும் வழக்கம், நாளது வரையிலும் நடந்து வருவதைக் காணலாம்.

இப்போது அலங்கார மாதா கோவிலுக்கு முன்னால் இருக்கும் ஆலமரத்தின் கீழ் வரதராஜப்பெருமாள் என்ற ஒரு சிலையை வைத்து வணங்கி வந்தார்கள். இக்காரணத்தைக் கொண்டுதான் நவாப் அரசாட்சியில் அய்யம்பேட்டை கிராமம் என்று இருந்ததை நீக்கி இங்கிலீஷ்கார்ர் வரதராஜப்பேட்டை கிராமம் என்று நியமித்து விட்டார்கள்.

இச்சமயத்தில் புதுக்கோட்டைத் தொண்டைமான் இராஜா தன் இளையதாரத்து மனைவி இஷ்டத்துக்கு இணங்கி இரண்டாம் தாரத்துப் பிள்ளைகளுக்கு இளவரசுப் பட்டம் கட்டி விட்டான். இதை அறிந்த முதல் தாரத்து 4 பெண்களும் 3 ஆண்களும் விசனப்பட்டு, தேசாந்திரியாய்ப் புறப்பட்டு வரும் போது, அப்போது திருச்சியிலிருந்த சேசு சபை குருக்களால் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவர்கள் ஆனார்கள். அவர்களில் ஒரு ஆண்மாத்திரம் அங்கேயே தங்கிவிட, 3 ஆண்களும் 3 பெண்களும் கிழக்கு முகமாக வந்து, இந்த ஊரில் தங்கினார்கள். அவர்களைப் பார்த்து வீரொங்கராயர் சம்மதம் செய்து கொள்ளக் கேட்டுக் கொண்டார். அதற்கு அவர்கள் ‘நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்துவர்கள் ஆனால் தான் நாங்கள் சம்மதிப்போம்’ என்றார்கள். அதற்கு வீரெங்கராயரும் சம்மதித்து ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்துவர்களாகிய தன்

குமாரர்கள் 3 பேருக்கும் தொண்டைமான் ராயர் பெண்களை விவாகம் செய்ய, அப்படியே தொண்டைமான் இராயர் இரு ஆண் களுக்கும் தன் இரு பெண்களை விவாகம் முடித்து வைத்தார். கிறிஸ்து வேதம் முதலில் தொண்டைமான் ராயர் வம்சத்தால் ஏற்படுத்தப்பட்டதால் உபதேசியார் வேலை தொண்டமான் குடும்பத்தாருக்கே கொடுக்கப்பட்டது. 1. உள்ளூர் ஆதி தொண்டான். 2 காப்பிலி தொண்டான் 3 குழந்தை தொண்டான் ஆகிய முன்று தொண்டைமான் இராயர்களில் இருவர், கிழக்குத் தெருவில் பழைய வீடு என்ற இடத்திலும், நடுவர் இப்போது தென்னூர் கிராமமாயிருக்கும் அப்பாசாமி வாரிசு குடியிருக்கும் இடத்திலுமாகத் தங்கிவிட்டார்கள். சிதம்பரத்திலிருந்து வந்த ஈஸ்திரிய பூசாரி கிறிஸ்துவராகி, இளைய பெண்ணை விவாகம் செய்து கொண்டார். நாளடைவில் சந்ததி விருத்தியாகி வரும் போது மூன்று குடும்பத்தாரும் மைலாப்பூருக்குச் சென்று கோவா மிஷன் சாமியாரை அழைத்து வந்து, அலங்கார மாதா ஆலயங் கட்டி வாழ்ந்து வந்தார்கள். இச்சம்பவம் ஏறக்குறைய இரட்சண்ய கி.பி. 1650ஆம் ஆண்டில் நடந்திருக்கும் என நம்பப்படுகின்றது.

கொஞ்சகாலம் சென்ற பின், ஜனங்கள் தங்களுக்குள் வீரெங்கராயன் வகுப்புக்கு சின்னது படையாட்சியையும், தொண்டைமான் ராயர் வகுப்புக்கு காப்பிரி படையாட்சியை யும், ஈஸ்திரியார் வகுப்புக்கு புள்ளை முத்து படையாட்சியை யும் 3 நாட்டாண்மைக்காரர்களை ஏற்படுத்தி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தார்கள்.

இந்த மூன்று நாட்டாண்மைக்காரர்களும் சேர்ந்து கோவில் காரியம் திருவிழா முதலியவை நடத்துவதும்; நன்மை தின்மைகளில் தலைமை வகித்து நடத்துவதும், ஜனங்களுக்குள் ஏற்படும் விவகாரங்களை தீர்த்து வைப்பது முதலிய விஷயங்கள், வெகு விமரிசையாய் நடந்து வந்தது.

வீரெங்கராயர் இந்த ஊருக்கு வருமுன் ஐயம்பேட்டை கிராமம் என்ற பெயருடன் கிழக்குத் தெருவில் குடியிருந்த சேங்கண்டி என்பவருக்கு சந்ததியே இல்லாததால், தன் ஆஸ்தி களை, சாவடி குப்பத்திலிருக்கும் தன் மைத்துனன் சல்வி படை யாட்சிக்கும், தான் பார்த்து வந்த பண வசூல் கிஸ்தி என்ற மணியத்தை, அப்போது அரசன் ஆண்டுவந்த பாளையங் கோட்டை நவாப் துரை உத்தரவு பெற்று, வீ. சின்னது நாட்டாருக்குக் கொடுத்ததுடன், தன் அடிமைப் பரையன் வெட்டியான் வகையறா இரண்டு குடும்பங்களையும் மேற்படி

வீரெங்கராயருக்கே கொடுத்துவிட்டார். இக்காரணத்தால் தான் தச்சுவேலை ஜெஞ்சடையானுக்கும் மேள தாளம் வாசிப்பதும், ஊர் வேலை பார்ப்பதும், வெட்டியான் வகையறாவுக்கும் உரித்தாயிற்று.

இப்படி நடந்துவரும் காலத்தில் பஞ்சம் உண்டாயிற்று. வீ. சின்னது நாட்டார் மகன் அப்பு படையாட்சி பிள்ளைகள் பாப்பு, மலையப்பன், சூசை இந்த மூன்று பேரும் தங்கள் ஒரு சகோதரிகளுடன் ஆக ஐந்து பேரும் தங்கள் அத்தை வீடாகிய தொப்புலி குப்பத்துக்குச் சென்று, பதினோரு வருஷங்கள் தங்கிவிட்டார்கள்.

அப்போது ஊரிலேயே இருந்த அப்பாவு படையாட்சி என்பவர் தன் உடன் பங்காளி பார்த்து வந்த மணியத்தையும், நாட்டுமையையும் பார்த்து வந்தார். வீ.சி. அப்பு படையாட்சி நாட்டார் சொந்த அடிமைப் பரையனாகிய கொங்குநாட்டான், தன் ஆண்டை வீட்டுக் கணக்கு முதலிய ரிக்கார்டுகளை பத்திர மாய்க் காப்பாற்றி, மேற்படியார் திரும்பி வந்தவுடன் அவர் களிடம் ஒப்படைத்துவிட்டான்.

வீ. பாப்பு நாட்டார்வியாச்சியம் செய்து தன் மணியத்தை திரும்பப் பெற்று பார்த்து வந்தார். அப்போதுதான் அப்பாவு படையாட்சிக்கு ஒரு நாட்டுமையுமாக வீரெங்கராயர் குடும்பத் தில் இரண்டு நாட்டுமை ஏற்பட்டது.

இப்படி நடந்துவரும் காலத்தில் பாப்புநாட்டார் தான் பார்த்துவந்த மணியத்தை தன் மகன் துஷ்டத்தனத்தால் செலவு செய்துவந்ததால், வேலையைக் காப்பாற்ற மாட்டானென்றும், சில சமயம் ஜெயிலுக்கு முதலாய் போகும்படியான குற்றத்தை துணிந்து செய்வானென்றும் பயந்து, கெங்கை கொண்ட சோழ புரத்திலிருந்து வந்து கிறிஸ்துவர்களான, தனது ஞான குமாரன், காங்கிய சவரி ராய படையாட்சிக்கு கொடுத்துவிட்டார்.

இக்காலத்தில்தான் இங்கிலீஷ் சர்வே நடந்தது. காப்பிரி நாட்டார் தங்கியிருந்த இடம் தென்னூர் என்றும், மற்றவர்கள் தங்கியிருந்த இடம் வரதராசன் பேட்டை என்றும் இரண்டு கிராமமாக, இங்கிலீஷ் சர்க்கார் அதிகாரிகளால் பிரிக்கப் பட்டது. ஐயம்பேட்டை கிராமம் 2 கிராமமாக பிரிந்து போனது.

சர்வே காலத்தில் பரத்தெருவு ஏரியை காப்பிரி நாட்டார் வகையறா, தங்கள் கிராமத்தோடு சேர்க்க வேண்டும் என்றும்,

வீரெங்கராயர்களும் மற்றவர்களும் தங்கள் கிராமத்தோடு சேர்க்க வேண்டும்மென்று வாதாடினார்கள். சர்க்கார், ஏரியை இருபாகமாக்கி, எல்லை குறித்துவிட்டார்கள் அப்போது காப்பிரி நாட்டாருக்குக் கோபம் பொங்கி “நான் கோவிலில் நுழைந்து எனக்குச் சொந்தமான மாதா சுரூபத்தை எடுத்துக் கொண்டு போய் விடுவேன்,” என்றார். அதற்கு வீ. அப்பாவு நாட்டார், “நீ கோவிலுக்குள் நுழைந்தால் உன் குதிகால் நரம்பை வெட்டிவிடுவேன்” என்றார். காப்பிரி நாட்டார், தென்னூரில் இப்போது லூர்து மாதா ஆலயம் இருக்கும் இடமாகிய கொள்ளுக் கொல்லையை சுத்தம் செய்து, ஓர் கூரைக் கோயிலைக் கட்டி, புதுவைக்குப் போய், அப்போதிருந்த லவுனா ஆண்டவர் உத்தரவு பெற்று, ஓர் பிரெஞ்சுக்காரரான குருவான வரை அழைத்து வந்ததால் தொன்னூர் பங்கு ஏற்பட்டது.

இக்காலத்தில் தான் வரதராசன் பேட்டை கிராமத்தில் வீரெங்கராயர் வகுப்பில் இரண்டு நாட்டுமையும், ஈஸ்திரியன் வகுப்பில் ஓர் நாட்டுமையும், காங்கியன் வகுப்பில் மணியம் சவரிராய படையாட்சிக்கு ஒரு நாட்டுமையும் ஆக நான்கு நாட்டுமை ஏற்பட்டு, கோவிலும் நன்மை தின்மைகளிலும் 4 நாட்டுமைப் பாக்கு வழங்கலாயிற்று.

நாளடைவில் பாப்பு நாட்டாருக்கு புதுவையில் சம்மந்தம் ஏற்பட்டதால் புதுவை ஜனங்கள் தூண்டுதலால், இவர் சவரிராய படையாட்சியையும், இவரைச் சேர்ந்தவர்களையும், கூவத்தூரி லிருந்து வந்த வாழக் கொல்லை தோட்டக்காரன் வகையறாக் களையும் சேர்த்துக் கொண்டு, தென்னூரின் பங்கில் சேர்ந்து கொண்டதுடன், தன் வீட்டின் பக்கத்தில் அற்புதமாதா பேரால் ஒரு கூரைக் கோவில் கட்டி, ஞாயிறு வாரந்தோறும் புதுவைக் குருவானவரால் பூசை பலி நடத்தவும் ஏற்பாடு செய்துவிட்டார். அப்போது பிறந்த தன் பேரனுக்கும் அற்புதம் என்று மேற்படி அற்புத மாதாக் கோயிலில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. பாப்பு நாட்டார், தான் காடுவெட்டி புளியந்தோப்பு உண்டாக் கின 25 ஏக்கர் நிலத்தையும் அற்புத மாதாக் கோயிலுக்கே மானியமாகக் கொடுத்துவிட்டார். இரண்டு ஊர் கிறிஸ்துவர் களும் சமாதானமான காலத்தில், மேற்படி மானியம் தென்னூர் கோவிலுக்கே சேர்ந்துவிட்டது.

24.1.1880ஆம் ஆண்டில் திருமைலாப்பூரில் நடந்த உபதேசியார் பரீட்சைக்கு வீ. அப்பு படையாட்சி 5வது இளைய குமாரனாகிய வீ. மலையப்ப வாத்தியார் சென்று பரீட்சையில்

தேறி, சங். விக்காரி ஜெனரல் சர்ட்டிபீகேட்டும், வரதராஜன் பேட்டை அர்ச். அலங்கார மாதா ஆலயத்தின் உபதேசியாராக வும் உபாத்தியாயராகவும் நியமனம் பெற்று வேலை பார்த்து வந்தார். நாளடைவில் ஊராருடைய வேண்டு கோளுக்கிணங்கி உபதேசி வேலையை தொண்டான் குடும்பத்துக்கே கொடுத்து விட்டு, கோவில் உபாத்தியாயர் வேலையையும், கோவிலில் செபம் சொல்லும் வேலையையும் பார்த்து வந்தார். இக் காரணத்தை முன்னிட்டுதான் கோவில் வாத்தியார் பாக்கு ஒன்று வழங்கி வரு வதுடன், மேற்படி மலையப்ப வாத்தியாருக்கும் அவர் வாரீசுக்கும் கோவில் ஜெபம் சொல்லும் வழக்கம் ஏற்படலாயிற்று.

1885ஆம் ஆண்டில் அர்ச். பாப்பாணவர் உத்தரவு பிரகாரம் வரதராஜப் பேட்டை கிராமம், புதுவை மேற்றிராசனத்தில் சேர்க்கப்பட்டு, ஓர் தனி பங்காயிற்று இந்த பங்குக்கு வந்த முதல் குருவானவர் சங். ஓ. சாமியார். அப்போது கோவா மிஷனரி பங்கு குரு சங் சூசை டியாஸ் கிளார்பன் சாமியார் பங்குமாரிப் போனார். அவர் போகும்போது பிறந்த வீ. மலையப்ப வாத்தியார் சிரேஷ்ட குமாரனுக்கு தன் ஞாபகார்த்த மாக தன் பெயரோடு மரிய நாதன் என்ற பெயரையும் சேர்த்து, ஜோசப் மரியநாதன் என்று பெயர் சூட்டி ஞானஸ்நானம் கொடுத்துப் போய்விட்டார்.

வீ. சின்னது நாட்டார் குமாரன் வீ. அப்புபடையாட்சி நாட்டார், இவர் குமாரர்கள் வீ. பாப்புநாட்டார். வீ மலையப் படையாட்சி, வீ. சூசை படையாட்சி. இவர்களில் மூன்றாவது குமாரர் சூசை படையாட்சி என்கிறவர் புதுவைக்குப் போய் உருளையன் பேட்டையில் தங்கிவிட்டார். இரண்டாவது குமாரர் வீ. மலையப்ப படையாட்சி என்கிறவர் தன் தகப்ப னாரைப் போல் இருந்ததால் அவருக்கு அப்புப்படையாட்சி என பெயர் விளங்கலாயிற்று.

மேற்படி அப்பு படையாட்சி என்று அழைக்கப்படும் வீ. மலையப்ப படையாட்சிக்கு 5 ஆண்கள் பிறந்தார்கள். 1. சவரி முத்து, 2. சின்னப்பன். 3. பொன்னுபடையாட்சி (ஆட்டுக்காரர்) என்கிற அருளப்ப படையாட்சி. 4. மாட்டுக்காரர் என்கிற சூசை படையாட்சி, 5. மலையப்ப வாத்தியார்.

1. இவர்களில் மூத்தவரான வீ. சவரிமுத்து படையாட்சி என்பவர் பொறுமைசாலி. பாடலிலும் நடினம் நடிப்ப திலும் சிறந்தவர். நடினம் செய்யும் நாட்டியப் பெண்கள் வேஷம் போடுகிறவர் களுக்கு நகைகள், மரத்தினாலும் பலவிதக்காகிதம் கண்ணாடிக ளாலும் செய்வதில் கைதேர்ந்தவர்.

2. நடுலவர் சின்னப்பன் என்கிறவர் பழமொழி பாடலிலும், நடினம் நடிப்பதிலும் சிகிர்தி பேசுவதிலும் பலவிதமான பபுன் வேஷம் போடுவதிலும் சிறந்தவர்.

3. ஆட்டுக்காரர் என்பவர் அஞ்ஞேம்மாள் வேஷம் பாடல் பாடுவதில் மிகவும் சிறந்தவர். சாகும் வரையில் குரல் கெடவில்லை, தச்சு வேலை செய்வார்.

4. மாட்டுக்காரர் பழமொழி பாடுவதிலும், நாட்டு வைத்தியம் செய்வதிலும் பண்பட்டவர்.

5. வீ. மலையப்ப வாத்தியார் என்பவர் கோவில் ஜெபம் சொல்லுவதிலும், உபாத்திமை தொழிலிலும், சங் பங்கு சாமியாருக்கு உதவியாக தொழில் புரிவதிலும், நா. அமுர்த படையாட்சி சேர்த்து கொண்டும், தனியாகப் பஞ்சாயத்து செய்வதிலும் சிறந்தவர், அர்ச் அஞ்ஞேசம்மாள் வாசகப்பாவில் இரண்டாது ராத்திரி ராஜ வேஷம் போடும் போது இராஜக்கொலுவை சிங்காரிப்பதிலும் ராஜாப்பாட்டு பாடுவதிலும் சிறந்தவர். கடைசியாய் இவர் 63½ வயதில் படுக்கையில் வியாதியாய் இருந்து தனது 65ஆம் பிராயத்தில் நல்ல ஆயத்தம் அவஸ்தைப் பூசுதல் பெற்று தன் பிள்ளைகளை ஆசீர்வதித்து தன் சிரேஷ்ட குமாரன் பக்கம் திரும்பி அவர் கரங்களில் 6.12.18முதல் வெள்ளி மாலை பரலோக பிராப்தி அடைந்தார். மறுநாள் 7. 12. 18 மாலை ஒப்பூசையும் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர் குமாரத்திகளில் இரண்டாவது குமாரத்தி சவரியம்மாள் என்கிற பெண், புதுவை தேவமாதா மாசற்ற இருதய மடத்துக்கு 1911ல் சென்று, கன்னியராகி (சங் கிறிஸ்தோப் மரி சகோதரி) சென்னையில் பெரிய கிளாஸ் படிக்கும் காலத்தில் வியாதி யாகி தன் சொந்த ஊரான வரதராதன் பேட்டைக்கு வந்து 3 மாதம் வரையில் வைத்தியம் செய்து சுகப்படாமல் 5. 1. 12 இரவு பரலோக பிராப்தியடைந்து. 6. 1. 12 மூன்று ராஜாக்கள் திருநாள் அன்று, கோவில் பக்கத்துக் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதை எழுதிவைத்தவர். மேற்படி மலையப்ப வாத்தியார் சிரேஷ்ட குமாரன் வி. எம் ஜோசப் மரியநாதன்.

சர்வேசுரனுக்கு தோஸ்திரம்

5.5.1944 வி.எம்.ஜே. மரியநாதராயர்.

வீ. நா. ஞானக் கலீஸ்து நாயகர்

வீ. தா. போனிப் பாசி படையாட்சி.

✧✧✧

8. திரு. வி.எம்.ஜே. மதியநாதராயர் கொடுத்துள்ள. வீரெங்கராயர் மரபுவழிப் பட்டியல்*



* பிறப்பாண்டுகள், எழுதியவர் கொடுத்த குறிப்புகளின் படி கொடுக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய சரியானவைகளாக இருக்கலாம்.

9

மரிய நாத ராயரின் குறிப்புகள் பற்றிய கண்ணோட்டம்

மரியநாதராயர் 1964ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். இக்காலத்தும் வாழ்ந்துவரும் பலருக்கும் அறிமுகமானவர். தொடக்கக் கல்வி ஆசிரியராகவும் ஆலயப் பணிகளில் ஆர்வம் கொண்டவராகவும் விளங்கியவர். வீரெங்கராயன் என்ற மரபு வழியைச் சார்ந்தவர். இவர் கொடுத்துள்ள குறிப்புகளில் சில ஏற்கக் கூடியனவாகவும் சில மூலச்சான்றுகள் இல்லாதவைகளு மாக உள்ளன. திரு இராயர் மிகச்சிறந்த சிந்தனையாளர் வர லாற்று உணர்வு கொண்டவர் என்பது தெளிவு. கடந்த காலத்தின் தனது மரபுவழியை எதிர்காலத்தவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம், அப்பெரிய ஊரில் இவருக்கு மட்டுமே இருந்தது பாராட்டுக்குரியது. தனது குடும்பவழிப் பட்டியலை மட்டுமே கொடுத்துள்ள மரியநாதராயர், மற்ற வகையறாக்கள் பற்றிய செய்திகளை அளிக்கவில்லை. அக்குறிப்புகளின் தொடக்கத்தில், “நான் எழுதியுள்ள இந்தத் தகவல்கள் கூடவோ குறைந்தோ இருக்கலாம்” என்று குறிப்பிடுகிறார். இது அவரது, உண்மையை உரைக்க வேண்டும் என்ற எண்ணவோட்டத்தைக் காட்டுகிறது எனலாம்.

1. சிறுகளத்தூர் சாமுண்டி அம்மன் வீரனார் கதை

இக்கோவில் இன்றும் சில இடிபாடுகளுடன் காணப்படு கிறது. வழிபாடுகள் இன்றும் நடைபெற்று வருகின்றன. இந்தக் கோயில் எந்த ஊர் மக்களுக்கு உரிமையுடையது என்பதில் இன்று, சிறுகளத்தூர் பொன்பரப்பி மக்களிடையே கருத்து மோதல்கள் வெடித்து, நீதிமன்றம் வரையில் சென்றுள்ளது. அக்கோயிலில் எந்தக் குறிப்புகளும் காணப்படவில்லை. திரு. இராயர் கூறும் செய்திகளின்படி அக்கோயில் சிறுகளத் தூருக்கே உரிமையுடையதாக தெரிகின்றது. அங்குள்ள வீரனார்

என்ற தெய்வத்துக்கு ஆண்டுக்கொரு குடும்பத்தார், மாந்தக் காவு (நரபலி) கொடுக்கும் வழக்கம் இருந்தது என்ற செய்தி உண்மையாக இருக்க வாய்ப்புகள் உண்டு.[40] ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் தான் இக்கொடுமை ஒழிக்கப்பட்டது. வீரனார் என்ற தெய்வம், அய்யனார் என்ற தெய்வமே. அய்யம் பெருமாளும் அவரே. சிறுகளத்தூர், பொன் பரப்பி, பரணம், இரும்பிலிக் குறிச்சி போன்ற பகுதிகளில் இந்த வீரனர் (அ) அய்யனாரின் வழிபாட்டு முறையில் அய்யம்பெருமாள் என்ற பெயர் பலரிடம் இன்றும் காணப்படுகின்றது. நடுவணரசின் அமைச்சராயிருந்த வாழப்பாடி இராமமுர்த்தி இந்த அய்யம் பெருமாளையே குலதெய்வமாகக் கொண்டிருந்தவர். ஆண்டுக்கொருமுறை வழிபாட்டுக்காக இங்கே வருவார். உண்மையில் அவரது முன்னோர்கள் பொன்பரப்பிக்கு அருகில் வாழ்ந்திருந்தவர் களே. உடையார் பாளையம் வட்டத்தில் ஏறக்குறைய எல்லா ஊர்களிலும் அய்யனார் கோயில்கள் உள்ளன.[41]

2. சிறுகளத்தூரை விட்டு வெளியேறியது

வீரெங்கராயன் என்பவர் தனது நம்பிக்கைக்குரிய செஞ்சடையன் என்ற தச்சுத் தொழிலாளியுடன் வெளியேறிய தாகக் குறிப்புக் கூறுகிறது. செஞ்சடையன் ஆதி தமிழர் இனத் தைச் சார்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீரெங்க ராயன் வன்னியர் இனத்தைச் சார்ந்தவர். ஒவ்வொரு வன்னியர் குடும்பத்துடனும் ஒரு ஆதி தமிழர் குடும்பம் இணைக்கப்பட் டிருந்தது. கடந்த காலத்தின் சமுதாயக் கட்டுக்கோப்புகளில் ஒன்றாக. இந்த வன்னியர் - ஆதி தமிழர் உறவு, ஆண்டான் - அடிமை என்ற முறையில் அக்காலத்தில் இருந்திருக்கவில்லை. தன் குடும்பத்துடன் இணைந்திருந்த ஆதிதமிழர் குடும்பத்தைத் தனது குடும்பமாகவும் அவர்தம் மக்களைத் தம்மக்கள் போலவும் அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை செய்து கொடுப்பவர்களாக வன்னியர்கள் விளங்கினார் என்பதற்கானச் சான்றுகள் வரதராசன் பேட்டையின் கடந்த கால வரலாற்றைப் பார்க்கும்போது தெளிவாகின்றது.

---

40. பொன்பரப்பி இரா. கிருட்டின மூர்த்தி மேனான் ஊராட்சி ஒன்றியத் தலைவர் அளித்த தகவல்கள்.

41. முனைவர் இல. தியாகராசன், கல்வெட்டு ஆய்வாளர் தந்த தகவல்கள்.

3. வெளியேறிய காலம் கிறித்துவத்தில் இணைந்த காலம்:

மரபுவழிப் பட்டியலில் கண்டுள்ளபடி சின்னது நாட்டார். 1760களில் பிறந்ததாகக் கொள்ளலாம். அவருக்கு முன்பு சில தலைமுறைகள் இருந்தனவென்று கூறப்பட்டுள்ளது. 1650ஆம் ஆண்டுகளில் கிறித்துவம் அய்யம் பேட்டையில் அறியப்பட் டிருந்ததை குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன. அதற்கு முன்பாக மூன்று குடும்பத்தார் மயிலாப்பூர் சென்ற செய்திகளும் அறியக் கிடக்கின்றன. ஒரு குருவானவரை அழைத்துவந்து வைத்துக் கொள்ளும் அளவுக்கு அவ்வூர் விரிவடைந்திருந்ததையே இச்செய்தி விளக்குவதால் இதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்பே அய்யம் பேட்டையில் வீரெங்கராயரின் குடியேற்றம் நிகழ்வுற் றிருக்க வேண்டும். எப்படியிருப்பினும். கி.பி. 1550ஆம் ஆண்டு களில் வீரெங்கராயரின் குடியேற்றம் அய்யம்பேட்டையில் நிகழ்வுற்றிருக்க வேண்டும். அதே கால அளவுகளில் அவர்கள் கிறித்துவ சமயத்திலும் சேர்ந்திருக்க வேண்டும். மயிலாப்பூரில் பிரான்சீசுகன் துறவிகள் கி.பி. 1540களிலேயே வாழ்ந்திருந்ததாகப் போர்த்துக்கீசிய ஆவணங்கள் கூறுகின்றன.[42]

3. புதுக்கோட்டைத் தொண்டைமான் கதை:

புதுக்கோட்டை அரசு. கி.பி. 1670களுக்கும் பிறகே தோன்றிய அரசாகும். எனவே 1550களில் புதுக்கோட்டை அரசின் வழி வந்தவர்களாக ஒரு குடும்பத்தினரைப் பற்றிக் குறிப்புகள் கூறுவது தவறான செய்தியாகும்.[43] புதுக்கோட்டைப் பகுதி யினின்றும் வந்தவர்கள் என்ற கருத்து உண்மையாக இருக்க லாம் 1550களில் திருச்சியில் கிறித்துவ சமயப் பரப்பாளர்கள் இருந்திருக்க வாய்ப்புகளுண்டு மேலும் தொண்டைமான் என்ற சொல். புதுக்கோட்டை மன்னர்களுக்குரிய பட்டம் என்றாலும் அது தொண்டை மண்டலத்தைச் சுட்டும் சொல்லே. தமிழகத் தின் வடபகுதியினின்றும் குடிபெயர்ந்தவர்களே முக்குலத்தோர் என்னும் இனத்தாராவர்.[44] இவர்கள் சிவநெறியாளர்கள் இவர் களுக்கெனச் சில தனிப்பட்ட சிறப்புகளுமுண்டு. தொண்டை மான்வழி வழிவந்தவர்களில் அப்பாசாமி உபதேசியார் என்ப வரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அப்பாசாமி என்ற

---

42. Portigulre in the tamil Coast p. 279.
43. History of Madurai Nayaks, p.
44. கள்ளர் இன வரலாறு.

பெயரைப் பொதுவாகக் கள்ளர் இனமக்களே சுட்டிக் கொள்வர்.[45] மற்ற இனத்தாரிலும் பிற்காலத்தில் அப்பெயர் காணப்படுகின்றது. அப்பா சாமி என்பது சிவனைக் குறித்த சொல்லாகும். அப்பாசாமி - சிவன்: மகன் சாமி - முருகன் என்று கொள்ளப்படும். குறிப்பில் காணப்படும் செய்தியின் அடிப் படையில் புதுக்கோட்டையிலிருந்து அய்யம் பேட்டைக்கு வந்தவர்கள், கள்ளர் இன மக்களாக இருப்பதற்கும் வாய்ப்பு களுண்டு. வன்னியர்களிலும் அப்பாசாமி என்ற பெயர் காணப்படுவதால் அய்யம்பேட்டைத் தொண்டான்கள் பற்றிய குறிப்பில் அவர்கள் உண்மையிலேயே வன்னியர் இன மக்கள் தாமா என்பதில் ஐயப்பாடும் உள்ளது. இராபர்ட்-டி-நொபிலி போன்றோர். திருச்சி - வடுகர் பேட்டையில் பணியாற்றிய காலத்தில் அப்பகுதியின் கள்ளர் இன மக்களைச் சமய மாற்றம் செய்திருக்க வேண்டும் தொண்டான் களை வடுகர்பேட்டை யில் பகுதியைச் சார்ந்த கள்ளர் இனத்தாரே எனக் கொள்ளுதல் சரியானதாகவிருக்கும்.

5. ஈஸ்திரியப் பூசாரியின் குறிப்பு:

சிதம்பரத்திலிருந்து வந்த ஈஸ்திரியப் பூசாரி வீரெங்க ராயரின் மகளை மணந்தாகக் குறிப்பில் காணப்படுகின்றது. சாதி களின் அடிப்படையில் ஈஸ்திரிய என்ற சொல் தமிழகத்தில் வேறெங்கும் காணப்படவில்லை. நாட்டுபுறத் தெய்வங்களுக்குப் படையல் செய்பவர்களையே பூசாரிகள் என அழைப்பது வழக்கு. பிராமணர்களுக்கு அச்சொல் பொருந்தாது. பிராமணர் களின் பூசை செய்வோரை சிவாச்சாரியார் என்று சிவநெறி யாளர்களையும், பட்டாச்சாரியார் என்று மாலிய நெறியாளர் களையும் அழைப்பதும் நடைமுறைகளாகும். குறிப்பு எழுதிய வருக்கு, இந்த வேறுபாடுகள் பற்றித் தெரிந்திருக்க வாய்ப் பில்லையாதலால் பூசாரி என்ற சொல்லைப் பயன்படுத்தி யுள்ளார். சிதம்பரத்திலிருக்கும் பிராமணர்கள் தீட்சிதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். தீட்சிதர் (Dixit) என்ற சொல்லைச் சரியாக ஒலிக்கத் தெரியாதவர்கள். ஈஸ்திரிய என்று சொல்லி யிருக்க வேண்டும். சிதம்பரம் என்ற ஊர் குறிக்கப்படுவதால் அது தீட்சிதர்களையே குறிப்பிடுகிறது எனக் கருதலாம். எனவே ஈஸ்திரியப் பூசாரி என்பவர். சிதம்பரத்திலிருந்து வந்த

45. மேலதே.

பிராமணனே எனக் கருதலாம்.[46] வன்னியர் - கள்ளர் பிராமணர் என்ற அளவில் வீரெங்கராயருடன் திருமண உறவுகள் நிகழ் வுற்றன எனக் கருதலாம்.

6. மயிலாப்பூர் சென்றது

வீரெங்கராயதொண்டான் மற்றும் ஈஸ்திரிய குடும்பத்தார். மைலாப்பூருக்குச் சென்று. கோவா மிஷன் சாமியாரை அழைத்து வந்து அலங்கார மாதா ஆலயம் கட்டி வாழ்ந்து வந்தனர் என்னும் இச்சம்பவம் கி.பி. 1650ஆம் ஆண்டில் நடந்திருக்கும் என்று குறிப்புகளில் காணப்படுவது உண்மையான செய்தியாக இருக்க வாய்ப்புகளுண்டு.

முதன்முதலில் கி.பி. 1540ஆம் ஆண்டில் அந்தோனியோ தெ பாத்ராவோ (Fr. Antonio de padrao) என்றும் பிரான்சிசுகன் துறவி மயிலாப்பூரில் குடியேறினார். இவருக்கு முன்பே சிலர் மயிலாப்பூரில் இருந்தனர் என்றாலும் அந்தோணியோ துறவியே சமயப் பரப்புதல் பணிகளில் ஈடுபட்டார். பல இந்துக் களைக் கிறித்துவத்துக்கு மாற்றினார். கி.பி.1559 ஆண்டில் மடல் ஒன்றின்படி மயிலாப்பூரில் பிரான்சிசுகன் துறவிகளுக்கென்று குடியிருப்புகள் கட்டப்பட்டதாக அறியக் கிடக்கின்றது. கி.பி. 1650ஆம் ஆண்டில் அய்யம்பேட்டையில் ஆலயம் கட்டப்பட்ட செய்தி உண்மையாயிருப்பின் அருளானந்தர் கொழைக்கு வந்தபோது அப்பகுதி, தகுதி வாய்ந்த கிறித்துவப் பங்காகவே இருந்தது என்பது தெளிவு. இந்தப் பங்கு. பிரான்சிசுகன் துறவி களால் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதும் தெளிவு. தொடக்கத்தில் பிரான்சிசுகன் துறவிகளுக்கும் இயேசு அவைத் துறவிகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன வென்று செய்திகள் கூறுகின்றன.[48] எனவேதான் கொழையில் புதிய குடியேற்றத்தினை இயேசு அவையினர் மேற்கொண்டனர் எனக் கருதவும் இடமுண்டு.

7. கொழை – அய்யம்பேட்டை:

இவ்விரு ஊர்களிலும் கிறித்துவ மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதை இராயரின் குறிப்புகள் தெளிவுபடுத்துகின்றன.

---

46. சிதம்பரம் நடராசர் திருக்கோவில், தல வரலாறு.
47. Achilles Meersmen, The Franciscans in TamilNadu Schoneck Beekenried, 1962.
48. Christians and Christianity in India and Pakistan.

வீரெங்கராயர் இந்த ஊருக்கு வந்தபோது அதற்கு அய்யம் பேட்டை என்ற பெயரிருந்தது என்றும் சேங்கண்டி என்பவர் அய்யம்பேட்டையில் குடியிருந்தார் என்னும் சேங்கண்டியின் மைத்துனர் சல்லி படையாட்சி என்பவர் கொழையில் குடி யிருந்தார் என்றும் குறிப்புகளில் காணப்படுவதால் கொழை - அய்யம்பேட்டை ஆகிய இரு ஊர்களும் நிலைபெற்றிருந்தன என அறியலாம்.

இந்த சேங்கண்டி சல்லி படையாச்சி குடும்பத்தினர் பிற்காலத்தில் கிறித்துவத்துக்கு மாறிவிட்டனர் என்பதையும் அறியலாம். சேங்கண்டி அய்யம்பேட்டையில் குடியிருந்த போதிலும் கொழையின் மணியக்காரராய் பணியாற்றி வந்தார் என்ற செய்தி கொழை, அய்யம்பேட்டையை விட பெரிய ஊராக இருந்தது என்பதையே காட்டுகிறது. கொழை செஞ்சி நாவாபு களிடமிருந்தது, அய்யம்பேட்டை. உடையார் பாளையம் பகுதியிலிருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு தெருவே. இவ்விரு நாடுகளுக்கும் எல்லையாயிருந்தது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

வீரெங்கராயன் குடியேறிய பிறகு தொண்டான்-ஈஸ்திரிய வகுப்பார் வந்து சேர்ந்ததும் திருமண உறவுகள் கொண்டதும் அய்யம்பேட்டையில் தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அய்யம்பேட்டையில் தான் முதல் கிறித்துவம் தோன்றி யது என்றும் கொழையில் பிற்காலத்தில் தான் கிறித்துவர்கள் குடியேறினர் என்றும் கருதலாம்.

கொழையில் வாழ்ந்திருந்த கிறித்துவர்கள் இயேசுஅவை யினரால் பல்வேறு ஊர்களினின்றும் கிறித்துவத்துக்கு மாற்றப் பட்டவர்களே என்று கருத இட முள்ளது. கொழையில் கிறித்துவக் குடியேற்றம் கி.பி. 1650 ஆண்டுகளிலும் அய்யம் பேட்டையில் கி.பி. 1525 - 1550 ஆண்டுகளிலும் நிகழ்வுற்றன எனக் கருதலாம். பிற்காலத்தில் இவ்விரு மக்களும் இணைந்து போனதால் ஊரின் விரிவாக்கம் மேற்கு நோக்கி நகர்ந்து இறுதி யில் கொழைப்பகுதியில் குடியிருப்புகள் நிலங்களாக மாற்றப் பட்டன எனக் கருதலாம்.

1950 ஆண்டுகளில் காணப்பட்ட குழைவெளியின் கிணறு களின் விளிம்புகளில் 2 அடிகள் விட்டம் கொண்ட கிணறுகள்

இருந்ததற்கானச் சான்றுகள் கிடைத்தன. இக்கிணறுகள் பற்றி விளக்கியவர்கள். இவை ஒற்றைக் கிணறு என்றும் இதனை ஒராளே வெட்டிக் கொண்டு செல்வார் என்றும் மற்றவர் மேலிருந்து மண்ணை வாங்கிக் கொள்வார் என்றும் கூறினர். ஏறக்குறைய 40 அடி ஆழத்தில் தோண்டப்பட்ட அக்கிணறுகள் இன்றைய ஆழ்குழாய்க் கிணறுகளை நினைவூட்டுகின்றன. முற்றிலும் செம்பாறைக் கற்களாலான அப்பகுதியில். கிணற்றுச் சுவர் இடிந்து விழ வாய்ப்பில்லை. நூலாசிரியரே இக்கிணறுகள் பற்றிய செய்திகள் அறிந்திருந்தார் மேலும் கடந்த நூற்றாண்டில். கிணறுகள் தோண்டும்போது வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் பல கண்டெடுக்கப்பட்டன. உடைந்த பானை ஓடுகள் கரித்துண்டுகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. இவைகள் யாவும் அப்பகுதி ஒரு காலத்தில் குடியிருப்புகளாக இருந்தனவென்பதை அறிவிக்கின்றன.[49]

பல்தசார் டிகொசுதா, ஆந்திரே பிரேயர், அருளானந்தர் போன்றோர் இவ்வூரில் தான் தங்கிச் சமயம் பணியாற்றினர் என அறியலாம். வீரெங்கராயன் - தொண்டான் - ஈஸ்திரியன் ஆகியவர்களின் வழிவந்தவர்களைத் தவிர மற்ற கிறித்துவர்கள் இயேசு அவையினரால் சமய மாற்றம் செய்யப்பட்டவர்களே எனக் கருதலாம். அருளானந்தர் காலத்தில் அய்யம்பேட்டை யில் கிறித்துவர்கள் இருந்தார்கள் என்றாலும் இயேசுஅவை யினர் அச்செய்தியைச் சொல்லாமல் விடுத்தனர். தங்களுடைய பணிகளை மட்டுமே முதன்மைப்படுத்திய இயேசு அவையினர் பிரான்சிசுகன் துறவிகள் பற்றிய செய்திகளை (வேண்டுமென்றே) விடுத்திடுக்கலாம். அய்யம் பேட்டைக் கிறித்துவர்கள் முதல்வ ராகவும் கொழைக்கிறித்துவர்கள் அதற்கடுத்து வந்தவர்களாக வும் கருதுவதில் தவறில்லை எனக் கொள்ளலாம்.

8. பாளையங்கோட்டை

பாளையம் என்ற பிற்கால வழக்குச் சொல்லுக்குப் போர்ப் படை என்பதே பொருளாகச் சொல்லப்பட்டது. ஓரிடத்துக்குப் படையினரைக் கொண்டு சென்று நிறுத்துவதற்கு, "பாளையம் இறங்குதல்" என்றும் கூறப்பட்டது. கொழைக்குக் கிழக்கே 2 கல் தொலைவில், கி.பி. 1600 ஆண்டுகளுக்குப் பிறகு தோற்று விக்கப்பட்ட ஊரே பாளையங்கோட்டையாகும். அய்யம்

49. நூலாசிரியரின் நேர் ஆய்வுகள்.

பேட்டை - கொழை ஆகிய பகுதிகள் வெவ்வேறு அரசுகளிடம் இருந்ததால், உடையார் பாளையம் மற்றும் மேற்குப் புறங்களி லிருந்து வரும் படைஎடுப்புகளைத் தடுக்க, ஒரு படைத் தலைவன் தலைமையில், போர்ப்படை யொன்று, பாளையங் கோட்டையில், செஞ்சி அரசால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அங்கு மண்கோட்டையொன்றையும் செயற்கையாகவும் அமைத் தனர். அக்கோட்டையின் மேல், பீரங்கிகள் போன்ற போர்க் கருவிகளும் நிலையாக நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றில் சில இன்றும் கூட அகற்றப்படவில்லை. கோட்டையின் வடக்கு மூலையில், சிறிய பள்ளிவாசல் ஒன்றும் காணப்படுகின்றது. இவைகள் யாவும் முதலில் ஆற்காட்டைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டுவந்த இசுலாமியர்களால் உருவாக்கப்பட்ட வைகளாகும். பாளையம் இறங்கியிருந்த கோட்டை, பாளையங் கோட்டை எனப்பட்டது. கொழையில் இருந்த பல கிறித்துவக் குடும்பங்கள், பிற்காலத்தில் பாளையங்கோட்டையிலும் குடியேறினர்.[50] தற்போது இவ்வூர், குடந்தை - சென்னை வழிச் சாலையில், சோழத்தரம் என்ற ஊருக்கு மேற்கே மூன்று கல் தொலைவிலுள்ளது. (உத்தம சோழன் என்ற இடைக்காலச் சோழன் பெயரில், சோழ உத்தமபுரம் என்ற ஊர் பெயரிடப் பட்டு, தற்காலத்தில் சோழத்தரம் எனத் திரிந்துள்ளது.)

9. பஞ்சம் தோன்றியது

கடந்த காலத்தின் வரலாறுகளைக் காணும்போது, பஞ்சம் (வற்கடம் என்பது பஞ்சம் என்ற சொல்லுக்கேற்ற சரியான தமிழ்ச் சொல்லாகும்.) பற்றிய செய்திகள், ஒரு நூற்றாண்டில் பலமுறை சொல்லப்பட்டுள்ளதால், இராயர் கூறும் குறிப்புகளில் காணப்படும் பஞ்சம் எக்காலத்தில் தோன்றியது என்பதைச் சரியாகக் கணக்கிட இயலவில்லை. போர்த்துக்கீசியர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புகளில், பல முறை தமிழகத்தை வற்கடம் தாக்கியதாக அறிய முடிகின்றது. கி.பி.1720ஆண்டுகளில் வீரமா முனிவர் காலத்தில் ஒரு வற்கடம் தோன்றியதாகவும், முனிவர் மக்களுக்கு உணவு வழங்கும் “கஞ்சித்தொட்டி” ஏற்பாடுகளை மேற்கொண்டதாகவும் குறிப்புகள் கூறுகின்றன. இக்குறிப்பு இராயர் குறிப்புகளின்படி, 1780ஆண்டுகளில் ஒரு வற்கடம் தோன்றியிருக்க வாய்ப்புகள் உண்டு.

---

50. மேலதே.

10. ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட நிலஅளவை

3கி.பி. 1801ஆண்டு முதல், ஆங்கிலேயர்கள் நில அளவை (சர்வே) செய்தனர் என்று அறியக் கிடக்கின்றது.[51] இக்காலத்தில் அய்யப்பேட்டை ஊர் விரிவடைந்திருந்தது எனவே ஆங்கிலேயர்கள், இவ்வூரின் தெற்குப் பகுதியைத் தென்னூர் என்று குறித்து, தனி ஊராக அறிவித்தனர். இச்செய்தியை இராயர் குறிப்பிடுகின்றார்.

11. அய்யம்பேட்டை – தென்னூர் மக்கள் பிணக்கு

கி.பி. 1800ஆண்டுகளுக்குப் பிறகு இவ்விரு ஊர் மக்களும், பல்வேறு நிகழ்வுகளின் அடிப்படையில் பிரிந்து போயினர். உள்ளூரில் நாட்டார் பொறுப்பு வழங்கப்பட்டது. கோயில் திருவிழா, ஊர்ப்பொது நடப்புகள் ஆகியவற்றில் தோன்றிய பிணக்குகளால் இம்மக்கள் பிரிந்தனர். பிற்காலத்தில், கிறித்துவ சமயக் குழுக்களுக்குள் தோன்றிய பகைமையால், இப் பிணக்குகள் ஊதி பெரிதாக்கப்பட்டன. ஒரே இனத்தைச் சார்ந்த அய்யம்பேட்டை - தென்னூர் மக்களை ஆள்வதற்கு, இப்பிரிவினையைக் கையில் எடுத்துக் கொண்ட கிறித்துவ சமயத்தினர், இன்றும் கூட அவர்களைப் பிரித்து வைத்திருப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர் என்பது கடந்தகால வரலாறு. அறிவு வழியில் சிந்திப்பதை என்றுமே அறிந்திராத வன்னியர் இன மக்கள், உணர்வுகளுக்கு அடிமையாகக் கூடியவர்கள் என்பதை, ஆள்வோர்கள் இன்றும் கூட அறிந்து கொண்டு அதனையே கருவியாகவும் (ஆயுதமாகவும்) பயன் படுத்தி வருகின்றனர்.

12. இயேசு அவையினரின் வெளியேற்றம்

கி.பி. 1773ஆம் ஆண்டு தொடக்கம், உலககெங்கும் இயேசு அவையினரின் செயல்பாடுகள் முடக்கப்பட்டது போல், தமிழகத்திலும் நடைசெய்யப்பட்டது. ஆனால், 1885ஆம் ஆண்டு வரையிலும், அய்யம்பேட்டையில் இயேசு அவைக் குருவான வரே இருந்தார் என்றும்,[52] அவ்வாண்டிலேயே, அங்கிருந்த குருவானவர் வெளியேறினார் என்பதையும் இராயரின் குறிப்புகள் சுட்டுகின்றன.

---

51. The Aristocracy of Southern India, p. 216.

52. குடந்தை மறைமாவட்டப் பொன்விழா மலர்.

மதிப்பீடு

மரியநாத இராயர், கி.பி. 1760ஆம் ஆண்டுகளுக்குப் பிறகான ஒரு மரபு வழிப்பட்டிலை, வீரெங்கராயன் வகையறா வுக்கு வழங்கியுள்ளார். இது பற்றிய செய்திகளில் பல உண்மை யானவைகளே, கி.பி.1650-1760 ஆண்டுகளுக்கான பட்டியலைக் கொடுக்கவில்லை. இருப்பினும், 1650ஆம் ஆண்டில் மயிலை யிலிருந்து குருவானர் அழைக்கப்பட்டு, அலங்காரமாதா[53] கோயிலைக் கட்டிய செய்தியைக் குறிப்பிடுகின்றார். இது, பல்தசார் தெ கொஸ்தா,[54] ஆந்திர பிரேயர் போன்ற இயேசு அவைக் குருக்கள், கொழையில் பணியாற்றிய காலங்களாகும்.

கி.பி. 1650ஆம் ஆண்டுகளில், ஆலயம் கட்டுமளவுக்கு அய்யம்பேட்டையில் மக்கள் தொகை இருந்திருக்க வேண்டும் என்பதால், அதற்கு முன்பு 100 ஆண்டுகளாவது, அய்யம் பேட்டையில் கிறித்துவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் அதுபற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை. கி.பி. 1550 ஆண்டுகளில், திருச்சியில் இயேசு அவையினர் சமயப் பணியாற்றியதற்கான செய்திகள் கிடைக்கவில்லை. இக்காலத்தில் தஞ்சையில் மட்டுமே, பிரான்சிசுகன் குருக்கள் காணப்படுகின்றனர். எனவே, தொண்டான் வகையறாவின் முன்னோர்கள், திருச்சியில் திருமுழுக்கைப் பெற்றனர் என்பது, 1550களில் நடந்திருக்க வாய்ப்புகளுண்டு. கி.பி. 1625 ஆண்டுகளில் இராபர்ட் - டி - நொபிலி திருச்சியின் சுற்றுப்புறப் பகுதிகளில் சமயப் பணி யாற்றியுள்ள செய்தி அறியக் கிடப்பதால், தொண்டைமான் என்று சொல்லப்பட்ட குடும்பம், இக்கால அளவுகளில் திருமுழுக்குப் பெற்றிருக்க வாய்ப்புகளுண்டு. மேலும், நொபிலி வடுகர் பேட்டையிலும் சில காலம் தங்கிச் சமயப் பணியாற்றி யுள்ளார். அவர் காலத்தில் அப்பகுதியில் வாழ்ந்திருந்த பல கள்ளர் இன மக்கள், கிறித்துவத்தைத் தழுவினர். அவர்களில் ஒரு குடும்பத்தினரே தொண்டைமான் வகையறாவினர் எனக்

53. அலங்கார மாதா என்பது வட சொற்களாகும். அழகுக்கு அழகூட்டுவதே அலங்காரம் எனப்படும். குடந்தை அயத்தின் முதல் கோயிலுக்கு அலங்கார மாதாவின் பெயர் வைக்கப்பட்டதின் நினைவாகவே, குடந்தை ஆயத்தின் தலைமைப் பேராலயத் திற்கும் அப்பெயர் வைக்கப்பட்டது எனக் கருதலாம். ஆசிரியர்.

54. Fr. Robert De Nobili, Fr. Rajamanickam, Ed., Palayamkottai, 1971, p. 213.

கொள்வது, சரியானதாகவுள்ளது. அய்யம்பேட்டைத் தொண்டைமான் வகையறாவினர், வடுகர்பேட்டைப் பகுதியைச் சார்ந்தவர்களே என்பதும், அவர்கள் புதுக்கோட்டை மன்னர் மரபைச் சார்ந்தவர்கள் அல்லர். என்பதும் தெளிவு. பொதுவாக தஞ்சை, திருச்சிப் பகுதியின் கள்ளர்கள், தம்மைப் புதுக்கோட்டை மன்னரின் மரபுவழியினர் என்று பிற்காலத்தில் கூறிக் கொள்வதில் பெருமை கொள்வர். அந்த அடிப்படையிலேயே, இராயர், தொண்டமான் வகையறாவை, மன்னர் மரபு எனக் குறித்துள்ளார் எனக் கருத வேண்டும். இந்த அடிப்படையில் தொண்டமான் குடும்பத்தினர் இயேசு அவையினரால் கிறித்துவத்துக்கு மாற்றப்பட்டனர் என்பதைவிட, 1550களில் தஞ்சையிலிருந்த பிரான்சிசுகன் துறவிகளால் கிறித்துவத்தைத் தழுவினர் என அறியலாம். வீரெங்கராயன் மற்றும் ஈஸ்திரிய வகையறாவினர் கிறித்துவத்தில் இணைந்தபோது, அவர்களுக்கு யார் திருமுழுக்கு அளித்தனர் என்ற விளக்கம் குறிப்புகளில் காணப்படவில்லையென்றாலும் தொண்டைமான் குடும்பத்தின் முதியவர் ஒருவரே கூட அத்திருப்பணியைச் செய்திருக்கலாம் எனக் கருதலாம். கி.பி. 1650ஆம் ஆண்டுகளில் மயிலாப்பூர் சென்று, குருவானவரை அழைத்து வந்த செய்தியால், மயிலை குருவானர் இயேசு அவையைச் சார்ந்தவரே என அறியலாம். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, பிரான்சிசுகன் துறவிகளிடமிருந்த பொறுப்பு, கி.பி. 1606ஆம் ஆண்டிலிருந்து இயேசு அவையினருக்கு மாற்றப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.[55] இச் செய்திகளின் அடிப்படையில், கி.பி. 1550ஆம் ஆண்டில், அய்யம்பேட்டையில் கிறித்துவம் இருந்ததாகக் கருதப்படுவது ஊகத்துக்கு இடமானது என்றும், கி.பி. 1630ஆம் ஆண்டுகளில், கிறித்துவம் வேரூன்றியிருந்தது என்றும் கருதலாம். 1570ஆம் ஆண்டில் தஞ்சையிலிருந்த பிரான்சிசுகன் குருக்கள், தொண்டைமான் குடும்பத்துக்குத் திருமுழுக்கு அளித்திருக்கவும் வாய்ப்புகளுண்டு.[56]

✧✧✧

55. Fr. Francis Xavier also requested that the church of the Apostle St. Thomas in Mylapore be handed over to the Jesuits Codice, Vol - IV, p. 70.

55. Letter of Fr. Francisco Perez to Fr. Miguel dt 1.1.1558, Written from Cochin, Codice, Vol II, p. 17.

56. குடந்தை மறைமாவட்டப் பொன்விழா மலர்.

10

இந்தியாவில் ஆயங்கள்

கோவா ஆயம்*

கி.பி. 1533ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31ஆம் நாள், இந்தியாவின் முதல் ஆயம் அல்லது மறைமாவட்டம் என்று சொல்லப்படுகின்ற, கோவா ஆயம் தொடங்கப்பட்டது. இந்த ஆணையில் கையெழுத்திடுமுன்பே போப்பாண்டவர் இறந்து போனதால், மீண்டும் 1534 நவம்பர் மூன்றாம் நாளில் மூன்றாம் சின்னப்பர், கையொப்பமிட்டு, முதல் ஆயரையும் பணித்தார். 1539ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் நாளில், கோவா ஆயர் அல்போன்சு அல்புகர்க் கோவா வந்து, பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். ஆசியாவின் கிழக்குப் பகுதி நாடுகள் அனைத்துக்கும், கோவா தலைமையிடமாகத் திகழ்ந்தது. போர்த்துகீசிய மன்னரின் அரசியல் ஆளுநரும் கோவாவில்தான் இருந்தார் என்பதால், அரசியல் மற்றும் வணிகப் பணிகளை ஆளுநரும், சமயப் பணிகளை ஆயரும் இணைந்து செய்யலாயினர். கி.பி. 1557ஆம் ஆண்டில், கொச்சி ஆயமும், தொலை கிழக்கில் மலாக்கா (Melaka) ஆயமும், போர்ப்பாண்டவரால் தோற்றுவிக்கப்பட்டதால்[57], கோவா ஆயம், பேராயமாக (Arch Discese) உயர்த்தப்பட்டது.

கொச்சி ஆயம்

போப்பாண்டவர் நான்காம் சின்னப்பர், 04. 02. 1557ஆம் நாளிட்ட ஆணையின்படி, கொச்சியை ஒரு ஆயமாக

---

* Gov : Pope Paul III issued the bull "Aeguum Rep utamus" on November 1534 and appointed Dom Francisco de Mello as the first Bishop of Goa.

57. Bullarium Patronatus, Vol.I, pp. 192-195.

அறிவித்தார்.[58] இது கோவாவின் பேராயத்துக்குக் கீழ் அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாடு, கொச்சி ஆயத்தின் ஆளுமையின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. மதுரை, மயிலாப்பூர் போன்ற பகுதிகளில் பெரும் மாற்றங்களை ஆயர் செய்யத் தொடங்கினார். குறிப்பாக, மயிலையிலிருந்த தோமையார் தேவாலயத்தின் பணிகளை முடுக்கிவிட்டார்.

தோமையார் பேராலயத்தின் முன்பு, அக்காலத்தில், பாவம் செய்துவிட்டதாகச் சொல்லி கொண்டவர்கள், தாங்கள் இயேசுவுக்கு எதிராக என்ன பாவம் செய்தோம் என்பதை நெற்றியில் எழுதி ஒட்டிக் கொண்டு சாக்கு உடையுடனும் கையில் ஒரு கோலுடனும், பேராலயத்தின் நுழைவு வாயிலருகே நின்று கொண்டிருப்பர். இச்செயல் மூலம், இயேசு தங்கள் பாவங்களை மன்னித்து விடுவதாக நம்பினர் இவர்களிடமிருந்து பாவத்திற்கான ஒறுத்தல் தொகையாக (Fine) 1400 பர்தாக்கள் வரை பெறப்பட்டதாக, இயேசு அவையினரின் குறிப்புகள் கூறுகின்றன. இத்தொகை, மயிலையில், திக்கற்றோர் இல்லம் ஒன்றைக் கட்டச் செலவிடப்பட்டதாகவும் (Holy House of Mercy) செய்திகள் கூறுகின்றன. ஆயர் இந்தப் பணிகளையெல்லாம் ஒழுங்குபடுத்தியதோடு வெளிநாட்டினர் (வணிகர்) மற்றும் உள்நாட்டுக் கிறித்துவர்களிடையே ஒற்றுமையையும் பேணிக் காத்தார்.

மதுரைப் பணிக்களம் (Madurai Mission):

கொச்சி ஆயரின் மேற்பார்வையில், மதுரையில் கிறித்துவ சமயத்தின் பணிக்களம் கி.பி.1595இல் தொடங்கப்பட்டது. நொபிலி, பல்தசார் தெ கொசுதா, ஆந்திரே பிரேயர், அருளானந்தர் போன்றோர் இத்தலைமையிடத்திலின்றும் பணியாற்றினர். மதுரை, தகுதியுடைய ஆயமாக (Bishopiric) உயர்த்தப்படவில்லையாயினும், அந்த அடிப்படையிலேயே பணிகள் தொடர்ந்தன. சாதிகளின் பிடியில் சிக்கியிருந்த தமிழகத்தில், சமயப் பணிகளை மேற்கொள்ள, பல்வேறு உத்திகள், கிறித்துவ சமயத்தினரால் மேற்கொள்ளப்பட்டன. பிராமண

58. Kochi : The diocese of Kochi was erected on 4 February 1557 by Pope Paul IV through the Promulgation of the Papal bull "Pro Excellenti Praeeminentia." Jorge de Themudi was the first bishop.

சமயத்திலிருந்த சந்நியாசிகள், பண்டாரங்கள் போன்றோர் வழியில், கிறித்துவச் சமயத்தின் துறவிகளும் காவியாடை யுடுத்திக் கொண்டனர். சந்நியாசிகளுக்குச் பிராமண சமயத்தில் எந்தப் பொறுப்புகளும் இல்லை. அவர்கள் நாடெங்கும் அலைந்து திரிபவர்களாவர். பண்டாரங்கள் எனப்படுபவர்கள், பிராமணர்கள் அல்லாத (சூத்திரர்கள்), நாட்டுப்புறக் கோயில் களை நேர்வாகம் செய்து வந்த பூசாரிகளேயாவர். மதுரையில் சமயப் பணிகளுக்கான பொறுப்பை இராபர்ட் டி நொபிலி ஏற்றுக் கொண்டார். இவரே, பிராமணர் வழியில் தமது நடை முறைகளை மாற்றிக் கொண்ட முதல் ஐரோப்பியர் ஆவார்.[59]

போர்த்துக்கீசியத் துறவிகள், தொடக்கத்தில் ஐரோப்பிய வழக்குகளின்படியே இறைச்சி உண்ணுதல், கோயில்களுக்குள் மிதியடிகளுடன் நுழைதல், மது அருந்துதல் போன்ற நடை முறைகளைப் பின்பற்றி வந்தனர். மக்களை வேறுபடுத்திப் பார்க்காமல், அனைவரையும் அரவணைத்து நற்செய்தியை அறிவித்தனர். ஐரோப்பியரின் வழக்காறுகளை அறியாத தமிழ் மக்கள், மேற்கண்ட நடைமுறைகளை வெறுத்தனர். தமிழ் மக்கள் என்பது, வேளாளர்களையும் பிராமணர்களையுமே இங்கு குறிக்கும். ஏனெனில், இவர்களே மக்களில் உயர்ந் தோராகக் கருதப்பட்டனர். இவ்விரு இன மக்களையும் கிறித்து வத்தின்பால் திருப்பிவிட்டால், மற்ற மக்களும் எளிதில் கிறித்து வத்தை ஏற்றுக் கொள்வார்கள் என நொபிலி நம்பி னார். இந்த நடைமுறையை, நொபிலி காலத்திய இயேசு அவைக் குருக்களும் மற்றவரும் கடுமையாக எதிர்த்தனர். மிக நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகே, நொபிலி இந்த நடைமுறையில் செயலாற்ற அனுமதிக்கப்பட்டார். குறிப்பாக, நொபிலியின் சொல்லாற்றலும், எழுத்தாற்றலுமே, இவ்வெற்றியை அவருக்குப் பெற்றுத் தந்தன.[60] அக்கொள்கையில் அவர் வெற்றி பெற்றாரா என்பது வேறு செய்திகளாகும். இருப்பினும், தனக்குச் சரி

59. Fr. Robert De Nobili, Fr. Rajamanickam, Editor.

60. An Exposition of the Basic Principles which inspired the founding of the Madura Mission and still continue to guide it. Composed by Fr. Robert De Nobili and released by the Most Illustrious and Reverend Lord Francis Roz, Archbishop of Cranganore, is the Council held at Goa on Feb.4, 1619. - Fr. Rajamanickam.

யென்றுபட்ட இந்தியமுறைப்படி சமயப் பணிமேற் கொண்ட நொபிலி, கிறித்துவத்திலும் சாதிப் பிரிவினைகளை நேரிடை யாகவே ஏற்றுக் கொண்டார் என்பதை மறுக்க இயலாது.

மயிலை ஆயம்

மயிலை - திருமயிலை என்றழைக்கப்பட்ட ஊரில், திருவள்ளுவரும், தோமையரும் கூட வாழ்ந்திருந்தனர் என்ற வரலாற்றுச் சிறப்புகள் உண்டு. தோமையரின் மறைவுக்குப் பிறகு அவரது உடல் புதைக்கப்பட்ட திருமயிலை, அடுத்து வந்த கிறித்துவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழிபாட்டிடமாக உருவெடுக்கத் தொடங்கியது. ஏற்கனவே, கெப்ரால் என்ற பயணி, தோமையரின் கல்லறை பற்றிய செய்தியை ஐரோப்பிய நாடுகளில் அறிவித்ததோடு, கல்லறையினின்றும் எடுக்கப்பட்ட மண்ணையும் போப் பாண்டவரிடம் கொடுத்திருந்தார். இது பற்றிய செய்தியை கி.பி.1501ஆம் ஆண்டில் தாம் மானுவல் என்ற போர்த்துக்கீசிய மன்னர், பிற ஐரோப்பிய மன்னர்களிடமும் அறிவித்திருந்தார். இதனால், தோமையரின் கல்லறை பற்றிய பேச்சு ஐரோப்பாவெங்கும் பரவியது. இந்தியாவுக்குச் செல்ல வாய்ப்புக் கிடைக்கும் அனைத்து ஐரோப்பியரும், மயிலை யைக் காண விழைந்தனர். 1507ஆம் ஆண்டில், பிரான்சிசுகோ தேஅல்மெய்தா என்ற கோவாவின் ஆளுநர் உண்மை கண்டறி யும் குழுவொன்றை, மயிலைக்கு அனுப்பிவைத்தார். தொடர்ந்து, 1515 மற்றும் 1521ஆம் ஆண்டுகளிலும் குழுக்கள் அனுப்பப் பட்டன. அக்குழுக்கள் தங்களுக்கு மயிலையில் ஏற்பட்ட நெகிழ வைக்கும் செய்திகளை அளித்தன.[62]

மனோயெல் தே பிரியாசு (Manoel de Frias) என்னும் போர்த்துக்கீசியப் படைத்தலைவன், புழல் என்னும் பகுதியில் தங்கியிருந்து, தமது நாட்டு வணிகர்களுக்குப் பாதுகாப்பளித்து வந்தான். அவனுக்கு, தோமையர் கல்லறையின் உண்மையான நிலையைக் கண்டுபிடிக்க ஆர்வம் ஏற்பட்டது. ஒரு சனிக் கிழமையன்று மதியத்துக்குப் பிறகு (6. 6. 1523) தோமையர்

---

61. Letter of Fr. Henrique Henriques to Fr. Ignatius Loyola, The Jesuit Superior General dated 31.10.1548, in DI. Vol.II, p. 279.
62. A Letter from Fr. Francis Xavier dt. 27.03.1544 from Manap adu, in Huges Dider, Correspondence 1532-1552 : Letters et Documents, Paris, Published in 1987.

கல்லறையைத் தோண்டுவதற்கு ஆணையிட்டான். அங்கே, தோமையரின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன. இந்நிகழ்வு பற்றிய விரிவான அறிக்கையை, போர்த்துக்கீசிய மன்னருக்கு அனுப்பி வைத்தான். அவ்வறிக்கை, அக்கல்லறை தோமைய ருடையதே என உறுதி செய்தது. அவ்வறிக்கை (Archirum Romanumi Societatis Jesu, Rome) இன்றும் உரோம் நகரின் அருங் காட்சியகத்தில் காணக்கிடக்கின்றது.[63]

கி.பி. 1536ஆம் ஆண்டில், பிரான்சிசுகள் துறவிகள், மயிலையில் தங்களுக்கென இல்லம் அமைத்துக் கொண்டனர். மயிலையில் பணியாற்றுவதைப் பெருமையாகவும் எண்ணிக் கொண்டனர். தொடர்ந்து தங்களது சமயப் பணிகளை மயிலைப் பகுதியில் ஆற்றத் தொடங்கினர். புதிதாக மனம் திருப்பப்பட்ட மீனவர்களுக்கு பரலோகத்து மந்திரம் என்ற இயேசு அருளிய செபம் (Pater Noster) மங்கள வார்த்தை செபம் என்கிற மறியன்னை மன்றாட்டு (Ave Maria) மூவொரு கடவுளுக் கான புகழ் மன்றாட்டு (தம திருத்துவ ஸ்தோத்திரம்) என்கிற கிறித்துவ சமயத்தின் மூன்று அடிப்படையான மந்திரங்களை யும் சொல்லிக் கொடுத்தனர்.[64]

மயிலை ஆயம், போப்பாண்டவர் ஐந்தாம் சின்னப்பரால், 9. 1. 1606ஆம் நாளில் அறிவிக்கப்பட்டது. மயிலையின் பொறுப்பை, இயேசு அவையினர் மேற்கொள்ளுவதற்கான முயற்சியில், பல ஆண்டுகள் அவர்கள் ஈடுபட்டனர். இதனால் பிரான்சிசுகன் இயேசு அவையினரிடையே கருத்து வேறுபாடு களும் வெடித்தன. இறுதியில் 1607ஆம் ஆண்டில், மயிலை ஆயம், இயேசு அவையினரிடம் கொடுக்கப்பட்டது. அங்கிருந்த பிரான்சிசுகள் துறவிகள், பறங்கிப்பேட்டைக்குச் சென்றனர். மேலும் சிலர் தேவானாம்பட்டிணத்திலும், நாகப்பட்டிணத் திலும் சமயப் பணியாற்றி வந்தனர். 1620ஆம் ஆண்டுகளில் பிரான்சிசுகன் துறவிகள் பணியாற்றி வந்த இடங்களிலெல்லாம், இயேசு அவையினர் குடிபெயர்ந்தனர்.

மயிலை ஆயம், தமிழ் பேசும் பகுதிகளில் தோற்றுவிக்கப் பட்ட முதல் ஆயமாகும். இது கிழக்குக் கடற்கரையை யொட்டிய பகுதிகளை உள்ளடக்கி, ஒரிசா வங்காளம் வரை

---

63. Portuese in the Tamil Coast, P. 278.
64. Ibid, P. 279.

நீண்டிருந்தது. மயிலை ஆயத்திற்கான செலவுகள் யாவும், கோவாவில் தங்கியிருந்த ஆளுநரிடமிருந்தே பெறப்பட்டன. கி.பி. 1634ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கணக்கின்படி, ஒரு ஆண்டுக்கான ஆயருக்குரிய செலவுத் தொகையாக 2666 (ஏறக்குறைய உரூபாய்களாகக் கொள்ளலாம்) தலைமை குருவிற்கு (Vicar) 133, பயணப்படி (கடல் மற்றும் தரைவழி) 133 என சொல்லப்பட்டுள்ளது. ஆலயம் எழுப்புவது, அதற்கான சமயம் தொடர்பான பொருட்கள் வாங்குவது போன்ற செலவுகள் தனியாக அளிக்கப்பட்டன. ஒரு கணக்கின்படி (13. 03. 1607) மயிலை ஆயத்திற்கான ஓராண்டுச் செலவாக 7 இலக்கம் ரெயிசு (7, 00, 000 Reis) அளிக்கப்பட்டது.[65]

✧✧✧

65. Ibid, p. 286.

11

ஐரோப்பியக் குழுக்கள்

இயேசு அவையினர்

போப்பாண்டவர் மூன்றாம் சின்னப்பரின் 27.09.1540 நாளிட்ட ஆணையின்படி, இயேசு அவையினர், தமிழகத்தில் கிறித்துவ சமயப் பணிகளாற்ற அனுமதிக்கப்பட்டனர். இந்த அவையின் உறுப்பினர்களாக, ஐரோப்பிய நாட்டினர் பலரும் இருந்தனர். பிரெஞ்சுக்காரர்களும் இருந்தனர். நொபிலி, வீரமாமுனிவர் போன்றோர், இத்தாலி நாட்டவரே. இவர்கள் அனைவரும், போர்த்துக்கீசிய மன்னரின் அமைதியுடன் தமிழகம் வந்தனர். இதன்படி, 1542 அக்டோபர்த் திங்களில் கிழக்குக் கடற்கரையிலிருந்து தங்களது பணிகளைத் தொடங்கினர். இவை முத்துக்குளிக்கும் பகுதிகள் என்று சொல்லப் பட்டன. (Pearl Fishery Coast) இவர்களே முதன்முதலில் நற்செய்தியை அங்கு அறிவித்து, பரவர் எனப்பட்ட மீனவ மக்களை, கிறித்துவத்தின் பால் திருப்பினர். பிரான்சிசு சேவியர், இப்பணிகளைச் சிறப்பாகச் செய்து முடித்தார். அவருக்குப் பின் வந்த பலரும் தொடர்ந்து பரவர் மக்களிடையே நற்பெயர் பெற்றனர். தமிழகம் வந்த இயேசு அவையினரின் பட்டியல், மிக நீளமானது.

பிரான்சிசுகள் அவையினர்:

இயேசு அவையினருக்கும் முன்வந்த துறவிகள் இவர்களே. 1536ஆம் ஆண்டிலேயே, மயிலையில், பிரான்சிசுகன் அவை யினர் அடித்தளமிட்டனர். மயிலையில் அப்போது போர்த்துக் கீசிய வணிகர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களது சமயத் தேவை களை நிறைவேற்றிக் கொடுப்பதற்கே முதலில் இத்துறவிகள் வந்தனர். பின்னர், தோமையர் ஆலயத்தைப் பொறுப்பேற்றுக்

கொண்டனர். 1540களில் மயிலையைச் சுற்றியுள்ள பகுதிகளில், சமயப் பணிகளையும் மேற்கொண்டனர்.[66] இதே கால அளவு களில், தெற்கே நாகப்பட்டிணத்திலும், இவர்களின் பணிகள் அறியப்பட்டுள்ளன. 1580-90 ஆண்டுகளில், கூடலூரில் (தேவனாம்பட்டிணம்) சிறப்பாகப் பணியாற்றினர்.[67] இங்கு ஏற்கனவே, பிரான்சிசு சேவியர், தனது சரியான அணுகுமுறை களால், கிறித்துவத்தை வேரூன்றி வைத்திருந்தார்.[68] தேவனாம் பட்டிணம், பறங்கிப் பேட்டையில் பிரான்சிசுகன் துறவிகள், போர்த்துக்கீசிய வணிகர்களின் குடியிருப்புகளில் தங்கிப் பணி யாற்றி வந்தனர். அக்கால அளவுகளில், அய்யம்பேட்டையின் துணி வணிகர்களுக்கும் போர்த்துக்கீசியருக்கும் இடையே நிலவி வந்த உறவின் அடிப்படையில், அய்யம்பேட்டைக் கிறித்து வர்கள், பிரான்சிசுகன் துறவிகளோடு தொடர்பு கொண்டு, சமய அறிவுரைகளைப் பெற்றிருக்க வாய்ப்புகளுண்டு. அய்யம் பேட்டையிலிருந்த மூன்று வகையறாக்கலும், இத்துறவிகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும். பிரான்சிசுகன் - இயேசு அவையின்ர் முரண்பாடுகள்[69] அய்யம்பேட்டை கொழை யிலும் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

இவர்களன்றி, தோமினிக்கன் துறவிகளும் தமிழகத்தில் பணியாற்றியுள்ளனர்.

பிரான்சு நாட்டுக்குழு

கி.பி. 1773 முதல் இயேசு அவையினரின் சமயப் பணிகள், தமிழகத்தில் முடக்கப்பட்ட பிறகு, அப்பணிகளுக்கான

66. Ibid.
67. Ibid.
68. Ibid, P. 283.

"While saying mass, St. Francis Xavier was found raising above the ground. He is further reported to have preached to the people in Tamil and all the natires were surprisedd for he spoke pronouncing the words so well.

- ARSI, Mss Goa, No. 12, files 209,216 and 217.

69. Letter Dom Mateus, the Bishop of Kochi, to the King of Portugal written from Kochi dt 16.01.1588. BFUP, Vol V, Fls. 559 and 597.

பொறுப்புகளை, பாரிசு சமயப் பரப்புக் குழுவினர் ஏற்றுக் கொண்டனர். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு கால அளவுகளில், இயேசு அவையினருக்கும் பாரிசு விடையூழியர்களுக்குமிடையே நிலவி வந்த பிணக்கு, கி.பி. 1885 ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வந்தது. பிற்காலத் தமிழகக் கிறித்துவத்தை நெறி முறைப்படுத்தி யவர்கள் பாரிசுக் குழுவினரேயாவர். தங்கள் பணிகளை இவர்கள் தொடங்கிய காலத்தில், பல்வேறு இன்னல்களையும் இடையூறுகளையும் இவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. ஏறக்குறைய பகைவர்களாகவே மாறிவிட்ட இயேசு அவையின ருடன் தொடர்ந்த போரராட்டம் ஒரு புறமென்றால், பலவிடங் களில் கிறித்துவர்களே இவர்களை ஏற்றுக்கொள்ள தயங்கிய நிலைமைகள் தொடர்ந்தன. இவைகளை வெற்றிகரமாக எதிர் கொண்ட பாரிசு விடையூழியர்களே, தற்காலத்திய கிறித்து வத்துக்கு அடித்தளமிட்டவர்கள் எனக் கருதலாம். கல்விக் கூடங்களும், மருத்துவமனைகளும், தேவாலயங்களும், சமயத் தலைவர்களுக்கான குடியிருப்புகளும் இவர்கள் காலத்தில் தொடங்கப் பெற்றவைகளே. இன்று ஆயிரக்கணக்கான கோடி உரூபாய்கள் பெறுமானமுள்ள நிலங்களையும் மற்றவைகளை யும் வாங்கிப் போட்டு, நிலையான வருமானத்துக்கு வழி செய் தவர்களும் இவர்களே எனலாம். கத்தோலிக்கத் திருச்சபை யின் பல்வேறு சேவைக் குழுக்களைத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்தவர்களும் பாரிசு விடையூழியர்களே. தமிழக மக்களை, தன் வலிமையோடு நிற்பதற்கானச் சூழலை உருவாக்கிக் கொடுத்தவர்களும் இவர்களே. கிறித்துவ சமயத்தில் தொண்டர் களாகவேயிருந்து வந்த தமிழ்க் கிறித்துவர்களை, சமயத் தலைமைப் பொறுப்புகளுக்குத் தூக்கி விட்டவர்களும் இவர் களே. தொடக்கத்தில் இயேசு அவையினர் உருவாக்கியிருந்த அடித்தளத்தில் ஆற்றலுள்ள திருச்சபையை உருவாக்கிக் கொடுத்தவர்களும் பாரிசு குழுவினரே எனலாம். இயேசு அவை யினருக்கும் பாரிசு விடையூழியர்களுக்கும் இடையே நடை பெற்ற ஒரு நூற்றாண்டு காலப் போராட்டம், தமிழகக் கிறித்துவ வரலாற்றில், கரிய வடுவைத் தோற்றுவித்தது என்பதை மறுக்க இயலாது. கிறித்துவ சமய வரலாற்றை எழுதிய பலர், இக்கால வரலாற்றை இலைமறை காயாகவே சொல்லி வைத்துள்ளனர். கிறித்துவர்களில் பலருக்குங்கூட, இந்த வரலாறு இன்னும் கூடத் தெரிவிக்கப்பட வில்லையென்பதே உண்மை நிலையாகும்.

தந்தை அ. மரிய சூசை தனது "வரலாறும் வழக்காறும்" என்ற நூலில், மேற்கண்ட செய்திகளை விளக்குகிறார். போராட்ட நிகழ்வுகளைப் பட்டியலிட்டுள்ள அவர், தான் ஒரு துறவி என்ற கண்ணோட்டத்தில் செய்திகளைத் தொடுகிறார். அச்செய்திகள் சரியானவைகளே என்றாலும், இலைமறை காய் களாகவே சொல்லப்பட்டுள்ளன. ஒரு குருவானவராய் இதற்கு மேலும் விளக்கங்களைக் கொடுக்க இயலாத நிலையில், அவரது எண்ண ஓட்டங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. அந்த அளவில் வரலாற்றுச் செய்திகளை அளித்துள்ள தந்தை அ. மரிய சூசை அவர்களைப் பாராட்டலாம்.[70]

✧✧✧

70. வரலாறும் வழக்காறும் - பக். 58, 59, 60.

12

தமிழ்நாடு கி.பி. 1670



13

கி.பி. 1600களில் தமிழகம்

இக்கால அளவுகளில், தமிழகத்தில் கிறித்துவ சமயத்தின் வளர்ச்சி என்பது அடியிற்கண்ட காரணங்களால், வளர்ந்தது அல்லது தடுக்கப்பட்டது எனக் கருதலாம். தடுக்கப்பட்டது என்பது, அச்சமயத்தினுடைய வளர்ச்சியின் வீச்சைக் குறைத்த தாகக் கொள்ள வேண்டும்.

அ. அப்போது தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த ஆட்சி யாளர்களின் வலம் (பலம்),

ஆ. ஐரோப்பியரின் குறிப்பாகப் போர்த்துக்கீசியரின் கடலாற்றல்,

இ. இந்திய மற்றும் பன்னாட்டு வணிகம்,

ஈ. தமிழகத்தில் நிலவிய சாதிகளின் தாக்கங்கள்,

உ. கிறித்துவ விடையூழிர்கள் கையாண்ட உத்திகள்,

ஊ. தமிழக மக்களின் ஏழைமை மற்றும் அறியாமை,

எ. உள்ளூர்க் குழப்பங்கள்.

கி.பி. 1600ஆம் ஆண்டிலேயே, அய்யம்பேட்டையில் கிறித்துவம் அறியப்பட்டது எனக் கருதலாம். அதனை முன்படுத்தி, 1550களில் கூட அறியப்பட்டது எனக் கருத இடமுண்டு. அய்யம்பேட்டைப் பகுதியில், கிறித்துவம் வளர்ந்தது மேற்கண்ட காரணிகளின் அடிப்படையில்தான் என அறிதல் வேண்டும். மேலும், உள்ளூர்களில் காணப்பட்ட குழப்பங்கள், பகைமை உணர்வுகள், கிறித்துவ சமயம் வளர்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தன. கிறித்துவ விடையூழியர்களின் தன்னலமற்ற உழைப்பு, விடாமுயற்சி இவற்றுக்கு மேலான மாந்த நேயம் ஆகியவை, மக்களை கிறித்துவத்தின்பால் ஈர்த்தன. குறிப்பாக பிரான்சீசு சேவியரின் மாந்த நேய அணுகுமுறை, இன, மொழி, சமய எல்லைகளையும் கடந்து நின்றது. தூத்துக்குடியை

அடுத்த முத்து வயல்களில் (Pearl fishery fiedls) பரவர்கள் தங்களுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும், வாழ்வுரிமைக்கும் பாதுகாப்பளிப்பதற்காக, கிறித்துவத்தில் இணைந்தனர்.

இவற்றிற்கு மேலாக, பிராமண சமயத்தின் தீண்டாமைக் கொடுமையே, இந்தியாவில் இசுலாமும் கிறித்துவமும் வளர வழிவகுத்தன என்பது, வரலாற்று உண்மை. இன்றும் கூட இந்த உண்மையைப் புரிந்துகொள்ள மறுக்கும் பிராமண அமைப்பு கள் தொடர்ந்து இசுலாமிய கிறித்துவ சமயங்களை வெளி நாட்டுச் சமயங்கள் எனப் பேசுவது பொருளற்றது. இவ்விரு சமயங்களுக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வந்த வெளிநாட்ட வர்களே பிராமணர்கள் என்ற ஆரியர்கள் என்பதை வரலாறு தெளிவுபடுத்துகிறது. தங்களுடைய பிராமண சமயத்தை, கிறித்துவம் அழித்ததாகக் கூறும் பிராமணர்கள், இந்தியாவில் கி.மு. 1000 ஆண்டுகளில் நிலைபெற்றிருந்த தமிழ்ச் சமயத்தை அழித்தவர்கள். அடுத்து வந்த இந்தியச் சமயங்களான சமண - புத்த சமயங்களை அழித்தவர்கள். அயோத்தியில் இராமர் கோயிலுள்ள இடத்தை, இசுலாமியத் தொழுகைக் கூடமாக இசுலாமியர்கள் மாற்றிவிட்டார்கள் என்று கூறும் பிராமணர் கள், அக்கோயில் ஏற்கனவே புத்த விகாராக இருந்தது என்பதை மறந்து விட்டனர்.

ஆயிரம் ஆண்டுகளாக, இந்தியா வெளிநாட்டவரிடம் அடிமைப்பட்டுப் போனதற்கு, பிராமணர்கள் புகுத்திய சாதிப் பிரிவினைகளே காரணங்களென, வரலாற்றாசிரியர்கள் குறிப் பிடுகின்றனர்.[71]

கி.பி. 1500களின் தொடக்கத்தில், கிறித்துவ விடை யூழியர்கள் தமிழகம் வந்தபோது, பாண்டிய மன்னர்கள் வலுவிழந்து காணப்பட்டனர். முத்துக் குளித்தலும், புரவி வணிகமுமே பாண்டிய நாட்டில் சிறப்புற்றிருந்தன. கொச்சியி லிருந்த மன்னரைத் தவிர்த்த மற்ற மன்னர்கள் அனைவரும் இசுலாமிய வணிகர்களிடம் மிக நெருக்கமான உறவைக்

71. History of Religion, P.177.
Castesystem was strictly a negative phenomenon that throughout India's history prevented it from uniting its forces to fight aganist foreign intervention. This was the reason wy India was conquered by Muslims and later submitted to British imperialism - Sergi Tokarev.

கொண்டிருந்தனர். இடைக்கால சோழர்கள் காலத்தில் மிக உயர்ந்த நிலையிலிருந்த தமிழர்களின் பன்னாட்டு வணிகம், பாண்டியர்கள் காலத்தில் மங்கியது. குல சேகரப் பாண்டியன், ஜமாலுதீன் (Jamal-lu-din) என்ற அரேபியப் புரவி வணிகனைத் தனது நண்பனாகக் கொண்டிருந்தான். இசுலாமியக் குறிப்புகளின்படி, இவன் பாண்டியனின் அரசவைக் குழுவிலும் இடம் பெற்றிருந்ததாகச் செய்திகள் கூறுகின்றன. காயல் பட்டினத்தில் தங்கியிருந்த ஜமால் புரவிகளைக் கொடுத்து முத்துக்களைப் பெற்றான்.[72]

விசய நகரப் பேரரசின் வளர்ச்சி, பாண்டியர்களை மேலும் வலுவிழக்கச் செய்தது. பேரரசின் புதிய ஆணையராகப் பொறுப் பேற்றுக் கொண்ட லக்கண்ணா, முத்து வயல்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். மதுரையில் தங்கியிருந்த லக்கண்ணா தனக்குத்தானே, "தெற்காழியின் தலைவன்" (The Lord of Southern Ocean) என்று பெயர் சூட்டிக் கொண்டான். பாண்டியர்களின் அரசும் வணிகமும், கிருஷ்ண தேவராயரின் கட்டுப்பாட்டின் கீழ்வந்தன. இக்கால அளவுகளில் தான் போர்த்துக்கீசிய வணிகர்களும், கிறித்துவ சமயத் தொண்டர்களும், கிழக்குக் கடற்கரைகளின் தோன்றினர். வாசு கோடகாமாவும், அல்புகர்க்கும் கிழக்குக் கடற்கரை வணிகத்தில் கவனம் செலுத்தினர். தேவராயருடன் அரசியல் மற்றும் வணிகக் கூட்டணி அமைத்துக் கொள்ள, போர்த்துக்கீசியர் விரும்பினர். ஆனால் போர்த்துக்கீசியரின் விருப்பத்துக்கு உடனே உடன்படாத பேரரசு, அவர்களைப் பகைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை.[73]

கி.பி. 1532ஆம் ஆண்டில், தூத்துக்குடி பகுதியிலிருந்த பரவர்களுக்கும், இசுலாமியர்களுக்கும் இடையே பெரிய மோதல் ஒன்று வெடித்தது. ஒரு பரவப் பெண் பணியாரம் வாங்க கடைக்கு வந்தபோது, ஓர் இசுலாமியனால் பாலியல் வன்முறைக்கு இலக்கானாள்.[74] இதனைத் தனது கணவனிடம் அப்பெண் சொல்ல, சினம் கொண்ட அப்பெண்ணின் கணவன், அந்த இசுலாமியனின் காதை அறுத்துவிட்டான். இதன் விளைவாக, இசுலாமிய வணிகர்களிடம் வேலை பார்த்து வந்த பரவர்கள், இனி இசுலாமியர்களுக்காக முத்துக் குளிப்பதில்லை

72. History of the Nayaks of Madura, p. 66 R.N.

73. Ibid.

74. Jesuits' Archivum rome, Goa.

என முடிவெடுத்தனர். ஒரு சிறிய நிகழ்ச்சி, பெரும் மோதலாக உருவெடுத்தது. பரவர்கள் இசுலாமிய வணிகர்களால் வேட்டையாடப் பட்டனர். ஒரு பரவனின் தலைக்கு ஐந்து பணம் என்று அறிவிக்கப்பட்டது. தலைகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டு போகவே ஐந்து பணம் பின்னர் இரண்டு பணமாக்கப் பட்டது. இந்நிலையில், கொச்சி மன்னரிடமும், போர்த்துக் கீசியரிடமும் பரவர்கள் முறையிட்டனர். போர்த்துக்கீசியர்கள், பரவர்கள் அனைவரும் கிறித்துவ சமயத்தைத் தழுவினால், அவர்களது உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பளிப்பதாக உறுதிகூறினர். அவ்வாறே சமய மாற்றமும் நிகழ்வுற்றது.[75]

இச்சூழலை, பிரான்சிசுகள் துறவிகள் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டனர்.[76] பரவர்களின் வாழிடங்களில் அத்துறவிகள் அனுமதிக்கப்பட்டனர். ஏராளமான பரவர்கள், தங்களுடைய மனைவி, மக்களுடன் கிறித்துவத்தைத் தழுவினர். இக்கால அளவுகளில் அங்கு தோன்றிய பிரான்சிசு சேவியர், நிலைமைகளை நன்கு பயன்படுத்திக் கொண்டார். இதனைத் தொடர்ந்து, தலைக்கோட்டைப் போரில், விசயநகரப் பேரரசு வீழ்ச்சியுற்றதால், மதுரையில் ஆளுநராயிருந்த விசுவநாத நாயக்கன், தன்னைப் பாண்டிய நாட்டின் மன்னனாக அறிவித்துக் கொண்டான். போர்த்துக்கீசியரின் வலிமையை அறிந்துகொண்ட விசுவநாத நாயக்கன், அவர்களுடன் நீக்குப் போக்குடன் நடந்து கொண்டான். கிழக்குக் கடற்கரைப் பகுதிகள் முற்றிலுமாக, போர்த்துக்கீசியரின் கட்டுப்பாட்டில் வந்துற்றன. ஏற்கனவே போர்த்துக்கீசிய மன்னருக்கும் போப் பாண்டவருக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத் தின்படி, கிழக்காசிய நாடுகளில் கிறித்துவர்களாக மாறும் மக்களை, போர்த்துக்கீசிய மன்னனின் ஆளுமைக்குட்படுத்த அனுமதியளிக்கப்பட்டிருந்ததை சுட்டிக்காட்டிய போர்த்துக் கீசியர்கள், பரவர்கள் போர்த்துக்கீசிய மன்னர்களின் குடிமக்கள் என்றும், எந்தவொரு தமிழகத்தின் ஆட்சியாளருக்கும், அவர்கள் மீது அதிகாரம் செலுத்த அனுமதியில்லை என்றும் அறிவித் தனர். கால்டுவெல்லார் (Bishop Caldwell) கூடியபடி, "பரவக் குடிமகன் போர்த்துக்கீசிய மன்னரின் குடிமகனாக்கப்பட்டான். உரிமையியல் மற்றும் குற்றவியல் (Civil and Criminal Jurisdiction)

---

75. Ibid, vol. I, P. 97.

76. Goa Collections, No. 38 fl.. No. 307.

நடைமுறைகளின்படி பரவர்களுக்கான உரிமையைப் போர்த்துக்கீசியர் பெற்றனர். முத்துவயல் பகுதிகளில் வரிவிதித்தல், தண்டுதல், அப்பகுதிகளுக்கான அதிகாரிகளைப் பொறுப்பாக்குதல் ஆகியவை போர்த்துக்கீசியர்களின் கைகளுக்கு மாறின. இந்த மாற்றங்களை செயல்படுத்த தமிழகத்தில் யாரிடமும் அவர்கள் அனுமதிபெற வேண்டியதில்லை என்று விளக்குகிறார்.[77]

சேதுபதி மன்னர்கள்:

இந்தக் குழப்பமான அரசியல் சூழ்நிலைகளைத் தமக்குச் சார்புடையவனாகப் பயன்படுத்திக் கொண்ட மறவர் இனத்து மக்கள் தலைவர்கள், தங்களுக்கென ஓர் அரசை இராமநாத புரத்தில் தோற்றுவித்துக் கொண்டனர். சடைக்கத் தேவன் என்பானை, மறவர்களின் தலைவனாக, மதுரை நாயக்கன் முத்துக் கிருட்டிணப்பனும் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமற் போனது. இந்நிகழ்வு. கி.பி. 1605ஆம் ஆண்டு என்று மெக்சினியின் (Makenzie manuscript) குறிப்புகள் கூறுகின்றன.[78] சேதுபதியின் அரசு தொடக்கத்தில் சமயக் காழ்ப்புணர்ச்சிகள் அற்றதாகவே காணப்பட்டது. தொடர்ந்து கூத்தன் சேதுபதியின் செய்திகள் பற்றியும் மெக்கன்சி விளக்குகிறார்.

சேதுபதியின் மன்னர்கள் தங்களுக்கென ஓர் அரசை நிறுவிக் கொண்ட காலத்தில் தான், கிறித்துவ சமயம், மதுரையில் ஒரு தலைமைப் பணியிடத்தை (Madura Mission) நிறுவியது (1606). முதன்முதலில் பெர்ணாண்டசுப் பாதிரியார் மதுரையில் காணப்பட்டார். தொடர்ந்து இராபர்-டி-நொபிலி மதுரையில் குடியேறினர். இந்தியக் கிறித்துவ வரலாற்றில் நொபிலியின் மதுரை வாழ்ச்செய்திகள் மிகவும் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளன. மேலைநாட்டு வாழ்க்கை முறையை விட்டொழித்து

77. History of the Nayaks of Madura, p. 67.
    Caldwell : "Xavier. . . . . . speaks of the paravas as subjects of "His portuguese Majesty ". . . . . . The entire civil and criminal juridiction of the fishery coast had been seized upon by the Portuguese. . . . . all dues and taxes including the valuable revenue arising from the pearl fishery, had been assumed by the governors appointed by the Portuguese Viceroy. The Portuguese had not asked any native potentate's consent to the formation of their settlements.

78. Ibid, p. 68.

இந்தியர்களுக்காக, இந்தியனாய் வாழ்வேன் என்று நொபிலி சூளுரைத்தார். பெர்ணாண்டசுப் பாதிரியாரிடமிருந்து விலகி நின்ற நொபிலி, தன்னை உயர் உரோமானியப் பிராமணன் எனக் கூறிக் கொண்டார்.[79] மேலைநாட்டு வரலாற்றாய்வாளர்கள், நொபிலியின் பிராமணன் உத்தியைக் கடுமையாகச் சாடுகின்றனர். முத்துக்கிருட்டிண நாயக்கன் விடுத்த அழைப்பைத் திறமையுடன் மறுத்த நொபிலி, தனது தந்திரமிக்கச் செயல்களால் மற்றவர்களின் கவனத்தை ஈர்த்தார்.

சேதுபதி மன்னர்கள், மதுரை நாயக்கரிடம் நட்புணர்வுடன் நடந்து கொண்டார்கள் என்று கூற இயலாது. திருமலை நாயக்கர் காலத்தில், சேதுபதியின் மறவர் கூட்டம் பல்வகையிலும் மன்னருக்கு இடையூறு செய்து கொண்டிருந்தது. இராணி மங்கம்மாள் காலம் வரையிலும், சேதுபதி மன்னர்களின் அணுகுமுறைகள் ஒட்டுவதும் வெட்டுவதுமாகவே காணப் படுகின்றன. கிழவன் சேதுபதியின் காலமே, இராமநாத புரம் அரசின் உயர்ந்த நிலையைக் காட்டும் காலமாகும். பிரிட்டோவைக் கொலை செய்ததின் வாயிலாக, ஐரோப்பியரின் ஆவணங்களிலும் சேதுபதி பேசப்படுகிறான். தொடக்கத்தில் கிறித்துவர்கள் பற்றிய எந்தச் சிந்தனையுமின்றிக் காணப்பட்ட கிழவன் சேதுபதி, பிரிட்டோ தனது ஆட்சியைக் கவிழ்த்து விடுவார் என்ற அச்ச உணர்வின் அடிப்படையிலேயே, பிரிட்டோவைக் கைது செய்தான். பல வரலாற்றாய்வாளர்கள், கிழவன் சேதுபதி பிரிட்டோவைக் கொலை செய்தது, அரசியல் காரணங்களால்தானென்றும், சமயக்காரணம் இரண்டாவதாகவே கருதப்பட்டது என்றும் கூறுகின்றனர். பிரிட்டோவின் சாவு, கிறித்துவம் இராமநாத புரத்தில் மிகப்பெரிய எழுச்சியைத் தோற்றுவித்தது. கிழவன் சேதுபதியே கூட, தனது இறுதிக் காலத்தில், பிரிட்டோவைக் கொலை செய்தது பற்றி வருந்தினான் என்று ஆய்வாளர்கள் கருத்துரைக்கின்றனர்.

பிரிட்டோவைக் கொன்று, கிறித்துவர்களையெல்லாம் சேதுபதி வேட்டையாடிய காலத்தில் உயிர்க்குப் பயந்து பலநூறு குடும்பங்கள், இராமநாதபுரத்தை விட்டு வடக்கு நோக்கு ஓடி வந்தன. அக்குடும்பங்கள், 1700 ஆண்டுகளில், உடையார் பாளையத்திற்கு தெற்கேயும் கிழக்கேயும் குடியமர்ந்தனர். இத்தகைய இக்கால அளவுகளில் உடையார்பாளையம் அரசு,

79. Jesuit Missim in Madura, J.S. Chandder, p. 35.

கிறித்துவர்கள்பால் பகைமை பாராட்டவில்லை என்பது நோக்கத்தக்கது. இன்று நாவலேரி, நடுவலூர், செங்கட்டான் சூசையப்பர் பட்டணம், விழப்பள்ளம், குமிழங்குழி, மாதாபுரம் போன்ற ஊர்களில் குடியிருக்கும் கிறித்துவர்கள், இராமநாத புரத்தைச் சார்ந்தவர்களே. இவர்கள் அனைவரும் நத்தமன் பிரிவைச் சார்ந்தவர்களாவர்.

நாயக்க மன்னர்கள்

கி.பி. 1529ஆம் ஆண்டுமுதல், 1736ஆம் ஆண்டு வரையில் தமிழகத்தை ஆண்ட மதுரை நாயக்கர்களின் வரலாற்றைத் தாங்கி நிற்பவர் இயேசு அவையினரே என்றால் அது மிகை யன்று. மற்றெந்த ஆவணங்களைக் காட்டிலும், இயேசு அவை யினர் கொடுக்கும் செய்திகளே, மதுரை நாயக்க மன்னர்களின் வரலாற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன என்று கருத லாம். கிறித்துவர்களுக்கு மதுரை நாயக்கர்கள் இணக்கமான வர்கள் என்றும் அதனாலேயே, இயேசு அவையினர் அம்மன்னர்களை வெகுவாகப் புகழ்ந்து எழுதியுள்ளனர் என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர். ஒரு கட்டத்தில் திருமலை நாயக்கனே கிறித்துவ சமயத்தில் இணையப் போகிறான் என்ற செய்தியுங் கூட, அக்காலத் தமிழகத்தில் பேசப்பட்டது.

1. விசுவ நாத நாயக்கன்

கி.பி. 1495ஆம் ஆண்டில் பிறந்ததாகக் கருதப்படும் விசுவ நாத நாயக்கன், 1529-66ஆண்டுகளில், விசய நகரப் பேரரசின் ஆளுநராகவும், பின்னர் மதுரையின் மன்னராகவும் ஆண்ட தாகச் செய்திகள் கூறுகின்றன. விசுவநாத நாயக்கனோடு, கிறித்துவ சமயத் தொண்டர்கள் நேரிடையாகச் சந்தித்தது பற்றிய செய்திகள் இல்லை.

இருப்பினும், இவனது காலத்தில் தான், பிரான்சிசுக்கன் துறவிகள், தென்கிழக்குத் தமிழகக் கடற்கரையில் சமயப் பணி யாற்றினர். பணியாரச் சண்டை அல்லது காதறுப்புச் சண்டை 1532இல் நடைபெற்றது. இந்த ஆண்டிலேயே கிறித்துவம் இப் பகுதியில் வேரூன்றப்பட்டது. இயேசு அவையினர், 1542ஆம்

80. The Impact of the Portuguese Padroado on the Indian Pearl Fishery Coast, Doctoral Thesis, Urban University, Rome, 1977, p. 184.

ஆண்டில்தான் இப்பகுதிக்கு முதன்முதலில் வந்து சேர்ந்தனர்.[80] (கி.பி. 1540, செப்தம்பர், 27 ஆம் நாளிட்ட போப்பாண்டவரின் ஆணை (regimis mietanis ecclesiae) இயேசு அவையினரைச் சமயப் பணிகளில் ஈடுபடுத்தியது.) இவர்கள் இங்கு வந்து சேர்வதற்கு எட்டாண்டுகளுக்கு முன்னரே, பரவர்களில் பலர் கிறித்துவர்களாயிருந்தனர். கழுத்தில் சிலுவையை அணிந்திருந் தனரேயன்றி, அவர்களுக்குப் பரலோகத்து மந்திரம் (Pater moster) மங்கள வார்த்தை செபம் (Ave Maria), தமகிறித்துவம தோத்திரம் (Credo) ஆகியவையெல்லாம் தெரிந்திருக்கவில்லை யென, இயேசு அவையினர் அறிந்தனர்.

கோவா ஆளுநர் ஆண்டுக்கு 4000 பொற்காசுகள் (Gold Panams) கொடுத்து, உபதேசிமார்கள் என்ற கற்றுச் சொல்லி களை (catechists) பல்வேறு இடங்களிலும் பணிகளில் அமர்த் தினார். மேற்கண்ட மூன்று செபங்களையும் மனப்பாடம் செய்து விப்பது, ஞாயிறுதோறும், ஆலயத்துக்கு வரவழைப்பது, சுவிசேஷத்தை படிக்கப் பயிற்சி அளிப்பது, போன்ற பணி களைச் செய்தனர். சிறுவர்களுக்கு தமிழில் எழுதப் படிக்கவும் சொல்லிக் கொடுத்தினர்.[81] அவர்களுக்குப் கல்வி அளிக்க வேண்டுமென்பது முதல் நோக்கமன்று. அவர்கள் விவிலியத் தைப் படித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே, பயிற்றுவிக்கப்பட்டனர். அக்காலத்தில் ஞாயிற்றுக்கிழமை களில் நடைபெறும் ஆலயப் பூசைகளில், பரவர்கள் வந்து அமர்ந்து கொண்டிருப்பார்கள், பாதிரியார் என்ன சொல்கிறார் என்பது இவர்களுக்கும் தெரியாது: பரவர்கள் என்ன வேண்டுதல் செய்கிறார்கள் என்பது பாதிரியாருக்குத் தெரியாது. இந்நிகழ்வை, "பூசை காண்பது" என்றுதான் தமிழில் கூறினர் (இன்றும் அப்படித்தான் கூறி வருகின்றனர்.)

இயேசு அவையினரின் குறிப்புகளின்படி, கிறித்துவ சமயத் தொண்டர்கள், மதுரையில் இக்காலத்தில் எந்த நடவடிக்கை களிலும் ஈடுபடவில்லை, குமரி முதல் மயிலை வரையுள்ள கடற்கரைப் பகுதிகளில் பிரான்சிசுகன் துறவிகளே காணப் பட்டனர். 1540களில் தஞ்சையிலும் அத்துறவிகள் பணியாற்றி னர். இக்காலத்தில் உள்நாட்டில் கிறித்துவம் அறியப்பட்டதற் கானச் சான்றுகள் இல்லை.

---

81. Letter of Fr. Henriques written from Vembar dt. 31.10.1548.

2. வீரப்ப நாயக்கன் (1572–1595):

விசுவநாத நாயக்கரின் மகன் வயிற்றுப் பிள்ளையே வீரப்ப நாயக்கனாவன். வீரப்பனின் தந்தை கிருட்டிணப்ப நாயக்கன் (1564-1572) காலத்தில், மதுரையில் கிறித்துவத் துறவிகளின் நடமாட்டம் காணப்படவில்லை. வீரப்பநாயக்கன் காலத்தின் இறுதியில் பெர்ணாண்டசுப் பாதிரியார் மதுரையில் பணி யாற்ற வந்தார். 1592ஆம் ஆண்டில் மதுரையில் ஒரு சிறிய தேவாலயம் கட்டுவதற்கான அனுமதியை வீரப்ப நாயக்கரிடம், பெர்ணாண்டசுப் பாதிரியார் பெற்றார். ஏற்கனவே சில மேட்டுக்குடி மக்களையும் கிறித்துவ சமயத்துக்குத் திருப்பி யிருந்தார் மற்றபடி மதுரையில் அவரால் எந்த மாறுதலையும் செய்ய இயலவில்லை.[82] 14 ஆண்டுகள் உழைப்பிற்கு உரிய விளைச்சலை அவரால் பெற இயலவில்லை.

3. முத்து கிருட்டிணப்ப நாயக்கன் (1601–1609):

இவன் காலத்தில் தான் நொபிலியின் பணிகள் மதுரைப் பகுதியில் தீவிரமடைந்தன. பெர்ணாண்டசுப் பாதிரியார், மக்கள் அனைவரும் சமமானவரே என்றும், கிறித்துவம், சாதிகளை ஊக்குவிக்கக் கூடாது என்ற கொள்கையையும் கொண்டவர். மக்களைச் சாதியின் பெயரால் பிளவுபடுத்துபவர்களை, கிருத்துவ சமயத்தில் சேர்த்துக்கொண்டால், கிறித்துவ சமயத் திலும் பூசல்களைத் தோற்றுவிப்பார்கள் என்றும், அப்படிப் பட்டவர்களை சேர்த்துக் கொள்வதைவிட விட்டுவிடுவதே நல்லது என்றும் கருதியவர் இயேசு கிறித்து காட்டிய "உன் அயலானையும் அன்பு செய்", என்ற கொள்கை, சாதிகளை ஊக்குவித்தால் அடிபட்டுப் போகும் என்ற கொள்கையைக் கொண்டவர். எந்த வகையிலேனும் கிறித்துவ சமயத்துக்கு ஆள் சேர்த்து தலைகளின் எண்ணிக்கையை உயர்த்தினால் போதும் என்ற கருத்தினைக் கடுமையாக எதிர்த்தவர். நொபிலியுடன் பெரிதும் முரண்பட்டார். நொபிலியின் பிராமணச் சாதி அணுகு முறை, கிறித்துவத்துக்குத் தேவையற்றது எனவும் சாடினார்.[83] இறுதிவரை நொபிலியுடன் இணையமறுத்த பெர்ணாண்டசு மிகத் சிறந்த சிந்தனையாளர் என்பதில் ஐயமில்லை.

---

82. History of the Nayaks of Madura, p. 59.

83. Ibid, p. 69.

முத்துக்கிருட்டிணப்ப நாயக்கன். கிறித்துவ சமயத்தைப் பொறுத்தவரையில், மென்மையான அணுகுமுறையே கையாண்டான். நொபிலியை அரசவைக்கு அழைத்து, அவருடன் அளவளாவ விரும்பினான். பலமுறை கேட்டுக் கொண்டதற்குப் பிறகே, நொபிலி, நாயக்கனைச் சந்தித்தார். இராமநாதபுரம் சேதுபதியிடமும் நட்புமுறையில் உறவு கொண்டிருந்தான். எட்டாண்டுகள் மட்டுமே ஆட்சிசெய்த முத்துக்கிருட்டிணப்பனுக்கு, எவ்வகையிலும் அச்சுறுத்தல்கள் ஏற்படவில்லை.

4. முத்து வீரப்பநாயக்கன் *(1609–1623)*

தனது தந்தையைப் போலவே, இவனும் கிறித்துவர்கள்பால் அன்பு கொண்டிருந்தான். ஆனால் அமைச்சர்கள் நிலையிலிருந்தவர்கள், கிறித்துவ சமயம் பற்றிய தவறான செய்திகளை மன்னனுக்கு அளித்துக் கொண்டிருந்தனர். நொபிலி, 1610ஆம் ஆண்டில் ஒரு தேவாலயத்தைக் கட்டிக் கொள்ள மன்னன் அனுமதியளித்தான்.[84] அந்தோணியோ விகோ என்னும் இயேசு அவைத்துறவி அதே ஆண்டில் மதுரை வந்தார். அவருடைய மடல்களின்படி, இதுவரையில் கிறித்துவர்களிடம் மென்மையான அணுகுமுறையைக் கொண்டிருந்த மன்னன், தனது நிலையை மாற்றிக் கொண்டதாக குறிப்பிடுகின்றார். அரசவையில், கிறித்துவ சமயத்துக்கெதிரான கருத்துரைகள் கூறப்பட்டதாகவும் கூறுகிறார்.[85] இதே கருத்தை இலாயர்சியோ (Laerzio)வும் தனது மடலில் குறிப்பிட்டுள்ளார்.[86] புதிதாகச் சமயமாற்றம் செய்யப்பட்டவர்கள், பல்வேறு வகையில் இன்னலுக்குள்ளாயினர் என்றும் எழுதியுள்ளார். நொபிலியின் பணிகளுக்கு இடையூறுகள் பல்வகையிலும் தோன்றின. ஒரு புறம் மன்னனையும், மறுபுறம் பெர்ணான்டசுப் பாதிரியாரையும் எதிர்த்து நொபிலி போராட வேண்டியிருந்தது. எருமைக்கட்டி என்ற பகுதியின் பொறுப்பாளராகவிருந்த படைத்தலைவன் ஒருவன் மட்டுமே நொபிலிக்கு ஏற்புடை யவனாயிருந்தான்.

மதுரைப் பகுதிகளுக்குப் பொறுப்பானவரும், கிராமங்கனூர் பேராயருமான இராஸ். நொபிலிக்குத் துணையாயிருந்த தோடு, பெர்ணாண்டைசின் செயல்களையும் கண்டித்தார்.

---

84. Fr. J. Bertrand, vol. II, p. 92.

85. Ibid, p. 108.

86. Laerzio's letter of 8.12.1610, Bertrand, Vol. II p. 64.

இதனால் வெறுப்படைந்த பெர்ணாண்டசு, போப்பண்டவரிடம் முறையீடு செய்து, நொபிலியின் பணிகளை முடக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.[87] நொபிலியின் உறவினரும், கர்தினால் பொறுப்பிலிருந்த வருமான பெல்லார்மின் (Cardinal Bellarmine), உரோமையிலிருந்து நொபிலிக்கு எழுதிய மடலில், நொபிலியின் புதிய அணுகுமுறைப் பணிகளை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். 1613 முதல் 1623 வரையில் நொபிலியின் பணிகளை, கிறித்துவ சமயத்தலைமையே முடக்கி வைத்திருந்தது. இந்த பத்தாண்டுகளில், நொபிலியின் போராட்டம் மிகவும் விறுவிறுப்பான நிகழ்வுகளைக் கொண்டதாகும். தொடர்ந்து போராடிய நொபிலிக்கு இறுதி வெற்றி காத்திருந்தது. 1623ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே போப்பாண்டவர் கிரகரி (Gregory xv), நொபிலியின் புதிய அணுகுமுறையை ஏற்றுக் கொண்டு. நொபிலியின் மீது கூறப்பட்டிருந்த எல்லா குற்றச் சாட்டுகளையும் விலக்கினார்.

காவி ஆடை அணிந்து கொள்வது, கமண்டலம், கைத்தடி, பாதக்குறடு ஆகியவைகளைக் கொண்டிருப்பது, சந்தனப் பொட்டு இட்டுக்கொள்வது ஆகிய புற மாறுதல்கள், இந்திய முறைப்படி ஒரு வெளிநாட்டவரை, இந்தியனாகக் காட்டலாம் ஆனால் பூநூல் அணிந்து கொள்வதென்பது. அதன் ஆழத்தைப் புரிந்து கொள்ளாத செயலே ஆகும். பார்ப்பானுக்கு மூன்றும் சத்திரியனுக்கு இரண்டும், வைசிகளுக்கு ஒன்றும் என்று விதிக்கப்பட்ட பூநூல் அணியும் நடைமுறை, பார்ப்பனர் வகுத்தவையாகும். இதில், சூத்திரனுக்குப் பூநூல் அணியும் உரிமை மறுக்கப்பட்டது. பார்ப்பானுக்குப் பிரமனும், சத்தியனுக்குச் சிவனும் வைசிகளுக்கு மாலும் கடவுளாக்கப்பட்டனர். சூத்திரனுக்குக் கடவுள் ஒதுக்கப்படவில்லையென்பதோடு, மேற்கண்டவர்கள் வழிபடும் கோயில்களுக்குள் நுழையவும் தடை செய்யப்பட்டனர். பார்ப்பான் தெய்வமாகக் கருதாத

---

87. Bertrand, Ibid, p. 197.

Fr. Fernandez became active once more and this time he was successful. De Nobili was summoned before a Synod and he putup an able defence of his position. Since it came to no unanimous desicion, it was referred to the authorties in Europe. In 1613 Cardinal Bellarmine his uncle, asked him to stop his work. - Bertrand.

நாட்டுப்புறத் தேவதைகளை வேண்டுமானால் சூத்திரன் வணங்கி கொள்ள, காளி மாரி கருப்பு வீரனார் போன்றோர் சூத்திரனின் தெய்வங்களாயினர். தமிழகத்தில் சத்திரியர் வைசிகர் என்ற இரு இனங்களும் அறியப்பட்டாத நிலையில், பார்ப்பானைத் தவிர அனைவரும் சூத்திரரே என்று கருதப்பட்டனர். செல்வம் படைத்த சிலர் தம்மை வைசிகரென்று சொல்லிக்கொண்டு பூநூல் அணிந்து கொண்டனர். பூநூல் என்பது மக்களை வேறு படுத்தி, ஏற்றத் தாழ்வுகளை அறிவிக்கும் ஓர் அடையாளம் என்பதை நொபிலி அறியவில்லை. நொபிலி ஐந்து நூல்களைக் கொண்ட பூநூலை அணிந்துகொண்டு, அவைகளில் மூன்று மூவொரு கடவுளருக்கும் (Holy trinity) மற்றொன்றை திருச்சபைக் கும், பிரிதொன்றை மறியன்னைக்கும் எனச் சொல்லிக் கொண்டு அப்பூநூலில் சிலுவையொன்றையும் இணைத்துக் கொண்டார்.[88]

நொபிலியை ஆடையில் பின்பற்றிய வீரமாமுனிவர், நொபிலியின் பல அணுகுமுறைகளின்றும் வேறுபட்ட வராவர். நொபிலி வகுத்துக் கொடுத்த பண்டாரசாமி* என்னும் சூத்திரர்களுக்கான குருக்கள் முறையானது, அடிப்படை யிலேயே தவறானது என்பதை நொபிலி உணரவில்லை. தலை களின் எண்ணிக்கை வேண்டுமானால், பண்டார சாமிகளால் உயரலாம், ஆனால் கிறித்துவர்களில் எதிர்கால நிலைபற்றியெல் லாம் நொபிலி சிந்திக்கவில்லை. இன்று தமிழகத் திருச்சபை களில் காணப்படும் குழப்பங்களெல்லாம் காரணம், நொபிலி அறிமுகம் செய்த சாதிகள் பற்றிய அணுகுமுறையே. உலகின் எந்த நாட்டிலும் காணப்படாத சாதிகள் முறையை, இந்திய நாட்டில் தான் காணமுடியும். அச்சாதிகளின் வேரையே கிள்ளி எறிய நொபிலி முற்படவில்லை. இந்திய நாட்டில் சாதி அமைப்புகளை எதிர்த்து ஒரு சமயத்தைப் பரப்ப இயலாது என்பதும் தவறான சிந்தனையே. ஏற்கனவே புத்தமும் சமணமும் தகர்த்தெறிந்த சாதி அமைப்புகளை பின்னர் வந்த இசுலாம் வென்று காட்டிய வரலாறு இந்தியாவில் உண்டு. தற்காலத்தில் சில கிறித்துவ எழுத்தாளர்கள், நொபிலியின் மறைபரப்பு முறை

---

88. Early Christianity in India and Pakistan, p.

* பண்டாரசாமி : A monk or Frair belo the rank of a Brahmin, wearing beads and yellow garments, keeping yellow powder and given when he receives alms.

பண்டார குரு : A guru among religious mendicants.

களை வெகுவாகப் புகழ்ந்து தள்ளுகின்றனர். வீரமா முனிவர் தனக்கென பாண்டார சாமிகளை ஏற்படுத்திக் கொள்ள வில்லை. தமிழகத்தின் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட, மக்களிடையே வீரமாமுனிவர் பணியாற்றினார். தந்தை பெரியார் அவர்கள் கூறிய கருத்தொன்று சிந்திக்கத்தக்கது. தமிழர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் எந்த அமைப்புகளிலும் பார்ப்பானை உறுப்பினராகச் சேர்க்காதீர்கள் என்பார். உறுப்பினராகச் சேர்ந்தவன் தலைமைப் பதவியைப் பிடித்து விடுவான் என்பதோடு எந்த நோக்கத்துக்காக அந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டதோ, அதன் நோக்கத்தையே கூட அவன் மாற்றிவிடுவான் என்றார். அதற்கும் நல்லதோர் எடுத்துக் காட்டு தமிழகத்தில் உண்டு. மேலும் அவர் கூறுவார். இந்திய விடுதலை இயக்கமான காங்கிரசோடு பார்ப்பனர்களும் பங்கேற்கத் துணிந்தது, ஆங்கிலேயனை எதிர்க்கவேண்டு மென்பதற்காக வன்று. மாறாக விடுதலை பெற்ற இந்தியாவின் ஆளுமை ஆதிகாரங்கள் அனைத்தையும் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்ற தன்னல நோக்கமே. தமிழகத் திருச்சபையின் கடந்தகால வரலாறுகளும், பெரியாரின் அச்சயுணர்வையே வெளிப்படுத்து கின்றன எனலாம்.

குடந்தை மறைமாவட்டப் பொன்விழா மலர் (1949) வெளி யிட்டுள்ள செய்தி, கிறித்துவத்தில் சாதி அமைப்புகள் இன்னும் கூட வேர்விட்டு நிற்கின்றன என்பதை உணர்த்துகின்றது.

"1907-ம் வருடம் ஜீலை மாதம் பூண்டியிலும், கோவிலடி யிலும் மற்றும் இவற்றைச் சேர்ந்த இருபது அல்லது இருபத் திரண்டு கிராமங்களிலிருந்த ஆதி திராவிட மக்கள் "அற்ப மான" ஒரு காரணத்தை முன்னிட்டுத் தமது மெய்மறைக் குருக்களை எதிர்க்க ஆரம்பித்தனர்." (பக்கம் 26)

திருமலை நாயக்கன் (1623–1659)

முத்துவீரப்ப நாயக்கனுக்குப் பின் அவனது தம்பி திருமலை நாயக்கன் மன்னரானான். இயேசு அவையினர், திருமலை நாயக்கன் பற்றிய செய்திகளை விளக்கமாக அளித்துள்ளனர். நொபிலி, மதுரையில் தனக்கெதிராக உருவெடுத்த எதிர்ப்பு களையடுத்து, 1623ஆம் ஆண்டில், மதுரையை விட்டு வெளி யேறினார். திருச்சி, சேந்தமங்கலம், வடுகர் பேட்டை ஆகிய பகுதிகளில் சமயப்பணிகளை மேற்கொண்டார். சேலத்திலும்

சிறிது காலம் பணியாற்றினார். திருமலை நாயக்கன் கிறித்துவத் தின்பால் மென்மையான அணுகுமுறைகளைக் கொண்டிருந் தாலும் அவனது ஆட்சியின் கீழிருந்த பல தலைவர்கள், சமயப் பணிகளைத் தடைசெய்தனர். வீகோ(vico) மார்ட்டின்சு (Martinz) புரோயன்சா (Proenza), பல்தசார் டி கொசுதா (Balthazar de costa) போன்ற சமயப் பணியாளர்களின் குறிப்புகள், திருமலை நாயக்கன் காலத்திய செய்திகளை விளக்கிக் கூறுகின்றன. மிகச் சிறந்த அறிவாளியும், பன்மொழி வித்தகருமான நொபிலி, தனது பணிகள், மதுரைப் பகுதியில், தகுந்த விளைச்சலைத் தரவில்லை என்பதை அறிந்து வருந்தினார். 1648இல் யாழ்ப் பாணம் சென்ற நொபிலி, மயிலையில் தனது இறுதிக்காலத் தைக் கழித்தார். 1660ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்.

திருமலை நாயக்கன் கிறித்துவத்தை எதிர்க்காமலிருந்த தற்கு அரசியல் காரணங்களும் உள்ளன. வலிமை வாய்ந்த கடற் படையைக் கொண்டிருந்த போர்த்துச்கீசியரின் நட்பு திருமலைக்குத் தேவைப்பட்டது. கிழக்குக் கடற்கரையெங்கும், போர்த்துக்கீசியர் மேற்கொண்டிருந்த வணிகத்தின் மூலம் ஏராளமான வருவாய் அரசுக்குக் கிட்டியது. இக்கால அளவு களில், போர்த்துக்கீசியர்களுக்குப் போட்டியாக, ஒலாந்துக் காரர்கள் (Holland - the Dutch) கிழக்குக் கடற்கரையில் வந்திறங்கினர். இருவருக்குமிடையே நடைபெற்ற வணிகப் போட்டியில், திருமலை போர்த்துக்கீசியரின் பக்கத்திலிருந்தான். ஒலாந்துக்காரர்கள் பிரிவினைத் திருச்சபையினாரானதால், போர்த்துக்கீசியச் சமயப் பணியாளர்கள் மேலும் ஒரு எதிர்ப்பை யும் களத்தில் சந்திக்க வேண்டியிருந்தது.

சொக்கநாத நாயக்கன் (1659 – 1682):

பதினாறாம் அகவையிலேயே அரசு கட்டிலில் ஏறியவன் சொக்கநாதன். இவனது மனைவியே பிற்காலத்தில் புகழப் பட்ட இராணி மங்கம்மாள் ஆவாள். இவன் காலத்தில் தான் மராட்டிய சிவாஜி தமிழகத்தின் மீது தாக்குதல் கொடுத்தான் (1676-77). ஏற்கனவே ஏற்பட்ட பிணக்குகளால், தஞ்சை நாயக்கர்களை சொக்கநாதன் வீழ்த்தினான். இதனால் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் மராட்டிய எகோஜியை (Ehoji)த் தஞ்சை யின் ஆட்சியில் அமர்த்தின. இவன் சிவாஜியின் மாற்றாந்தாயின் மைந்தனாவான். எகோஜி, கிறித்துவத்தின் பால் முழுமையான

எதிர்ப்புகளைக் காட்டியவன். தனது ஆளுகையின்கீழ் கிறித்துவம் தடைசெய்யப்பட்டதாக அறிவித்தவன். ஆந்திரே பிரெயர் தமது (1678) மடலில் இதுபற்றித் தெளிவாக விளக்குகிறார்.

பந்த நல்லூர், மயிலாடுதுறை, தத்துவாஞ்சேரி (குடந்தையை ஒட்டிய ஊர்கள்) ஆகிய பகுதிகளில் கிறித்துவ சமயத்தைத் தழுவியர்களை, இயேசு அவையினர் கொழையில் குடிமர்த்தினர். எகோஜியின் எதிர்ப்பே இதற்கு முதற் காரணமாகும். (விளக்கம் உள்ளே).

சொக்க நாதன் இராமநாத புரத்தின் மீது படையெடுத்ததால் (1673-74) சேதுபதிகளுடனான உறவில் விரிசல் காணப்பட்டது. அதே ஆண்டில் திருமலை சேதுபதி உயர்நீத்தான். அவனுக்குப் பிறகு கிழவன் சேதுபதி மன்னரானார்.

சொக்க நாதன் கிறித்துவர்கள்பால் நல்லுறவைக் கொண்டிருந்தான். மார்டின்சு சாண்ட்லர், ஆந்திரே பிரெயர். பிரொயன்சா போன்றவர்களின் மடல்கள் இச்செய்திகள் பற்றி விளக்கமாகக் கூறுகின்றன. இவன் காலத்தில், வட இந்தியாவிலிருந்த மொகலாயரின் படையொன்று திருச்சியைத் தாக்கியது.

பிரொயன்சாவின் குறிப்புகளின் படி,[89] திருச்சியில் கிறித்துவத்துக்கு எதிரான சில நிகழ்வுகள் நடைபெற்றன பிரொயன்சாவின் மீது வலையன் ஒருவன் குற்றம் காட்டி அதனை அரசின் கவனத்துக்குக் கொண்டுபோனான். ஆடியப்ப நாயக்கன் என்ற அமைச்சுப் பொறுப்பிலிருந்தவன் பிரொயன்சாவுக்குச் சார்பாகத் தீர்ப்பளித்து, வலையனைக் கண்டித்தான். இதனால் வெகுண்டெழுந்த வலையன், பல்வேறு வகையிலும் பிரொயன்சாவுக்குத் தொல்லைகள் கொடுத்தான். இறுதியில் பிரொயன்சா, மதுரை சென்று இதற்கு இறுதித் தீர்வு காண வேண்டியிருந்தது.

இக்கால அளவுகளில், பல்தசார் டி கொசுதா,[90] திருச்சிப் பகுதிகளில் கடுமையாக உழைத்தார். இலிங்க நாயக்கனை (மங்கம்மாளின் தந்தை)ச் சந்தித்துப் பல்வேறு ஆணைகளைப்

---

89. Bertrand, vol. III.
Letter of P roenza to Paul Olivia, Trichinopoly. 1662.

90. Ibid, vol III, p. 448.
Letter of Fr. Balthazar da costa to the Jesuit Superior General in 1644.

பெற்றார். இவன் வடுகர் பேட்டையில் அக்காலத்தில் வாழ்ந்திருந்தான். நாயக்கரின் அமைச்சராகவும் விளங்கினான். பல்தசாரின் பணிகள் தமிழகத்தின் வடபகுதிகளிலும் தொடர்ந்தன. இவருடைய மறைவுக்குப் பின், இவரது தொண்டர் ஆந்திரே பிரெயர் வடபகுதிகளில் கடுமையாக உழைத்தார். கொழையில் கிறித்துவர்களின் குடியேற்றம், இவர் காலத்தில் வளர்ச்சியுற்றது. பிரிட்டோவை கொழைக்கு அழைத்து வந்தவர் ஆந்திரே பிரேயரே என அறியாம்.

முத்துவீரப்ப நாயக்கன் (1682–89):

சொக்கநாதன் - மங்கம்மாளின் மகனான அரங்க கிருட்டிண முத்து வீரப்ப நாயக்கன் தனது தந்தையின் மறைவுக்குப் பின், 15 அகவையிலேயே மன்னனானான். இவனுடைய ஆட்சியை மங்கம்மாவின் ஆட்சியாகவே கருதலாம். ஆறாண்டுகளே ஆண்ட முத்துவீரப்பன், தனது 21ஆம் அகவையில் இறந்தான். இக்கால அளவுகளில்தான் பிரிட்டோ, சேதுபதியின் மறவ நாட்டில் பணியாற்றினார். சொக்கநாதன் காலத்தில் ஓரளவுக்கு நல்லுறவுடன் காணப்பட்ட கிழவன் சேதுபதி, முத்து வீரப்பன் காலத்தில் முரண்பட்டான்.

முத்துவீரப்பனின் தாய்வழிப் பாட்டனான இலிங்கம நாயக்கன் எனப்பட்ட இலிங்கா ரெட்டி, வடுகர் பேட்டையில் இருந்த காலமிது.[91] வடுகர் பேட்டையின் சுற்றுப்பகுதிகளில் பெருமளவிலான கிறித்துவர்கள் அறியப்பட்டனர். ரெட்டியும்

Balthazar da Costa:

In Tiruchirappalli Thanjavur and Pudukkottai regions, Fr. Balthazar da Costa and Fr. Manuel Martins converted many Hindus to Christianity between 1629 and 1639. Avoor and Kandalur became the two main centres of Jesuit missionary work where a number of Kallars became Christians. Fr. Balthazar built a chapel at Kandalur. Letters say that the Christians of Trichirappalli region were very pious and attended the services in to church very regularly. The Jesuit Annual Letter of 1644 mentioned that 300 Brahmins converted lived in Tiruchirappalli. It is reported that a Kallar chief whose domain was near Thanjavur embraced Christianity in 1660 as said in the Jesuit Annual letter of the year.

91. History of the Nayaks of Madura, p. 150.

கிறித்துவர்கள் பால் அன்பு கொண்டிருந்தான். இவனை ஒரு தீவிரமான இலிங்காயத் (lingayat), இலிங்கத்தை வழிபடுபவன் என செய்திகள் கூறுகின்றன. இவனுடைய பிராமண குருவிற்கு, கிறித்துவர்களின் வளர்ச்சி உறுத்தலை ஏற்படுத்திய நிலையில், ரெட்டியிடம், கிறித்துவர்களை ஒறுக்குமாறு கேட்டுக்கொண்டான். ஒரு சிலராயிருந்தால் ஒறுக்கலாமென்றும், பலரை எவ்வாறு பகைத்துக் கொள்வது என்று ரெட்டி விடையளித்தான் அப்படியானல் வடுகர் பேட்டைப் பகுதியில் கிறித்துவர்களின் எண்ணிக்கைதான் என்னவென்று கேட்கப்பட்டபோது, "எண்ணிக்கையா! யார் அதனை எண்ணிப்பார்ப்பது! எங்கும் அவர்கள் தானே இருக்கிறார்கள்.[92] கிறித்துவர்கள் இல்லாத ஊரே இல்லையே!", என குரு விடையிறுத்ததாகச் சொல்லப்படுகின்றது. (It was replied "Their number! who could count them? They are everywhere. There is not a village where they are not found"- Bertrand)

மேற்கண்ட செய்தியால், வடுகர் பேட்டைப் பகுதிகளில் கிறித்துவம் வளர்ந்திருந்தது என அறியலாம். பாட்டன் வழியில் பெயரன் முத்துவீரப்பனும் கிறித்துவர்கள் பால் அன்பு கொண்டிருந்தான் இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு செய்தி சொல்லப்பட்டுள்ளது. திருச்சிக்கு அருகில் (ஆவூர்) ஒரிடத்தை கிறித்துவர்கள் பெற்றிருந்தனர். இந்நிலத்தை, வல்லடியாகச் சிலர் கிறித்துவர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டனர். முத்து வீரப்பன் இதனைக் கேள்விப்பட்டு, கிறித்துவர்களிடமே அந்நிலத்தை ஒப்படைக்கவும், அதனைக் கையகப்படுத்தியவர்களைக் கடுமையாக ஒறுக்கவும் ஆணையிட்டான். மிகவும் நேர்மையாகவும், மக்களுக்குப் பாதுகாப்பாகவும், ஆழ்ந்த இறை நம்பிக்கையுடன் காணப்பட்ட முத்து வீரப்பன், பெரியம்மை நோய்கண்டு இளம் அகவையிலேயே இறந்துபட்டான். குறுகிய காலமே அரசாண்ட முத்து வீரப்பன், கிறித்துவர்கள்பால் உள்ளன்பு கொண்டிருந்தான் என இயேசு அவையினரின் குறிப்புகள் கூறுகின்றன.[93]

வடுகர் பேட்டை (வடுகன் என்பது தெலுங்கன் என்று பொருள்படும்)ப் பகுதியில் கிறித்துவர்களானவர்கள், கள்ளர்

---

92. Bertrand, Vol.III, p. 317.
93. Ibid, Vol. IV, p. 74.

இனத்தைச் சார்ந்தவராவர். கொள்ளிடத்துக்குத் தெற்கேயிருந்த பல கள்ளர்களும் கிறித்துவத்தை ஏற்றுக் கொண்டனர். இக்கால அளவுகளில், மண்ணச்ச நல்லூர் (பச்சூர்) வந்தலை, மகேந்திர மங்கலம் (சந்நியாசி மடம்), கல்பாளையம், புறத்தாக்குடி, கோக்குடி, முசிறி, வாலிகண்ட புரம், கண்ட மங்கலம், பெரியவர் சீலி, திருவளர்ச் சோலை, உத்தமனூர் ஆகிய, திருச்சியை அடுத்திருந்த இடங்களிலும் கிறித்துவம் வளர்ந்திருந்தது.[94]

இராணி மங்கம்மாள் (1689–1706)

முத்துவீரப்பன் இறந்தபோது அவனுக்கு ஓரகவையில் மகன் இருந்தான். எனவே பெயரனை மன்னனாக மூடிசூட்டிய மங்கம்மாள், தனது பெயரனின் பகராளாக (Regency) ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். நாயக்க மன்னர்களில் இராணி மங்கம்மாவைப் போன்று கிறித்துவர்களிடம் அன்பு கொண்டு அவர்களின் சமயப்பணிகளுக்குப் பல்லாற்றானும் உதவி செய் தவர் ஒருவருமில்லை எனலாம் இயேசு அவையினரின் குறிப்பு களின்படி, மங்கம்மாளின் காலம், கிறித்துவம் நாயக்கர்களின் ஆட்சிப் பகுதிகளில் தழைத்திருந்த பொற்காலமாகும் இதற்குப் பல்வேறு சான்றுகளைக் கூறலாம்.

மறவ நாட்டில் பிரிட்டோ கைது செய்யப்பட்டதும் அவர் கொலைசெய்யப்பட்டதும், மங்கம்மாளின் கவனத்துக்கு வரவேயில்லை. பிரிட்டோ இறந்த செய்தி கேட்டு மங்கம்மா மிகவும் வருந்தியதாகவும், முன் கூட்டியே தகவல் கிடைத்திருந் தால் பிரிட்டோவை விடுதலை செய்ய முயன்றிருப்பேன் என்று கூறியதாகவும் சொல்லப்படுகின்றது. மங்கம்மாள் காலத்தில், நாயக்கர் ஆட்சியில் மட்டுமே கிறித்துவம் அனுமதிக்கப் பட்டிருந்தது. தஞ்சையிலும் உடையார் பாளையத்திலும் மறவ நாட்டிலும் கிறித்துவம் முற்றிலுமாகத் தடை செய்யப்பட் டிருந்ததுடன் கிறித்துவர்கள் என அறியப்பட்ட பலரை, சிறை யில் அடைக்கவும் அவர்களது ஆலயங்களை இடித்துத் தள்ளவும் ஆணைகள் வழங்கப்பப்பட்டன.[95] மங்கம்மாளின் அரசியல் பகைவர்களை தஞ்சை, உடையார் பாளையம், மறவ நாட்டினர், மங்கம்மாள் கிறித்துவத்துக்கு அனுமதியளித்துள்ள செயலுக்காகவே, இவர்கள் கிறித்துவத்தை எதிர்த்தனர்.

---

94. குடந்தை மறைமாவட்டப் பொன்விழா மலர், 1949.
95. History of the Nayaks of Madura, p. 164.

பிரிட்டோவுக்கு முன்னதாக, சேதுபதியால் சிறைப் படுத்தப்பட்ட மெல்லோ (Fr. Mello) என்பாரை மறவ நாட்டுச் சிறையினின்றும் விடுவிக்க (1691) ஆணையிட்டாள்.[96] புசே (Fr. Bauchat) என்பார் மீது தொடுக்கப்பட்ட கொலைக் குற்றத்தி னின்றும் அவரை விடுவித்தாள்.[97] மானுக்கி (Manucu) என்பாரின் குறிப்புகள், மங்கம்மாளின் சமயப் பொறையுணர்வையும் நேர்மையையும் விளக்குவனவாக உள்ளன.[98] தஞ்சை மன்னன் சாஜி (Shaji) என்பான் தஞ்சைப்பகுதியில் கிறித்துவத்தைத் தடை செய்திருந்ததைப் போலவே நாயக்கர் ஆட்சிப் பகுதிகளிலும் தடை செய்யவேண்டுமென மங்கம்மாளுக்கு மடல் எழுதி னான்.[99] அதுபோவே உடையார்பாளையம் மன்னனுக்கும் மடல் விடுத்தான். கிறித்துவ சமயப் பணியாளர்களின் நுழைவை அந்தந்த நாடுகள் தடைசெய்ய வேண்டுமெனவும். தேவாலயம் கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தான். கிறித்துவம் அனுமதிக்கப்பட்டால், தொடர்புடைய அரசுகள் பிற்காலத்தில் கவிழ்ந்து போகும் எனவும் கிறித்துவர் களின் எண்ணிக்கை அச்சப்படுமளவுக்குப் பெருகி வருவதை யும் சுட்டிக்காட்டினான்.

---

96. Ibid.
97. Ibid.
98. Manucci's in formations confirmed by Bertrand, Vol.IV, p. 72.
99. History of the Nayaks of Madura, 9. 164.

Any how the benevolent attitude of Mangammal towards Christianity is clear. This is confirmed by the following extract from Manucci. This king of Tanjore, not satisfied with what he had done in his own territory againist the Christians, wished still further to have been persecuted and brought to destruction within the kingdoms of his neighbours. With this object he wrote, while still impelled by his rage, while the fire of his wrath was still buring, to the queen of Madura and the King of Aurpaliam (Udayarpalayam), representing to them the danger they incurred for their tembles and even for their thrines If they did not expel the Christians, at any rate, if they did not hinder the free exercise of that religion and for bid the baptism of any of their subjects .... - History of the Nayaks of Madura.

தஞ்சை மன்னனுக்கு மங்கம்மாள் விடுத்த பதில் மடல் தற்கால ஆட்சியாளர்களும் அறிந்துசொள்ள வேண்டிய அரசியல் பார்வை கொண்டதாகும். "மரக்கறி உணவை விரும்பி யுன்பவர்களை இறைச்சியுண்ணும்படித் தூண்டுவதும் அவரவர் விருப்பத்துக்கு மாறுபட்ட உணவைக் கொள்ளும்படிக் கட்டாயப்படுத்துவதும் எவ்வாறு சட்டப்படி தவறானதோ, அதுபோன்றே. தனியொரு மாந்தன் தன் விருப்பப்படி தனக் கேற்ற சமயத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும், அச்சமயம் கடமைகளை ஆற்றவும் நாம் அனுமதிக்க வேண்டும். அதுவே அரசனுடைய அணுகுமுறையாகவும் இருக்க வேண்டும்" மேற் கண்ட வரிகள் மங்கம்மாளின் விரிந்த பரந்த ஆளுமை நெறியை வெளிப்படுத்துவதாக உள்ளன.[100] வழிவழியாக வைணவச் சமயத்தின்பால் பற்று கொண்டிருந்த மங்கம்மாள், அச்சமய நெறிமுறைகளுக்குப்பட்ட வாழ்க்கை நெறியைக் கடைப்பிடித்து வந்தவள் என்பதும் நோக்கத்தக்கது. மேற்கண்ட மடலை தஞ்சை மன்னனுக்கும், உடையார் பாளையம் மன்னனுக்கும் மங்கம்மாள் அனுப்பிவைத்ததாக மானுக்கி குறிப்பிடுகின்றார்.

புசே எழுதியுள்ள குறிப்புகளின்படி. மொகலாயப்படை திருச்சியை நெருங்கியபோது, அச்சம் கொண்ட மக்கள் ஊரை விட்டே ஓடிப்போனார்கள். அவ்வாறு ஓடிப்போனவர்களில் புசேயும் ஒருவராவார். அவர் திருச்சிக்கருகிலிருந்த ஆவூரில் (Avoor) ஒரு இடத்தை விலைக்கு வாங்கி, அங்கோர் ஆலயத்தை யும் கட்டிவைத்திருந்தார். மக்கள் வெளியேறிய காலத்தில் அவ்விடத்தை ஒரு பூசாரி கையகப்படுத்திக் கொண்டு நாட்டுப் புறத் தேவதைகளின் சிலைகளை அங்கு வைத்து அதனைத் தன்னுடைமையாக்கிக் கொண்டான். போர் அச்சம் நீங்கிய காலத்தே அங்கு மீண்டும் வந்த புசே தனது ஆலய வளாகத்தில் பூசாரியிருப்பதைக் கண்டு அவனை வெளியேறக் கேட்டுக் கொண்டார். வெளியேற மறுத்த பூசாரி மங்கம்மாளின் அமைச்சன் நரசப்பையாவிடம் சென்று முறையிட்டான்.

100. Ibid, p. 165.

"Just as some were allowed to eat rice and others meat, so also was it lawful for each man to practise or adopt whatever religion seemed to him the best." - History of the Nayaks of Madura, p. 165.

பூசாரியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமைச்சன் புசேவின் கோரிக்கையைப் புறந்தள்ளினான். புசே நேரிடையாக மங்கம்மாளைச் சந்தித்தார். அமைச்சனை அழைத்து விளக்கம் கேட்ட மங்கம்மாளிடம் நரசப்பையா கூறிய விடை புசேவுக்கு எதிராக இருந்தது.

"தெரிந்தோ தெரியாமலோ பூசாரி தேவதைகளின் சிலைகளை அங்கு வைத்துவிட்டான் அச்சிலைகளை மீண்டும் எடுப்பது நமது சமய மரபுகள்படி தவறானதாகும். எனவே பூசாரிக்கு அந்த இடத்தையே உறுதிசெய்ய வேண்டும்." என்று அமைச்சன் கூறினான். புசேவுக்கு என்ன பதில் கூறுவது? என மங்கம்மாள் வினவினாள். பூசாரியின் செயல் தவறானது என்றும் மீண்டும் அவ்விடத்தை புசேவிடம் ஒப்படைக்குமாறும் கூறினாள். இதனால் வெறுப்படைந்த அமைச்சன், "இந்தச் சிலைகளை எடுத்து எங்கே வைப்பது?", என அமைச்சன் கேட்க, "அந்தச் சிலைகளையெல்லாம் எடுத்துக் கொண்டுபோய் கொள்ளிடத்தில் போடுங்கள்", என மங்கம்மாள் கூறினாள். மங்கம்மாளின் நேர்மையான ஆட்சிக்கு மேற்கண்ட நிகழ்வு சரியானதோர் எடுத்துக்காட்டாகும்.

உடையார் பாளையம் அரசு

செஞ்சி அரசுக்கும் அரியலூர் அரசுக்கும் இடைப்பட்ட பகுதி உடையார் பாளையம் எனப்படுகிறது. இடைக்காலச் சோழர்கள் காலத்தில் செயங்கொண்ட சோழபுரத்துக்கு மேற்கே விக்கிரமங்கலம் வரையில் காடுகளே நிறைந்திருந்தன. அரியலூர் என்ற ஊரும் அக்காலத்தில் அறியப்படவில்லை. விசய நகரப் பேரரசு தோன்றியதற்குப் பிறகே (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) உடையார் பாளையம், அரியலூர் போன்ற நகரங்கள் தோன்றின. விசய நகரப்பேரரசில் படைத்தலை வனாக பணியாற்றி வந்த ரெங்கப்ப உடையார். பீசப்பூர் சுல்தான்களுக்கு எதிரான போரில் விசயநகரப் பேரரசின் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்தாரென்பதால் சிற்றரசுத் தகுதி அளிக்கப்பட்டு உடையார்பாளையம் பகுதி அவருக்குக் கொடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக் காலம் எழில்மலை (புவனகிரி)

101. Ibid, p.164.
102. The Aristocracy of Southern India, A. Vadivelu, 1906. pp. 205-207.

என்ற ஊரில் தங்கியிருந்து[103] உடையார் பாளையம் பகுதி களில் காடுகளை அழித்து ஊர்களை உருவாக்கும் பணிகளில் இவனது வழிவந்தோர் ஈடுபட்டிருந்தனர்.

இம்மன்னர்களின் முதல் பெயராக கச்சி என்ற சொல் இணைக்கப்பட்டிருக்கும். இது காஞ்சியைக் குறித்த சொல் லாகும். இன்றும்கூட கச்சிப்பெருமாள் என்ற ஊர். இங்கே அறியப்படுகின்றது. கி.பி. 1500களின் தொடக்கத்தில் உருவான உடையார்பாளையம் அரசு வல்லாண்மை மிக்கதோர் அரசாக இல்லாவிடினும், வரலாற்றில் 450 ஆண்டுகள் இடம்பிடித்துள் ளது. தெலுங்கர்களான இவ்வழி மன்னர்கள் அடுத்தடுத்து வந்த அரசியல் குழப்பங்களால். தங்களது ஆட்சியைத்தக்க வைத்துக் கொண்டனர்.[104] கொள்ளிடத்தைத் தென் எல்லையாகவும் நடுத்திட்டு (அணைக்கரை) தொடங்கி வடவாற்றின் மேற்குப் பகுதிகளைக் கொண்டு, வெள்ளாற்றினை வட மற்றும் வடமேற்கு எல்லைகளாகவும். அரியலூர் அரசினை மேற்காக வும் கொண்ட பகுதிகள், உடையார் பாளையம் பகுதிகள் என அறியப்பட்டன (படம் பார்க்க). பிற்காலத்தில் வெள்ளாற் றினையொட்டிய பகுதிகளில் சில, செஞ்சி அரசின் கீழ் கொண்டுவரப்பட்டு, கொழையை மேற்கெல்லையாக செஞ்சி அரசு அறிவித்தது. இதனால் அணைக்கரை தொடங்கி திட்டக்குடி வரையிலான, உடையார்பாளையம் அரசின் வடக்கு எல்லையில் சிக்கல்கள் நீடித்து வந்தன.[105] தொடக்கத்தில் செஞ்சி, தஞ்சை, மதுரை போன்ற அரசுகள் நாயக்கர்களின்

---

103. Ibid. P. 198.

104. Ibid.

105. Letter from the Revenue Board to the Govt, dt. 5.7.1802.

கொழைக்கும் அய்யம்பேட்டைக்கும் இடையிலான எல்லைக் கோடு, முறையே உடையார் பாளையம் - செஞ்சி அரசு களிடையே ஏற்றுக் கொள்ளப்பட்டது 1817ஆம் ஆண்டில்தான் என ஆவணங்கள் கூறுகின்றன. இந்த எல்லைக்கோட்டை அடிப் படையாகக் கொண்டே தென் ஆற்காடு - திருச்சி மாவட்டப் பகுதிகள் பிரிக்கப்பட்டன. இன்றுவரையில் இந்த எல்லைக் கோடு செயல்பாட்டில் உள்ளது. இந்த எல்லைக் கோட்டில் ஏற்பட்ட சிக்கல் 1801 முதல் 1817 வரை நீடித்ததாகவும் ஆவணங் கள் கூறுகின்றன.[106-110] கொழை - அய்யம் பேட்டைச் சிக்கலுக்கு, இந்த எல்லைக்கோடும் ஒருவகையில் கரணியமாய் இருந்தது.

மரபுவழி அரசுகளாகவேயிருந்தன. பிற்காலத்தில் செஞ்சி, ஆற்காட்டு இசுலாமியர்களிடமும், மராட்டியர்களிடமும் மாறி மாறி இருந்து வந்துள்ளது. தஞ்சையில் ஏற்பட்ட அரசுரிமைக் குழப்பங்களால், மராட்டியர் தஞ்சையையும் கைப்பற்றிக் கொண்டனர். நாயக்கர்களின் அரசு, மதுரையில் மட்டுமே கி.பி. 1735 வரை நீடித்தது எனலாம்.

பெரும்பாலான உடையார் பாளையம் மன்னர்கள், "கச்சி காளாக்க தோள" என்ற அடைமொழிப் பெயரைக் கொண்டே அறியப்படுகின்றனர். எஞ்சி நின்ற மதுரை நாயக்கர்களிடமும், நல்லுறவை இவர்கள் கொண்டிருக்கவில்லை. பல்வேறு படையெடுப்புகளுக்கு உடையார் பாளையம் இலக்கான போது, படையெடுப்பாளர்களுக்குப் பெருந்தொகையைக் கையூட்டாக அளித்தும், பணிந்தும், தங்களது அரசை நிலைநிறுத்திக் கொண்டனர். வடக்கே வாலிகண்டபுரம், திட்டக்குடி பகுதிகளில், நாயக்கர்களின் பகுதிகளை இவர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்ததாகவும், இவைகளை மங்கம்மாள் கைப்பற்றிக் கொண்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

1697ஆம் ஆண்டில், மொகலாயப் படைத்தலைவன் சூல்பிகர்கான், படையெடுப்பின்போதும், 1702ஆம் ஆண்டில் தாவூத் கான் படையெடுப்பின் போதும், ஏராளமான பொன்னும் மணிகளும், விலையுயர்ந்த பொருட்களும், மேற்கண்ட இருவருக்கும் கையூட்டாகக் கொடுக்கப்பட்டதாக, மானூக்கி விளக்குகிறார்.[111] ஒரு நூற்றாண்டுக்குப் பிறகும், ஐதர் அலி, திப்பு சுல்தான் போன்ற மைசூரின் படையெடுப்பாளர்களும் உடையார் பாளையம் அரசின் செல்வங்களைத் துடைத்தெடுத்தனர்.

வைணவ சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த இம் மன்னர்கள், வைணவக்கோயில்களைக் கட்டவும், நிதிகளை அளிக்கவும், நடைமுறைச் செலவினங்களை ஏற்றுக்கொள்

---

106. Letter from the Revenue Board to the Collector of Trichinopoly, dt. 14.08.1802.
107. Proceedings of the Revenue Board, dt. 21.12.1815.
108. Govt. Order to the Revenue Board, dt. 30.08.1817.
109. Collector of Trichinopoly - P rocedings dt. 30.10.1817.
110. Final orders form the Govt. to Revenue Board, dt. 23.12.1817.
111. History of the Nayaks of Madura, p. 167.

ளவும் செய்தனர். திரு முட்டத்திலுள்ள பூவராகத் திருக்கோயில், விசய நகர மன்னர்களின் உதவியால் கட்டப்பட்டு, உடையார் பாளையம் மன்னர்களால் பேணிக்காக்கப்பட்டு வந்தது.[112] கிறித்துவ சமயத்தைப் பற்றி ஏதும் அறியாத இம்மன்னர்கள், மங்கம்மாளின் எதிர்ப்பு எனும் பார்வையிலும், தஞ்சை மன்னர் களின் தூண்டுதலிலும் கிறித்துவத்தை எதிர்த்தனர். இவ்வெதிர்ப்பு களும் கூட, கி.பி. 1700களுக்குப் பிறகு மறைந்து போயிற்று. 1760களில், பிரெஞ்சு ஆளுநன் தூய்ப்பிளேயுடனும், பின்னர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்துடனும், வணிக அடிப்படை யில், நட்புறவாயிருந்தனர் என்ற செய்திகள், கிறித்துவ எதிர்ப்பு என்பது பிற்காலத்தில் இவர்களிடம் காணப்படவில்லை என்பது அறியக் கிடக்கின்றது.

பிரிட்டோ, கொழையிலிருந்த காலங்களில் (1682 - 83), உடையார்பாளையம் அரசு, பிரிட்டோவைத் தனது ஆட்சிப் பகுதிகளில் அனுமதிக்கவில்லையென்பதை அறியலாம். இக் காரணம் பற்றியே, கொழையில் கிறித்துவக் குடியிருப்பு தோற்றுவிக்கப்பட்டது. இருப்பினும் இக்கால அளவுகளில், ஆந்திரே பிரெயர் பிரிட்டோ போன்றவர்கள், எதிர்ப்பையும் மீறி, கோடாலி கருப்பூர், இலைக்கடம்பூர், சிறுகடம்பூர், பரணம், பொன்பரப்பி, கங்கை கொண்ட சோழபுரம் போன்ற அரசின் பல ஊர்களில், பலரைக் கிறித்துவ சமயத்துக்கு மாற்றி, அவர்களையெல்லாம் கொழையில் குடியேற்றியுள்ளனர். கூவத்தூர் என்ற ஊரில், கிறித்துவர்கள் தங்களது தேவாலயத்தில் பயன்படுத்தி வந்த பல பொருட்களை, உடையார் பாளையம் அரசு, எடுத்துச் சென்றுவிட்டதாக மார்ட்டின் குறிப்பிடுகின் றார். இக்காலத்தில் (1678-98), கல்யாண ரெங்கப்ப உடையார் ஆட்சி செய்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன.[113] 1678 - 1706 ஆண்டுகளில் ஆட்சிசெய்த உத்தம ரெங்கப்ப உடையார், தனது முன்னோர்களின் போக்கைக் கைவிட்டு, கிறித்துவர்கள்பால் கெடுபிடிகளைக் குறைத்துக் கொண்டதாகச் செய்திகள் கூறு கின்றன.[114] உடையார் பாளையம் மன்னர், பிரிட்டோவுடன் நட்புணர்வாயிருந்தார் என்று சிலர் குறிப்பிட்டுள்ள செய்திகள் தவறானவைகளாகும்.

---

112. The Aristocracy of Southern India, pp. 205-207.

113. Ibid, p. 205

114. Ibid, p. 207

கொழை மற்றும் அய்யம்பேட்டையைப் பற்றிய செய்திகள், உடையார்பாளையம் அரசுக்குறிப்புகளில் காணக் கிடைக்க வில்லை. கொழைக்கு அருகிலுள்ள திருக்களப்பூரிலுள்ள கோடிவனேஸ்வர சுவாமி (அய்யனார்) கோவிலுக்கு, அரசு நிலம் வழங்கிய செய்திகள், அக்கோயிலில் காணப்படுகின்றன.[115] திருக்களப்பூரிலும் ஓர் அய்யனார் கோயில் இருந்ததும், அதற்கு நிலம் வழங்கப்பட்ட செய்திகளும், இப்பகுதிகளில் அய்யனார் வணக்கம் மிகுந்து. காணப்பட்டதைத் தெளிவாக்குகின்றது. அய்யம் பேட்டையிலிருந்த கைத்கோளார்களை, அகரம் என்ற ஊரில் குடியேற்றியதும் உடையார் பாளையம் மன்னர்களே என அறியலாம்.

வரலாற்றில் பெரும் சிறப்புகளுடன் அறியப்படாத உடையார் பாளையம் அரசு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பாளையப்பட்டாக அறிவிக்கப்பட்டு, சமீன் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. ஆங்கிலேயருக்காக நிலவரிகளைத் தண்டும் நிறுவனமாக உடையார் பாளையம் அரசுதகுதிக் குறைப்பு செய்யப்பட்டது. விடுதலைபெற்ற இந்தியாவில், இந்தத் தகுதி யும் பறிக்கப்பட்டது. இன்று உடையார் பாளையத்தின் பழம் பெருமைகளைக் கூறவும் ஆளில்லா நிலை ஏற்பட்டுள்ளது.

அரியலூர் அரசு: உடையார் பாளையம் அரசு தோற்று விக்கப்பட்ட பிறகே அரியலூரில் ஒரு குறுநில மன்னர் மரபு தோன்றியது. இதுபற்றிய ஆவணங்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்ட நிலையில், அரியலூரை ஆண்ட மன்னர்கள் பற்றிய குறிப்பு மட்டும் காணக்கிடக்கின்றது. அவற்றில் காணப்படும் ஆண்டுக் குறிப்புகளின்படி 1550களில் அரியலூர் குறுநில அரசு தோற்று விக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு முன்னுள்ள தமிழக வர லாற்றில் அரியலூர் அரசு பற்றிய குறிப்புகள் காணப்பட

---

115. Ibid, p. 203.

On the auspicious day for the pooja, and repairs of the temple Kotivaneswara Swamy Thirukkalappur, I Kachi Nalla Nainaga Kalakka Thola Udayarson of Kanchi Chandra Sekara kalakka Thola Udayar do here by give over the village of Thirukkalappur, on account of our Naicherappan, the charity to continue so long, as the sun and the moon exists." - The Aristocracy of Southern India.

வில்லை. இவர்களும் தெலுங்கர் மரபைச் சார்ந்தவர்களே என்றாலும், தங்களை நயினார் என அழைத்துக் கொண்டனர். தஞ்சையிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அழகிரி நாயக்கன், அரியலூரில் தங்கியிருந்த செய்தியும் சிவாஜி மற்றும் ஐதர்அலி ஆகியோர் அரியலூர் மன்னனிடம் ஏராளமான தொகையைப் பெற்ற செய்திகளும் வரலாற்றில் அறியப்படுகின்றன. 1732ஆம் ஆண்டில் ஏலாக்குறிச்சியில், விசயரெங்க ஒப்பில்லாத மழவராய நயினார் என்ற அரியலூர் மன்னன், வீரமாமுனிவருக்கு அளித்த நிலக்கொடை செய்தியும் பதிவாகியுள்ளது. கிறித்துவர்களுக்கு, அரியலூர் மன்னர்கள் எவ்வகையிலும் தொல்லைகளைத் தர வில்லை. உடையார் பாளையம் மன்னர் குடும்பத்துடன் பிற்காலத்தில் இவர்கள் திருமண உறவுகள் கொண்டிருந்தனர். இவர்களும் வைணவர்களே என்பதால், ரெங்கப்ப என்ற பெயரைத் தங்களது பெயர்களில் இணைத்துக் கொண்டனர்.

தஞ்சையில் கிறித்துவ சமயம் தடை செய்யப்பட்டிருந்த காலங்களில், தஞ்சைப்பகுதி கிறித்துவர்கள், கொள்ளிடக் கரைக்கு வடக்கேயிருந்த ஏலாக்குறிச்சியில் தங்கியிருந்தனர் என்றும், தடைகள் மறைந்துபோன காலங்களில், மீண்டும் தங்கள் ஊர்களுக்கே திரும்பிச் சென்று விட்டனர் என்றும் அறியலாம். ஒரு காலத்தில் ஏராளமான கிறித்துவர்களைக் கொண்டிருந்த ஏலாக்குறிச்சியில் இன்று அவ்வெண்ணிக்கை குறைவாகவே காணப்படுவதற்குக் காரணம் இதுவே எனலாம். மேலும் விளக்கங்களை வீரமாமுனிவர் தலைப்பில் காண்க

செஞ்சி அரசு

விசய நகரப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த தமிழகத்தி லிருந்து மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய பகுதிகள் பேரரசின் வீழ்ச்சிக்குப்பிறகு தனித்தனி அரசுகளாயின. மதுரையும் செஞ்சியும் பேரரசுக்கு எதிரான அணியிலும் தஞ்சை சார்பான அணியிலுமிருந்தன. திருமலை செஞ்சியிடம் நல்லறவு கொண் டிருந்தான். கோல்கொண்டாவிலிருந்து வந்துற்ற படையெடுப் பைத் தடுக்கவும் செஞ்சியைக் காக்கவும். திருமலை மன்னன் செஞ்சி நோக்கி விரைந்தான். பீஜப்பூர் படைகள் உதவுவதாக வாக்களித்திருந்ததற்கு மாறாக அப்படையினர் கோல் கொண்ட வுடன் சேர்ந்து கொண்டதால் செஞ்சி நாயக்கர்களிடமிருந்து, இசுலாமியர்களின் கைக்கு மாறியது. செஞ்சி கைமாறியது

தொடர்பாக. டெய்லர் (Taylor) மற்றும் ரெங்காச் சாரியார் கொடுக்கும் செய்திகள் முரண்பட்டிருந்தாலும், செஞ்சி இசுலாமியர்களின் கைக்கு மாறியது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அடில்ஷா எனப்பட்ட இடல்கான் செஞ்சியைப் பிடித்ததாக வரலாறு கூறுகின்றது.[116] சிவாஜியின் தமிழகப் படையெடுப்பின் போது செஞ்சி மராட்டியர்களின் கைக்கு மாறியது.

சூலை. 1677 ஆம் ஆண்டில், செஞ்சியைச் சிவாஜி கைப்பற்றினான். தனது உடன்பிறந்தான் சாந்தாஜியிடம் செஞ்சியை ஒப்படைத்துவிட்டு திருமழபாடிக்குச் சென்று எக்கோஜியைக் கண்டு பேசினான். தன்னை சிவாஜி கொன்று விடுவானோ என்று அச்சுமுற்ற எக்கோஜி இரவோடிரவாக கொள்ளிடத்தை நீந்தி கடந்து தஞ்சைக்கு ஓடிப் போனான். சிவாஜி மராட்டியம் சென்ற பிறகு, எக்கோஜி செஞ்சியின் மீது போர் தொடுத்தான். எகோஜியை வாலிகண்டபுரத்தில் சந்தித்த சாந்தாஜி, எக்கோஜியின் படைகளைச் சின்னாபின்னமாக்கி, செஞ்சியின் வெற்றியை உறுதி செய்தான்.[117]

கொளையில் தங்கியிருந்த ஆந்திரே பிரெயர், தமது 1676 ஆம் ஆண்டுகளில், செஞ்சி அரசின் நிலைப்பாடுகளை விரிவாக விளக்கி, பால் ஒலிவா (Paul olva) என்பவருக்கு, கொழை என்ற முகவரியைக் கொடுத்தே மடல் எழுதியுள்ளார்.[118] பல்வேறு குழப்பங்களில் பல ஆண்டுகள் சிக்கித் தவித்த செஞ்சி அரசு நாயக்கர், இசுலாமியர், மராட்டியர், மீண்டும் இசுலாமியர் என்ற அளவில் மாறி மாறிச் சுழன்று வந்ததால். கிறித்துவர்கள்பால் அரசின் கவனம் செல்லவில்லை. செஞ்சி அரசுக்குட்பட்டிருந்த திருவண்ணாமலை, வெட்டவலம், கடலூர், பண்ருட்டி, கொழை போன்ற இடங்களில் கிறித்துவம் எடுத்துச் செல்லப்பட்ட போது, உள்ளூர்களில் பிராமணர்களின் எதிர்ப்புகள் இருந்தனவேயன்றி அரசுச் சார்பில் எங்கும் எதிர்ப்புகள் இருந்திருக்கவில்லை. ஆந்திர பிரெயர் போன்றோர் கொழையைத் தமது பணியிடமாகத் தேர்வு செய்துகொள்ள இதுவே சிறப்பான காரணம் எனக் கருதலாம்.

---

116. Historical Fragments of the Mohul Empire, Omre Robert, 1805, p. 223.

117. History of the Nayaks of Madura, p. 131.

118. Ibid, p. 211, Letter form Andre Freire to Paul Oliva, 1676.

சாந்தாஜி எக்கோஜியிடையே தோன்றிய பிணக்குகளை யும் போர்களையும் பற்றி ஆந்திரே பிரெயர் தமது 1682ஆம் ஆண்டுக்குறிப்புகளில், வீராணம் என்ற முகவரியிட்டே எழுது கிறார்.[119] மேலும், தமது 1682ஆம் ஆண்டுக் குறிப்புகளில், வடுகர் பேட்டை முகவரியிட்ட மடலும், செஞ்சி அரசைப் பற்றியச் செய்திகளை விளக்குகின்றன.[120] செஞ்சி அரசின் வரலாறே ஆந்திரே பிரெயரின் குறிப்புகளால் மட்டுமே தெளிவாக அறியப் படுவதாக சந்தியநாதையர் குறிப்பிடுகின்றார்.[121]

மராட்டிய வழி வந்தவனாகக் கருதப்படும் தேசிங்கு என்ற குறுநில மன்னன் செஞ்சியை ஆண்ட செய்திகள் அறியக் கிடக் கின்றன. அவன் மராட்டியன் என்பதாலும், இசுலாமியர்கள் காலத்தில் வாழ்ந்திருந்தவன் என்பதாலும் இசுலாமிய எதிர்ப் பாளர்கள் தேசிங்கை ஒரு மாவீரன் போன்று அடையாளம் காட்டிவிட்டனர். தேசிங்கு மன்னனைப் பற்றிய செய்திகளுக் கெல்லாம் வரலாற்றுச் சான்றுகள் இல்லையென்பது நோக்கற்

---

119. Ibid, p. 213. Letter form Andre Freire to Paul Oliva from Viranam in the Kingdom of Gingee, 1678.

120. Ibid, P. 216.

121. Ibid, P. 213.

" I begin this letter as usual by an exposition of the political events whose influence our Mission has had to submit to. As I have told you in my last Letter, the Nayak of Madura was preparing for a war with Ekoji, the old captain of Idalkhan, now independent master of Tanjore and a part of Gingee. Meanwhile it was reported that Sabagi (Sivaji) the elder brother of Ekoji, in revolt aganist his sovereign for some time, had seized several provinces of Bisnagar (Vijayanagar) and advanced at the head of a strong army. This news appeared incredible; how to believe that Sabaji could traverse a distance of several humdreds of leagues through (the country of) the warlike people of the Dakhan and Golkonda to carry war into our country? while this propability like a thunder-bolt, on the citadel of Gingee, while he took at the first assault. The owed this easy success to the divisions which prevailed, and to the numberous communications which he had carefully conducted with the Muhammadans."

- Letter of Andre Freire form kolai (Viranam) in the Kingdom of Gingee to Paul Oliva, 1678.

பாலது. ஆற்காட்டுத் தளபதிக்கு அடங்கி, ஆண்டுக்காண்டு திறை கொலுத்தி வந்த ஒரு குறுநில மன்னனே தேசிங்கு என்பதே உண்மை நிலையாகும் டெல்லியில் குதிரையை அடக்கியதும், ஆற்காட்டுப் படையை முறியடித்ததும் கதைகளைளேயின்றி, உண்மை நிகழ்வுகளன்று.

இசுலாமியர்கள் செஞ்சியை ஆண்ட போது, உடையார் பாளையம் அரசின் அத்துமிறல்களைத் தடுத்து நிறுத்த, பாளையங்கோட்டையில் ஒரு செயற்கை மண்கோட்டையை உருவாக்கி வைத்திருந்தனர். கொழை உள்ளிட்ட சில பகுதிகள் பாளைங்கோட்டையிலிருந்த படைத்தலைவனின் பொறுப்பில் இருந்தன. கொழையில் ஒரு சுங்கச் சாவடியிருந்தது. அச்சாவடியைச் சுற்றியிருந்த பகுதிகளில் ஆங்காங்கே சில வன்னியர் இந்துக் குடும்பங்கள் வாழ்ந்திருந்தன. சுங்கச் சாவடிக்கு மேற்கே, உடையார் பாளைம் எல்லைக்குக் கிழக்கேயிருந்த பகுதியைத் தான் கிறிந்துவ சமயம் பரப்பாளர்கள் தங்கள் பணியிடமாகத் தேர்வு கொண்டனர். அதற்கு முன் அப்பகுதியில் மக்கள் வாழ்ந் திருந்தாகச் செய்திகள் இல்லை. இரண்டு அரசுகளுமே தலையிடாத இடமாகக் கொழை தேர்வு செய்யப்பட்டது.

கொழையில் கிறித்துவர்களின் எண்ணிக்கை உயர்வதைக் கண்ட சுங்கச் சாவடியை அடுத்திருந்த (சாவடிகுப்பம் என்ற பெயரும் உண்டு) மக்கள், கிறித்துவ சமயத்தைத் தீண்டத் தகாத சமயமாகக் கருதினர். பாளையங்கோட்டையிலிருந்த இசுலாமியத் தலைவனிடம் பலமுறை கேட்டுக்கொண்டும், அவர்கள் எந்த பதிலும் சொல்லவில்லையென்பதால், இறுதியாகத் தாங்கள் வழிபட்ட அய்யனாரிடம் முறையிட்டுக் கொண்டனர். கொழையினின்றும் கிழக்கே அவ்வேதம் பரவாமலிருக்க அய்யனார் கோவில் ஒன்றைக்கட்டி அதனருகே குளமொன்றும் வெட்டி, வெளிநாட்டு வேதத்துக்கு ஒரு தடையை (Check) வைத்தனர். இதுபற்றியே அக்குளத்துக்கு, வேதம் அண்டான் குளம் என்ற பெயரையும் சூட்டினர். இன்று அப்பகுதி வேதண்டாங்குளம் என்று அழைக்கப்படுகிறது. எந்த வேதத்துக்குக் குளம்வெட்டித் தடைகள் செய்தனரோ, அந்த வேதண் டாங்குளம் முழுவதும் இன்று கிறித்துவ மக்கள் வாழ்வது வரலாற்று மாற்றங்களே என கருத வேண்டும். கொழை இன்று, வேளாண்மை நிலங்கள் உள்ள பகுதியாகக் காட்சியளிக்கின்றது.

✧✧✧

14

செஞ்சி நாட்டில் கிறித்துவம்

வடதமிழ் நாட்டில், கி.பி. முதல் நூற்றாண்டிலேயே கிறித்துவம் அறியப்பட்டிருந்தது. பின்னர் வந்த அரசியல் சூழல்கள். கிறித்துவ சமயத்தை வழிநடத்தத் தலைவர்கள்; இல்லாமை, மற்றபகுதிகளில் வாழ்ந்திருந்த கிறித்துவர்களோடு தொடர்பின்மை, போன்ற பல காரணங்களால் வடதமிழ் நாட்டில் கிறித்துவம் தனது பிடிப்பை இழந்து போயிற்று. திருநாவுக்காசர் போன்ற சைவக்குரவர்களின் கடுமையான சமயப் பணிகளால், பலர் பிராமண சமயத்துக்கு மாற்றப் பட்டனர். சேர நாட்டின் வளர்ச்சிக்கும், வணிகத்துக்கும் அடிப் படைக் காரணியாக இருந்த கிறித்துவத்தை, சேர மன்னர் போற்றினர். இதனால் வெறுப்புற்ற சோழர்கள், சேரர்மீது கொண்டிருந்த பகைமையால், கிறித்துவத்தை வளரவிடவில்லை. (மேலும் விளக்கங்களுக்கு ஆசிரியரின் தமிழ்நாட்டுக் கிறித்துவம் பகுதி 1 என்ற நூலைக் காண்க) ஏறக்குறைய 15 நூற்றாண்டுகள் தமிழகத்தின் வடப்பகுதிகளில் கிறித்துவ சமயப் பணிகள் மேற்கொள்ளப்பட வில்லை. போர்த்துக்கீசியர்களின் வருகை (1500க்குப்பிறகு) வடதமிழ்நாட்டில் கிறித்துவத்தை வளர்க்க வித்திடப்பட்டது. குறிப்பாக சென்னையை அடுத்துள்ள பகுதிகளிலும் செஞ்சி நாட்டின் தேவனாம் பட்டிணத்திலும் கிறித்துவம் மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது.

கோவாவில் நிலைபெற்ற போர்த்துக்கீசியர்கள், தோமை யரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்த மயிலையில் மேல் தங்கள் பார்வையைத் திருப்பினர். 1507ஆண்டிலேயே தூதுக் குழுக்கள் கோவாவிலிருந்து மயிலைக்கு வந்து, தோமையரின் கல்லறை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டனர். பழவேற்காடு (Pulicut) இயற்கையிலேயே சிறப்பாக அமைவுற்றிலிருந்த துறைமுகம் என்பதால் போர்த்துக்கீசியர் தமது வணிகத்தை

மேம்படுத்த சென்னையில் தங்கலாயினர்.[122] 1511 ஆம் ஆண்டில் பழவேற்காட்டிலிருந்து மலாக்காவிற்கு கடல் வணிகம் சிறப்புறத் தொடங்கியது. இவ்வணிகர்களின் சமயக் கடன்களை நிறைவு செய்ய, 1536ஆம் ஆண்டில் பிரான்சிசுகள் துறவிகள் மயிலையில் தங்கத் தொடங்கினர்.[123] 1540களில் கிறித்துவின் நற்செய்தியை அப்பகுதி மக்களிடையே அறிவித்தனர். இக்கால அளவுகளில், (1507-1540) இயேசு அவையினர் எவரும் இந்தியாவுக்கு வருகை தரவில்லை. 1542ஆம் ஆண்டில்தான், இயேசு அவையினரின் நடவடிக்கைகள் தமிழகத்தில் தொடங்கின.

தூத்துக்குடிப் பகுதிகளும், தொடக்கத்தில் பிரான்சிசுதன் துறவிகளால் அறியப்பட்டிருந்தன. தொடர்ந்து இயேசு அவையினர் அப்பகுதியின் சமயப் பணிகளில் கவனம் செலுத்தினர். தெற்கே தூத்துக்குடிக்கும் வடக்கே பழவேற்காட்டிற்கும் இடையே கிழக்குக் கடற்கரையில் ஒரு புதிய வணிகர் குடியிருப்பின் தேவையையுணர்ந்த போர்த்துக்கீசியர், கூடலூரை (கடலூர்)த் தேர்வு செய்தனர்.[124] இவ்வூர் செஞ்சி நாட்டு மன்னர்களின் ஆளுகையின் கீழிருந்த துறைமுக ஊராகும். சோழர் ஆட்சிக்கும் பிறகு, இப்பகுதி காடவராயர்களின் ஆட்சியிலிருந்தது. இவர்களை பெண்னை நாட்டு கூடல் ஆளப்பிறந்தான் காடவராயன் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன.[125] இன்றைய கடலூரைச் சுற்றியிருந்த பகுதிகள் கூடல் நாடு எனப்பட்டது. காடவராயன் கோப்பெருஞ்சிங்கன், கூடல் ஊர் துறைமுகத்தை உருவாக்கினான்.[126] இவன் சோழமன்னன் மூன்றாம் இராசராசனை சேந்தமங்கலம் போரில் புறங்கண்டதாக திருவந்திபுரம் கல்வெட்டுகள் கூறுகின்றன.

தொடர்ந்து, பாண்டிய மன்னர்களான சடாவர்மன் சுந்தர பாண்டியன், மாறன் விக்கிரம பாண்டியன் போன்றோர் கூடலூர் துறைமுகத்தைப் பேணிக் காத்தனர்.[127] கூடலூருக்கு அருகே பெருமளவில் உப்பு விளைவிக்கப்பட்டது, வண்டி

122 Portugaese is the Tamil coast, p. 279.

123. Ibid.

124. Ibid, p. 31.

125. south Indian Inscriptions, xll, No. 121.

126. Ibid.

127. The cholas, K.A. N. sastri, Madras, 1984, p. 384.

வண்டியாக வெளியூர்களுக்கு உப்பு அனுப்பப்பட்ட இடம் உப்பளவாடி என்று அழைக்கப்பட்டது. இவ்வுப்பு வணிகத்தில் அரசாங்கத்துக்குக் கிடைத்த வருமானத்தின் ஒரு பகுதி திருப்பாதிரிப் புலியூர் தேவநாதசுவாமி திருக்கோயிலுக்கு அளிக்கப்பட்டது. மாசி மகத்தன்று. தேவநாத சுவாமியின் சிலை கோயிலிலிருந்து கூடலூர் துறைமுகத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, கடற்கரையில், பெருவிழா நிகழ்வுற்ற தாக தேசிக பிரபந்த உரை கூறுகிறது.[128] தேவநாத சுவாமியின் பெயரால், இத்துறைமுக நகரம் தேவனாம் பட்டிணம் என அழைக்கப்பட்டது. அப்பெயரையே போர்த்துக்கீசியரும் பதிவு செய்துள்ளனர் (Tevanapatao).

1520ஆம் ஆண்டில், பழவேற்காட்டில் (Pulicat) போர்த்துக் கீசியப் படையொன்று நிலைநிறுத்துப்பட்டது. பழவேற்காடு. தேவனாம் பட்டிணம், நாகப்பட்டிணம் ஆகிய கிழக்குக் கடற் கரைப்பகுதிகளை, போர்த்துக்கீசியர் தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டனர். இதற்கு முறையான அனுமதியை செஞ்சி மன்னர் உள்ளிட்ட எவரிடமும் போர்த்துக்கீசியர் பெறவில்லை. இப் பகுதியில் பிறர் கலம் செலுத்த போர்த்துக்கீசியரின் அனுமதியைப் பெற வேண்டிருந்தது. கப்பலில் ஏற்றப்படும் பெரிய மூடைக்கு ஐந்து பணம் தீர்வையாகப் பெறப்பட்டது. 1526இல் கிடைத்த குறிப்புகளின்படி, உப்பு, வால் மிளகு, மிளகு, கொள்ளு, பாக்கு, அரிசி, அவல், வெல்லம், துணிவகைகள், கப்பலில் கொண்டு செல்லப்பட்ட வணிகப் பொருட்களாயிருந்தன.

செஞ்சியில் மன்னராயிருந்த கிருட்டிணப்ப நாயக்கன் (1567-78) அவனது மகன் கொண்டம நாயக்கன் (1580-93) ஆகியோர், தேவனாம் பட்டிணத்தில் வணிகம் செய்ய போர்த்துக் கீசியருக்கு முறையான அனுமதியை அளித்தனர்.[129] 1597ஆம் ஆண்டில் செஞ்சியை ஆண்ட கொண்டம நாயக்கனின் மகன் முத்துகிருட்டிணப்ப நாயக்கனை நிகோலசு பிமெந்தா (Fr. Nicholas Pimcnta) என்பார் சந்தித்து தேவனாம் பட்டிணத் துக்குத் தெற்கேயிருந்த ஒரு சிறிய துறைமுகத்தில் வணிகம்

---

128. Sri Desika Prabhandam urai, by Sri Ramadesika Achariyar, Kumbakonam, 1958, verse 360, pp. 412-413.

129. Portuguese is the Tamil coast, p. 150.

செய்ய அனுமதியை வேண்டினார்.[130] இந்த அனுமதியுடன், கிறித்துவ சமயப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உள் கருத்தும் நிகோலசுவிடமிருந்தது. மன்னனின் பெயரால் அத்துறைமுகம் கிருட்டிணாம் பட்டிணம் (Krishnam Pattinam) என்றே அழைக்கப்பட்டது. போர்த்துக்கீசியர் குடியேறிய பிறகு, அத்துறை முகத்தைத் திருத்தம் செய்து, புதிய துறைமுகம் (Portorovo) என்று அழைத்தனர்.[131] அப்பகுதி மக்களோ, அவ்வூரை பறங்கிப்பேட்டை என்று அழைத்தனர். ஐரோப்பியரைப் பறங்கியர் என உள்நாட்டு மக்கள் அழைத்தனர். அச்சொல்லும் கூட Ferengi என்ற போர்த்துக்கீசியக் சொல்லின் ஒலி வடிவமேயாகும். (Ferengi=வெளிநாட்டினர்).

ஏற்கனவே, (1543) தேவனாம் பட்டிணத்தில் நிலை கொண்ட போர்த்துக்கீசியர், தங்களுடைய வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுத்த தென்பகுதியில் கிறித்துவ சமயத்துக்கு மாறிய பரவர்களை இங்குக் குடியமர்த்தினர். கிறித்துவ சமயத்தை அப்பகுதியில் பரப்புவதும் அவர்களின் நோக்கமாயிருந்தது. கெடிலம் (Gacilam) ஆறு கடலில் கலக்குமிடத்தில் மண் கோட்டையொன்றைக் கட்டிக் கொண்டனர். அப்பகுதியில் தேவாலயமும், தொழிற் சாலைகளும் வைப்பிடங்களும் (Godowns) இருந்தன. அக்கோட்டையைச் சுற்றிலும் போர்த்துக்கீசியர் மற்றும் பரவர் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டன. தங்களுடைய பகுதியை விரிவுபடுத்த எண்ணி, தேவனாம் பட்டிணத்துக்கு அருகிலிருந்த மஞ்சக்குப்பம், திருப்பாதிரிப் புலியூர், திருவெந்திபுரம், வண்டிப்பாளையம், வரகல்பட்டு, சூரப்பன் சாவடி, சிங்காரத் தோப்பு ஆகிய பகுதிகளை விலைக்கு வாங்கினர். இவை 1500 வராகனுக்கு வாங்கப்பட்டதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.[132]

1543இல் தேவனாம்பட்டிணத்திலும், 1597இல் பறங்கிப் பேட்டையிலும் நிலைகொண்ட போர்த்துக்கீசியர் இப்பகுதியைச் சுற்றியிருந்த பகுதிகளுக்கும் சென்று (இன்றைய கடலூர் மாவட்டம் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தின் உடையார்

---

130. Ibid.

131. Tamil country under Vijayanagara, A. Krishnaswami, Annamalai univerity, 1964, pp 250- 283.

132. Portuguese in the Tamil coast, p. 232.

பாளையம் பகுதிகள்) தங்களது வணிகத்துக்கான பொருட்களைக் கொள்முதல் செய்தனர். குறிப்பாக, அய்யம்பேட்டையிலும் (திருமுட்டம்) உடையார் பாளையத்திலும் (காலிகோ மற்றும் லாங்கிளாத்) துணிகளைக் கொள்முதல் செய்து, பறங்கிப்பேட்டைக்கு அனுப்ப ஏற்பாடு செய்து கொண்டனர். இவர்களுடன் கிறித்துவ சமயப் பணியாளர்களும் அவ்வப் போது உடன்சென்று வந்துள்ளனர்.

ஏற்கனவே விளக்கியுள்ள திரு இராயர் என்பாரின் குறிப்புகளின்படி, 1600களில் அய்யம்பேட்டையில் சில கிறித்துவ குடும்பங்கள் இருந்தன என அறியக் கிடக்கின்றது. அய்யம் பேட்டைக்கு வந்த முதல் கிறித்துவக் குடும்பம் தஞ்சை அல்லது வடுகர் பேட்டையிலிருந்து வந்திருக்க வேண்டுமென்பதும், அவர்கள் பிரான்சிசுகன் துறவிகளால் சமய மாற்றம் செய்யப் பட்டிருக்க வேண்டும் என்றும் அறிய இடமுண்டு. அய்யம் பேட்டைக்கு வந்த தொண்டைமான் வகையறாவுடன். ஞானியார் என்ற பொன்பரப்பி வகையறாவைச் சார்ந்த வீரரெங்க ராயனும் சிதம்பரத்திலிருந்து வந்திருந்த ஈஸ்திரியன் என்பானும், கிறித்துவ சமயத்தில் இணைந்தனர் என்று அறியப்படுகின்றது. இச்சமய மாற்றத்திற்கான முறையான நிகழ்வுகள், எந்த ஆண்டில் நடந்தன என்பதற்குச் சான்றுகள் இல்லை.

கி.பி. 1540முதல் தேவனாம்பட்டிணத்திலும் 1597முதல் பறங்கிப்பேட்டையிலும் வாழ்ந்திருந்த கிறித்துவ சமயப் பணியாளர்கள் செஞ்சி, திருவண்ணாமலை, திருக்கோயிலூர், சிதம்பரம், மயிலாடுதுறை, உடையார் பாளையம் போன்ற பகுதிகளில் சமயப் பணிகளில் ஈடுபட்டிருக்க வாய்ப்புகளுண்டு. ஏனெனில் இப்பகுதிகளிலிருந்து பொருட்கள் தேவனாம் பட்டிணத்துக்கு வந்து கொண்டிருந்தன. தொடக்கத்தில் பிரான்சிசுகன் துறவிகளே இப்பகுதிகளில் சமயப் பணிகளாற்றி வந்தனர் என்றாலும், 1545-48ஆண்டுகளில் ஓரிரு முறைகள் பிரான்சிசு சேவியர் (St. Francis Xavier) தேவனாம் பட்டிணத் துக்கு வருகை தந்தார் என சமயப் பணிக் குறிப்புகள் கூறு கின்றன. சேவியர் இப்பகுதிக்கு வந்தபோது பறங்கிப் பேட்டையில் போர்த்துக்கீசியர்கள் அறியப்படவில்லை. சேவியரின் தேவனாம்பட்டிண வருகைக்கு முன்பே போர்த்துக்கீசியர்கள் அய்யம்பேட்டைப் பகுதியில் அறிமுகமானார்கள். என்பது

உண்மையில் கிழக்குக் கடற்கரையை ஒட்டியவாறு 59 இடங்களில் துணிவணிகம் நடைபெற்றதாக போர்த்துக்கீசிய மற்றும் தமிழ் வணிகக் குழுக்கள் வாயிலாக அறியகிடக்கின்றது. அப்பட்டியலில் திருமுட்டமும் (அய்யம்பேட்டை என்றும் கொள்ளலாம்) அதனைச் சார்ந்த பகுதிகளும் மூன்றாவது இடத்தில் குறிக்கப்பட்டுள்ளன.[133] விருத்தாச்சலம், பெண்ணாகடம், உடையார் பாளையம், கங்கைகொண்ட சோழபுரம் ஆகியவை பிற இடங்களாகும். தேவனாம் பட்டினத்தைச் சுற்றியிருந்த நெசவு மையங்களில் (அய்யம்பேட்டை உள்பட) முதல் நிலையிலான நீலத்துணிகள் வண்ணமேற்றப்பட்டன.[134] (Excellent dyers produced the blue cloth around Devanam pattnam region and the sale price was very high in Melaka)

✧✧✧

133. Ibid.p. 143.

134. Ibid.p. 144.

15

அய்யம் பேட்டையில் கிறித்துவம்

உடையார் பாளையம் அரசின் வடமேற்கு எல்லையிலும், செஞ்சி அரசின் தென்மேற்குப் பகுதியிலும் அமைவுற்றிருந்த அய்யம்பேட்டை, அதில் வாழ்ந்திருந்த மக்கள், இரண்டு அரசுகளின் பகுதிகளிலும் வாழ்ந்திருந்தவர்களே. அய்யம்பேட்டை ஒரு வணிக ஊர் என்பதும், கைக்கோளகர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்தனர் என்பதும், அய்யம்பேட்டையில் நெய்யப்பட்ட துணிகள், தேவனாப்பட்டிணம், பறங்கிப்பேட்டையில் துறை முகங்களுக்கு அனுப்பப்பட்டன என்பதும் ஏற்கனவே விளக்கப் பட்ட செய்திகளாகும் கைக்கோளர்களன்றி, வன்னிய மரபைச் சேர்ந்த மக்களும் அவ்வூரில் வாழ்ந்திருந்தனர் என அறியலாம் பொதுவாக, இன்றைய கடலூர் மாவட்டம், பெரம்பலூர் மாவட்டத்தின் அரியலூர், உடையார் பாளையம் பகுதிகளில் வன்னிய இனமக்களே இன்றும் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடன் சிறிய அளவில் யாடவர்கள் நத்தமர்கள் வேளாண் மரபினரும் உள்ளனர். 15ஆம் நூற்றாண்டுகளில் இப்பகுதிகளில் பிராமணர்கள் வாழ்ந்திருந்ததற்கானச் சான்றுகள் இல்லை. மிகவும் வறண்டு போயிருந்ததும், வானம் பார்த்த நிலங்களையே கொண்டிருந்ததும், நீர் செழிப்பற்று அப்பகுதி காணப்பட்டதும், பிராமணர்களின் ஒதுக்குதல்களுக்குக் கரணியங்களாகும். நாயக்கர்களின் தமிழக வருகைக்கும் பிறகு, தெலுங்கர்களான கவரா இன நாயுடு வகுப்பாரும் இப்பகுதியில் குடியமர்ந்தனர். இவர்கள் உடையார் பாளையம் மன்னரின் அரவணைப்பில் வாழ்ந்திருந்தோராவர். மற்றபடி, அனைத்து ஊர்களிலும் ஆதிதமிழர் வாழ்ந்து வருகின்றனர். இன்று பெருமளவிளான எண்ணிக்கையில் வாழ்பவர், வன்னியரும் ஆதிதமிழர் இனத்தவருமேயாவர்.

வன்னியர்கள் யாவர் ?

இன்று தமிழகத்தில் வடமாவட்டங்களில் பரவலாகவும், தென் மாவட்டங்களில் ஆங்காங்கேயும் வாழ்ந்துவரும் வன்னியர் என்ற இனம், தொல்தமிழ் மரபினைச் சார்ந்ததாகும், கி.பி. 7ஆம் நூற்றாண்டு வரையிலும் இனப்பாகுபாடுகளும் சாதிப்பிரிவுகளும் தமிழகத்தில் காணப்படவில்லை. பிராமண சமயம், தமிழ்ச் சமயத்தைத் தன்வயமாக்கிக் கொள்ளத் தொடங்கிய இக்கால அளவுகளில்தான் தமிழகத்தில் சாதிப் பிரிவினைகள் தலைதூக்கின. இடைக்காலச் சோழர்களின் காலம், பிராமணர்களின் பொற்காலமாக இருந்ததால் ஒவ்வொரு ஊரிலும் சாதிப்பிரிவுகளின் அடிப்படையில் குடி யிருப்புகளும் தோற்றுவிக்கப்பட்டு, அப்பிரிவுகளின் மேலாண் மைப் பொறுப்புகளை பிராமணர்கள் ஏற்றுக்கொண்டனர். இந்திய வரலாற்றில் பிராமணர்கள் படைத்தலைவர்களாகப் பணியாற்றியதும்,[135] இச்சோழர்கள் காலத்தில் தான் என்பது நோக்கத்தக்கதாகும். ஏராளமான நிலங்கள் பிராமணர்களுக்கு நன்கொடைகளாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு ஊரின் பெரு நிலக்கிழாராக, பிராமணனே இருந்தான். அவனுடைய நிலங் களை உழுது பயிரிட்டுக் கொடுக்க வேளாண்மை மரபைச் சார்ந்தவர்கள் போட்டிப்போட்டுக் கொண்டனர். கார்வாரி எனப்பட்ட இப்பணிகளில் வேளாண்மக்கள் ஈடுபட்டு, பிராமணர்களுக்கு அடுத்த உயர்சாதி தாங்களே என்றும் சொல்லிக் கொண்டனர். பிராமணர்கள், இவர்களையும் சூத்திரர் களாகவே கருதினர் என்பது வேறு செய்திகளாகும்.

அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற தொழில் அடிப்படையிலான, தமிழ்ச்சமுதாய கட்டுக்கோப்புகளை, சாதிகள் அடிப்படையில் சொல்லி, அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் என்றவாறு பிராமணர்கள் மாற்றியமைத்தனர். தமிழகம் கண்ட அந்தணர் என்பார், கணியர் என்று தமிழ் மரபில் தோன்றிய அறிவுசார்ந்த மக்களே யாவர். சங்க காலங் களில், தமிழகத்தில் வாழ்ந்திருந்த மக்களில், யாரும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நடைமுறைகள் இருந்தன, மன்னனாகக்கூட எவரும் தேர்வு செய்யப்பட்டனர். இன்று, படையாட்சி-வன்னியர்-வன்னியர் கவுண்டர் என்றவாறு

135. சோழர்கள் வரலாறு, சதாசிவ பண்டாரத்தார்.

இன்னும் பல்வேறு பட்டங்களால் அழைக்கப்படும் இம்மக்கள், கடந்த நூற்றாண்டில்கூட பள்ளிகள் என்றே அழைக்கப்பட்டனர். இடைக்காலச் சோழர்களின் போர்ப்படையில், பள்ளிப் படையென்ற தனிப்பிரிவே இருந்தது. இம்மக்கள் வில்லாளிகள் என்றும், கண்ணப்ப நாயனாரின் வழிவந்த மக்கள் என்றும் சொல்லப்படுகின்றனர்.

பள்ளி என்ற சொல், கி.பி. முதல் நூற்றாண்டில் கிறித்துவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளதை, கேரளத்திலுள்ள சில குறிப்புகள் தெரிவிக்கின்றன.[136] சமணர்களையே பள்ளிகள் என அழைத்ததாகச் சொல்லப்பட்டாலும், சமணர் வாழ்ந்திருந்த காலங்களிலேயே கிறித்துவர்களும் பள்ளிகள் என்றே அழைக்கப்பட்டனர். பொதுவாக. தமிழ்நாட்டிற்கு வந்துள்ள பிற சமயத்தாரைப் பள்ளிகள் என அழைப்பது மரபாக இருந்துள்ளது. கிறித்துவ மன்னன் ஒருவன், சேரநாட்டில் பள்ளி என்றே அழைக்கப்பட்டான்.[137] சமணர் குடியிருப்புகள் பள்ளி என்றே அழைக்கப்பட்டன, அவை, கல்விக் கூடங்களாகவும் இருந்தமையால் பிற்காலத்தில் பள்ளிக்கூடம் (School) என்ற சொல்வழக்கும் தோன்றியது. இசுலாமியரின் வழிபாட்டிடமும் பள்ளிவாயில் என்றே அழைக்கப்பட்டது. இவ்வாறு, தமிழ் நாட்டுக்கு வெளியிலிருந்து வந்த சமயத்தினரைப் பள்ளிகள் எனச் சுட்டும்போது வன்னியர் இன மக்களையும் பள்ளிகள் என்றே அழைத்ததற்கான கரணியம் யாதென அறிய முற்படுகையில், அவர்களில் பெரும்பாலோர் சமண - கிறித்துவ சமயங்களோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது, சிவநெறியில் வாழ்ந்திருந்த பள்ளிகள், எவ்வாறு பிற சமயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டனர் என்பதற்கான சான்றுகள் தெளிவாக இல்லை. சமணர்களாக இருந்த வன்னியர்களை, திருநாவுக்கரசர் சிவநெறிக்கு மீண்டும் திருப்பியதாகக் கூறப்படும் செய்தியிலும் உண்மையிருக்கலாம். மாணிக்கவாசகரும், பள்ளிகளை (கிறித்துவர்கள்) மீண்டும் சிவநெறிக்குத் திரும்பிய செய்திகள், சேரநாட்டுக் குறிப்புகளில் காணப்படுகின்றன.[138]

136. Early christianity in India.

137. Ibid.

138. Ibid.

தாழ்ந்த நிலப்பகுதிகளில், நீர்வளம் நிறைந்த பள்ளமான நிலப்பகுதிகளில் வேளாண் தொழிலைச் செய்துவந்த மக்களை, பள்ளர்கள் என்று அழைத்தனர். பள்ளிகள் என்பதும் இச் சொல்லையொட்டியதே பள்ளர்-பள்ளி ஆகியோர் வேளாண் தொழில் மக்களேயாவர் பள்ளர்-பள்ளி ஆகியோரைப் பற்றிப் பாடப்பெற்ற இலக்கியங்கள் பள்ளு என அழைக்கப்பட்டன. தற்காலத்தில் பள்ளர் என்றும் வன்னியர் என்றும் அழைக்கப் படும் மரபுவழியினர், கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்னர், ஒரு மரபினராக இருந்திருக்க வேண்டும். வாழ்வும் வாய்ப்பும் கிடைத்தோர் பள்ளிகள் என்றும், அவற்றைப் பெறாதோர் பள்ளர்கள் என்றும் சொல்லப்பட்டனர். பள்ளம் என்பது தாழ்ந்த நிலம் என்ற பொருளில், பள்ளிகள்-பள்ளர்கள் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவர்கள் என்ற பொருளிலும் சொல்லப்பட் டிருக்க வேண்டும். வெளிநாட்டுச் சமயத்திலிருந்தவர்களைத் தாழ்ந்த சாதியினராகவே பிராமணர்கள் கருதினர் என்பதை யும் நோக்குக.

பள்ளிகளில் சிலர், நில உரிமையாளர்களாவும், பள்ளி களிலும் மேம்பட்ட வாழ்க்கைத்தரம் கொண்டிருந்தோர் தங்களை உடையவர் என்று சொல்லிக் கொண்டனர். பெரு நிலக்கிழார்கள், தங்களை வேளாளர்கள், என அழைத்துக் கொண்டனர். பிராமணர்களால் பல்வேறு மரபுவழிகளாகப் பிரிக்கப்பட்ட இவர்கள் அனைவரும் தமிழ்மரபைச் சார்ந்த பேரினமே என்பது வரலாற்று உண்மைகளாகும். தமிழர்களை இவ்வாறு பிளவு படுத்தியதால்தான் பிராமணர்களின் வாழ்வு தமிழகத்தில் நிலை பெற்றது என அறிதல் வேண்டும். சங்க காலத்தில் கூட தமிழகத்தில் தொழில் அடிப்படையிலான பிரிவுகள் இருந்தனவேயன்றி தற்காலத்தில் அறியப்படும் சாதிப் பிரிவினைகள் இல்லையென்பதை அறிதல் வேண்டும்.

இடைக்காலத்தில் வல்லாண்மை பெற்ற சோழர்கள், ஒரு நூற்றாண்டு காலம், தமிழ்ப்படையை ஈழத்தில் நிலைபெறச் செய்திருந்தனர். ஈழநாடு, சோழர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்த காலத்தில் தமிழ்ப்படையின் பலபிரிவுகள், பல்வேறு ஊர்களில் நிலைகொண்டிருந்தன. குறிப்பாகக் கண்டியிலும், வன்னியிலும் பெருமளவிலான போர்ப்படை நிலை கொண் டிருந்தது. அக்காலத்தில் போர்ப்படையில் பணியாற்றுவது

வருவாய்க்கும் புகழுக்கும் அடிப்படைகளாக இருந்தன. அதிலும் வெளிநாடுகளில் கடல் கடந்து சென்று பணியாற்றுவோரின் புகழ் பெருமைக்குரியதாயிருந்தது. பணிகள் முடிந்து தமிழகம் திரும்பியோர் தங்களை கண்டியர் என்றும் வன்னியர் என்றும் அழைத்துக் கொண்டனர். கண்டியிலிருந்தோர் தங்களை கண்டியார் என்றும் வன்னியிலிருந்தோர் வன்னியர் என்றும் சொல்லப்பட்டனர். இவை பட்டப் பெயர்களேயன்றி, மரபு வழிப் பெயர்களன்று என்பதை அறிதல் வேண்டும். வன்னியில் பெரும்பாலும் பள்ளிப்படையே நிலைகொண்டிருந்ததால், இவர்கள் வன்னியர்கள் என்று அழைக்கப்பட்டனர். வன்னியர் என்ற பட்டம் வேறுசில மரபுகளில் உள்ளவர்களுக்கும் உள்ளது என்பதும் கண் கூடு.

சோழர் படையில் பணியாற்றிய வேறுபலரும் தங்களை, காங்கேயன் களத்துப்பிரியன், படைகாத்தான். கலிங்கத்தான், கச்சிராயன், சம்புவராயன் என்ற பட்டப் பெயர்களால் அழைத்துக் கொண்டனர். இவர்களனைவரும் இன்று அறியப் படும் வன்னியர் இனமக்களேயாவர். இடைக்காலச் சோழர்கள், வன்னியர் இனமக்களைப் பெரிதும் போற்றினர். இவர்களது போர்ப்படையில் அடிப்படையான போர்மறவர்கள் வன்னியர் இனமக்களே. பொன்பரப்பிய வாண கோவரையன், கச்சிராயன் போன்ற படைத்தலைவர்கள். சோழர் படையின் வெற்றி களுக்குக் கரணியமாய் அமைந்திருந்தவர்களாவர். திருவண்ணா மலைப் பகுதியில் சோழர்களுக்குப் பிறகு ஆண்ட சம்புவ ராயர்கள் சோழர்களிடம் பணியாற்றியவர்களே. தமிழகத்தில் வீரம் செறிந்த மரபினராக, வடக்கே வன்னியர்களையும், தெற்கே மறவர்களையும் அழைப்பது வரலாற்றில் அடிப்படை யிலான செய்திகளே. இம்மறவர்கள் மரபும் ஒரு காலத்தில் வடக்கேயிருந்து தென்தமிழ் நாட்டுக்குச் சென்றவர்களே என அறியப்படுவதால். வன்னியரும் கள்ளரும் ஒரு மரபைச் சார்ந்த வர்களே எனக் கருத இடமுண்டு. இவ்விரு மரபினருக்கும் இடையே பல்வேறு ஒற்றுமைக் கூறுகளைக் காண இயலும். வன்னியர்கள், பல்லவர்களின் வழிவந்தோர் எனக் கருதுவது தவறான செய்தியாகும். பல்லவர்களின் முன்னோர் தமிழல்லர் என்பது வரலாற்று உண்மையாகும்.

செஞ்சி நாட்டில் கிறித்துவ சமயப் பணிகளைத் தொடங் கிய போர்த்துக்கீசிய சமயப் பணியாளர்கள் தொடக்கத்தில்

வன்னியர்களையும், ஆதிதமிழர்களையுமே கிறித்துவ சமயத்தில் இணைத்தனர். இவர்கள் அனைவரும் கிறித்துவ சமயத்தின் கொள்கைகளைக் கேட்டறிந்து, அதன்பால் ஈர்க்கப்பட்டு அச்சமயத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர் எனக் கூற இயலாது. கி.பி. 16ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சாதிப் பிடிப்புகள் வலுவாக நிலைபெற்றிருந்தன. சாதிகளுக்கிடையே ஏற்பட்ட மோதல்கள் உள்ளூர்களில் ஏற்பட்ட பிணக்குகள், ஊர்த்தலைமைக்கான போட்டிகள், சமூகத்தால் இழைக்கப் பட்ட கொடுமைகள், இன்னங்கள், பங்காளிச் சண்டைகள், தீண்டாமை போன்ற பல்வேறு புறக்காரணங்களே, கிறித்துவ சமயத்தில் பலரும் இணைய உதவி புரிந்தன என்பது மறுக்க வியலாத உண்மைகளாகும்.

சமயப் பணியாளர்களும் கிறித்துவ சமயத்தில் தலைகளின் எண்ணிக்கை உயர்ந்தால் போதும் என்ற ஒரே கொள்கையில் பணியாற்றினர். ஆதிதமிழர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளிலிருந்து மீள்வதற்கு கிறித்துவ சமயத்தை ஏற்றுக் கொண்டனர். பிராமண சமயத்தில் சாதிகள் எவ்வாறு பேணிக் காக்கப்பட்டனவோ அந்த நிலைகளே தொடர்ந்து கிறித்துவ சமயத்தில் காணப்பட்டாலும், இதுவரையில் காட்டப்படாத அன்பையும் பரிவையும் கிறித்துவ சமயத்தலைவர்களிடமிருந்து ஆதிதமிழர் பெற்றனர். தங்கள்பாலும் அன்பு கொண்டு, தங்களை அரவணைத்துச் செல்லவும் முன்வந்த கிறித்துவத்தை ஏற்றுக் கொண்டனர். பலர் நினைப்பது போல், அக்காலத்திய கிறித்துவ சமயத் தொண்டர்கள் பணம் செல்வம் ஆகியவற்றைக் காட்டி, கிறித்துவத்தைப் பரப்பினர் என்பது அடிப்படை யிலேயே தவறான கண்ணோட்டமாகும். தங்களையும் மக்க ளாக மதித்த கிறித்துவத்தை ஆதிதமிழர் ஏற்றுக்கொண்டது தான் அடிப்படைக் கரணியமாகும்.

செஞ்சி நாட்டுப் பகுதிகளில், கி.பி. 1540ஆம் ஆண்டிற்குப் பிறகு, கிறித்துவ சமயப்பணிகள் முடுக்கிவிடப்பட்டன. ஏராள மான வன்னியர், ஆதிதமிழர், வேளாளர், பிராமணர் உள்ளிட்ட பல வகுப்பார் கிறித்துவத்தை ஏற்றுக் கொண்டனர் இவ்வாறு பல்வேறு பகுதிகளினின்றும் கிறித்துவ சமயத்துக்கு மாற்றம் செய்யப்பட்டவர்களை கொழை என்ற பாதுகாப்பான இடத்தில் குடியோற்றினர். கொழையில் அரசியல் கெடுபிடிகள் இல்லையென்பதும் வேளாண்மைத் தொழில் செய்ய நிலங்கள்

இருந்தனவென்பதும், பரவிக்கிடந்த கிறித்துவ மக்களைச் சென்று கண்காணிப்பதில் உள்ள இடர்ப்பாடுகள் குறைந்தன வென்பதும், அவ்வூரைத்தேர்வு செய்து கொண்டதற்கான கரணி யங்கள் ஆகும். இவ்வாறு கொழையில் குடியமர்த்தப்பட்டவர் களில் பெரும்பாலோர் வன்னியர்களாகவும், ஆதிதமிழராகவும், இருந்தனர். வேட்டவலத்திலிருந்து சில வேளாண்மரபைச் சார்ந்த குடும்பங்கள் கொழையில் குடியேறியதாகச் சொல்லப்படு கின்றது. இருப்பினும் அதற்குச் சரியானச் சான்றுகள் இல்லை.

கொழையில் கிறித்துவர்களின் குடியேற்றம், கி.பி. 1650களில் நிகழ்வுற்றிருக்க வேண்டும். இக்கால அளவுகளில் ஆந்திரே பிரெயர் என்பாரின் சமயப்பணிகள் விரிவாகச் சொல்லப்பட் டுள்ளன. மதுரைப்பகுதியில் தம்மைப் பண்டாரசாமி என்று அறிமுகப்படுத்திக் கொண்டு, சமயப் பணியாற்றிய பல்தசார் தி கொசுதா என்பார், ஆந்திரே பிரெயரை இப்பகுதிக்கு அறிமுகம் செய்தவராவார்.

பண்டாரம் என்ற பூசாரிமரபினர்.[139] சிவநெறியைச் சார்ந்தவர்களாவர். இவர்கள் ஊரகப்பகுதிகளிலுள்ள சிவன் கோயில்களில் பணியாற்றியவர்கள். மஞ்சளாடை அணிந்த இவர்கள் கழுத்தில் மணிகளையும் சிவலிங்கத்தையும் சூடி யிருப்பர். பலவற்றை (பல பண்டங்களை) மாலையாக (ஆரமாக)ச் சூடியிருந்ததால் இவர்கள் பண்டாரம் எனப் பட்டனர். இடைக்காலத்தில் இம்மரபினர் அரசுப் பணிகளிலும் இருந்தார்கள். உயர் அலுவலர்களுக்கு உதவியாய் இருந்தவர் களை பண்டாரப்பிள்ளை என்பர். செய்திகளை ஊருக்கு அறிவிக்கும் முரசுக்கு பண்டார மேளம் என்பது பெயராகும். உழுபவர்களுக்கே உரிமையாயிருந்த நிலப்பகுதிகள், பண்டார வாடை எனப்பட்டன. ஊருக்கு வெளியே அரசு அலுவலர்கள் தங்கும் விடுதிகள் (Rest Houses) பண்டார விடுதி எனப்பட்டன. அரசின் ஆணைகளை நிறைவேற்றும் அடிமட்ட அலுவலர்களின் சேவை, பண்டார ஊழியம் எனப்பட்டது. தமிழ்நாட்டில் பரலவாக அறியப்பட்டிருந்த பண்டாரம் என்ற சொல்லை, பல்தசார் டி கொசுதா தமக்குத்தாமே சூட்டிக்கொண்டார். தமிழகமெங்கும் சுற்றித்திரிந்த பல்தசார் கொழைப்பகுதி களிலும் பணியாற்றியுள்ளனர்.

139. வின்ஸ்லோ அகரமுதலி, ப.

கொழையை ஒரு கிறித்துவக் குடியிருப்பாக மாற்றியவர் ஆந்திரே பிரெயாவார். இவர் தமிழகத்தில் அக்காலங்களில் ஆட்சி செய்த பல்வேறு அரசுகள் பற்றியும் அவர்களின் அணுகு முறைகள் பற்றியும் அவர்களிடையே தோன்றிய பிணக்குகள் பற்றியும் தெளிவாக அறிந்திருந்தார் இவரையொரு அரசியல் ஆய்வாளர் (Political Analyst) எனக்கூறுவதும் பொருத்தமான தாகும். நாயக்கர்களின் செயல்பாடுகளைத் தெளிவாகத் தமது கடிதங்கள் வாயிலாக இவர் விளக்கியுள்ளார். குறிப்பாக உடையார்பாளையம் -அரியலூர் - தஞ்சாவூர் - திருச்சி ஆகிய பகுதிகளில் நிகழ்வுற்ற அரசியல் செய்திகளைத் தெளிவாகக் கூறியுள்ளார். இவர், கொழையிலிருந்து எழுதிய கடிதங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்கவையாகும்.[140]

ஆந்திரபிரெயர், கொழையில் ஒரு கிறித்துவக் குடி யிருப்பைத் தோற்றுவிப்பதற்கு முன்பே கொழைக்கு மேற்கே யிருந்த அய்யம்பேட்டையில் கிறித்துவர்கள் வாழ்ந்திருந்தனர். அவர்கள் ஆந்திரே பிரெயரின் காலத்துக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே கிறித்துவத்தை ஏற்றுக் கொண்டவர்களாவர். கி.பி. 1550களில் கிறித்துவர்களான மூன்று குடும்பத்தினர், ஒரு நூற் றாண்டு காலத்தில் குறைந்தது 25 குடும்பங்களாக விரிவுபட் டிருக்க வேண்டும். நூற்றுக்கும் குறையாத கிறித்துவர்களைக் கொண்டிருந்த அய்யம்பேட்டைக் கிறித்துவர்கள் பற்றி ஆந்திரே பிரெயர் எந்தக் குறிப்பும் தரவில்லை. சமயக்குழுக்களிடையே காணப்பட்ட பிணக்குகளே இதற்குக் கரணியம் என்க.

✧✧✧

---

140. History of the Nayaks of Madura.

16

சமயக் குழுக்களுக்கிடையே நிலவிய போட்டிகள்

கி.பி.1500ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில். போர்த்துக்கீசியர்கள் இந்தியாவுக்கு வந்தபோது, அவர்களுடன் பிரான்சிசுகன் துறவிகளே வந்தனர். கி.பி. 1542க்குப் பிறகே, இயேசு அவையினர் வருகை தந்தனர். இவ்விரு குழுக்களையுமே போர்த்துக்கீசிய மன்னரே பணவுதவிகள் செய்து அனுப்பி வைத்தார். இருப்பினும் இவ்விரு குழுக்களிடையே தோன்றிய பிணக்குகள் வரலாற்றில் ஆங்காங்கே காணப்படுகின்றன. கி.பி. 1550களில் மன்னரிடம் இயேசு அவையினரே பெருமளவில் செல்வாக்கும் பெற்றிருந்தனர். இதனால், பிரான்சிசுகன் துறவிகளை அவர்கள் வேறொரு தலைமையின் கீழ் பணியாற்றியதால் இயேசு அவையினர் இணைத்துக் கொள்ளவில்லை. இக்கருத்து வேறுபாடுகள், கிறித்துவர்கள் நிலையிலும் தொற்றிக்கொண்டன. யாரால் தாம் கிறித்துவர்களாக்கப் பட்டார்களோ, அவர்கள் அக்குழுவின் கட்டுப்பாட்டிலேயே இருந்தனர். இவ்வாறு இவ்விரு குழுக்களும் தங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் தம்மால் கிறித்துவர்களாக்கப்பட்டவர்களை வைத்திருந்தனர். கிறித்துவர்களும் தங்களின் நம்பிக்கைக்குரிய குழுவினரிடமே தொடர்பு கொண்டிருந்தனர். இச்சூழல்கள் பற்றியெல்லாம், கிறித்துவ சமயக்குழுக்கள் தங்கள் குறிப்புகளில் எழுதி வைக்கவில்லை. ஆங்காங்கே காணப்பட்ட சில செய்திகளையும் பின்னால் எழுதப்பட்ட கிறித்துவ வரலாற்றில் மறைத்துவிட்டனர். இன்றைக்குத் தமிழகத்தில் வாழும் கிறித்துவர்களில் 95 விழுக்காட்டிற்கு மேலுள்ளவர்களுக்கு, தமிழகத்தில் கடந்த காலக் கிறித்துவ வரலாறு தெரிவிக்கப்படவில்லை. தெரிவிக்கப்பட்ட பல செய்திகளும் உண்மைகளுக்கும் புறம்பானவைகளாகும்.

கிறித்துவம் தொடர்பான எந்த நூலையும் எழுத, மற்ற சமயத்தினர் துணியவில்லை. கிறித்துவர்களிலும் அனுமதிக்கப் படவில்லையென்பதே கடந்த கால வரலாறாகும். தமிழகத்தி லுள்ள ஆயங்கள் எனப்படும் மறைமாவட்டங்கள் பற்றிய வட்டார வரலாறுகளை, அந்தந்த மறைமாவட்டத்தினரும் எழுதி வெளியிட்டுள்ளனர். இவை சில குறிப்புகளின் அடிப் படையில் எழுதப்பட்டவைகளாகும். அச்செய்திகளில் சில உண்மைக்குப் புறம்பானவை என்பது மட்டுமின்றி, ஒருதலைச் சார்பானதாகவும் உள்ளன. கடந்த காலங்களில் கிறித்துவ சமயத்தைச் சார்ந்த வரலாற்றாசிரியர்களும்கூட, இந்நிகழ்வுகள் பற்றியெல்லாம் அறிந்திருந்தும், அவைகளைக் கிறித்துவர் களிடையே தெரிவிக்கவில்லை. நமக்கேன் வம்பு என்ற நிலை யைக் கடைப்பிடித்தனர். இதுவரையில் தமிழ்நாட்டுக் கிறித்துவம் பற்றிய வரலாறு உண்மையாகவும், தெளிவாகவும். வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் எழுதப்படவேயில்லை யென்பது, வருத்தத்திற்குரிய செய்தியாகும். உலகில் தோன்றிய எல்லாச் சமயங்களிலுமே கொள்கைப் போராட்டங்களும், கருத்து வேறுபாடுகளும், உட்பூசல்களும் தோன்றி மறைந்திருக் கின்றன என்பது வரலாற்று உண்மையாகும். கிறித்துவ சமயமும் அதற்கு விதிவிலக்கன்று. நற்செய்தி என்பது இறைவன் தொடர் புடையதாயிருந்தாலும் அச்செய்தியைச் சொன்னவர்கள் மாந்தர்களே என்பதால் மாந்தனுக்குரிய அனைத்து இயல்பு களும், சமயப் பணிகளில் எதிரொலிக்கும் என்பது இயற்கை யான சிந்தனையே ஆகும். இவ்வாறான மாந்தர்களின் குறைபாடு களை மற்றவர்கள் தெரிந்து கொள்ளக் கூடாது எனக் கருதுவது சரியான கண்ணோட்டமாகாது.

கிறித்துவத்தைத் தாங்கிப் பிடிக்கவும், கிறித்துவின், கொள்கைகளைப் பிறருக்கு அறிவிக்கவும் தொடங்கப் பெற்ற கிறித்துவ சமயத்தின் பல்வேறு குழுக்கள் இன்று தமிழகத்தில் மட்டுமின்றி உலக அளவிலும் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு துறைகளில் எண்ணிப் பார்க்கவியலாத அருந்தொண்டு களை ஆற்றிய ஆற்றிவரும் அச்சமயக் குழுக்கள் தமிழகத்திலும் பல்வேறு புரட்சிகளைச் செய்துள்ளன. கல்வி, மருத்துவம், சமூகம் சார்ந்த பணிகளில் இக்குழுக்களின் பணிகள் ஈடிணை யற்றவை. ஆனாலும் இக்குழுக்களுக்குள்ளே சரியான ஒருங் கிணைப்புகள் இல்லையென்பதும் மாந்தனின் கண்ணோட்டம்

போல், தன் மனைவி தன் மகன் தன் குடும்பம் என்றவாறு தத்தம் குழுக்கள் செயல்பட்டுவருவது வெள்ளிடைமலை. இக்குழுக் களுக்கிடையே தோன்றிய போட்டிகள் அவை தொடங்கிய காலத்திலிருந்தே தொடர்கின்றன என்பதே உண்மை நிலை களாகும்.

கொழையிலும் இதுபோன்ற குழுப்பிணக்குகள் இருந்தன வென்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. கொழையில் கிறித்துவர்களின் குடியேற்றம் கி.பி. 1650-1700 ஆண்டுகளில் நிகழ்வுற்றதற்கானச் சான்றுகள் உள்ளன. ஆனால் அக் குடியேற்றத்துக்குக் முன்பே அய்யம்பேட்டையில் கிறித்துவர்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பது உறுதி. அய்யம் பேட்டைக்கும் கொழைக்கும் ஒரு கி.மி. இடைவெளியே உள்ளது என்ற அளவில். அய்யம்பேட்டைக் கிறித்துவர்கள் பற்றி இயேசு அவையினர் 1711ஆம் ஆண்டு முதலே செய்திகளைத் தரு கின்றனர்.[141] 1650 முதல் 1685வரையிலான கால அளவுகளில் முறையே பல்தசார் டி கொசுதா, ஆந்திரே பிரெயர், ஜான் பிரிட்டோ, கொழை மற்றும் உடையார் பாளையம் செஞ்சி பகுதிகளில் பணியாற்றியுள்ளனர். தமக்குத் தொடர்பில்லாத செய்திகளையெல்லாம் விளக்கமாகக் கூறும் ஆந்திரே பிரெயர், அய்யம்பேட்டையிலிருந்த கிறித்துவர்கள் பற்றி ஒரு சிறு குறிப்பையும் கூடக் காட்டவில்லை. இந்நிகழ்வு தற்செயலான தாகத் தெரியவில்லை. 1711 வரையிலான அய்யம் பேட்டைக் கிறித்துவர் பற்றிய செய்திகள் வேண்டுமென்றே விடப்பட்டுள் ளன அல்லது நீக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது.

அய்யம்பேட்டைக் கிறித்துவர்கள், 1550களில் பணியாற்றிய பிரான்சிசுகன் துறவிகளால் சமய மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இக்கால அளவுகளில் தஞ்சையிலும் தேவனாம் பட்டினத்திலும், பறங்கிப் பேட்டையிலும் பிரான்சிசுகன் துறவிகளின் பணிகள் அறியப்படுகின்றன. தேவனாம்பட்டினத் தில் வாழ்ந்திருந்த போர்த்துக்கல் வணிகர்களுக்கும், அய்யம் பேட்டையிலிருந்த கைக்கோளர்களிடம் வணிகத் தொடர்பு இருந்ததுபற்றி, போர்த்துக்கீசியக்குறிப்புகள் கூறுகின்றன.

---

141. Fr. Beschi of the society of Jesus, His times and His writings, By Rev. L. Besse, S.J. St. Joseph's Industrial school press, Trichinopoly, 1918.

எனவே பிரான்சிசுகன் துறவிகளால் சமய மாற்றம் செய்யப் பட்ட அய்யம்பேட்டைக் கிறித்துவர்களிடம். பிரான்சிசுகன் துறவிகளின் உறவு வலுவாக இருந்தது என்பது தெளிவு. இது பற்றியே, 1650களில் கொழையில் தங்கிப் பணியாற்றிய இயேசு அவையினர் அய்யம் பேட்டை மக்களைப் புறக்கணித்திருக்க வேண்டும் அல்லது அய்யம் பேட்டை மக்கள் இயேசு அவை யினரிடம் உரவாட மறுத்திருக்க வேண்டும். கொழையில் ஏற்படுத்தப்பட்ட கிறித்துவக் குடியிருப்பு தொடர்பாக அய்யம்பேட்டை மக்கள் இயேசு அவையினரோடு முரண்பாடு கொண்டிருக்க வேண்டும். அய்யம் பேட்டை மக்கள் அறிவு வழிச் சிந்தனைகளுக்கு முதலிடம் தராமல் உணர்வுகளுக்கு ஆட்பட்டவர்கள் என்பதை அடுத்துவரும் பலசெய்திகள் உறுதி செய்கின்றன. 1775முதல் 1885வரையிலான நூற்றாண்டு காலத்தில் அய்யம் பேட்டையில் நடந்த நிகழ்வுகள், அம்மக்கள் பற்றிய உணர்வுகளை மெய்ப்பிக்கின்றன.

வீரமாமுனிவரது வரலாற்றை எழுதிய பெசி (Fr.L. Besse) என்னும் இயேசு அவைத் துறவி 1711ஆம் ஆண்டில் அய்யம் பேட்டையில் நிலவி வந்த பெரும்சிக்கல் அல்லது குழப்பத்தைக் களைவதற்காக வீரமாமுனிவர் அய்யம் பேட்டைக்கு அனுப்பப் பட்டதாகக் கூறுகிறார் அக்குழப்பம் என்னவென்று அவர் குறிப்பிடவில்லை. 1710 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த வீரமாமுனிவர் மிக இளம் அகவையிலேயே, மிகச்சிறந்த அறிஞராகத் திகழ்ந்திருக்கிறார் என்பதற்கு அவரது அய்யம் பேட்டை வருகைச் சான்றளிக்கிறது. அய்யம் பேட்டைக் குழப்பத்தைச் சரிசெய்து விடுவார் என்ற நம்பிக்கையில் வீரமா முனிவர் அனுப்பப்பட்டார் என்பது தெளிவாகிறது அக்குழப்பம், கொழை மற்றும் அய்யம்பேட்டைக் கிறித்துவ மக்களிடையே காணப்பட்ட பகைமையே என்பது தெளிவு. ஒரே சமயத்தைச் சார்ந்த இரு ஊர் மக்களிடையே உறவுகள் காணப்படவில்லை என்பதற்கு அடிப்படை கரணியம் இவ்விரு ஊர் மக்களும் இரு வேறு சமய குழுக்களால் கிறித்துவர்களாக்கப்பட்டனர் என்பதே.

1711ஆம் ஆண்டில் அய்யம் பேட்க்கு வருகைதந்த வீரமாமுனிவர், இவ்விரு ஊர் மக்களிடையே நிலவிவந்த கருத்து வேறுபாடுகளைக் களைந்திருக்கிறார். கொழையில் பணி யாற்றிய இயேசு அவையினர் மீது அய்யம்பேட்டை மக்கள்

தங்கள் கொண்டிருந்த உணர்வுகளை, வீரமாமுனிவரிடம் வெளிப்படுத்தினர். 1711ஆம் ஆண்டுக்கு முன்பு அய்யம் பேட்டையை ஒரு கிறித்துவக் குடியிருப்பாக இயேசு அவை யினர் ஏற்றுக்கொள்ள வில்லை என்பதும், தெளிவாகிறது. கொழையையே அவர்கள் முதன்மைப்படுத்தி, அய்யம் பேட்டையை புறக்கணித்து விட்டனர் என்பதும் தெளிவாகிறது. கொழையை ஒரு ஒரு பங்குத்தளமாக (Parish) இயேசு அவை யினர் அறிவித்திருந்ததை அய்யம்பேட்டை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. கொழைக்கும் முந்திய அய்யம்பேட்டை யையே பங்குத்தளமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை வீரமாமுனிவரிடம் வைக்கப்பட்டபோது. முனிவர் அதனை ஏற்றுக் கொண்டார் என்பதை அறிய முடிகின்றது.

1711ஆம் ஆண்டு முதல், கொழை என்ற ஊர். அய்யம் பேட்டையுடன் இணைக்கப்பட்டு, அய்யம்பேட்டையை ஒரு பங்குத்தளமாக வீரமாமுனிவர் அறிவித்தார். இதற்குப் பிறகு காணப்படும் எல்லாக் குறிப்புகளிலும், கொழை பற்றிய எந்தச் செய்தியும் காணப்படவில்லை யென்பதோடு, கொழைக்கு அளிக்கப்பட்டிருந்த சிறப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. கொழை மக்களும் இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அய்யம்பேட்டைப் பங்கில் சேர்ந்து செயல்பட இசைந்தனர். மிகப்பெரிய குழப்பத்தைத் தீர்த்து வைத்த வீரமாமுனிவரின் திறமையை இந்நிகழ்வில் காணமுடிகின்றது. இக்கரணியம் பற்றியே, இன்றும் கூட, வீரமாமுனிவரின் நினைவுகள், அய்ய ம்பேட்டையில் நிழலாடிக் கொண்டிருப்பதை அறியலாம். ஏறக்குறைய 60ஆண்டுகள் ஒற்றுமையுடன் செயல்பட்டு வந்த அய்யம்பேட்டைப் பங்கில் மீண்டும் ஒரு பெருங் குழப்பம் தோன்றியது பற்றிய செய்திகளை பின்னே காணலாம்.

✧✧✧

17

அய்யம்பேட்டைக் கிறித்துவர்களின் மரபுவழிகள்

அய்யம்பேட்டையில்தான் முதல் கிறித்துவர்கள் அறியப் பட்டனர் என்பதும் அவர்களின் குடியேற்றம் 1550களில் நிகழ் வுற்றனவென்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய செய்திகளாகவே உள்ளன. ஏற்கனவே, ஜோசப் மரிய நாதன் என்பாரின் குறிப்பு களின்படி சில செய்திகளை அறிய முடிந்தாலும் அவை அனைத்தும் உண்மையானவைகளே எனவும் கூற இயலாது. தந்தை அ. மரியசூசை, மரியநாதனின் கதையையொட்டிய மேலும் சில கதைகளையும் தெரிவிக்கின்றார். வற்கடம் (வறட்சி - பஞ்சம்) மிகுந்திருந்த காலத்தில், பொன்பரப்பியிலிருந்து சிலர் தங்களது ஊரைவிட்டு வெளியேறி அய்யம் பேட்டையில் வந்து தங்கியதாக (பஞ்சம் பிழைக்க) ஒரு கதையை மேற்கோள் காட்டுகிறார்.[142] அய்யம் பேட்டைக்கு ஒரு கிறித்துவத் துறவியார் வந்ததாகவும் அவரே இங்கு திருமுழுக்கு அளித்து பலரைக் கிறித்துவர்களாக்கினார் என்றும் ஒரு கதையை மேற்கோள் காட்டுகிறார்.[143]

இக்கதையின்படி, திருச்சியிலிருந்து ஒரு பாதிரியார் வந்த செய்தி தெளிவுபடுத்தப்படுகின்றது. அவர் புதுச்சேரியுடன் தொடர்புகொண்டவராகவும் கூறப்படுவது பிற்காலச் செய்தி யாக அமைவதால் அந்தப் பாதிரியார் தேவனாம்பட்டினத்தைச் சேர்ந்த பிரான்சிசுகன் துறவியாக இருப்பதற்கே வாய்ப்புகள் உள்ளன. 1550களில், வடுகர் பேட்டைக்குத் தெற்கேயிருந்த கொள்ளிடக் கரைப் பகுதிகளில் கிறித்துவர்கள் இருந்திருக்க

142. வரலாறும் வழக்காறும், ப.14-16.

143. வரலாறும் வழக்காறும், ப.14-16.

வாய்ப்புகளுண்டு. அக்கால அளவில் திருச்சியில் தங்கியிருந்து பணியாற்றியச் சமயப் பணியாளர்கள் பற்றிய செய்திகள் எங்கும் காணப்படவில்லை.

தந்தை அ. மரியசூசை மேலும் ஒரு கதையை அரு. இராம நாதன் கூறுவதாகவும் மேற்கோள் காட்டியுள்ளனார்.[144] தம்பு சாமிப் படையாட்சி என்ற பொன்பரப்பிக்காரரின் கதையைக் கூறி, உடையார் பாளையம் மன்னர் குடும்பத்தோடு திருமண உறவு கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்ட செய்தியையும் கூறுகிறார். தந்தை மரிய சூசையின் கருத்துப்படி, அவர் மேற் கோள் காட்டியுள்ள கதைகளின் நம்பகத்தன்மையை அவரே ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார். இருப்பினும் அவைகளில் சில உண்மைச் செய்திகளும் காணப்படுகின்றன. தந்தை மரியசூசை கூறும் கதைகளின் படி

1. பொன்பரப்பியிலிருந்து சிலர் அய்யம்பேட்டைக்கு வந்து பின் கிறித்துவ சமயத்தை ஏற்றுக் கொண்டனர்.
2. கிறித்துவர்களுக்கு உடையார் பாளையம் மன்னரிட மிருந்து அச்சுறுத்தல்கள் இருந்தன.
3. தொண்டமான் என்ற மரபினர் திருச்சிப் பகுதியிலிருந்து அய்யம் பேட்டைக்கு வந்தனர்.
4. கிறித்துவச் சமயத்துறவியொருவர் அய்யம்பேட்டைக்கு வந்துள்ளார் என்ற செய்திகள் உறுதியாகின்றன.

அய்யம் பேட்டையில் குடியேறியவர்களில், தொண்டமான் மரபினர் கிறித்துவர்களாகவே அங்கு வந்தனர் என்பது அனைத்துக் கதைகளினாலும் உறுதிசெய்யப்படுகின்றது.[145]

தந்தை மரியசூசை, ஜோசப் மரியநாதன் ஆகியோர் தரும் செய்திகளிலிருந்து, அய்யம் பேட்டையில் முதல் கிறித்துவக் குடும்பங்களாக, 1. ஞானியார் மரபில் வந்த வீரரெங்கராயன் என்பாரும், 2. தொண்டமான் மரபு வழியினரும் 3. சிதம்பரத்தி லிருந்து வந்த பூசாரியொருவனின் மரபும், அறியப்படுகின்றன. இம்மூன்று குடும்பத்தினரே அய்யம்பேட்டையில் முதல் கிறித்துவக் குடும்பங்களாவர்.

---

144. வரலாறும் வழக்காறும், ப. 14-16.

145. மேலதே.

வீர ரெங்க ராயன்

இன்று அய்யம் பேட்டையின் பெரிய மரபுவழிக் குடும்பமாக, வீர ரெங்க ராயன் என்ற வகையறா அறியப்படுகின்றது. இக்குடும்பத்தின் முன்னோன் வீர ரெங்க ராயன் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ராயன் அல்லது ராயர் என்ற பெயர்களில் படையாட்சி இன மக்கள் அறியப்பட்டனர். இது அவர்களது சிறப்புக்குரிய பெயராகவும் கருதப்பட்டது. விளந்தையை ஆண்ட கச்சிராயன், திருவண்ணாமலையை ஆண்ட சம்புவராயன் போன்றவர்களில் பெயர்களை ஒப்பு நோக்குக. ரெங்கராயன் அல்லது வீரரெங்க ராயன் என இவன் அழைக்கப்பட்டான். இவன் பொன்பரப்பியை அடுத்த சிறுகளத்தூரைச் சார்ந்தவனாவான். இவனது மரபு இன்னும் பொன்பரப்பி சிறுகளத்தூரில் ஞானியார் வகையறா என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போன்று, உடையார் பாளையம் பகுதியில் இன்று வாழ்ந்து வரும் படையாச்சி இன மக்களின் முன்னோர்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ இடைக்காலச் சோழர்களின் ஆட்சிப் பணிகளில் தொடர்பு கொண்டவராவர்.[146] சோழர் படையில் பல பிரிவுகள் இருந்ததை ஏற்கனவே விளக்கியுள்ளோம். அதுபோன்றே ஒற்றர் பிரிவும் (Intelligence) செய்யப்பட்டு வந்தது. இந்தப் பிரிவில் பணியாற்றியவர்களை மன்னரே நேரிடையாகத் தேர்வு செய்ததாகவும் மற்றவர்களைவிட மன்னரிடத்தில் இவர்கள் மிகுந்த நெருக்கத்துடன் இருந்ததாகவும் கூறுவர். இவ்வாறான ஒற்றர் பிரிவில் தேர்வு செய்யப்பட்டவர்கள், மிகுந்த உடல் வலிமையும் சிறந்த அறிவுக் கூர்மையும் கொண்டவர்களாக இருந்தனர். இந்த ஒற்றர் பிரிவினை ஞானியர் (The people of Wisdom) என்று அழைத்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. இந்த ஒற்றர் பிரிவில் பணியாற்றிய ஒருவனுடைய மரபினரே பொன்பரப்பியில் ஞானியார்[147] வகையறா என்று அழைக்கப்பட்டனர்.

---

146. பிற்காலச் சோழர் சரித்திரம், சதாசிவ பண்டாரத்தார்.

147. கழக வெளியீட்டு அகராதிக் குறிப்புகள்.
ஞானியார்: ஒற்றன்பணியைச் செய்தவர். குழுவாகச் செல்லாமல் ஒற்றையாகச் செல்வதனால் ஒற்றன் எனக் கூறுவாரும் உளர். ஞானியார் - நைனியார், நன்னியார், நானியார், நயினியார் என்ற கிளைகளும் உள்ளன. கடையேழு வள்ளல்களில் ஒருவனான நள்ளியின் மறுபெயரான நள்ளிப்பிரியன் வழிவந்தவர்கள் என்ற கதையுமுண்டு.

இவ்வகையறாவில் தோன்றியவனே ரெங்க ராயன் ஆவான், இன்றும் கூட இம்மக்கள், ஞானியார் வகையறாவினர் என்றே பொன்பரப்பியில் அழைக்கப்படுகின்றனர். தங்களது கடந்த காலப் பொலிவையிழந்து, இன்றுபொலிகடாக்களை வைத்துப் பிழைப்பு நடத்தி வருகின்றனர்.

ரெங்கராயன் பொன்பரப்பியை விட்டு வெளியேறியவுடன் விருத்தாசலத்தில் (பழமலை) சிலகாலமும் அதற்குத் தெற்கே யுள்ள கார்மாங்குடியில் சிலகாலமும் வாழ்ந்திருந்து அங்கெல் லாம் வாழச் சரிப்படாமல், இறுதியாக அய்யம் பேட்டைக்கு வந்ததாகச் செய்திகள் கூறுகின்றன. இவர்களது குடியிருப்புகள் இவ்வாறு மாறியது பற்றிய செய்திகளும் அவ்வகையறா மக்க ளால் இன்றும் (திருமணம் போன்ற) நினைவு கூறப்படுகின்றன. சிறப்புமிக்க மரபுவழியில் தோன்றியதாகக் கருதப்படும் இந்த வகையறாவினர் இன்றும் அப்பெருமைகளைக் கூறிச் செருக் குடன் வாழ்கின்றனர். அய்யம் பேட்டையின் நாட்டுமைப் பொறுப்பை இன்றும் அவர்களே பெற்றுள்ளனர். அய்யம் பேட்டையில் ரெங்கராயன் குடியேறிய போது அங்கு ஏற்கனவே மக்கள் வாழ்ந்திருந்தனர். சல்லி என்ற வகையறாக் குடும்பங்கள் கிழக்கேயும் கைக்கோளர்கள் வடக்கேயும் இருந்த பகுதிகளில் வாழ்ந்திருந்தனர். சல்லி என்பது (கற்றுச்)சொல்லி என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம். இந்த சல்லி வகையாறாவின் சிலருடன் பிற்காலத்தில் திருமண உறவுகள் கொள்ளப்பட்டன. ரெங்கராயன் வன்னியர் மரபென்பதாலும் சல்லியும் அதே மரபைச் சார்ந்திருந்ததாலும் இருவரும் பங்காளிகள் என்ற உறவைக் கொண்டனர்.

ரெங்கராயன் குடும்பம் பிற்காலத்தில் பல்கிப் பெருகிய போது, ஒவ்வொரு குடும்பத்தலைவனின் இயற்பெயர் அல்லது சுட்டுப்பெயரை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல கிளைகள் தோன்றின. சின்னத்தங்கம் என்கிற சின்னத்தங்கா, குட்டை படையாட்சி, சூரப்படையாட்சி, வெறிபடையாட்சி, அப்புப் படையாட்சி, தம்பிப் படையாட்சி, சேனான் இளை யான், காக்காயன், முருக்கன் போன்ற இணைகள் தற்போது உள்ளன.[148] ஏற்கனவே சொல்லப்பட்டக் குறிப்புகளைத் தந்த ஜோசப் மரியநாதன் என்பார் அப்புபடையாட்சிக் கிளையைச்

148. ஜோசப் மரியநாதன் குறிப்புகள்.

சார்ந்தவராவார். அப்பு என்ற சொல் அப்பாசாமி என்ற பெயரின் சுருக்கமாகும். அப்பாசாமி என்பது சிவனையும் குழந்தைசாமி என்பது முருகனையும் குறித்த பெயர்களாகும். இப்பெயர்கள் வன்னியர் மற்றும் கள்ளர் இன மக்களிடையே பரவலாகக் காணப்படும் பெயர்க்களாகும். வீரரெங்கராயன் குடும்பத்தில் தோன்றி உரோம் நாகரில் சமயவியல் கல்வியைத் தொடர்ந்து விவிலிய மெய்யியலாளராகத் திரும்பிய திருத்தந்தை அந்தோணி ஆனந்த ராயர் அய்யம் பேட்டையில் தோன்றிய குருக்களில் ஆயர் என்ற தகுதிநிலையைப் பெற்றவராவார். தற்போது புதுவையில் பேராயராகப் பணியாற்றிவரும் மேதகு அந்தோணி ஆனந்தராயர், கடந்த 2004ஆம் ஆண்டில் தமிழகத்தைத் தாக்கிய சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளில் இடைப் பட்டோருக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் புரிந்தார் என்பதனைப் பல்வேறு ஊடகங்களும் செய்தித்தாள்களும் வெளிப்படுத்தின.[149] அய்யம் பேட்டையின் பெருமைக்குரிய மண்ணின் மைந்தராக இவர் விளங்கி வருகின்றார்.

வீரரெங்கராயன் குடும்பத்தைச் சார்ந்த திருத்தந்தை சு மரிய சூசை என்பார், மிகச் சிறந்த தமிழறிஞராவார். தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றி வரும் மரிய சூசை, அய்யம் பேட்டையின் வரலாற்றைத் தொகுத்து, "வரலாறும் வழக்காறு களும் வரதராசன் பேட்டை ஒரு பார்வை" என்ற வரலாற்று ஆய்வு நூலைத் தந்துள்ளார். இந்நூல் எழுதப்பட, தந்தை மரிய சூசை அவர்கள் கொடுத்திருந்த பல்வேறு செய்திகளும் துணை புரிந்தன. என்பது வெள்ளிடை மலை.

தொண்டமான்

தமிழகத்தின் வடபகுதி தொண்டை நாடு எனப்பட்டது. இது சங்ககாலத்துக்குப் பிறகே அறியப்பட்டது. தொண்டை நாடு சான்றோருடைத்து எனக் கூறுவர். தொண்டை நாடென்பது இன்றுள்ள கடலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர், விழுப்புரம் மாவட்டங்களை உள்ளடக்கியதும் திருப்பதியைச் சுற்றியுள்ள ஆந்திரப் பகுதிகளையும் கொண்ட தாகும். இப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்கள் தொண்டை நாட்டு மக்களாக அறியப்பட்டனர். இப்பகுதிகளில் வீரம் செறிந்த மக்கள் வாழ்ந்திருந்தனர். திருப்பதியிலுள்ள வேங்கடப் பெருமாள் ஆலயத்தைத் தொண்டைமான் மரபுவழி மன்னன்

149. தினகரன், பெரம்பலூர் மாவட்ட வழிகாட்டி மலர், 2005.

ஒருவனே கட்டியதாக உள்ளூர் தொன்மக் கதைகள் (ஸ்தல புராணம்) கூறுகின்றன. இடைக்காலம் வரையிலும் தமிழகத்தின் சோழ பாண்டிய மன்னர்களுக்காகப் போரிட்டவர்கள் இத்தொண்டை நாட்டு மக்களே. வன்னியர்களும் கள்ளர்களும் இப்பகுதியைச் சார்ந்திருந்த மக்களே. என்பது வரலாறு. ஒரு காலத்தில் இவ்விரு மக்களும் ஒரு மரபில் தோன்றி, பிற்காலத் தில் இருவேறு பெயர்களால் அழைக்கப்பட்டனர் என்பதற் கான சான்றுகள் உள்ளன. வீரம் செறிந்த இம் மக்கள் பாண்டி யர்களின் அழைப்பின் பேரில் தெற்கே சென்றுக் குடியேறினர். பாண்டியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, தனித் தனி அரசுகளை ஏற்படுத்திக் கொண்டும் ஆண்டனர். இராமநாதபுரம் புதுக் கோட்டை அரசுகள் இம் மக்களின் தனி அரசுகளாகும். தெற்கே சென்றவர்கள் மறவர்கள் அல்லது முக்குலத்தோர் என்றும், வடக்கே நிலைத்து வாழ்ந்திருந்தவர்கள் வன்னியர்கள் என்றும் அறியப்படுகின்றனர். எனவே இவ்விரு மரபுகளும் தொண்டை நாடு என்ற ஒரு கொடியில் பூத்த இருமலர்களே எனலாம்.

அய்யம் பேட்டைக்குக் கிறித்துவர்களாகவே வந்துற்ற தொண்டைமான் என்ற மரபுவழிப் பெயர் கொண்ட குடும்பம் ஒன்று வீரரெங்கராயன் குடும்பத்துடன் திருமண உறவு கொண்ட தாகக் குறிப்புகள் கூறுகின்றன.[150] இவர்கள் புதுக்கோட்டை மன்னர்வழி வந்தவர்கள் என்ற செய்தியும் கூறப்படுகின்றது. பொதுவாக திருச்சி - தஞ்சை - புதுக்கோட்டைப் பகுதியில் வாழ்ந்து வரும் கள்ளர் இனத்தார் தன்மை புதுக்கோட்டை மன்னர் வழியுடன் இணைத்துக் கொள்வதில் பெருமையுடை வர். புதுக்கோட்டை அரசு மிகவும் பிற்காலத்தில் தோற்றுவிக்கப் பட்ட அரசாகும். கிழவன் சேதுபதியின் காலத்துக்கு முன்பே புதுக்கோட்டையில் அரசொன்று இருந்தது. அதனைப் பல்லவராயன் தொண்டமான் என்பான் ஆண்டுவந்தான். இவன் சேதுபதிக்கு எதிராகவும் தஞ்சைக்குச் சார்பாகவும் தனது நிலையை மாற்றிக் கொண்டதனால் வெறுப்புற்ற சேதுபதி, பல்லவராயனை வீழ்த்திவிட்டு தனது மைத்துனன் இரகுநாதத் தொண்ட மானை,[151] புதுக்கோட்டையின் மன்னனாக்கினான். (1690). இவ்வாறாகப் புதிய புதுக்கோட்டை அரசு உருவாக்கப்

150. ஜோசப் மரியநாதன் குறிப்புகள்.

151. History of Nayaks of Madura,133 .

பட்டது இந்நிகழ்வுக்குப் பிறகு பரராஜகேசரி (Loin to Foreign Kings) என்ற பட்டத்தையும் கிழவன் சேதுபதி சூட்டிக் கொண்டான்.[152]

அய்யம்பேட்டைக்கு வந்த தொண்டமான் குடும்பத்தினர் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே அறியப்படுவதால் (1550), புதிய புதுக்கோட்டை அரசுக்கும் அய்யம்பேட்டை தொண்டைமான் குடும்பத்துக்கும் தொடர்பிருக்க வாய்ப்பில்லை எனக் கருதலாம். ஏற்கனவே கூறியபடி, இவர்கள் வடுகர் பேட்டையில் அடுத்த கொள்ளிடக்கரை மக்களாகவோ தஞ்சைப் பகுதியின் திருக்காட்டுப் பள்ளிப்பகுதியைச் சார்ந்தவர்களாகவோ கருதலாம். 1550களில். தஞ்சையில் பிரான்சிசுகன் துறவிகள் சமயப் பணியாற்றியுள்ளனர் என்பது அறியக் கிடக்கின்றது. அய்யம் பேட்டைக்கு வந்த தொண்டமான் குடும்பத்தினர் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்கள் எனக்கருத வாய்ப்புகள் உள்ளன.

இம்மக்கள் ரெங்கராயன் குடும்பத்துடன் திருமண உறவுகள் கொண்டதாகச் செய்திகள் கூறுகின்றன. இவ்வுறவின் மூலம் அய்யம் பேட்டையில் கிறித்துவம் வித்திடப்பட்டது. இத்தொண்டமான் மக்கள் பிற்காலத்தில் பல்கிப் பெருகிய காலத்தில் ஆதித்தொண்டான் நீதித் தொண்டான், வெட்டணங் குறிச்சித் தொண்டான், ஆதிப்பன், நரையன், வெள்ளையன், சேலத்தான், காப்பிரி என்று கிளைத்தன.[153] கத்தாழான் என்ற கிளையும் உண்டு. காப்பிரி என்பது. கஃபீர் (Kaffir) என்ற அரபுச் சொல்லின் தமிழத்திரிபாக இருக்க வேண்டும் இதற்குக் கறுப்பு என்பதே பொருளாகும். கப்பு என்ற தமிழ்ச் சொல்லே கபீர் எனத் திரிந்தது. இசுலாமியர்கள் ஆட்சிக் காலத்தில் கஃபீர் போன்ற சொற்கள் தமிழகத்தில் வழக்கிலிருந்தன. கற்றாழை என்ற ஊர் அல்லது கற்றாழை நார் எடுக்கும் தொழில் பற்றி கத்தாழன் என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். சேலத்தான் என்பது சின்ன சேலத்திற்குப் பஞ்சம் பிழைக்கச் சென்று திரும்பியவர்களாக இருக்கலாம். சின்ன சேலத்திலிருந்தும் கொழைக்குக் கிறித்துவக் குடும்பங்கள் வந்தனர் என்ற செய்தியுண்டு.

இவர்கள் அய்யம்பேட்டைக்குக் கிறித்துவர்களாகவே வந்ததினால், அய்யம் பேட்டைக் கிறித்துவர்களில் மூப்புடையோ

152. Ibid.

153. வரலாறும் வழக்காறும்.

9

ராகக் கருதப்பட்டு தொண்டமான் குடும்பத்திற்கு உபதேசி என்ற பொறுப்பு அளிக்கப்பட்டதாகக் கூறுவர். இப்பொறுப்பை வீரமாமுனிவரே தங்களுக்குச் செப்பு பட்டயத்தில் எழுதி அளித்ததாக, தென்றூர் மரியநாதன் என்ற மரி என்பவர் கூறு கிறார். கொழை - அய்யம்பேட்டைக் குழப்பங்களைத் தீர்க்க வந்த காலத்தில் தொண்டமான் குடும்பாரின் கோரிக்கையை ஏற்று வீரமாமுனிவர் இப்பட்டயத்தை வழங்கியிருக்க வேண் டும். இப்பட்டயம் அய்யம் பேட்டை புதுவை ஆயத்துடன் 1885ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட போது, புதுவைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், பிறகு அப்பட்டயம் என்னவாயிற்று எனத் தெரிய வில்லையென்றும் தென்னூர் மரி கூறுகிறார். இந்த வழிவழி உபதேசிப் பணியை 1964ஆம் ஆண்டு சின்னப்பர் என்ற பங்கு குருவானவர் நீக்கிவிட்டதால் ஒரு குழப்பம் அக்காலத்தில் தோன்றி மறைந்தது.

இந்த உபதேசிக் குடும்பத்தினர் அய்யம் பேட்டையில் நிகழ்வுறும் திருமணச் சடங்குகளில் சமற்கிருத மொழியில் மரியன்னை - சூசையப்பர், இயேசு ஆகியோர். திருமண இணை களை வாழ்த்துவதாக நீண்டதொரு பாடலைப் பாடுகின்றனர். இப்பாடல் பிராமணர்களால் ஒலிக்கப்படும் சமற்கிருத வரி களைப் போன்றே உள்ளன. இதன் பொருளை அறியாத உபதேசிகள் வழிவழியாக இந்த வாழ்த்துப் பாடலை (சுலோகங் களை)ப் பாடி வருகின்றனர். இப்பாடல், பன்மொழியறிஞரும் சமற்கிருதத்தைக் கற்றறிந்தவருமான விரமாமுனிவரால் தங்கள் வேண்டுகோளின்படி இயற்றிக் கொடுக்கப்பட்டதாக தென்னூர்மரி கூறுகிறார்.

இன்றுங்கூட அய்யம்பேட்டையில் நிகழ்வுறும் கிறித்துவ திருமணங்கள் பிராமண சமயத்தின் நிகழ்வுகளையே எதிரொலிக்கின்றன. தேவாலயத்தில் கிறித்துவ மரபுகளின்படி நடைபெறும் திருமணம் தேவாலயத்தைவிட்டு வெளியேறியதும் மாறிவிடுக்கின்றது. மணமக்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர். 1950களில் கூட மணமகன் புரவி மீதும் மணமகள் பல்லக்கிலும் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். மணமகள் இல்லத்தில் நிகழ்வுறும் சடங்குகள், பிராமண சமயத்தையே நினைவுட்டுவனவாகும். விழாவுக்கு வீரரெங்க ராயன் மரபுவழி நாட்டார் முன்னிலை ஏற்க, தொண்டான் மரபுவழி உபதேசி தலைமை வகிப்பார். பிராமணர்களைப்

போலவே அவையின் நடுவிலமர்ந்து சமற்கிருத மந்திரங்களைச் சொல்லி மணமக்களை வாழ்த்துவார்.

மணமகனுக்குப் பூநூல் அணிவிப்பர். பிராமணத் திரு மணங்களில் மணமகனுக்கு பூநூல் அணிவிக்கப்படுவதைக் கண்ட கிறித்துவர்களும் பூநூல் அணிந்து கொள்ளும் வழக்கத் தைக் கொண்டுள்ளனர். பூநூல் எதற்காக அணிவிக்கப்படுகிறது என்பதின் பொருளை அறியாத உபதேசியும் இதனையொரு சடங்காகவே செய்கிறார். மனு அளித்துள்ள சட்டங்களின்படி சூத்திரன் திருமணம், செய்து கொள்ளவே தகுதியற்றவன் சூத்திரனுக்குத் திருமணம், கோவில் கடவுள் வழிபாடு, வேதம் படித்தல் யோன்றவை தடை செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் பிராமணன் சில வரும்படிகளைப் பெற்றுக் கொண்டு சூத்திரனை தாலி கட்டும் சமயத்தில் மட்டும் சூத்திரத்தகுதியை இழக்கச் செய்து. அவனை மேல்சாதிக்காரனாக மாற்றுகிறான். இவ்வாறு சூத்திரனைத் தற்காலிகமாக மாற்றுவதைக்கூட மனுசட்டங்கள் அனுமதிக்கவில்லை யென்பது வேறு செய்தி யாகும். சூத்திரன் மேல்சாதிக்காரனாக மாற்றப்படுவதற்கு அடையாளமாகவே பூநூல் அணிவிக்கப்படுகிறது. தாலிகட்டி முடிந்ததும் மீண்டும் சூத்திரன் சூத்திரனாக மாறிவிடுவான். தாலி கட்டி கொள்வதென்பதுங்கூட தமிழர் வழக்கில் இல்லாத ஒன்றாகும். இதுவும் · பிராமணன் அறிமுகப்படுத்தியதே. மணமக்கள் மாலைமாற்றிக் கொள்வது மட்டுமே தமிழர் வழக்காறுகள் அனுமதித்த வொன்றாகும். பூநூலின் உட் பொருளை அறியாமல் கிறித்துவர்களும் பூநூல் அணிந்து கொள்ளும் திருமணச் சடங்குகள் வேடிக்கையானதும் விந்தை யானதுமே எனலாம். இன்றும் கூட அய்யம்பேட்டையில் வாழும் வன்னியர் மரபுக் கிறித்துவர்கள் பூநூல் அணிந்து கொள்ளும் வழக்காறுகளைப் பின்பற்றி வருகின்றனர்.

மணமகளுக்கு நெற்றியில் பட்டம் கட்டும் முறையும் இங்கு கடைப்பிடிக்கப்படுவதைக் காணலாம். மாமியும் நாத்தியும் பட்டம் கட்டுவர். மைத்துனன் கணையாழியை அணிவிப்பான். பெண்ணுக்குச் சீர்வரிசையும் நிலமுங் கூட அளிப்பதாக அறிவிப்பார்கள். இவ்வாறு காணி கொடுப்பவர்கள், தங்க ளுடைய முன்னோர் வாழ்ந்திருந்த ஊர்களையே கூறி. அங்கு காணியை அளிப்பதாகக் கூறுவதின் மூலம் தங்களுடைய பழைய வரலாற்றை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்கின்றனர்.

இந்தச் சடங்குகளையெல்லாம் நடத்திவைக்கும் உபதேசி பிராமணனின் செயல்பாடுகளை கிறித்துவத் திருமணத்தில் நிகழ்த்தி வைக்கின்றார் எனலாம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் ஒரு திருமணத்தில் கிறித்துவ மரபுகள் தேவாலயத்துடன் முடிந்து போகின்றன. அதன் பிறகு நடைபெறும் பெரிய அளவிலான நிகழ்வுகள் பிராமண சமயத்தையே எதிரொலிக்கின்றன. திருமணத்துக்கு வந்திருக்கும் உறவினர்களும் நண்பர்களும் மணமக்களுக்குப் பரிசளிப்பதென்பது தமிழர் வழக்காகும். அவையில் எழுந்து நின்று தான் என்ன பரிசை அல்லது பணத்தைத் தருகிறேன் என்று அறிவித்தலை மொழிதல் என்று கூறுவர். மொழி என்ற தமிழ்ச் சொல்லே பிற்காலத்தில் மொய் என்று திரிந்து போயிற்று. மொழி என்பதற்குச் சொல்லுதல் என்றும் மொய் என்பதற்குச் சுற்றிவருதல் என்றும் பொருளாகும். இவ்வூரைச் சேர்ந்தவர்கள் வெளியூர்களில் திருமணம் செய்து கொள்ளும் போது இந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை.

தொண்டான் குடும்பத்திலிருந்து இன்று பல்வேறு குருமார்களும், கன்னியர்களும் தோன்றிப் பணியாற்றி வருகின்றனர். சலேசியத் துறவியான ஆதித் தொண்டான் குடும்பத்தைச் சார்ந்த சவரிமுத்து ஆரோக்கியசாமி, இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான நாகாலாந்தில் சிறந்த கல்விப் பணியை ஆற்றி வருகின்றார்.

ஈஸ்திரியன்

அய்யம் பேட்டையிலிருந்த தொடக்ககாலக் கிறித்துவக் குடும்பங்களில் ஈஸ்திரியன் என்ற குடும்பமும் ஒன்றாகும் வீரெங்கராயன் - தொண்டான் - ஈஸ்திரியன் ஆகிய மூன்று குடும்பங்களே அய்யம் பேட்டையின் முதல் கிறித்துவக் குடும்பங்கள் என்பதால் இம்மூன்று மரபுகளும் அவ்வூரில் செல்வாக்குப் பெற்றவர்களாயிருந்தனர். ரெங்கராயன் ஊருக்குத் தலைமை யேற்கவும் தொண்டான் சமயப் பணிகளுக்குத் தலைமை தாங்கவும் என்று பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்ட வேளையில் ஈஸ்திரியனுக்கு அறிவுசார்ந்த. பள்ளி - கல்வி - ஆசிரியர் போன்ற பணிகளும், ஊரின் தேவைகளை மேல் அலுவலர்களிடம் கொண்டு செல்வது விண்ணப்பங்கள் எழுதுவது போன்ற கல்வி தொடர்பான பணிகளைச் செய்ய உரிமை

யளிக்கப்பட்டது. இந்த மூன்று குடும்பங்களில் ஈஸ்திரியன் அறிவாளியாகக் கருதப்பட்டான்.

வீரரெங்காயன் தொண்டான் ஆகிய சொற்களுக்கு பொருளும் பின்னணியும் உள்ளது போன்று ஈஸ்திரியன் என்ற சொல்லுக்குப் பொருள் யாதெனத் தெரியவில்லை. ஈஸ்திரியன் என்ற சொல்லில் எந்த வகையறாவும் தமிழகத்தில் இல்லை என்பதால், ஈஸ்திரியன் என்பது ஒரு திரிபுச் சொல்லே எனக் கருதலாம். ஜோசப் மரிய நாதன் எழுதியுள்ள குறிப்புகளில், ஈஸ்திரியன் என்பான் சிதம்பரத்திலிருந்து வந்த பூசாரி என்று குறிப்பிடுகின்றார். ஊரின் செவிவழிச் செய்திகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. இதன் வழியில். ஈஸ்திரியன் என்பான் பிராமணன் என்றே கருத இடமுண்டு. பிராமணன் அக் காலத்தில் அறிவாளியாகக் கருதப்பட்டான். அதன் வழியில் ஈஸ்திரியனும் கல்வி சார்ந்த பணிகளையே அய்யம்பேட்டையில் செய்துவந்ததாக அறியலாம். அய்யம்பேட்டையின் தொடக்க காலக் கிறித்துவர்கள். வன்னியர் - கள்ளர் - பிராமணர் மரபு களின் இனவழிகளே எனக் கொள்ள இடமுள்ளன. இதனால் பிற்காலத்தில் அய்யம் பேட்டைக் கிறித்துவர்கள் மறவழியிலும், அறவழியிலும் சிறந்து விளங்கினர் எனக் கருதலாம். நாளடை வில், இம்மரபுவழியினர் வன்னியர்களாகவே ஏற்றுக் கொள்ளப் பட்டனர். இன்றும் கூட தமிழகத்தில் எந்த சாதியும் தனது தனித்தன்மைக் கொண்டுள்ளது எனக் கூற இயலாது. எல்லா சாதிகளும் ஒன்றோடொன்று கலந்துவிட்டாலும் கூட சிலர் தங்கள் பிழைப்புக்காக இனத்தின் பேரால் மக்களைப் பிளவு படுத்தி வருவதையும் காணலாம்.

ஈஸ்திரியன் பிராமணனே என்பதற்குச் சரியான சாற்றுகள் இல்லையென்றாலும் அக்குடும்பத்தின் செயல்பாடுகளும் பிற்கால நிகழ்வுகளும் அவன் பிராமணனே என்பதை உறுதி செய்கின்றன. சிதம்பரத்திலுள்ள பிராமணர்கள் தீட்சிதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். தீட்சிதர் என்ற பெயர் சிவ பெருமானால் அளிக்கப்பட்டதாக அவர்களைப் பற்றிய தொன்மக் கதைகள் கூறுகின்றன. ஒரு காலத்தில் அறிவிற்சிறந்த மக்களாக அப்பிராமணர்கள் வாழ்ந்து வந்தனர். ஆனாலும் இறைவனைப் பற்றிய சிந்தனையில்லாமல் அறிவுவழிப்பட்டவர் களாகவே (சித்தாந்திகள்) அவர்கள் வாழ்ந்திருந்தனர். இவர் களைப் பற்றிக் கேள்வியுற்ற சிவன். அவர்களைச் சமயவழியில்

(வேதாந்திகள்) திருப்பியதாகத் தொன்மங்கள் (புராணங்கள்) கூறுகின்றன.[154] இவர்கள் மூவாயிரம் பேரையும் வானுலகத்தி லிருந்து சிவன் அழைத்து வந்து சிதம்பரத்தில் குடியமர்த்திய தாக தீட்சிதர்கள் கூறிக் கொள்கின்றனர்.

தில்லை மூவாயிரவர் என்று அழைக்கப்படும் தீட்சிதர்கள் சிவனைத் தவிர வேறு எந்த தெய்வத்தையும் எண்ணாதவர் களாவர். இடைக்காலச் சோழர்கள் இவர்களைப் பெரிதும் போற்றினர். சோழர்களின் தெய்வமான சிவனுக்கு தில்லையில் பொன்வேய்ந்து திருப்பணிகள் செய்தனர். சோழர்களுக்கு முடிசூட்டிவைக்கும் தகுதி, தில்லை மூவாயிரவருக்கே இருந் தது.[155] சோழர் காலத்தில் ஏராளமான செல்வங்களும், நிலங் களும், இம்மூவாயிரவருக்கு இறையிலி நிலங்களாக அளிக்கப் பட்டன. தீட்சிதர் எனப்படும் இப்பிராமணர்களின் ஒரு பிரிவினர் வட இந்தியாவில் தீக்சித் (Dixit) என்று இன்றும் அழைக்கப்படுகின்றனர். தீட்சிதர் என்ற சொல்லுக்கான பொருள் தமிழிலேயே உள்ளதால் இவர்கள் தமிழ்ப் பிராமணர்களே என்று கருதவும் இடமுண்டு.

யாகம் போன்ற வேள்விகளை நடத்துவதற்கு தீட்சிதர்களே முழுத்தகுதியுடையவராயிருந்தனர். ஒரு முறை பிரம்மா இவர் களை அழைத்து யாகம் ஒன்றை நடத்தக் கேட்டுக் கொண்ட போது தங்களுக்கு நேரமில்லை என்று கூறி மறுத்துவிட்ட தாகவும் சொல்லப்படுகின்றது.[156] பிரம்மாவின் வேண்டு கோளையே புறந்தள்ளும் ஆற்றல் தீட்சிதர்களுக்கு இருந்தது. வேள்விகளில் தீமூட்டி நெய்யை வார்த்து, கடவுளர்களை அழைத்துத் தமது கோரிக்கைகளை வைப்பது வழக்கமாயிருந் தது பற்றி ரிக் வேதம் தெளிவாகக் கூறுகிறது. இவ்வாறு தீயும் கையுமாக இருந்த இவர்களை தீக்கையர் என்றே அழைத்தனர். தீக்கையர் என்ற சொல்லை, வீரமாமுனிவர் தமது சதுரகராதி யில் பயன்படுத்துகிறார்.[157] தமிழில் பலசொற்கள் சமற்கிருத மொழியில் திரிந்து போயின. "க்க" என்ற ஒலிப்பு. சமற் கிருதத்தில் "க்ஷ" என்றவாறு ஒலிக்கப்படும்: பக்கம் - பக்ஷம்

---

154. நடராஜர் தரிசனம், தில்லையம்பதி ஸ்தல புராணம்.

155. பெரியபுராண ஆராய்ச்சி, டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

156. தில்லை ஸ்தலபுராணம்.

157. சதுரகராதி ப.

என்றும். அக்கம் - அக்ஷம் என்றும். தெக்கம் - தெக்ஷம் என்றும் சொல்லப் பட்டது போல, தீக்கை - தீக்ஷக்ஷ என்று திரிந்தது. தீக்கையர் - தீக்ஷிதர் எனப்பட்டனர். தீக்ஷிதர் என்பதே, தீக்ஷித் என்று வடமொழியில் சொல்லப்பட்டது.

தீக்ஷித் என்ற சொல்லை ஒலிக்க இயலாத அய்யம் பேட்டை மக்கள் தீக்சிதன் என்றும், ஈஸ்திரியன் என்றும் திரிபு படுத்திவிட்டனர். ஈழத்தரையன் என்றும் ஈழத்திரையன் என்றும் சொல்லப்படும் பெயர்கள் ஈழநாட்டை வென்ற அல்லது ஆண்ட மன்னர்களோடு தொடர்புடைய பெயர்களாகும். ஈழத்திரையன் என்பதே ஈஸ்திரியன் எனக் கொள்வதற்கான அடிப்படைகள் ஏதுமில்லாததால் தீக்ஷிதன் என்பதே ஈஸ்திரியன் எனத் திரிந்ததாகக் கொள்ளலாம். ஈஸ்திரியன் ஒரு பூசாரி என்று நாட்டுப்புற வழக்கில் சொல்லப்பட்டாலும் அவன் பிராமணனே என்பது தெளிவு. அவன் எக்கரணியத்தை முன்னிட்டு தமது இனத்தை விட்டுவெளியேறினான் என்பதற் கானச் சான்றுகள் எவையும் தில்லை வாழ் அந்தணர்களிட மிருந்து கிடைக்கவில்லை. பிராமணர்கள் பலர். கி.பி. 1500 ஆண்டுகளுக்குப் பிறகு கிறித்துவ சமயத்தைத் தழுவியதாக இயேசு அவையினரின் மடல்களும் குறிப்புகளும் தெரிவிக் கின்றன. திருச்சியில் பல குடும்பங்கள் இவ்வாறு கிறித்துவத்தை ஏற்றனர். இன்றும் கூட மறியன்னைத் தோட்டம் (St. Mary's Thope) என்ற பகுதியில் வைணவராயிருந்து கிறித்துவத்தை ஏற்றுக் கொண்ட பல பிராமணக் குடும்பங்கள் வாழ்ந்து வருவதைக் காணலாம்.

பிராமணர்கள் அக்காலத்தில் எல்லாவகையான வாழ்க்கைத் தேவைகளையும் நிறைவாய் கொண்டிருந்தனர். சமுதாயத்திலும் அவர்களுக்கு உயர்வான இடம் அளிக்கப்பட் டிருந்தது. பிற மக்களைப் போல், சாதிக் கொடுமைகளுக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்க வாய்ப்புகளில்லை. இருப்பினும் அவர்கள் கிறித்துவத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடிப்படை யான கரணியம், உள்ளூர் பிராமணக் குழுமக்களிடையே தோன்றிய பிணக்குகளாகவே இருந்திருக்க வேண்டும். கிறித்து வத்தின் கொள்கைகளைப்பற்றி அறிந்துகொண்டு, அவை தங்களுடைய சமயக் கொள்கைகளிலும் சிறப்பாக உள்ளன என்று தெளிந்திருக்க வாய்ப்பில்லை. பிராமணர்களுக்கு உயர்ந்த மெய்யியல் கொள்கைகள் பற்றியெல்லாம் எதுவும் தெரியாது.

அவ்வாறு தெரிந்து கொள்ளும் அளவுக்கு அவர்களின் மரபு வழிக் கல்வி அமைந்திருக்கவில்லை. வீரமாமுனிவர் தமது சதுரகராதியின் முன்னுரையில் கூறுவதுபோல், பிராமணர்கள் சொன்னதையே கிளிப்பிள்ளைகள் போல், உரத்த குரலில் திரும்பத்திரும்பக் கூறிக் கொண்டிருப்பார்கள் என்றும், சொற் போரில் (வாதம்) அவர்களால் எந்தச் சான்றுகளையும் முன் வைக்கத் தெரியாது என்றும், தோற்றுவிடுவதுபோல் தோன்றி னால், அடுக்கடுக்காகப் பொய்களையும் கூறத் தயங்கமாட் டார்கள் என்றும் கூறுகிறார்.[158] எனவே, தத்துவ இயலும், உளவியலும் கற்றிருந்த இயேசு அவைத்துறவிகளின் அணுகு முறைகள், பிராமணர்களையும் கிறித்துவத்தின்பால் ஈர்த்தன என்பதே உண்மைநிலையாகும். பிராமணர்களிடையே தோன்றி யிருந்த உள்ளூர்ப் பிணக்குகளையும் இயேசு அவையினர் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டனர் எனவும் கருதலாம்.

ரெங்கராயன் குடும்பத்தில் ஈஸ்திரியன் திருமண உறவு கொண்டான் என்ற செய்தியின் படி அத்தீக்கையனுக்குத் திரு முழுக்கு திருமணம் போன்ற சடங்குகளை அய்யம் பேட்டைக்கு அடிக்கடி வந்துபோன போர்த்துக்கீக்கிய வணிகக் குழுவினர் மூலமாக தேவனாம் பட்டிணத்திலிருந்த பிரான்சிசுகன் துறவி களே நடத்தியிருக்க வேண்டும் எனக்கருதலாம். இந்நிகழ்வு 1550களில் நிகழ்வுற்றிருக்க வேண்டும். இதன்படி ரெங்கராய னுக்கு ஈஸ்திரியனும் தொண்டானும் உறவின் முறையார் என்ற அளவில் உறவுக்கட்டமைப்பு உருவாகியது எனலாம். இவ்வாறு கிறித்துவத்தில் இணைந்த ஈஸ்திரியன் வழியினர் தற்காலத்தில் கட்டியங்காரன் மரியா, புது வாலன், லாட்டு, தோட்டக்காரன், காட்டுத்தம்பிரான், நாயத்தான், பள்ளிக் கூடத்தான் என்ற வாறு அழைக்கப்படுகின்றனர். இவர்களில் பல பெயர்கள் குடும்பவழியில் பிரிந்தவர்களின் பெயர்களாகவும், அவர்களின் தொழில்களை அடிப்படைகளாகவும் கொண்டு சொல்லப் பட்டன.[159] இரு கொளி என்ற குடும்பத்தினர் தங்களையும் ஈஸ்திரியன் என்று கூறிக் கொண்டாலும், அவர்கள் உண்மை யில் ஈஸ்திரிய வழியினர் அல்லர் என்ற கருத்தும் சிலரால் சொல்லப்படுகின்றது. பல குடும்பப் பெயர்களின் உண்மை யான பெயர்ச்சொற்கள், இன்று திரிபுட்டு, பேச்சு வழக்குச் சொற்களாகவுள்ளன.

---

158. சதுரகராதி, முன்னுரை.
159. வரலாறும் வழக்காறும், ப.

கி.பி. 1840 ஆம் ஆண்டில் அய்யம் பேட்டையில் முறை யான திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று தொடங்கப்பட்டது பற்றிச் செய்திகள் கூறுகின்றன. ஈஸ்திரிய அந்தோணிசாமி என்பார். தனது வீட்டின் திண்ணையை மிக நீளமாக அமைத்து, அதனை வகுப்பறைகளாகக் கொண்டு ஒரு திண்ணைப் பள்ளியைத் தொடங்கியதாக அக்குடும்பத்தினர் கூறுகின்றனர். இப்பள்ளிச் செயல்பட்டு, வந்த காலத்தில் அய்யம் பேட்டைக் கிறித்துவர்கள் கிறித்துவ சமயத் தலைவர்களால் ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தனர். இப்பள்ளிக்குப் போட்டியாக, தென்னூரில் ஒரு பள்ளியை பிரெஞ்சுக்காரச் சமயக் குழுவினர் தொடங் கினர். எனினும் இப்பள்ளி 1884 வரை தனித்து செயல்பட்டு வந்தது. இப்பள்ளிக்கு அரசாங்கத்திலிருந்து எந்த உதவியும் கிடைக்காத நிலையில் மாணவர்களின் பெற்றோர்களே ஆசிரிய ருக்குக் காணிக்கையாக தவச அறுவடைக் காலங்களில் தவச மாகவே அளித்துவந்தனர். இந்த குடும்பம் இன்று திண்ணைக் காரன் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. கடந்த நூற்றாண் டின் இடைப்பகுதி வரையிலும் கூட அந்தத் திண்ணை வீடு இருந்தது. 1884ஆம் ஆண்டில் சமயத்தலைமை பற்றிய குழப் பங்கள் அய்யம் பேட்டையில் முடிவுற்றபோது. இப்பள்ளியின் பொறுப்பை பங்குக் குருவானவர் ஏற்று கொண்டார் - இதன் வழியில் ஈஸ்திரிய குடும்பத்தின் ஒருபிரிவு பள்ளிக் கூடத்தான் என்று அழைக்கப்பட்டது.

லாட்டு என்ற பெயரில் ஒரு பிரிவினர் உள்ளனர். லாட்டு என்ற சொல்லுக்கான கரணியம் யாதெனத் தெரியவில்லை. லோத்து என்ற விவிலியப் பெயரைத் தாங்கியவரின் வழியாக இக்குடும்பம் இவ்வாறு அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அய்யம்பேட்டை மக்களில் அக்காலத்தில் வெளிவட்டாரத் தொடர்புகொண்ட குடும்பம் இதுவேயாகும். மஞ்சக்குப்பம், புதுச்சேரி ஆகிய பகுதிகளோடு இவர்களுக்குத் தொடர்புகள் இருந்தன. 1850ஆண்டுகளில் வெளியூர் செய்திகளை அய்யம் பேட்டை மக்களுக்கு அறிவித்து வந்தவர்கள் இவர்களே. இக்குடும்பத்தினர் பெற்றிருந்த கலையுணர்வுகள் கரணியமாக உள்ளூரில் நடைபெறும் சமயவிழாக்களுக்கான பொருட்களை இவர்கள் செய்து வந்தனர். மரம், கூழ், அட்டை வண்ணத்தாள் ஆகியவை கொண்டு அழகழகான பொருட்களை இக்குடும்பத் தினர் செய்தனர். இதற்குத் தேவையான பொருட்களை புதுச் சேரி போன்ற இடங்களிலிருந்தும் வாங்கி வந்தனர்.

புதுச்சேரியில் இவர்களுக்கிருந்த தொடர்பால் புதுவையி லிருந்த பிரெஞ்சு சமயக்குழுக்கள் லாட்டுக் குடும்பத்திரைத் தம் பக்கம் இழுக்கப் பெருமுயற்சிகள் மேற்கொண்டனர். அய்யம் பேட்டையின் முதல் மூன்று கிறித்துவக் குடும்பங்களின் இவர்களுள் ஒருவர் என்பாதலும் ஊர் மக்களின் உணர்வு களுக்கு அறிவு வழியான மாற்றுவாழிகளை அவ்வப்போது கூறி வந்தவர்கள் என்பதாலும் பிரெஞ்சுக் குழுவினரின் கோரிக்கை களை இக்கும்பத்தினர் ஏற்க மறுத்துவிட்டனர். 19ஆம் நூற் றாண்டின் இறுதியில் பிரிந்து 20ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் மறைந்தவரும், திருத்தந்தை டாக்டர் கனக மரிய ஆரோக்கியம் அவர்களின் பாட்டனாருமான திரு. மரியநாதன் அவர்கள். பல்வேறு வகையான வெளிவட்டாரச் செய்திகளை யெல்லாம் அறிந்தவர். நூலாசிரியர் பல்வேறு செய்திகளை அவரிடம் நேரிடையாகவே கேட்டறிந்துள்ளார். மிகச் சிறந்த நாவன்மை கொண்ட திரு. மரிய நாதன் அவர்களிடம் கேட் போரின் மனங்களைத் தன்பால் ஈர்க்கும் வண்ணம் உரையாற்று கின்ற பேச்சாற்றலும் ஒரு நிகழ்வைப் பல்வேறு கோணங்களில் அலசிப்பார்க்கும் ஆற்றலும் குடி கொண்டிருந்தன. அய்யம் பேட்டையின் கடந்த கால வரலாறுகளைக் கதை சொல்வதைப் போன்று மக்களிடையே சொல்வார். அளப்பரிய நினைவாற் றலைக் கொண்டிருந்த அவர் கூறிய செய்திளை நூல் வடிவில் தொகுத்திருந்தால் அது பல ஆயிரம் பக்கங்கள் உள்ளடக்கிய தாக அமைந்திருக்கும். திரு. மரியநாதன் கூறிய செய்திகளை அய்யப்பேட்டை வரலாற்றைச் சுருக்கமாக எழுதிவைத்திருந்த வீரரெங்கராயன் வகையறாவைச் சேர்ந்து திரு. ஜோசப் மரிய நாதன் அவர்களின் குறிப்புகளோடு ஒப்பிடுகை யில் ஏறக்குறைய இரண்டு செய்திகளும் ஒத்துப் போகின்றன. ஈஸ்திரிய குடும்பத் தினர் பற்றி திரு லாட்டு மரியநாதன் அவர்கள் கூறிய செய்தி களில் ஒன்று கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

“தனது பங்காளிகளில் ஒருவரான ஈஸ்திரிய தம்புசாமி என்பாரைப் பற்றிய செய்தி யொன்று குறிப்படத்தக்கது. தம்பு சாமி என்பார் 1850 களில் வாழ்ந்திருந்தவர் என்றும் தனக்கு முப்பாட்டன் முறையைச் சேர்ந்தவர் என்றும் திரு மரியநாதன் குறிப்பிடுகின்றார். தம்புசாமியின் முன்னோர் கிறித்துவ சமயத் தின் ஒவ்வொரு கடமைகளையும் மிகவும் சிறப்பாகக் கடைப் பிடித்து வந்தவர்கள் என்றும் அதனால் அக்குடும்பம் பங்குக்

குருவானவருடன் மிக நெருக்கமாக இருந்தது என்றும் கூறு கிறார். கிறித்துவ சமயத்தின் நியாயம் ஒழுங்குகளைத் தவறாமல் கடைப்பிடித்து வந்த அக்குடும்பம் நாயத்தான் குடும்பம் என்று அழைக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார்.

மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில் வீரமாமுனிவர் தரும் குறிப்பொன்று காணக்கிடக்கின்றது. வீரமாமுனிவர் பல்வேறு சாதி சமயத்தாருடன் பழகியவர் என்பது பல சாதி யாரைக் கிறித்துவத்துக்கு மாற்றியவர் என்பது வரலாறாகும். அவர்களில் படையாட்சி மரபின் மீது அவருக்கு பற்றுதல் மிகுந்திருந்ததாக அறிய இடமுண்டு. குறிப்பாக அய்யம் பேட்டை கிறித்துவர்களிடம் மாமுனிவர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை உணர முடிகின்றது. தனக்கு உதவி யாகவும் உறுதுணையாகவும் அய்யம்பேட்டையில் இருந்து வந்த இருபிரிவினரிடையே இருந்த சமயச் சிக்கலைத் தீர்த்து வைத்ததில் ஈஸ்திரிய வகையறாவினர் அவருக்கு பல்வேறு வகையிலும் பங்காற்றியதாகவும் அறிய இடமுண்டு அதற்கு பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் மாமுனிவர் தான் எழுதிய தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலில் ஓரிலக்கண விளக்கம் கொடுக்கும்போது "நாயத்தான் படையாட்சி" என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். இந்த நாயத்தான் படை யாட்சி, ஈஸ்திரிய வகைறாவைக் சார்ந்தவரே என்பதும் குறிப் பிடத்தக்கது.

சலேத்மாதா வணக்கம்

இந்த மரபில் தோன்றிய செபஸ்தியான் நாயகர் என்பாரைப் பற்றி, திரு லாட்டு மரியநாதன் அவர்கள் கூறும் செய்தியாவது. "அய்யம் பேட்டையில் சலேத்து மாதா வணக்கம் முறையை தந்தை மிசோத் என்பாரே அறிமுகம் செய்தார். 1907ஆம் ஆண்டில் அய்யம் பேட்டைப் பகுதியில் மழையின்மையால் வேளாண்மை குறைந்து, அம்மை போன்ற வெப்ப நோய்கள் தோன்றின. மிசோத் தன்னிடம் உதவியாளராகவிருந்த செபஸ்தியா நாயகரிடம் சலேத்து மாதாவின் பெயரில் கன்னபுரி என்றுமிடத்தில் வழிபாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி ஒவ்வொரு ஆண்டும் நெல் அறுவடை முடிந்து மாசித் திங்களில் கன்னாபுரியில் ஆடுகோழிகள் வெட்டிச் சோறாக்கி, அதனை வறியாருக்கு வழங்கும் நடைமுறையை. செபஸ்தியா நாயகரும் அவரது அண்ணன் தம்பு சாமி நாயகரும் (நாயக்கர்

என்பதும் படையாட்சி மரபின் ஒரு பட்டப் பெயரே என்க). 1908 ஆம் ஆண்டு முதல் சலேத்து மாதா வணக்க முறையைத் தொடங்கி தங்களது வாழ்நாள் வரையில் தொடர்ந்து செய்து வந்தனர். 1958 வரையில் இந்த நடைமுறை செயல்பாட்டில் இருந்தது. அதன் பிறகு ஆரோக்கியம் என்ற சல்லி படையாட்சி (இவர்களது மைத்துனர்) நிலத்தை வாங்கி, அதன் வழியில் தொடர்ந்தார். "அவருடைய மறைவுக்குப் பிறகு இந்த நடைமுறை நின்று போயிற்று.

1995ஆம் ஆண்டில், சலேத்துமாதா வணக்க முறை மீண்டும் அவ்விடத்தில் தோன்றி நடைபெற்று வருகின்றது. இந்த நடைமுறையைத் தொடங்கி வைத்தவர் ஈஸ்திரிய நாயத்தான் குடும்பத்தின் செபஸ்தியா நாயகரே என்பது கடந்த காலச் செய்தியாகும்.

19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து வாசகப்பா என்னும் பாட்டுநாடகம் அய்யம்பேட்டையில் நடைபெற்று வருகின்றது.[160] தொடக்கத்தில் அகினேசம்மாள் என்ற உரோம் நகரப் பெண் கிறித்துவத்துக்காக உயிர்துறந்த வரலாற்றை, நாடகமாக நடித்து வந்தனர். பின்னர் பல வாசகப்பாக்கள் தோன்றின. இந்த வாசகப்பாக்களின் அண்ணாவிப் பணிகளை ஈஸ்திரிய குடும்பத்தாரே ஏற்றுக் கொண்டிருந்தனர். ஏனெனில் அக்கால அளவுகளில் இக்குடும்பத்தாரில் பலர் கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அய்யம் பேட்டையின் முதல் கிறித்துவக் குருவாக, மேற்சொல்லப் பட்ட செபஸ்தியா நாயகரின் மகனான மரியதாஸ் என்பார் வரவேண்டிய சூழலில் குருவாக வேண்டிய ஆண்டில் குருமடத் தினின்றும் வெளியேறிவிட்டார் இவ்வாறு அய்யம்பேட்டை யின் முதல் குரு என்ற பெருமையை ஈஸ்திரியன் குடும்பம் தவறா விட்டாலும் அடுத்து அதே குடும்பத்தைச் சார்ந்த அந்தோணி சாமி என்னும் பண்பாளர், முதல்குருவானவர் என்ற பெருமைக்கு உரியவரானவர். முதிர்ந்த அகவையில், தற்போது அவர் ஏலாக்குறிச்சியில் வாழ்ந்து வருகின்றார். ஈஸ்திரிய குடும் பத்தின் மிகச் சிறந்த அறிஞராகவும், மேற்கிந்திய மொழிகளின் விற்பன்னராகவும், விவிலிய ஆய்வாளராகவும் கருதப்படும் கனகரத்தினம் மரிய ஆரோக்கியம் தற்போது சலேசியத் துறவி யாக விளங்கிப் பெருமைகளைச் சேர்த்து வருகின்றார்.

---

160. வாசகப்பா, புலவர் டாக்டர் பெ. அமலதாசன், வரதராசன்பேட்டை.

மேலே கூறப்பட்ட விரரெங்கராயன், தொண்டான், ஈஸ்திரியன் ஆகிய மூன்று வகையறாவினரும், 1712ஆம் ஆண்டு வரையிலும் ஒரு குழுவினராகச் செயல்பட்டு வந்ததாகத் தெரி கின்றது. இக்குழுவினர் அய்யம்பேட்டையில் வாழ்ந்திருந்தனர். 1650 தொடக்கம் கொழையில் புதிதாகக் குடியேற்றப்பட்ட பிற கிறித்துவக் குடும்பங்களோடு இவர்கள் நல்லுறவு கொண்டிருக்க வில்லையென்பதோடு, அவர்களைத் தங்களுடன் இணைத்துக் கொள்ளவும் மறுத்து வந்துள்ளனர். இதற்கு அடிப்படைக் கரணியம், அய்யம்பேட்டைக் கிறித்துவர்கள் பிரான்சிசுகன் துறவிகளோடு கொண்டிருந்த பிணைப்பே எனக்கருத இடமுண்டு. 1650 ஆண்டுகளுக்குப் பிறகு, கொழையில் பணி யாற்றிய இயேசு அவைத் துறவிகளோடும் இவர்கள் ஒத்துழைக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், பிரிட்டோ எனப்படும் அருளானந்தரைக்கூட, இவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை என்றே தெரிகின்றது. இந்த பிரிவினையையும் பிணக்கு களையும் நீக்கி, கொழை - அய்யம்பேட்டைக் கிறித்துவ மக்களை ஒற்றுமைப்படுத்தும் ஒரே நோக்கத்திற்காகவே, 1711ஆம் ஆண்டில் வீரமாமுனிவர், அய்யம்பேட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்பதும், அம்முயற்சியில் அவர் வெற்றியும் கண்டார் என்பதும் வரலாற்றுச் செய்திகளாகும்.

✧✧✧

18

அய்யம்பேட்டையின் பிற வகையறாக்கள்

ஏற்கனவே குறிப்பிட்டுள்ள மூன்று வகையறாக்களின் குடும்பத்தாரும் அய்யம் பேட்டையில் குடியிருக்க, இன்று அய்யம்பேட்டையில் அறியப்படும் பிற வகையறாவினர், 1650 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு கிறித்துவர்களாக மாற்றப்பட்டு கொழையில் குடியமர்த்தப்பட்டவரே எனக் கருதலாம். இவர் களைப் பிற்காலத் கிறித்துவர்கள் என்றும், முதலில் குறிப்பிடப் பட்ட மூன்று வகையறாவிரைத் தொடக்கக் கிறித்துவர்கள் என்றும் கருதலாம். மூப்புத்தன்மையையும் கூட (Seniority) அய்யம்பேட்டை - கொழை மக்களிடையே கருத்து வேறுபாடு களைத் தோற்றுவித்திருக்க வேண்டும்.

தந்தை அ. மரியசூசை தரும் பட்டியலை அடியிற் காண்க:[161]

காங்கியன், தின்னப்பிரியன், கண்டியன், அஞ்சாங்கிய காட்டேரி, சேங்கண்டிச்சல்லி, திருவன்னியன், சிவலிங்கன், சேப்பளான், கச்சிராயன், களத்துப்பிரியன், கலிங்கன், சின்னத் தோட்டக்காரன், பொன்பரப்பியான், கொம்பாடி, கோவில் பிள்ளை, முனித்திரியன், ஆதிமுத்தி, வான்றாயன், முத்தப்பன், வெள்ளிகுலத்தான், கொழைக்காரன், வெள்ளிப்பிரியன், மந்திக் கணக்கன், குருக்கள் என வகையறாக்களின்பட்டியல் நீளும். இவர்களில் செம்பை என்ற வகையறா சிறப்புக்குரியவொன் றாகும்.

மேலும் தென்னூரில் பரணத்தான், தவசுக்குழியான், மணியம் தொண்டான், மினிசுத் தொண்டான், மேச்சேரியான், நன்னிலத்தான், திருவன்னியன் வகையறாக்களும், அய்யம் பேட்டையிலுள்ள பல வகையறாக்களும் காணப்படுகின்றன.

---

161. வரலாறும் வழக்காறும் ,ப.

தொழில் செய்வோரான சேவூரான், பரூரான் என்ற கொல்லர் இனமும், ஆவணத்தான் என்ற பொற்கொல்லர் வகையறாவும் இங்கு காணப்படுகின்றது.

இவரன்றி ஆதிதமிழ்க் கிறித்துவர்களாக, தலையாரி, பரூரான், கீரமங்கலத்தான், பண்டாரம், தீரன், தொழுவன், வங்கக்காரன், குள்ளன், மிளகான் என்ற மொளவன், வெறியன், மரியதாசன், கொங்கநாட்டான் வகையறாக்களும் அறியப்படு கின்றனர். மொத்தத்தில் 21 வகையறாக்கள் ஆதிதமிழ்க் கிறித்து வர்களுகிடையே காணப்படுவதாக, தந்தை மரிய சூசை குறிப் பிடுகின்றார்.[162] திரு. ஜோசப் மரியநாதன் குறிப்புகளின்படி, செஞ்சடையன் என்பானின் குடும்பமே முதலில் அய்யம் பேட்டையில் குடியேறி, கிறித்துவத்தை ஏற்றுக்கொண்டதாக அறியப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வகையறாக்களன்னியில், மேலும் சில உள்ளன. பொதுவாக, அய்யம்பேட்டையிலும், அய்யம்பேட்டையைச் சுற்றியுள்ள தற்கால ஊர்களான தென்னூர், கொழை, பொட்டாங்குளம், வேதண்டாங்குளம், பட்டணங்குறிச்சி கூவத்தூர், மேலநெடுவாய், கீழநெடுவாய், நெட்டளக் குறிச்சி, அறந்தாங்கி, இருப்புக்குறிச்சி, தொள்ளான் குப்பம், புதுக்குப்பம், உடைத்தேரி என்ற தஞ்சாவூரான் சாவடி போன்ற ஊர்களிலும், வன்னியர் ஆதி தமிழர் கிறித்துவக் குடியிருப்புகள் உள்ளன.

காங்கேயன்:

கோவைக்கருகிலுள்ள காங்கேயம் என்பது தவறான சிந்தனையாகும். காங்கியன் என்ற பட்டபெயரில் உடையார் பாளையம் அரியலூர்ப் பகுதிகளில் ஏராளமான குடும்பங்கள் உள்ளன. அணைக்கரைத் தொடங்கி ஏலாக்குறிச்சி வரையிலான கொள்ளிடத்தை அடுத்துள்ள ஊர்களில் காங்கேயன் என்ற வகையறாவினர் காணப்படுகின்றனர்.[163] அய்யம்பேட்டை யிலுள்ள காங்கேயர்கள், தங்களைக் கங்கைக் கொண்ட சோழபுரத்து மக்கள் எனக் கூறிக் கொள்வதில் பொருளுண்டு. இன்றும் கூட. கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றியுள்ள

162. மேலதே.

163. பிற்காலச் சோழர் வரலாறு, சதாசிவ பண்டாரத்தார்.

ஊர்களில் காங்கியன் என்ற வகையறாவினர் காணப்படுகின் றனர். தாங்கள் இன்ன வகையினர் (பிரிவினர்) என்றும் தங்கள் வகை என்றுமே அற்றுப் போகாது (அழிந்து போகாது) என்ற பொருளிலும் சொல்லப்படுவதே வகை + அறா = வகையறா என்ற சொல்லாகும்.

முதலாம் இராசேந்திரன் காலத்திலும் அவனுக்குப் பின்ன ரும். சோழர் படையில் வன்னியர்கள் பள்ளிப்படை என்ற பெயரில் பணியற்றினர். இராசேந்திரன் வாழ்நாள் முழுதும் பல வெற்றிகளைக் குவித்தவனாவான். வட இந்தியாவின் கங்கைப் பகுதிகளையும் வென்றதனால் அவன் கங்கை கொண்ட சோழன் எனப்பட்டான். தெற்காசிய நாடுகளையும் வென்றெடுத்ததால் கடாரம் கொண்டான் (இன்றைய சுமத்திர) எனவும் அழைக்கப் பட்டான். இந்திய வரலாற்றில் பரந்த நிலப்பகுதிகளை ஆண்ட வனும். கடல் கடந்த நாடுகளில் தனது வல்லாண்மையை நிலை நாட்டியவனும் இராசேந்திரன் ஒருவனே என்பது இந்திய வரலாறு. இத்தகைய வெற்றிப் படையெடுப்புகளில் பணி யாற்றிய வன்னியர் இன மக்கள் தாம் சென்று வந்த பகுதிகளின் வெற்றிகளை நினைவூட்டும் வகையில் தம்மைப் பல பட்டப் பெயர்களால் அழைத்துச் கொண்டனர். அவைகளில் ஒன்றே காங்கியன் என்பதாகும். இன்றைய உடையார்பாளையம் பகுதி வாழ் வன்னியர்களின் வகையறாக்களும், போர்ப்படை தொடர் பான சொற்களாகவே காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக. கலிங்கப் போரில் ஈடுபட்டவர்கள் கலிங்கத்தான் என்றும், வன்னிப் போரில் (ஈழம்) ஈடுபட்டோர் வன்னியர் என்றும், கண்டி (ஈழம்) யிலிருந்தோர் கண்டியர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

கங்கையன் என்ற சொல்லின் திரியே காங்கியன் எனப் பட்டது. இவர்கள் கங்கைப் படையெடுப்பில் கலந்து கொண்ட மறவர்களாவர். இராசேந்திர சோழன் ஆளுகையின் கீழ் கங்கைராயன் (காங்கேயராயன்)[164] என்ற சிற்றரசனின் பெயர் அறியப்படுகின்றது. பாண்டியர்களின் ஆட்சியில் கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன்[165] என்ற பெயரில் ஒருயர் அலுவலன் காணப்படுகின்றான். புதுச்சேரியை அடுத்துள்ள ஒருரில்,

164. கல்வெட்டு, எண் 103, 1992. - கல்வெட்டுகள் கூறும் உண்மைகள், பண்டாரத்தார், 1977.

165. இலக்கியவரலாறு, கா. சுப்பிரமணியப் பிள்ளை, ப. 337.

கல்லூரியொன்றினைத் தொடங்கி நடத்தப் பொருளுதவி செய்த காங்கேயன் என்ற சிற்றரசன் ஒருவனைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.[166] 14ஆம் நூற்றாண்டில் புலவர் ஒருவரும் கூட காங்கேயன் என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.[167]

தொண்டமான் : அய்யம் பேட்டைக்கு வந்த தொண்டமான்கள் பற்றிய குறிப்பு ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

> மேற்குப் பவளமலை வேங்கடம் நேர் வடக்காம்
> ஆர்க்கு மூவரி யணிகிழக்குப் – பார்க்குறுயர்
> தெற்குப் பினாகி திகழிருபதின் காதம்
> நற்றொண்டை நாடெனவே நாட்டு.

தொண்டை நாட்டைப் பற்றிய எல்லை. மேற்கண்டவாறு கூறப் பட்டுள்ளது.

> தொண்டை நாடு சான்றோ ருடைத்து

என்பதும் தமிழ்ப் பழமொழியாகும். சங்க காலத்தில் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்திருந்தோர் சாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்திருக்கவில்லை இப்பகுதியில் வாழ்ந்திருந்தோரில் தெற்கே சென்றவர்கள் மறவர்கள் என்றும் காணிக்காரர்கள் வேளாளர்கள் என்றும் சொல்லிக் கொண்டனர். கரிகாற் சோழனின் இளைய மகன் இப்பகுதியை ஆண்டதால், அவன் தொண்டைமான் என அழைக்கப்பட்டான்.[168] காஞ்சி அவனது தலை நகராயிருந்தது. இவனுக்குப் பிறகே இந்நாடு தொண்டை நாடு என அழைக்கப்பட்டது. தொண்டைமான் இளந்திரையன் இம்மரபில் தோன்றியவர்களில் சிறந்த மன்னனாவான். இவன் சோழன் நெடுமுடிக்கிள்ளிக்கும் பீலிவளைக்கும் பிறந்தவ னாவன். இவ்வழிப் வந்தவர்களாகத் தம்மைச் சொல்லிக் கொண்டவர்கள். தங்களை வேளாளர் என்று அறிமுகம் செய்து கொண்டனர். கரிகாற் சோழன் வேளாளனுமல்லன், கள்ளனுமல்லன், அவன் தமிழனே என்பது வெள்ளிடை மலை. இவ்விரு மரபினருமே கரிகாலனைத் தம் இனத்தவனாகத் கூறிக் கொள்வது விந்தையானதே.

---

166. நாலாயிரக்கோவை, புலவர் ஒட்டக்கூத்தர்.

167. கள்ளர் வரலாறு,

168. மணிமேகலை, சுபுத்திரன் காடடைந்த காதை.

கருணாகரத் தொண்டைமான் என்ற திருவரங்கன் குலோத்துங்கச் சோழனின் படைத்தலைவனாவான். சோழப் படைகளை வழிநடத்திச் சென்று கலிங்கத்தின் மீது போர் தொடுத்து வென்றவன். இப்படையில் பணியாற்றிய பலர் தம்மைக் கலிங்கத்தான் என்ற பட்டப் பெயரால் அழைத்துச் கொண்டனர். குலோத்துங்கன் திருவரங்கனைப் பாராட்டி அவனுக்குத் தொண்டைமான் என்ற பட்டத்தை வழங்கினான்.[169] வேள் என்பதும் இவனுடைய மற்றொரு விருதுப்பெயராகும். குடந்தைக் கருகில் நாச்சியார் கோயில் என்ற ஊர்ப்புறத்தே வாண்டாழஞ்சேரி என்ற ஊரில் பிறந்தவனே கருணாகரனாவான் இன்று அவ்வூர் வண்டுவாஞ்சேரி எனத் திரிபுபட்டுள்ளது.[170] இவன் வழிவந்தவர் வண்டையர் என்று அழைக்கப்பட்டு, தற்போது வாண்டையார் என்றவாறு அறியப்படுகின்றனர். வாண்டையார் மரபினர் இன்று கள்ளர் மரபினராக அழைக்கப் படுகின்றனர்.

பிரிட்டோ சமயப்பணியாற்றிய பில்லாவிடத்தை என்ற ஊர், வண்டுவாஞ்சேரிக்கு அருகில் உள்ளது. வாண்டையார் மரபைச் சேர்ந்த தொண்டைமான்களை பிரிட்டோ சமய மாற்றம் செய்ததற்கானச் சான்றுகள் இல்லை. அய்யம் பேட்டையில் குடியேறிய தொண்டைமான் குடும்பத்தினர் வண்டுவாஞ்சேரியைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதும் தெளிவு. தொண்டமார், தொண்டையர், தொண்டாயர், தொண்டைப் பிரியர் என்ற பல்வேறு பெயர்களால் தொண்டைமான்கள் அழைக்கப்படுகின்றனர்.

வன்னியர்கள் பிரிவிலும் தொண்டை மான் என்ற பட்டப் பெயரைக் கொண்டவர்கள் உள்ளனர். உடையார் பாளையத்துக் கருகிலுள்ள குவாகம் என்ற ஊரில் தொண்டைமான் என்ற பட்டப்பெயரைக் கொண்ட வன்னியர்கள் உள்ளனர். அய்யம் பேட்டையில் அறியப்படும் தொண்டைமான் வகையறாவினர். திருக்காட்டுப்பள்ளியை அடுத்த கொள்ளிடக் கரைப்பகுதி யினின்றும் வந்தவர்களாகக் கருத இடமுண்டு.

---

169. கலிங்கத்துப் பரணி, 11:132.

"வண்டையார் அரசன் அரசர்கள் நாதன் மந்திரி
உலகு புகழ் கருணாகரன்" - கலிங்கத்துப் பரணி.

170. தென்னிந்திய தொல்பொருள் ஆய்வுக் குறிப்புகள்.

செம்பை:

கி.பி.1650 ஆண்டுகளுக்குப் பிறகு, திருக்கோயிலூர்ப் பகுதி களினின்றும் சமயமாற்றம் செய்து அழைத்து வரப்பட்ட செம்பை என்ற வகையறாவினர், கொழை பகுதியில் குடிய மர்த்தப்பட்டனர். ஆந்திரே பிரேயர் அல்லது பிலிப் ஏராண்டி (Phillipe Erandi) போன்ற சமயப் பணியாளர்களால் இவர்கள் அழைத்துவரப்பட்டிருக்க வேண்டும். 1670ஆம் ஆண்டில் ஏராண்டியும், 1675 ஆம் ஆண்டில் பிரேயரும் கொழையில் பணியாற்றியதோடு, செஞ்சியை ஒட்டியுள்ள பகுதிகளிலும் சமய பணியாற்றியதாக தென்னார்க்காடு மாவட்ட அரசிதழ் (கெசட்டியர்) கூறுகிறது. பிரிட்டோவும் பிரெயரும் இணைந்தே பணியாற்றியிருக்கின்றனர். செஞ்சி அரசின் பகுதிகளான வேங்கடம் பேட்டை, திருவாடி, திருக்கோயிலூர் ஆகியவை 1681-82 ஆண்டுகளில், சமயப் பணிகள் நிகழ்வுற்ற இடங்களாகும். பின்னர் அத்திப்பாக்கம், முகையூர், வேட்டவலம், திருவண்ணா மலை, தேவனாம்பட்டிணம் போன்ற பகுதிகளிலும் சமயப் பணிகள் தொடரப்பட்டன.

இப்பகுதியிலிருந்து கிறித்துவத்துக்கு மாற்றம் செய்யப் பட்ட பல குடும்பங்கள் பாதுகாப்பு நலம்கருதி, கொழையில் குடியமர்த்தப்பட்டனர். அவர்களில் ஒரு பிரிவினரே செம்பை என்ற வகையறாவைச் சார்ந்தவர்களாவர். இவர்களது முன் னோர்கள் வாழ்ந்திருந்த செம்பைப் பட்டணத்தில் சிற்றரசு ஒன்று செயல்பட்டு வந்தது. இவர்கள் வாணகோவரையர் என்ற பட்டப்பெயரைக் கொண்டவராவர். இவர்களில், தலைவாசல் அருகேயுள்ள ஆறகளூர் என்றும் ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த வாணகோவரையன் சிறப்பானவனா வான். இவனுடைய முன்னோர்கள் வாழ்ந்திருந்த ஊர் செம்பை ஆகும். தற்போது அவ்வூர் ஜம்பை என்று திரிந்துள்ளது. மூன்றாம் குலோத்துங்கனின் நட்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவனாயிருந்த வாணகோவரையன் மன்னனின் வேண்டு கோளுக்கிணங்க தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத் திற்கும் பிற்காலத்தில் குடிபெயர்ந்தான். பல கோயில்களுக்கு நிலங்களும், மானியங்களும் அளித்துள்ள வாணகோவரையன், வாணதிரையன் என்ற பெயராலும் அழைக்கப்பட்டான். சிவன் கோவிலொன்றுக்குப் பொன்வேய்ந்ததனால், பொன்பரப்பிய வாணகோவரையன் என்றும் இவன் புகழப்பட்டான். பொன்

பரப்பிய வாணகோவரைய சோழபுரம் என இவன் பெயரால் அழைக்கப்பட்ட ஊர், இன்று சுருக்கமாக, பொன்பரப்பி என்று வழக்கிலுள்ளது. உடையார் பாளையத்துக்குத் தென்கிழக்கே யுள்ள வாணகோவரையன் பட்டணம் இன்று வாணதிரையன் பட்டணம் என்றவாறு அழைக்கப்படுகின்றது.

செம்பை என்ற ஊரினின்றும் கொழைக்குக் குடிபெயர்ந் தோர், செம்பை என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். பிரிட்டோ இவர்களை அழைத்து வந்திருக்க வேண்டும் என்பதற்கானச் சான்றுகள் உள்ளன. இன்று அய்யம்பேட்டையில், செம்பை என்ற வகையறாவினரும், வாணத்திரியன் என்ற வகையறா வினரும் உள்ளனர்.

தின்னப் பிரியன்:

தென்னகப் பிரியன் என்ற பெயரே தின்னப்பிரியன் என்றவாறு திரிந்துள்ளது. தென்னகம் என்பது சோழ நாட்டின் தென்பகுதியைக் குறித்திருக்க வேண்டும். குடவாயில், நன்னிலம், திருவாரூர் போன்ற பகுதிகளில் வாழ்ந்திருந்த இம்மக்கள், தென்னப்பிரியன், தென்னாப் பிரியன், தின்னப் பிரியன், தென்னரையன் போன்ற பட்டப் பெயர்களால் அழைக்கப்படு கின்றனர். இவர்களில் ஒருசிலர், பிரிட்டோ காலத்தில் கிறித்து வத்துக்கு மாற்றம் செய்யப்பட்டு, கொழைக்குக் கொண்டுவரப் பட்டிருக்க வேண்டும். உடையார் பாளையம் வட்டத்திலும் சிலர் தம்மைத் தின்னப்பிரியன் என்றவாறு அழைத்துக் கொள் கின்றனர். சங்க காலத்தில் வாழ்ந்திருந்த சிறந்த சிவ நெறித் தொண்டனும் சோழ மன்னனுமான கோச்செங்கணான், மேற் கண்ட பட்டப்பெயர்களைக் கொண்டிருந்தான். இவனைப்பற்றி,

> எண்தோள் ஈசற்கு எழில்மாடம்
>
> எழுபது செய் உலகம் கண்ட .....

என்றவாறு திருமங்கையாழ்வார் பாடுகின்றார்.[171] சேரமான் கணைக்கால் இரும்பொறையை குடவாயில் தோட்டத்தில் சிறை வைத்தவன் இவனேயாவான்.[172]

மேற்கண்ட பட்டப் பெயர்களைக் கொண்டோர் வன்னியர் இன மக்களாகவே அறியப்படுகின்றனர். இவர்கள்

171. நாலாயிரத் திவ்விய பிரபந்தம், 1505.

172. பெரியபுராண ஆராய்ச்சி, டாக்டர் மா. இராச மாணிக்கனார்.

தங்களைச் சோழ மரபினர் என்றும் கூறிக் கொள்கின்றனர். கள்ளர் மரபிலும் மேற்கண்ட பட்டப் பெயர்கள் உள்ளன என்பதும் நோக்கத் தக்கதாகும்.[173]

கண்டியன்:

கண்டியன் என்பது பட்டப் பெயரேயன்றிச் சாதிப்பெயர் அன்று. கண்டியன் என்ற பட்டப் பெயரைக் கொண்டவர்கள் வன்னியர் மற்றும் கள்ளர் மரபுகளில்[174] வாழ்கின்றனர். இடைக் காலச் சோழர்கள், நூறாண்டு கால அளவில், ஈழத்தில் தமது படையை நிலைபெறச் செய்திருந்தனர். அப்படை பல்வேறு ஊர்களில் நிலைகொண்டிருந்தது. சோழப்படையில் பணி யாற்றியவர்களில் பெரும்பாலோர் இன்று அறியப்படும் வன்னியர் மற்றும் கள்ளர் இனவழி மக்களேயாவர். வன்னி என்ற பகுதியில் பணியாற்றியவர்கள் வன்னியர் என்றும், கண்டி என்ற ஊரில் பணியாற்றியவர்கள் கண்டியர் என்றும் பெருமை யுடன் கூறிக் கொண்டனர். இவ்விரு பெயர்களிலும் உள்ள வகையறாவினர் வன்னியர் கள்ளர் மரபுகளிலும் உள்ளனர் என்பதால், இவை பெருமைக்குரிய பட்டப் பெயர்களே என அறியலாம்.

அய்யம் பேட்டையில், கண்டியர் என்ற வகையறாவினர் உள்ளனர். இவர்களைப் போலவே, செயங்கொண்டத்தை அடுத்துள்ள பகுதிகளிலும் பெருவாரியான கண்டியர்கள் வாழ் கின்றனர். கண்டியங்கொல்லை என்னும் ஊர் கண்டியர்களின் பெருமையை விளக்குகின்றது.

அய்யம் பேட்டையில் வாழும் கண்டியர் வகையறாவினர் உள்ளூரைச் சார்ந்தவர்களா அல்லது செயங்கொண்டம் பகுதி யினின்றும் அய்யம்பேட்டைக்குக் குடிபெயர்ந்தவர்களா என்று தெளிவாகக் கூற இயலவில்லை. தற்போது அய்யம்பேட்டையை அடுத்துள்ள கண்டியங்குப்பம் என்ற ஊர் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோயில் ஒன்றியத்தில் தகுதியுடைய ஓர் ஊராட்சியாக உள்ளது. இதனால் அய்யம்பேட்டையில் கண்டியர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்தனர் எனக் கருத இடமுள்ளது. தவிரவும் மேட்டுக்குப்பம் ஆதிவராக நல்லூர்,

173. சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.

174. கள்ளர் வரலாறு, ப.54.

பெரிய கிருஷ்ணாபுரம் போன்ற பக்கத்து ஊர்களிலும் கண்டியர்கள் வாழ்கின்றனர். இவர்கள் யாவரும் பிராமண (இந்து) சமயத்திலுள்ளவர்களாவர். அய்யம்பேட்டைக் கண்டியர்கள் கிறித்துவர்களாக உள்ளனர். கொழையில் தங்கியிருந்த சமயப்பணியாளர்கள், கண்டியர்களில் சிலரைக் கிறித்துவர்களாக மற்றியிருக்க வேண்டும் என்று கருதலாம். இம்மரபில் இன்று பலர் கிறித்துவத் துறவிகளாகவும், கன்னியர்களாகவுமுள்ளனர். மேனாள் கண்டியங்குப்பம் ஊராட்சிமன்றத் தலைவரும், ஆங்கில மொழிப் பேராசிரியருமான திரு. அருளப்பன் என்பார். கண்டியர் வகையாறவைச் சேர்ந்தவரே. ஆங்கிலேயருக்கும் இணையான இவரது ஆங்கிலப் பேச்சும் எழுத்தும் ஆங்கில இலக்கியத்தையும் விஞ்சும் வகையில் உள்ளன. கண்டியர் வகையறாவின் பெருமைக்குரியவராக பேராசிரியர் அருளப்பன் கருதப்படுகின்றார்.

கலிங்கத்தான்:

முதலாம் குலோத்துங்கன், கலிங்கத்தின் மீது படையெடுத்துச் சென்று வெற்றிவாகைச் சூடினான். இப்போரை முன்னின்று நடத்தியவன் கருணாகரத் தொண்டமான் என்றும் தலைவனாவான். நரசிம்மப் பல்லவனுக்கு ஒரு பரஞ்சோதியைப் போன்று குலோத்துங்கனுக்கு ஒரு தொண்டைமான் வாய்த்தான் என்பது வரலாற்றுச் செய்திகளாகும். கலிங்கத்துப் பரணி எனும் நூலில் செயங்கொண்டார். சோழ மறவர்களின் வீரச் செயல்களைக் விளக்குகின்றார். கலிங்கப்போரில் வென்ற மறவர்கள் தாயகம் திரும்பியவுடன், தங்களைக் கலிங்கத்தான் என்ற பட்டப் பெயரை முன்வைத்து அழைத்துக் கொண்டனர். இப்பட்டப் பெயரைக் கொண்டவர்கள் உடையார் பாளையம் பகுதியில் பரவி வாழ்கின்றனர். சிலர் இப்பட்டப் பெயரைச் சுருக்கி கலித்தான் என்றும் அழைக்கின்றனர்.

இவர்களில் சிலர், கிறித்துவ சமயத்துக்கு மாற்றப்பட்டுக் கொழைப் பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். இன்றும் அய்யம் பேட்டையில் சிறப்புமிக்க மக்களைக் கொண்டுள்ளதாக கலிங்கத்தான் வகையறா உள்ளது. புகழ்பெற்ற சமயச் சொற்பொழிவாளரும், தற்போதைய ஏலாக்குறிச்சியின் பங்குத் தந்தையுமான அருள் திரு அகத்தியன் அடிகள். இக்கலிங்கத்தான் மரபில் தோன்றியவரே.

கலிங்கத்தான், கலிங்கராயன், கலிங்கன். கலிங்கத் திரையன் போன்ற பட்டப் பெயர்களும் இவர்களுக்கு உண்டு. சோழ மன்னன் குலோத்துங்கன் தனது கைப்பட எழுதி வழங்கியதாகக் கருதப்படும் கலிங்கம் வென்றான் என்ற சிறப்புப் பட்டத்துக்கு உரியவர்களும் இவர்களே. இம்மக்கள் யாவரும் வன்னியர் இனத்தைச் சார்ந்தவர்களே.

சேய்ப்பிள்ளையான்

தொலைவிலிருந்து வந்தவன் என்ற பொருளைக் கொண்ட சேய்ப்பிள்ளையான் என்ற சொல்லே பிற்காலத்தில் சேப்பிளான் என்று வழங்கப்பட்டது. சேய் என்பது தொலைவைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும் அது பழமையையும் குறித்தது. சேய் +அரர் என்ற சொற்களே சேரர் என்று சொல்லப்பட்ட வழக்கை நோக்குக. சேப்பிளார், சேப்பிள்ளை யார், சேய்ப் பிள்ளையார், சேப்பிழார், சேய்ப்பிளார், சேய்ப்பிழார் எனப் பல்வேறு சொற்களால் அறியப்படும் இம்மரபினர் வன்னியர்களே என்பது பெரும்பாலோரின் கருத்தாகும். கள்ளர் மரபிலும் சேப்பிளான் என்ற பிரிவு உள்ளதைக் காணலாம். சேப்பிளா நத்தம் என்னும் ஊர் கடலூர் மாவட்டம் நெய்வேலியை அடுத்துள்ளது. இங்கு வாழும் மக்கள் அனைவரும் வன்னியர்களே தொலைவிலுள்ள நாடுகளுக்குச் சென்று வந்ததால் சேப்பிளான் என்ற பட்டப் பெயர் ஏற்பட்டிக்க வேண்டும்.

இம்மரபில் தோன்றியவர்களில் சிறப்பானவர் சேக்கிழார் அடிகளாவார்.[175] பிரிட்டோ காலத்தில், தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகளிலும் கடலூர் மாவட்டத்தில் சில பகுதிகளிலும் வாழ்ந்திருந்த சேப்பினார் மரபினரைக் கிறித்துவ சமயத்துக்கு மாறுதல் செய்துள்ளனர். கொழையில் குடியமர்த்தப்பட்ட சேப்பிளார் வகையறாவினர் மேற்சொல்லப்பட்ட பகுதிகளினின்றும் வந்தவரே எனக் கருதலாம். திரு டாக்டர் அமலதாசன் என்பவர் அய்யம் பேட்டையில் நடைமுறையிலுள்ள கூத்து வடிவிலான வாசகப்பா என்னும் பாட்டு நாடகம் பற்றிய ஆய்வுகளைச் செய்துள்ளார். மிகச் சிறந்த தமிழறிஞரான அமலதாசன். சேப்பிளார் மரபில் தோன்றியவரே.

---

175. பெரியபுராண ஆராய்ச்சி, ப. 3.

முனித்திரியன்

முனைதரையன், முனைய தரையன், முனித்திரையன், முனித்திரியன், முனையரையன் என்றவாறு பல்வேறு சொற்களால் அழைக்கப்படும் இந்த மரபினர் தற்போது கடலூர் குறிஞ்சிப் பாடி, சிதம்பரம், கிள்ளை போன்ற பகுதிகளில் வாழ்கின்றனர். உடையார் பாளையம் பகுதியில் தாதம்பேட்டைப் பழூர், மதனத்தூர், கோடாலி, கருப்பூர், பரணம், சிறுகடம்பூர், இரும்பிலிக் குறிச்சி போன்ற பகுதிகளிலும் முனித்திரியன் வகையறாவினர் காணப்படுகின்றனர். உடையார் பாளையத்துக்கு அருகில் முனித்திரியன் பட்டி என்ற ஊர் தற்போதும் உள்ளது. மேற்கண்ட பகுதிகளிளெல்லாம், பிரிட்டோவின் சமயப் பணிகள் அறியக் கிடக்கின்றன. பிரிட்டோவின் காலத்தில் சமய மாற்றம் செய்யப்பட்ட முனித்திரியன் மரபினர், கொழையில் குடியமர்த்தப்பட்டனர். குறிப்பாக கோடாலி கருப்பூரிலிருந்த முனித்திரியன் வகையறாவினரே. கொழைக்கு வந்திருக்க வாய்ப்புகள் உண்டு.

தரை என்பது கடற்கரையுடன் தொடர்புடைய தமிழ்ச் சொல்லாகும். முனைதரை என்பது குமரி கோடியக்கரை போன்ற பகுதிகளைச் சுட்டுவதாகும். ஈழத்தைக் கூடச் சுட்டியிருக்கலாம். முனைதரையன் என்பதே முதற்சொல்லாகவிருந்து பிற்காலத்தில் வெவ்வெறு சொற்களாகத் திரிபுபட்டிருக்க வேண்டும். இவர்களும் போர்ப்படையில் பணியாற்றியவர்களே என்பதும் இம்மக்கள் வன்னியர்களே என்பதும் தெளிவு.

களத்துப் பிரியன்

களம் என்ற சொல் போர் முனையைக் குறித்ததே. போரில் விருப்பம் கொண்டவன் என்பதே களத்துப் பிரியன் என்ற சொல்லிற்குப் பொருளாகும். இடைக்காலச் சோழர்களின் ஆட்சிக்குப் பிறகு, பல்வேறு வகையறாக்கள் தமிழகத்தில் அறியப்பட்டன. அவைகளில் ஒன்று களத்துப்பிரியன் என்பதாகும். அரண்மனைகளிலும், அரசு அலுவலகங்களிலும் பணி புரிந்தோரும் தமது பணிகளில் சிறப்பை விளக்க, அப்பணிப் பெயர்களைப் பட்டப் பெயர்களாகச் சூடிக் கொண்டனர். சேர்வைக்காரன் என்பது ஒருசில போர் விரர்களுக்குத் தலைமையேற்கத் தகுதியுடைய பணியாகும். இவர்கள் பிற்காலத்தில் சேர்வை என்று அழைக்கப்பட்டனர். மன்னர் மற்றும் அமைச்சர்

களின் வருகையை முன்னறிவிப்பவன் கட்டியங்காரன் எனப் பட்டான். இவர்களின் பெயர்களிலும் வகையறா மரபுகள் உள்ளன. ஊருக்குத் தலைமையேற்றவன் தலைஆள் அல்லது தலைஆளி எனப்பட்டான், இச்சொல்லே தலையாரி எனப் பிற்காலத்தில் திரிந்தது.

சோழர்களின் ஈழ மற்றும் கலிங்கப் படையெடுப்புகளில் பங்கேற்றவர்களில் களத்துப்பிரியன் வகையறாவினரும் அடங்குவர். வீராணம் ஏரிக்குக் கிழக்கிலும் சிதம்பரத்துக்கு மேற்கிலும் உள்ள பகுதிகளில் வாழ்பவர்களில் பெரும்பாலோருக்கு, களத்துப்பிரியன் என்றப் பட்டப்பெயர் உள்ளது. மேலும் காட்டு மன்னார்குடி, எய்யலூர் போன்ற பகுதிகளிலும் இவர்கள் அறியப்படுகின்றனர். இயேசு அவைக்குருக்கள் இப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்களில் சிலரைச் சமய மாற்றம் செய்து கொழைக்கு அழைத்து வந்தனர். இம்மக்கள் அனைவரும் வன்னியர்களே.

கச்சிராயன்

காஞ்சி என்ற ஊரின் சுருக்கத் திரிபே கச்சி என்பதாகும். தொண்டை நாட்டின் காஞ்சிப் பகுதியில் சோழர் காலத்தில் பல்வேறு சிற்றரசர்கள் வாழ்ந்திருந்தனர். அவர்கள் அனைவருமே சோழர்களிடம் நல்லுறவு கொண்டிருந்தனர். சோழப் படையெடுப்பின் போது, பல்வேறு உதவிகளையும் புரிந்தனர். இம்மரபுகளில் தோன்றியவர்கள் கச்சிராயன் என்றவாறு அழைக்கப்பட்டனர். ராயன் என்ற சொல் சோழர்கள் காலத்துக்குப் பிறகே தமிழகத்தில் அறிமுகமாயிற்று. தெலுங்கு மன்னர்களுடன் சோழர்கள் திருமண உறவு கொண்டதற்குப் பிறகு பல தமிழர்கள் தெலுங்குப் பகுதிகளுக்குப் பணியாற்ற அனுப்பி வைக்கப்பட்டனர். தெலுங்கில் ராய் என்பதற்கு மலை என்பது பொருளாகும்.

மலையைப் போன்ற மன உறுதியைக் கொண்டவன் என்ற பொருளில், ராய் - ராயன் என்று தமிழில் கூறப்பட்டது. இருப்பினும் நாயகன் என்ற தமிழச் சொல்லே, நாயன் என்றும் சொல்லப்பட்டது. நாயன்-நாயர் என மலையாளத்திலும் ராயன் எனத் தெலுங்கிலும் ராவ் என மராட்டியத்திலும் ராய் என வங்காளத்திலும் திரிபுபட்டன. அரசன் அரையன் என்ற சொல்லே, ராயன் எனத் திரிந்தது எனச் சொல்வாருமுளர்.

கச்சிராயன் என்பதற்குக் காஞ்சித் தலைவன் என்பதே பொருளாகும். கடலூரையும் அதன் சுற்றிப் பகுதிகளையும் ஆண்ட கச்சிராயன் என்ற சிற்றரசனின் எல்லை திருமுட்டம் வரையிலும் நீண்டிருந்தது. இவன் கூடலூர் ஆளப்பிறந்தான் சனநாதன் கச்சிராயன் என்றுச் சிறப்பித்துச் கூறப்பட்டுள்ளான். திருமுட்டத்திலுள்ள வைணவத் திருக்கோயிலுக்கு ஏராளமான உதவிகளைச் செய்துள்ளான். இவன் பள்ளி மரபைச் சேர்ந்தவன் என்று இவனைப் பற்றிய குறிப்புகள் கூறுகின்றன. இவனுடைய வழித்தோன்றல்கள் இன்றைய கடலூர் மாவட்டம் எங்கும் காணப்படுகின்றனர். விளந்தையை ஆண்ட சிற்றரசன் கச்சிராயனும், இவர்களது உறவினனே. கச்சிராயன் மரபிலும் சிலர் கிறித்துவர்களாக்கப்பட்டு கொழையில் குடியமர்த்தப்பட்டனர் எனக்கருதலாம். இன்று அய்யம்பேட்டையில் காணப்படும் கச்சிராயன் வகையறாவினர் கம்மாபுரம் விருத்தாச்சலம் பகுதியினின்றும் வந்திருக்க வாய்ப்புகளுண்டு.

ஆபரணத்தான்

ஆபரணத்தான் என்ற பெயரில் தமிழகத்தின் பிற பகுதிகளில் வகையறாக்கள் ஏதுமில்லை. ஆவணத்தான் என்ற சொல்லே ஆபரணத்தான் எனத் திரிந்துள்ளது எனக் கருதலாம். ஆவணத்தான் என்ற பெயரில் பல வகையறாக்கள் உள்ளன. குறிப்பாக பந்தநல்லூர், மயிலாடுதுறையில் பலர் இன்றும் அறியப்படுகின்றனர். சோழப் பேரரசில் ஆவணங்களைப் (Records) பாதுகாக்கும் பணியில் இருந்தவர்கள் ஆவணத்தார் எனப்பட்டனர். கொள்ளிடக் கரையில் இம்மரபினர் காணப்படுவதாலும், அப்பகுதிகள் இயேசு அவையினரின் சிறப்பான பணியிடங்களாகக் கருதப்படுவதாலும் இப்பகுதி மக்களே கொழையில் ஆபரணத்தான் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர் எனக் கருதலாம். ஆவணத்தார் என்ற மரபு வன்னியர் மரபே.

கத்தாழன்

கத்தாழன் என்ற பிரிவு தற்போது அய்யம்பேட்டையில் மட்டுமே அறியப் படுகின்றது. இவர்கள் தங்களை அம்பலுடையான் என்றும் கூறிக் கொள்கின்றனர். அம்பலத்து உடையான், அம்பாலத்தான், அம்பலத்துக்காரன், அம்பலக்காரன் போன்ற பட்டப் பெயர்கள் தமிழகத்தில் பரவலாக அறியப்படுகின்றன. அம்பலத்தான் என்பது, அம்பலம் என்ற ஊர் அவையின்

தலைவன் என்ற பொருள் பற்றியதே முக்குலத்தோரில் ஒரு பிரிவினராக அறியப்படும் அம்பலக்காரன் வகையறாவினர் கொழைப் பகுதியிலும் கடலூர் மாவட்டத்திலும் காணப்பட வில்லை. இவர்களுக்கும் அய்யம் பேட்டையில் வாழும் கத்தாழன் பிரிவிற்கும் தொடர்புண்டு என விளக்கச் சான்றுகள் இல்லை கத்தாழர்கள் தங்களை வன்னியர்கள் என்றே கூறிக் கொள்கின்றனர்.

கொழையிலோ, கொழைக்கு வரு முன்னரோ, கற்றாழைத் தொடர்பான தொழில்களை இவர் செய்து வந்திருக்க வேண்டும். கற்றாழை என்ற பெயரில் பல ஊர்கள் இன்றும் அறியப்படு கின்றன. கத்தாழன் மரபினர் தஞ்சைப் பகுதிகளினின்றும் கொழைக்கு வந்திருக்கலாம், ஆனால் இவர்களின் முன்னோர் வாழ்ந்த ஊர்கள் பற்றிய தெளிவான குறிப்புகள் எவையும் கிடைக்கவில்லை.

சேங்கண்டிச் சல்லி

திரு. ஜோசப் மரியநாதன் கொடுத்துள்ள குறிப்புகளின்படி சல்லி எனப்படும் வகையறாவினர் கொழையிலேயே இருந் தவர்கள் என்பது தெளிவாகின்றது இவர்களில் ஒருவன் சேங்கண்டி என அழைக்கப்பட்டான். இவனது மைத்துனன் கொழையில் குடியிருந்த சல்லி எனப்பட்டான். சேங்கண்டி அய்யம் பேட்டையில் மணியக்காரர் என்ற நில வரி தண்டும் அரசாங்கப் பணியிலிருந்தவன். சேங்கண்டிக்கு மக்கட்பேறு இன்மையால் தனது நிலபுலன்களைத் தனது மைத்துனனுக்கும் தான் பார்த்து வந்த மணியம் வேலையை வீரொங்கராயன் வகையறா சின்ன நாட்டாருக்கும் கொடுத்துவிட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன. திரு ஜோசப் மரிய நாதன் கொடுக்கும் மரபு வழிப் பட்டியலின்படி சின்னது. நாட்டாரின் காலம் 1760 என்று தெரிய வருவதால், சேங்கண்டியின் குடும்பத்தாரும் கிறித்துவ சமயத்தில் இணைந்து விட்டதையும், அய்யம்பேட்டை யின் கிழக்குப் பகுதி உள்ளிட்ட கொழைப் பகுதிக்கு மணியக் காரராக சின்னது. நாட்டார், பொறுப்பேற்றுக் கொண்டதை யும் அறிய முடிகின்றது. 1711ஆம் ஆண்டிலேயே கொழை அய்யம்பேட்டைப் பகுதிகள் ஒரு குருவானவரின் ஆளுகையின் கீழ் இணைக்கப்பட்டதால் கொழைப் பகுதியின் செய்திகளும் கூட அய்யம் பேட்டைச் செய்திகளாகவே குறிக்கப்பட்டுள்ளன. சல்லி படையாட்சியும் கிறித்துவத்தை ஏற்றுக்கொண்டான்

என அறியலாம். சேங்கண்டி என்ற சொல்லும் கூட சோழர் படையுடன் தொடர்பு கொண்ட சொல்லாகவே காணப்படு கின்றது. சேய்+கண்டி என்பதே சேங்கண்டி எனப்பட்டது. சேய்கண்டி என்பதற்கு தொலைவிலுள்ள கண்டி (ஈழத்திலிருந்த நகரம்) என்பதே பொருளாகும். இதன்வழியில், இம்மரபினரும் கண்டியிலிருந்தவர்கள் என்பது தெளிவாகின்றது. கண்டி யனுக்கும் சேங்கண்டிக்கும் என்ன உறவு இருந்தது என்பது தெளிவாக்கப்படவில்லை.

பிற வகையறாக்கள்:

ஏற்கனவே கூறப்பட்டுள்ள பல வகையறாக்களின் பெயர்கள், முதற்கிளைகளின் உட்பிரிவுகளாகவோ, தனிப்பிரிவு களாகவோ அமைந்திருக்கலாம். பொதுவாக, ஒரு கிளையின் தலைவனுடைய பெயர் அவன் செய்து வந்த தொழில், அவ னுடைய அமைப்பு, அவன் எந்த ஊரிலிருந்து கொழைக்கு வந்தான் என்ற விளக்கங்களுடன் பின்னர் வந்த வகையறாக் களின் பெயர்கள் காணப்படுகின்றன. இங்குக் குறிப்பிடப் படாத வகையறாப் பெயர்களும் சில உள்ளன. மேலும் எல்லா அனைத்து வகையறாக்களின் பெயர்க் கரணியங்களும் தெளி வாக இல்லாமையால் சிலவற்றிற்கான விளக்கங்களை அளிக்க இயலவில்லை. சில பெயர்கள் மூலச் சொற்களின்றும் திரிபு பட்டுள்ளன.

முடிவாக அய்யம்பேட்டையில் உள்ள கிறித்துவர்களில் வீரரெங்கராயன், தொண்டான், ஈஸ்திரியன் ஆகியோர் முதல் கிறித்துவக் குடும்பங்கள் என்றும் பிற வகையறாவினர் இயேசு அவையினரால் கொழையில் குடியேற்றப்பட்ட பிற்காலக் (1650-1700) கிறித்துவர்கள் என்றும் கொள்ளலாம். இவர்களி டையே தோன்றிய மூப்புரிமைப் பிணக்கை (Seniority) 1711ஆம் ஆண்டில் வீரமாமுனிவர் சரிசெய்தார் என்றும் கொள்ளலாம்.

✧✧✧

19

அருளானந்தர் காலம்

புனித அருளானந்தர் காலம்-கொழையில்
புதுக் கிறித்துவர்களின் குடியேற்றம்
கி.பி.1673-1683



20

அய்யம் பேட்டையில் கிறித்துவத் தொண்டர்கள்

இயேசு அவையைச் சார்ந்த சமயத்தொண்டர்கள் கி.பி. 1545ஆம் ஆண்டிற்குப் பிறகே தமிழகம் வந்தனர். அவர்களுக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னரே பிரான்சிசுகன் துறவிகளும், தோமினிக்கன் துறவிகளும் தமிழகத்தில் சமயப் பணியாற்றத் தொடங்கிவிட்டனர். அய்யம் பேட்டையில் முதல் கிறித்துவம் கி.பி. 1550 ஆண்டுகளில் அறியப்பட்டிருக்க வேண்டும். தேவனாம் பட்டிணத்திலிருந்த பிரான்சிசுகன் துறவிகள் அய்யம் பேட்டைக்கு வந்திருக்க வாய்ப்புகளுண்டு என்பதுபற்றி ஏற்கனவே விலக்கப்பட்டுள்ளது. தொண்டைமான் குடும்பத் தினரும் பிரான்சிசுகன் துறவிகளாலேயே சமய மாற்றம் செய்யப் பட்டிருக்க வேண்டும். இந்த அளவில் இத்துறவிகளுடன் அய்யம்பேட்டைக் கிறித்துவர்களுக்கு ஆழ்ந்த பற்றுதலும் நெருக்கமும் இருந்தன. இக்கால அளவுகளில் கொழையில் கிறித்துவர்கள் வாழ்ந்திருக்கவில்லையென அறியலாம்.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கால அளவிற்குப் பிறகே. இயேசு அவையினர் கொழைப் பகுதிக்கு வந்துள்ளனர். 1640ஆம் ஆண்டுகளுக்கு முன்னதாக இயேசு அவையினர் கொழைக்கு வந்திருக்க வாய்ப்புகள் இல்லை என்பதும் தெளிவு. பல்தசார் டி கொசுதா (1601-1673) கொழைக்கு வந்தது பற்றியச் சான்றுகள் இல்லை. இவர் 1640ஆம் ஆண்டுகளில் திருச்சி வந்தலை வருகர் பேட்டை புறத்தாக்குடி போன்ற ஊர்களில் சமயப் பணி களாற்றியுள்ளார் பல்தசார், நொபிலியுடன் தொடர்பு கொண் டிருந்தாலும் அவருடன் இணைந்து பணியாற்றவில்லை, அய்யம்பேட்டையில் கிறித்துவர்கள் இருந்தனர் என்ற செய்திை ய பல்தசார் அறிந்திருக்க வாய்ப்புகளுண்டு. ஆந்திரே பிரெயர் கொழைக்கு வந்தபோது, பெரியசாமி எங்கேயென்று

கொழையிலுள்ள கிறித்துவர்கள் கேட்டதாக, தந்தை மரிய சூசை தனது நூலில் குறிப்பிடுகின்றார். இச்செய்தி உண்மை யானதாகவும் இருந்திருக்கலாம்.

பல்தசார் தம்மைப் பண்டாரசாமி என்ற தகுதியில் சொல்லிக் கொண்டார். மாறாக, நொபிலி தம்மைப் பிராமண சாமி என அறிமுகம் செய்து கொண்டார். பல்தசார் அறிமுகம் செய்த சமயப் பணியாளர்களில் புரொயென்சா, பிரெயர், பிரிட்டோ போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். குடந்தை ஆயத்தில் முதன்முதலாக வந்தலையில்தான் (1670) பல்தசார் சமயப் பணியைத் தொடங்கினாலும் 1630களிலேயே வடுகர் பேட்டையில் பணியாற்றியிருக்கின்றார். குடந்தை ஆலயத்தின் முதல் கிறித்துவர்கள் யாவர் எனக் குறிப்பிடுவது அவர்கள் எந்த ஊரைச் சார்ந்தவர்கள் என விளக்குவதும் கடினமானதே, இருப்பினும் புள்ளம்பாடிக்குத் தெற்கேயுள்ள கொள்ளிடக் கரையில் 1540களில் முதல் கிறித்துவர்கள் வாழ்ந்திருக்க வாய்ப்புகளுண்டு. இவர்களின் எண்ணிக்கை பல்லாற் றானும் ஒரு நூற்றாண்டில் பெருகிய நிலையில், இப்பகுதிக்கு வருகை தந்த நொபிலியின் காலத்தில் (1630) ஏராளமான கிறித்துவர்கள் வடுகர் பேட்டையைச் சுற்றிலும் வாழ்ந்து வந்ததாக நாயக்கர் களின் ஆவணங்கள் கூறுகின்றன. நொபிலி வடுகர் பேட்டைக்கு வருமுன்னரே. அப்பகுதியில் கிறித்துவர்கள் இருந்தனர் எனவே குடந்தை ஆயத்தின் முதல் கிறித்துவ வித்து வடுகர் பேட்டைப் பகுதியில்தான் ஊன்றப்பட்டது என்பது தெளிவு (1530-40).

அடுத்தாக 1550களில் அய்யம் பேட்டையில் கிறித்துவம் அறியப்பட்டது. இங்கும் கூட வடுகர் பேட்டைப் பகுதியி லிருந்து வந்த தொண்டைமான் குடும்பம்தான். அய்யம் பேட்டை யின் முதல் கிறித்துவக் குடும்பமாகச் சொல்லப்படவேண்டும். இவர்கள் வழியில் மேலும் இரண்டு குடும்பங்கள் கிறித்துவத்தை ஏற்ற செய்திகள் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளன. 1502-1600 ஆண்டுகளில் பிரான்சிசுகன் துறவிகள் பணியாற்றிய செய்திகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இன்னும் சொல்லப்போனால். தமிழகத்தின் பல பகுதிகளில் கிறித்துவத்தை அறிமுகம் செய்தவர்கள் பிரான்சிசுகன் துறவிகளே என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

பிற்காலத்தில் பிரான்சிசுகன் துறவிகள் பணியாற்றிய இடங்களிலெல்லாம் இயேசு அவையினர் வந்து தங்கலாயினர். மேலிடத்தின் அனுமதியைப் பெற்றும் பெறாமலும் கூட இயேசு அவையினர் பிரான்சிசுகன் துறவிகளை வெளியேற்றினர். இதனால் பல இடங்களில் (மயிலை, தஞ்சை, தேவனாம் பட்டினம்) இவ்விரு துறவிகளுக்கிடையே கருத்து வேறுபாடு கள் கூடத் தோன்றின. ஒவ்வொருவரும், தங்கள் வழியே கிறித்துவர்களானவர்கள் தங்களுக்கே உரியவர்கள் என்றும் அக்கிறித்துவர்களுக்கானச் சமயக் கடமைகளைத் தாங்களே நிறைவேற்ற வேண்டும் என்றும் கருதினர் கிறித்துவர்களும் தாங்கள் திருமுழுக்குப் பெற்றவர்களிடம் உறவாடியும், மற்றவர் களிடம் ஒட்டாமலுமிருந்தனர். இதற்கு விதிவிலக்குகளும் உண்டென்றாலும் பொதுவாக இந்நடைமுறைகள் தமிழகத் தில் வழக்கமாயிருந்தன. இதனால் கிறித்துவர்களிடையேகூட பிரிவினைகள் தலைதூக்கின.

அய்யம் பேட்டையிலிருந்த கிறித்துவர்கள் தாங்களே இச்சமயத்துக்கு மூப்புடைவர்கள் என்றும் கொழையிலிருந்த கிறித்துவர்கள் தங்களோடு இணைந்தே செயல்பட வேண்டு மெனவும் எதிர்ப்பார்த்தனர். கொழையிலிருந்த குடியேறிய கிறித்துவர்கள் அனைவரும் இயேசு அவையினரின் முயற்சி களால் கிறித்துவத்தை ஏற்றவர்களாதலால் அய்யம்பேட்டைக் கிறித்துவர்களுடன் ஒன்றிணைய மறுத்தனர். இதனால் இயேசு அவையின் குருக்களும் கூட, கொழையில் மட்டும் தங்கள் பணிகளைச் செய்து கொண்டிருந்தனர். பிரிட்டோவையும் கூட அய்யம் பேட்டை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. இதனால் அய்யம்பேட்டைக் கிறித்து வர்கள் பற்றிய எந்தச் செய்திகளையும் இயேசு அவையினர் தர வில்லை. இச்சூழல்களின் பின்னணி தெரியாத நூலாசிரியர்கள் இயேசு அவையினர் அய்யம் பேட்டையைப் பற்றிய செய்தி களை ஏன் தரவில்லை என்று குழப்பமடைந்தனர்.

1665ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாளிட்ட ஆந்திரே பிரெயரின் கடிதம், திருமுட்டத்திலிருந்து புரொயன்சாவுக்கு எழுதப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் அய்யம்பேட்டைக் கிறித்துவர்கள்பற்றி பிரொயர் கோடிட்டுக் காட்டியுள்ளார் என்றாலும் விளக்கமாக அவர் எதனையும் குறிப்பிடவில்லை. பிரெயர் - பிரிட்டோ கூட்டணியில் சமயப் பணிகள் மிகச்

சிறப்பாக ஆற்றப் பெற்றன. ஏறக்குறைய 50 கிமி சுற்றளவில் ஈராயிரத்துக்குமேற்பட்டவர்களை கிறித்துவ சமயத்துக்கு மாற்றிய பெருமை இவ்விருவரையுமே சாரும். வேட்டவலம், திருவண்ணாமலை, திருக்கோயிலூர் உள்ளிட்ட வடபகுதிகளிலும், கடலூர், விருத்தாச்சலம், பண்ருட்டி போன்ற வடகிழக்கும் பகுதிகளிலும் பொன்பரப்பி பரணம், இலைக்கடம்பூர், சிறுகடம்பூர் போன்ற மேற்குப் பகுதிகளிலும் தத்துவாஞ்சேரி, கோடாலி, பில்லாவிடந்தை, மயிலாடுதுறை போன்ற தென்பகுதிகளிலும் கிறித்துவராக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கொழையில் குடியமர்த்தப்பட்டனர்.[176]

---

176. Christianity in Gingee Kingdom:

By for the oldest Christian mission in the disctrict (Cuddalore) is that of the R.C. Christians. It was an off shoot of the famous Madura Mission of the Jesuits, followed by Robert de Nobili in 1606. In 1640, Fr. Emmanuel Martinz of that society, being driven out of Trichinopoly, took refuge in the Gingee country, where he set to work to proselytise. For some years he was fairly successful, but later on, the invasion of the country by the troops of Bhijapur and the pestillence which followed, drove the christianity to great straits. About 1670, Fr. Phillipe Erandi, who was incharge of the Gingee Mission, fixed his head quarters for a time at a small place called KOLAI which is described as being part of the district, he abandoned this to wander about the country preaching.

He was followed in 1675 by Andre Freite with whom was working one time the famous Jean de Britto, who was afterwards martyred (1693 Feb. 4) in the Ramnad country. Fr. Freire gives an interesting account of the manner in which he came to visit that part of the district. some christians who had been baptised at Trichy and Madura, had collected to settle at Vettavalam at the port of the hills just within Tiruvannamalai border. They were much harassed by their neighbours and they accordingly appealed to Fr. Freire to help. He set out for the place and on reaching it, established himself in one of the many natural caves which were around in that range. There, for a fortnight he received visits from all sorts and conditions of men, including even persons deputed by the priest of the Hindu temples to put him questions, and findout what were his doctrines, and ended up by baptizing forty converts.

கி.பி. 1760 ஆண்டுகளில் கொழையின் கிறித்துவ மக்கள் தொகை 1000க்கும் குறையாமலிருந்தது எனக்கொள்ளலாம். இந்த அளவுக்கு அய்யம்பேட்டையில் கிறித்துவ மக்கள் இருந்திருக்க வாய்ப்பில்லையென்றாலும் 100க்கும் குறையாத கிறித்துவக் குடும்பங்கள் அய்யம்பேட்டையில் இருந்திருக்க வாய்ப்புண்டு மக்கள் தொகையில் கொழை மிகுந்திருந்தாலும் அவர்கள் எல்லோரும் புதுக்கிறித்துவர்கள் என்பதால் அய்யம் பேட்டையைப் பங்குத்தளமாக நிலைநிறுத்தவேண்டும் என்ப தில் கண்டிப்புடன் இருந்தனர். ஆனால், இயேசு அவையினரால் கொழையே பங்குத்தளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த தால் கொழைக் கிறத்துவர்களிடையே அய்யம்பேட்டைக் கிறித்துவர்கள் உறவு கொள்ளவில்லை எனக் கருதலாம். அய்யம்பேட்டை மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட வீரமாமுனிவர் 1711ஆம் ஆண்டில் அய்யம் பேட்டையைப் பங்குத்தளமாக அறிவித்து கொழையை அய்யம்பேட்டைப் பங்கில் இணைத்தார். கொழை என்ற பெயர் அடியோடு மறக்கப் பட்டதுமல்லாமல் அய்யம் பேட்டையில் தற்போதுள்ள பழைய கோயிலும் கட்டப்பட்டு, அதனைச் சுற்றிக் குடியிருப்புகளும் உருவாக்கப்பட்டன. அய்யம் பேட்டையில் பணியாற்றிய பங்கு குருக்களின் பட்டியல், 1711முதல் கணக்கிடப்பட்டு மாமுனிவரே முதல்பங்கு குருவாக அறிவிக்கப்பட்டார்.

அய்யம்பேட்டையின் தொடக்கக்காலக் கிறித்துவக் குடும்பங்களான வீர ரெங்கராயன், தொண்டைமான், ஈஸ்திரியன்

தொடர்ச்சி :

Then christianity was spreaded greately. The letters of the Jesuit priests in La Mission De Madura, village as far as perpart as Venkatanpettai, Tiruvadi, and Gingee as places, where there were congregations in 1681 or 1682. In 1692/ a father Paul on failed grants of land at Cuddalore and Devanampattinam and built two small churches (one at Portonovo). Most of this devastations of the churches was due to the invasions of the Marathas in 1740. Attippakkam, about five miles northwest of Tirukoilur and Mugaiyur some seven miles east of the same town, are mentioned in contemporary of the Christians at Vettavalam are said to have been forced to flee to the caves in the hills close by that village. - Gazzettier South Arcot District.

ஆகிய வகையறாக்களுக்கு உரிய சிறப்புகள் அளிக்கப்பட்டன. ஒட்டுமொத்த கிறித்துவர்களுக்கும் வீரெங்கராயன் குடும்பத்தில் ஒருவர் தலைமை நாட்டார் பொறுப்பை ஏற்றார் தொண்டைமான் குடும்பத்துக்கு உபதேசித் தொழில் கொடுக்கப்பட்டது. ஈஸ்திரிய குடும்பத்துக்கும் ஒரு நாட்டார் பதவியளிக்கப்பட்டு, பங்கு குருவானவருக்கு உதவியாளராக ஈஸ்திரியக் குடும்பத்தில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்பட்டார். கொழையிலிருந்த வகையறாக்களின் மக்கள் தொகைக்கேற்ப நாட்டார் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. ஊர் மக்களில் ஒரு பிரிவினர் பங்காளிகளாகவும் ஒரு பிரிவினர் அவர்களின் உறவின் முறையார்களாகவும் அறிவிக்கப்பட்டு, சமூக நிலைப்பாடு காக்கப்பட்டது. இந்த உறவு முறைகள் இதுநாள் வரையிலும் வருகின்றன.

வீரெங்கராயன், செம்பை, காங்கேயன் போன்றோர் பங்காளிகளாகவும், தொண்டைமான் ஈஸ்திரியன் போன்றோர் அவர்களுக்கு உறவின் முறையாளர்களாகவும் கருதப்பட்டனர். ஏற்கனவே பிராமண சமயத்தில் இந்து வன்னியர் மரபில் வந்தவர்கள் ஓரணியாகவும், வன்னியர் அல்லாத மரபில் வந்தவர்கள் அவர்களுக்கு உறவின் முறையாளர்களாகவும் கருதப்பட்டனர் என்ற கருத்தும் உண்டு. கொழை - அய்யம்பேட்டை இணைப்புக்குப் பிறகும் பல குடும்பங்கள் அய்யம்பேட்டையில் குடியேறியிருக்க வாய்ப்புண்டு என்பதால் பின்னர் வந்தவர்கள் இவ்விரு பிரிவுகளில் ஒன்றில் சேர்க்கப்பட்டனர் எனக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக இருகொள்ளி என்ற பிரிவினர் பிற்காலத்தில் வந்து குடியேறியவர்கள் என்றும் அவர்கள் ஈஸ்திரிய வகையறாவில் இணைக்கப்பட்டனர் என்றும் சொல்லப்படுகின்றது.

கொழை என்ற புதுக்குடியிருப்பை உருவாக்கிய பெருமை ஆந்திரே பிரெயரையே சாரும். செஞ்சி உடையார் பாளையம் பகுதிகளில் புதிய வரலாற்றை உருவாக்கிய பிரெயர், நாயக்கர்களின் வரலாற்றையும், தமிழகத்தின் அக்கால நிகழ்வுகளையும் திரைப்படம் போல் படம்பிடித்துக் காட்டுகிறார். நாயக்கர்களின் வரலாற்றில் பலபகுதிகளை பிரெயரின் மடல்கள் தெளிவாக்குகின்றன. இப்பகுதிகளில், பிரிட்டோ குறுகிய காலமே பணியாற்றியுள்ளார் என்றாலும், பிரிட்டோவுக்குத் தமிழகத்

தைப் பற்றிய அனைத்து செய்திகளையும் அளித்து, அவரைச் சிறந்த சமயப் பணியாளராக மாற்றிய பெருமையும் பிரெயரையே சாரும். இன்றைய கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் மாவட்டங் களில், கிறித்துவத்துக்கு வளமான அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் ஆந்திரே பிரெயர் என்றால் அதுமிகையன்று. தமிழகக் கிறித்துவ வரலாற்றில், மறக்கமுடியாத சமயப் பணி யாளர்களின் பட்டியலில், ஆந்திரே பிரெயருக்கு ஓரிடம் உண்டு என்பது தெளிவு.

✧✧✧

21

ஜான் – டி – பிரிட்டோ

மேலை நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்த கிறித்துவ சமயப் பணியாளர்களில் பிரான்சிசு சேவியருக்குப் பிறகு பேசப் பட்டவர் பிரிட்டோ ஆவார். செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்து, அரண்மனையிலேயே மன்னன் மகனுடன் ஒரு சாலை மாணாக்கனாகக் கல்வி கற்று, இயேசு அவைக்குருவாகி, கிறித்துவின் செய்திகளைக் தமிழகத்தில் விதைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக வந்தவர். கப்பற்பயணத்தின் போதே, தமிழகத்தின் சூழல்கள் பற்றியெல்லாம் இவருக்கு எடுத்துக் கூறப் பட்டன. பல்தசார் டி கொசுதா தனது முற்றிய பட்டறிவை பிரிட்டோவுடன் பகிர்ந்து கொண்டார் எனக் கருதலாம். தனது வாழ்க்கையில் இது வரையில் கண்டிராத புதிய நாடு, புதிய மக்கள், புதுமொழி, புதுப்பண்பாடு, வேறுபாடான உணவுப் பொருட்கள், சுட்டெரிக்கும் வெயில், என பல்வேறு மாற்றுச் சூழல்களைத் தமிழகத்தில் கண்ணுற்றார்.

தனது வாழ்வின் மிகச் சரியான இளமைக் காலத்தில் தமிழகம் வந்த பிரிட்டோ, தமிழகத்தின் புதிய சூழல்களைக் கண்டு அச்சம் கொள்ளவில்லை. மாறாக எதிர்கொண்டார். 1674ஆம் ஆண்டு அம்பலக்காட்டில் தொடங்கிய காட்டுவழிப் பயணம், கொழையில் முற்றுப்பெற்றது எனலாம்.[177] பிரிட்டோ வின் முதல் பணித்தளம் கொழையே எனலாம். ஆந்திரே பிரெயர் பிரிட்டோவை அழைத்து வந்தார். பிரிட்டோ இரண்டரை ஆண்டுகள் கொழையில் தங்கிப் பணியாற்றியதாகச் செய்திகள் கூறுகின்றன. பிரிட்டோவுக்கு முன்பே, கொழை என்ற குடியிருப்பு உருவாகியிருந்தது. உடையார் யாளையம் பகுதியிலிருந்த அனைத்து ஊர்களிலும் பிரிட்டோவின் பாதங்கள் படர்ந்துள் ளன. குறிப்பாக, கோடாலி கருப்பூர், பரணம், சிறுகடம்பூர்,

177. பயணவிளக்கப்படம். வரலாறும் வழக்காறும், ப. 33.

இலைக்கடம்பூர், பொன்பரப்பி, சிறுகளத்தூர், இரும்பிலிக் குறிச்சி, அழகாபுரம், கல்லாத்தூர் போன்ற ஊர்களில் பலரைக் கிறித்துவ சமயத்துக்கு மாற்றம் செய்துள்ளார். (கோடாலி என்ற ஊர், கோராலி எனத் தவறாகப் பல இடங்கில் காணப் படுகின்றது).

பிரிட்டோவின் காலத்தில், உடையார்யாளையம் பகுதி யில் கிறித்துவம் தடைசெய்யப் பட்டிருந்தது. பிரிட்டோவின் வரலாற்றை எழுதிய சில நூலாசிரியர்கள் உடையார்பாளையம் மன்னர். பிரிட்டோவின் நண்பராகியிருந்தார் என்ற தவறான செய்தியைக் கொடுத்துள்ளனர்.[178] பிரிட்டோவின் காலத்தில், இராணி மங்கம்மாள் மட்டுமே கிறித்துவத்துக்குச் சார்புடை யவளாக இருந்தாள். உடையார் பாளையம், தஞ்சை, இராம நாதபுரம் போன்ற அரசுகள் கிறித்துவத்துக்கு எதிர்ப்பைக் காட்டிவந்தன. இந்த எதிர்ப்புகளை எதிர்கொண்டே பிரிட்டோ பணியாற்றினார். கொழையில் பிரிட்டோ பணியாற்றிய போது, எந்த அளவில் அவர் தமிழ்மொழியை அறிந்திருந்தார் என்பது தெரியவில்லை. இருப்பினும் தொண்டுக்கும் அன்புக்கும் மொழி என்றுமே தடையாக இருந்திருக்காது எனக் கருதலாம். கொழையில் பணியாற்றிய காலத்தில், அவர் அய்யம் பேட்டை மக்களைப் பற்றி அறிந்திருந்தாலும், அவர்களையும் அர வணைத்துச் செல்ல அவர் அனுமதிக்கப்படவில்லை எனக் கொள்ளலாம். இது போன்ற சூழல், தூத்துக்குடிப் பகுதியில் நிலவியபோது, பிரான்சிசு சேவியர் தமக்கு கூறப்பட்ட அறிவுரை களைப் புறந்தள்ளினார். திருமுழுக்குப் பெற்ற கிறித்துவர்கள் தம் மக்களே எனக் கருதினர். சேவியர் காலத்தில் இயேசு அவை யிலிருந்த சமயத்தலைவர்கள் கூட, சேவியருக்கு ஆணையிட அச்சம் கொண்டனர். சேவியரின் அன்புள்ளம், சமயங்களை யும் தாண்டி, மாந்தநேயமாக உருவெடுத்திருந்தது எனலாம். குறிப்பாக, சிரியன் கிறித்துவர்களைப் போர்த்துக்கீசியர்கள் வெறுத்து ஒதுக்கிய போது, சேவியர் அவர்களை அரவணைத்து மகிழ்ந்த செய்தியை சிரியன் திருச்சபைக் குறிப்புகளே தெரி விக்கின்றன.[179] சேவியர் போன்றவர்களின் மனப்பான்மை பிற்காலத்தில் பணியாற்றிய கிறித்துவச் சமயம் பணியாளர் களில் பெரும்பாலானவர்களிடம் காணப்படவில்லை என்பது வரலாற்றுச் செய்திகளாகும்.

---

178. ஓரியூரின் ஒளிவிளக்கு, தந்தை சி.கே. சுவாமி.

179, Early christiamity india and pakistan, p.

கொழையில் பணியாற்றிய பிரிட்டோவின் பணிகள் குறித்துத் தெளிவான செய்திகள் கிடைக்கவில்லையாயினும், உடையார்பாளையம் பகுதியில் பிரிட்டோவின் பணிகள் பரவி யிருந்தன என்பது தெளிவு. குடந்தைப் பகுதியில் பணியாற்றி யுள்ள பிரிட்டோபற்றிய பல்வேறு குறிப்புகள் காணக்கிடக் கின்றன. குறிப்பாக, தத்துவாஞ்சேரி, பந்தநல்லூர், குடந்தை, மயிலாடுதுறை, நாச்சியார் கோயில், குடவாயில் பகுதிகளால் அவரது பணிகள் அறியப்பட்டுள்ளன. தஞ்சைத் தலைநகருக்குப் பிரிட்டோ சென்றது பற்றித் தெளிவான குறிப்புகள் இல்லை. குடவாயில் பகுதியினின்றும், மன்னார்குடி, பட்டுக்கோட்டைப் பகுதிகளில் பணியாற்றச் சென்ற பிரிட்டோ, தொடர்ச்சியாக கடற்கரை வழியே இராமாநாதபுரம் சென்றார். இராமநாத புரத்தில் பிரிட்டோவின் பணிகள் குறித்த செய்திகள் தெளி வாக்கப்பட்டுள்ளன.

கிழவன் சேதுபதி என்ற மறவர் மரபு மன்னன் இராமநாத புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். தொடக் கத்தில் பிரிட்டோவின் சமயப் பணிகளில் சேதுபதி குறுக்கிட வில்லை. மறவநாட்டில் பிரிட்டோவின் பணிகள் தனிமாந்த ஆற்றலையும் விஞ்சிய வகையில் அமைந்திருந்தன. பத்தாண்டு களில், மறவநாட்டின் வரலாற்றையே தன்பால் ஈர்த்துக்கொண்ட பெருமை பிரிட்டோவினுடையது. மக்களிடையே நன்கு அறிமுகமான பிரிட்டோ மன்னரின் உறவினர்களில் பலரையும் கிறித்துவத்துக்கு மாற்றிய போதுதான் சேதுபதி விழித்துக் கொண்டான்.

வரலாற்று ஆசிரியர் திரு. ஆர். சத்திய நாதையர், பிரிட்டோ வின் மறவநாட்டுப் பணிகள் பற்றிய தமது மதிப்பீடுகளை அடியிற்கண்டவாறு விளக்குகிறார்.[180]

1. மறவநாட்டுப் போர்ப்படையில் பணியாற்றிய பலரையும் பிரிட்டோவின் கிறித்துவ சமயத்துக்கு மாற்றிவிட்டார். இதனால் அரண்மனைச் செய்திகள் பலவும் உடனுக்குடன் பிரிட்டோ வுக்கு கிடைத்தன. மன்னனின் உள்ளுணர்வை அறிந்து அதற் கேற்றவாறு, பிரிட்டோ தனது உத்திகளை வகுத்துக் கொண்டார்.
2. மக்களில் பெரும்பாலோர் கிறித்துவத்தை ஏற்றதால், மறவநாடு முழுக்க கிறித்துவம் அறியப்பட்டதால், மன்னனுக்கும் மக்களுக்கு

180. History of the Nayaks of Madura.

மிடையேயிருந்த பிடிப்புகள் துண்டாயின. மன்னனின் ஆணையைவிட, பிரிட்டோவின் வேண்டுகோள் மக்களிடையே எடுபடலாயிற்று.

3. மன்னனுக்கு அடுத்த நிலையிலிருந்தவனாகிய தடியத்தேவன் என்பான் கிறித்துவத்தை ஏற்றது, பிரிட்டோவின் முயற்சிகளுக்கு முத்தாய்ப்பாய் விளங்கியது. இந்நிகழ்வு சேதுபதிக்கும் பேரிடியாய் அமைந்தது.

4. சேதுபதியினுடைய தங்கையின் மகளை தடியத்தேவன் மணந்திருந்தான். தடியத்தேவனுக்கு இவள் ஐந்தாவது மனைவியாவாள். பிரிட்டோவின் அறிவுரையின்படி, தடியத்தேவன் தனது முதல் மனைவியைத் தவிர்த்து, மற்றவர்களை விலக்கிவிட்டான். இதனால் சினமுற்ற சேதுபதி, பிரிட்டோவின் மீது வெறுப்புற்றான்.

5. தடியத் தேவனைத் தன் வயப்படுத்த சேதுபதி மேற்கொண்ட முயற்சிகள் வீணாயின. தடியத்தேவனுக்கு, சேதுபதியின் குடும்பத்திலிருந்த செல்வாக்கும், மக்கள்பால் அவனுக்கிருந்த பிணைப்பும், தடியத்தேவனை ஒறுக்க இடமளிக்கவில்லை.

6. ஒருமுறை இராமேசுவரத்திற்குச் சமயவிழா வொன்றில் கலந்து கொள்ளச் சென்ற சேதுபதி, இடைவழியில் வந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சியுற்றான். தடியத்தேன் ஆட்சியைப் பிடிப்பதற்கான திட்டங்கள் இராமநாதபுரத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிந்த சேதுபதி, உடன் தன் பயணத்தை நிறுத்திவிட்டு தலைநகர் திரும்ப வேண்டியதாயிற்று.

7. தடியத்தேவனுக்கு அறிவுரைகள் வழங்கி, அவனை மன்னனாக்க எடுக்கப்பட்ட திரை மறைவுப் பணிகளுக்கு பிரிட்டோவே கரணியம் என்று கருதிய சேதுபதி, பிரிட்டோவின் உயிரைப் பறிக்கவும் துணிந்தான்.

8. தடியத்தேவன் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள அச்சப்பட்டு, பிரிட்டோவைக் கைது செய்ய ஆணையிட்டான். பிரிட்டோ கைது செய்யப்பட்ட செய்தி மறைவாகவே வைக்கப்பட்டிருந்தது. இதனால் முறையான நீதிமன்ற நடவடிக்கைகள் கூட மேற்கொள்ளப்படாமல், ஓரியூருக்குப் பிரிட்டோவை அனுப்பிக் கொலை செய்வித்தான்.

9. பிரிட்டோவைக் கொலை செய்ததற்கு அடிப்படைக் கரணியம் அரசியலே என்பது சத்தியநாதையருடைய கருத்தாகும்.

பத்தாண்டுகள் மறவநாட்டில் பணியாற்றிய பிரிட்டோவை, சேதுபதி ஒன்றும் செய்துவிடவில்லை. தனது ஆட்சியைக் கவிழ்க்க பிரிட்டோ சூழ்ச்சி செய்கிறார் என்பதை அறிந்த சேதுபதி பிரிட்டோவைக் கொலை செய்யவும் துணிந்தான். பிரிட்டோவும் தனது திட்டத்தை மறைமுகமாகவே செயலாற்றி வந்துள்ளார். இராமநாதபுரத்தில் ஒரு கிறித்துவ அரசைத் தோற்றுவித்துவிட்டால், மிக எளிதாகக் கிறித்துவத்தைப் பரப்பி விடலாம் என்ற பிரிட்டோவின் எண்ணம், கிறித்துவ நோக்கில் மிகச் சரியானதும், கடும் முயற்சிகளை உள்ளடக்கியதுமாகும். அவ்வாறு ஒருவேளை பிரிட்டோவின் எண்ணம் ஈடேறியிருந் தால் தமிழகத்தில், குறிப்பாகத் தென் மாவட்டங்களின் கிறித்து வர்களின் எண்ணிக்கை பெருமளவில் கூடியிருக்கலாம்.

பிரிட்டோ தனது முயற்சியினை சிறிதுகாலம் தள்ளிப் போட்டிருக்க வேண்டும் எனவும், கனியாத காலத்தைத் தேர்வு செய்துவிட்டார் என்றும் சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின் றனர். இறுதியாக பிரிட்டோ கைதுசெய்யப்பட்ட போது கூட, அவர் விடுதலை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் சிறிதளவு இருந்தது என்றும், அதனைச் செயல்படுத்த விடாமல் பிரிட்டோவே தடுத்து விட்டார் என்றும் சிலர் கருதுகின்றனர். பிரிட்டோவிற்கு இளமையிலிருந்தே, தான் கிறித்துவ சமயத்துக் காகத் தனது இன்னுயிரையும் இழக்கும் நிலை வரவேண்டு மென ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தார் எனவும், அவ்வாய்ப்புக் கிட்டியவுடன் அச்சூழலிலிருந்து வெளியேற பிரிட்டோ விரும்ப வில்லை என்றும் கூறப்படுகின்றது. இம்முறை அவர் விடுதலை யாகியிருந்தால், மறவநாட்டின் வரலாறே மாறிப்போயிருக்கும்.

தடியத்தேவனுக்கு அரசியலில் இருந்த செல்வாக்கும், அரசு அலுவலர்கள் நிலையிலிருந்த நல்லுறவும், அடுத்த மன்ன னாகத் தடியத்தேவனையே முன்னிறுத்தியிருந்தன. படையின ரிடையே ஒரு பிளவைத் தோற்றுவித்து, மதுரை நாயக்கர்களின் உதவியை தடியத்தேவன் பெற்றிருந்தால், மிக எளிதாக சேது பதியை வீழ்த்திருக்க முடியும். நாயக்க அரசி மங்கம்மாளும் சேதுபதியின் நடவடிக்கைகளால் எரிச்சலுற்றிருந்தாள் என்பதால் சேதுபதியை மன்னர் கட்டிலிலிருந்து நீக்க அவளும் நாள் பார்த்துக் கொண்டிருந்தாள். சேதுபதி பிற்காலத்தில் இறந்து பட்டவுடன், இராமநாதபுரத்தில் ஏற்பட்ட அரசியல்

குழப்பங்கள், மேற்கண்ட செய்திகளுக்குள் எவ்வாறு உண்மையாயிருந்தன என்பதை விளக்குகின்றன. ஒரு கிறித்துவ அரசு இராமநாதபுரத்தில் உருவாக வேண்டிய சூழலை, பிரிட்டோ வேதசாட்சி (Martyr) என்ற தியாகத்துக்கு விலையாகக் கொடுத்து விட்டார் என்ற கருத்தும் வரலாற்றாசிரியர்களிடையே உண்டு.

பிரிட்டோவுக்குப் பின் வந்த ஆண்டுகள், கிறித்துவம் மறவ நாட்டில் மிக ஆழமாக வேரூன்றிவிட்டதை அறிவிக்கின்றன.[181] இப்படியொரு மாபெரும் மாற்றத்தை மறவநாட்டில் நிகழ்த்தி விட்டோம் என்ற வெற்றிச் செய்தியைக் கேட்க, பிரிட்டோ அப்போது உயிருடன் இல்லை. தன்னால் கிறித்துவ சமயத்துக்கு மாற்றப்பட்ட மக்களின் எண்ணிக்கைக்கூட பிரிட்டோவுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஏறக்குறைய ஓரிலக்கத்தையும் தாண்டிய கிறித்துவர்களை, பிரிட்டோவின் சமயப்பணிகள், மதுரை மிஷன் என்ற தலைமைக்கு பெற்றுத் தந்தன எனக் கருதலாம். ஒரு வரலாற்றுத் திருப்பத்தைப் பிரிட்டோ மறவநாட்டில் நிகழ்த்திக் காட்டினார் என்பது மறுக்க இயலாத உண்மையாகும். சேவியருடன் இணைத்துப் பேசப்படும் அளவிற்கு உயர்ந்து நிற்கும் பிரிட்டோ, இன்றும் தமிழக மக்களின் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

✧✧✧

181. Ibid.

22

அய்யம் பேட்டையில் வீரமாமுனிவர்

கி.பி. 1710ஆம் ஆண்டு தமிழகம் வந்த வீரமாமுனிவர் என்று தமிழ் கூறும் நல்லுலகம் அழைத்த ஜோசப் கான்ஸ்டண்டைன் பெசுகி, தனது நுண்ணிய அறிவாற்றலால் பல்வேறு வரலாறு களைத் தமிழகத்தில் படைத்தவராவார். 1747 வரை வாழ்ந் திருந்த[182] மாமுனிவரின் வாழ்க்கை வரலாறு இன்னும்கூடத் தெளிவாக்கப்படவில்லை என்பது ஒரு குறையே எனலாம். மாமுனிவர் எழுதிய கடிதங்களும் குறிப்புகளும் பாரீசு, இலிசுபன், உரோமை போன்ற நகரங்களில் இன்றும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அவைகளில் பல இன்னும்கூடப் படிக்கப் படாமலும், வெளியிடப்படாலும் உள்ளன என்பது நெருட லான செய்தியாகும்.[183] அவைகளையெல்லாம் தொகுத்து அவற்றில் புதைந்து கிடக்கும் வரலாற்று, இலக்கிய வளங்களை வெளிக்கொணர இதுவரை எவரும் முயற்சிகள் மேற்கொள்ள வில்லை. இவைகளை வெளிக்கொணர வாய்ப்புள்ள பொறுப்பு களில் இருப்போருக்கு அதுபற்றிய சிந்தனைகள் இல்லை யென்பதும், அறியவேண்டும் எனத் துடிப்போருக்குச் சரியான பின்புலம் இல்லையென்பது கண்கூடு. திருத்தந்தை அமுதன் அடிகள் தன்னளவில் முயன்று பல செய்திகளை வெளிப்படுத்தி யுள்ளார் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.[184]

தந்தை பெசி என்பார் எழுதியுள்ள வீரமாமுனிவர் பற்றிய நூலில், அய்யம்பேட்டையில் நிலவிய சிக்கலான ஒரு சூழலைச் சரிசெய்வதற்காக, வீரமாமுனிவர் அங்கு அனுப்பப்பட்ட

---

182. பேராசிரியர் முனைவர் பா.வளன் அரசு தரும் குறிப்புகள்.

183. மேலதே.

184. தந்தை அமுதன் அடிகளின் குறிப்புகள் மற்றும் சொற்பொழிவுகள் மாமுனிவரின் 325 ஆம் பிறந்தநாள்விழா, ஏலாக்குறிச்சி, 7.11. 2005.

தாகக் குறிப்பிடுகின்றார். இச்சூழல் பற்றி ஏற்கனவே விளக்கப் பட்டுள்ளதால், அதனை விடுத்து, அடுத்து அய்யம்பேட்டை என்ற கிறித்துவ பங்குத்தளத்தை மாமுனிவர் உருவாக்கிச் சென்ற வரலாற்றைக் காணலாம். 1711-12 ஆண்டுகளில், ஒன்றரை ஆண்டுகளே மாமுனிவர் அய்யம் பேட்டையிலிருந்ததாகவும், அய்யம்பேட்டைப் பங்கின்முதல் குருவானவரும் அவரே எனவும் குறிப்புகள் கூறுகின்றன. அதற்கு முன்பு அங்கு பணியாற்றியவர் களின் பெயர்கள் ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டன. பிளவுபட்டிருந்த கிறித்துவர்களை ஒருங் கிணைத்து அய்யம்பேட்டையில் ஒரு புதிய வரலாற்றை தொடங்கி வைத்தவர் வீரமாமுனிவரே என்பதால், இன்னும் கூட, மாமுனிவரின் நினைவுத் தாக்கங்கள் அய்யம்பேட்டை மக்களிடையே சுழன்று கொண்டிருக்கின்றன எனக் கருதலாம். ஏலாக்குறிச்சிக்கும் கோனான் குப்பத்துக்கும் திருப்பயணங்கள் மேற்கொள்ளும் அய்யம்பேட்டை மக்கள் மாமுனிவரின் வேண்டுகோளை ஏற்றே 300 ஆண்டுகளாக, இப்பயணங்களைத் தொடர்ந்து வருகின்றனர்.[185] நீத்தாரின் இறுதி ஊர்வலத்தில் மாமுனிவரின் கருணாம்பரப்பதிகம் இப்பகுதி மக்களால் இன்றும் பாடப்பெற்று வருகின்றது.[186] திருமணத்தில் உபதேசியார் வாழ்த்தும் சமற்கிருத மந்திரம், மாமூனிவரால் எழுதித் தரப்பட்டதாகவே அறியப்படுகின்றது.[187]

வீரமாமுனிவர் அய்யம் பேட்டையில் இரண்டாண்டுகள் பணியாற்றியதாகக் குறிப்புகள் கூறினாலும், 1717 முதல் 1742 ஆம் ஆண்டு வரையிலும், தொடர்ந்து மாமுனிவர் அய்யம் பேட்டைக்கு வந்துபோய்க் கொண்டிருந்தார் எனச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. பிற்காலத்து வரலாற்றாசிரியர்கள், அய்யம்பேட்டைத் தொடர்பான பல செய்திகள் விடுவித்துள் ளனர் என்பதை அறிய முடிகின்றது. வீரமாமுனிவரின் இதயத் தில், தனது முதல் பங்குத் தளமான அய்யம்பேட்டையும், அங்கு வாழ்ந்திருந்த மக்களும் நீங்கா இடம்பெற்றிருக்கும் என்பது உறுதி. எத்தனையோ ஊர்களையும், நாடுகளையும், மக்களை யும் தனது வாழ்நாள்களில் கண்ட மாமுனிவருக்கு, அய்யம்

185. வரலாறும் வழக்காறும்.

186. மேலதே.

187. தென்னூர் மரிய நாதன் அளித்த செய்தியின் படி.

பேட்டையில் பசுமையான நினைவுகள், தமது வாழ்நாள் வரையில் நிழலாடிக் கொண்டிருந்தன எனவும் கருதலாம்.

அய்யம்பேட்டையில் தற்போது காணப்படும் சிற்றாலயம் வீரமாமுனிவரால் கட்டப்பட்டதே என்று உறுதியாகக் கூற லாம்.[188] மாமுனிவர் காலத்திலேயே மூவாயிரத்துக்கும் குறை யாத கிறித்துவ மக்கள் அய்யம்பேட்டையில் வாழ்ந்துள்ளனர். இவ்வளவு பெரிய மக்கள் தொகையை கொண்டிருந்த அய்யம் பேட்டையை விடுத்து, எய்யாலூரில் ஆலயமொன்றை மாமுனிவர் அமைத்தார் என்ற தவறான செய்தியை வரலாற் றாசிரியர்கள் கொடுத்துள்ளனனர். எய்யலூர் அவரது பணித் தளமே யன்றிப் பங்கு தளமல்ல என்பதை அவர்கள் அறிய வில்லை.[189] பிரிட்டோவுக்கும் பிறகு 40 ஆண்டுகள் கழித்தே மாமுனிவர் இப்பகுதிக்கு வந்துள்ளார் என்றாலும் மிகப் பெரிய மாறுதல்கள் இவ்விடைக்காலத்தில் நிகழ்வுற்றுன.

மாமுனிவரின் தமிழ்ப்பணிகள் குறித்து, ஏற்கனவே ஆசிரியரின் தமிழ்நாட்டுக் கிறித்துவம் - பகுதி 1 என்ற நூலில் விளக்கப்பட்டுள்ளன. கம்பனுக்கும் கூத்தனுக்கும் இணையாகத் தம்மாலும் காவியங்கள் இயற்ற முடியும் என்பதை மாமுனிவர் மெய்ப்பித்துள்ளார். மாமுனிவரின் சொல்லாட்சிக்கு சதுரகராதி என்னும் சொல்லகராதியே சான்றளிக்கும். பன்மொழிகளில் விற்பன்னரான மாமுனிவர் மொழியுலகின் சித்து விளையாட்டுக் காரர். முனிவரைப் பற்றி தமிழ்த்தாத்தா உ. வே.சா., நாமக்கல் கவிஞர், தூத்துக்குடி சுந்தரம் போன்றோர் பல்வேறு செய்தி களை அளித்துள்ளனர். இருப்பினும் புதுப்புதுச் செய்திகளைத் தோண்டித் துருவி திருத்தந்தை அமுதன் அடிகள் கொடுத்துள் ளார். மாமுனிவரின் இலக்கிய மாண்புகளைப் பேராசிரியர்

---

188. தந்தை ரேமண்ட் மிஷோத்தின் குறிப்புகளின் படி, தந்தை மரியசூசை தரும் செய்தி.

189. வரலாறும் வழக்காறும், அணிந்துரை, முனைவர் அருள் திரு ச.இராசமாணிக்கனார், சென்னை.

189. அய்யம் பேட்டையைச் சுற்றியிருந்த எய்யலூர், கோடாலி போன்ற ஊர்களிலும் முனிவரின் சமயப்பணிகள் தொடர்ந்தன. மொகலாய அரசன் கொடுத்த நன்கொடை, பாளையங் கோட்டையில் இருந்த படைத்தலைவன் கொடுத்ததாகவே கொள்ளவேண்டும்.

வளன் அரசு விளக்கி மகிழ்ந்துள்ளார். பேராசிரியர் இன்னாசி மாமுனிவரின் சொல்லாட்சியை நிறுவுகிறார். இன்னும் கூட மாமுனிவரின் வெளியிடப்படாத மடல்களும் குறிப்புகளும் வெளிக்கொணரப்படல் வேண்டும். அதற்குத் தமிழகத்தின் சமயத்தலைவர்கள் ஒத்துழைக்கவேண்டும். குறிப்பாக இயேசு அவையினர் இதனை முன் முயற்சியாகக் கொள்ளவேண்டும்.

இந்த அளவில், வீரமாமுனிவரது தமிழ் இலக்கிய வளங்களை வெளிக்கொணர்ந்து தமிழ் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில், தற்போது ஏலாக்குறிச்சியின் பங்குத் தந்தையாகப் பணியாற்றி வரும் திருத்தந்தை அகத்தியன் அடிகள் முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். முனிவர் படைத்த இலக்கியங்கள் தொடர்பான மாநாடுகளையும் கருத்தரங்குகளையும், கவியரங்கங்களையும் ஏலாக்குறிச்சியில் ஆண்டுதோறும் நடத்திவருகின்றார். முனிவர் தொடர்புடையச் செய்திகளைத் தாங்கி நிற்கும் மாமுனிவர்வரின் அருங்காட்சியகத்தையும் அண்மையில் உருவாக்கியிருக்கின்றார். மாமுனிவர் தொடர்பான பல செயல்திட்டங்களையும் வகுத்துக்கொண்டிருப்பதாகக் கூறுகிறார். திருத்தந்தை அகத்தியன் அடிகளின் செயல்பாடுகள் வெல்லட்டும் என வாழ்த்துவோம்.

பிரிட்டோவும் பெசுகியும் கொழை- அய்யம்பேட்டையில் பூத்துக்குலுங்கும் புது மணம் கமழ்வித்த புனிதமான மலர்கள். பாருள்ளளவும், காருள்ளளவும், அய்யம்பேட்டை ஊருள்ளளவும், இவ்விரெட்டையர்களின் புகழ் என்றும் நிலைத் திருக்கும் என்பது உறுதி. 1712ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட கிறித்துவர்கள் அய்யம்பேட்டையில் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரலாயினர். இந்த ஒற்றுமைக்கு 1773ஆம் ஆண்டில் ஊறு ஏற்பட்டது. வீரமாமுனிவரால் கட்டிக்காக்கப்பட்ட ஒற்றுமையுணர்வுக்கு அவர் மறைவுக்கு 25ஆண்டுகள் கழித்து இடைஞ்சல் ஏற்பட்டது. 1773ஆம் ஆண்டுமுதல் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலம் அய்யம்பேட்டையில் பெருங்குழப்பம் நீடித்தது. இக்குழப்பங்களுக்கெல்லாம் அடிப்படைக் கரணியம் கிறித்துவர்கள் அல்லர் என்பதுதான் மெய்யான நிலைப்பாடுகளாகும்.

✧✧✧

25

இயேசு அவையினரும் பிரெஞ்சுக் குருமார்களும்

கி.பி. 1502ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த பிரான்சிசுகன் துறவிகள் தங்களுடைய சமயப் பணிகளைத் தமிழகமெங்கும் செய்து வந்தனர். போர்த்துக்கீசியர்களான இத்துறவிகளுக்கும், சிரியன் கிறித்துவத் தலைமைக்கும் தொடக்கத்திலிருந்தே சரியான உணர்வுகள் அமையவில்லை. கேரளத்தின் சிரியன் கிறித்துவ வழிபாட்டு முறைகள் ஐரோப்பிய வழிபாட்டு முறை களுக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தன. ஐரோப்பிய வழிபாட்டு முறைகளே. சரியான கிறித்துவ வழிபாட்டுமுறைகளென. போர்த்துக்கீசியர்கள் கருதினர். தோமையார் காலத்துக் கிறித்து வர்களான சிரியன் கிறித்துவர்கள், போர்த்துக்கீசியர்களைப் பறங்கியர் என்று வெறுத்தனர்.[190]

கி.பி. 1542ஆம் ஆண்டிற்கும் பிறகு தமிழகம் வந்த இயேசு அவையினருக்கும் பிரான்சிசுகன் துறவிகளுக்கும் இடையே கூட நல்லுறவு அமையவில்லை. இருவரும் இருவேறு குழுத் தலைமையின்கீழ் பணியாற்றியதால் தத்தம் குழுத்தலைமையின் அறிவுரைகளின்படியே செயல்பட்டனர். அடுத்து ஒரு நூற் றாண்டுக் காலத்தில் இவ்விரு குழுக்களுக்குமான உறவுகள் நெருடல்களாகவேயிருந்தன. பிரான்சிசுகன் துறவிகளின் பணி யிடங்களிளெல்லாம் இயேசு அவையினர் உரிமை கொண் டாடினர். பிரான்சிசுகன் துறவிகளின் எண்ணிக்கை இயேசு அவையினரைக் காட்டிலும் குறைவாகவேயிருந்ததால் தங்கள் மனக்குறைகளை வெளியிடத் தயங்கினர்.[191] பிற்காலத்தில்

---

190. Early Christianity in India, p.

191. Portuguese in the Tamil Coast, Evangelisation by the Padroado Missionaries, p. 279.

இயேசு அவையினருக்கும் இதுபோன்ற நிலை ஏற்படும் என அவர்கள் கனவிலும் கருதவில்லை.

இயேசு அவை

கி.பி. 13ஆம் நூற்றாண்டு, உலகக் கிறித்தவ வரலாற்றில் திருப்பங்கள் நிறைந்ததாகும். அதுநாள் வரையிலும் எதிர்க் கேள்விக் கேட்பாரில்லாமல் வளர்ந்துவந்த கத்தோலிக்கத் திருச்சபை, இந்த நூற்றாண்டில் மார்ட்டின் லூதர் என்ற துறவி யால் அசைத்துப் பார்க்கப்பட்டது. திருச்சபையின் மெய்யியல் கொள்கைகளுக்கும் புதுவிளக்கம் கொடுத்த லூதர் சிலவற்றை ஏற்கவும் மறுத்தார். இதனால் சினமுற்ற கத்தோலிக்கத் திருச்சபை, லூதரை சமயத்தினின்றும் விலக்கியது. மார்ட்டின் லூதர் தனிவழியைக் கண்டு புதிய திருச்சபையைத் தனக்குத் தானே உருவாக்கிக் கொண்டார். லூதரின் இந்த அசைவு களால் கத்தோலிக்கத் திருச்சபை மட்டுமின்றி, ஐரோப்பிய அரசுகளும் கூட ஆடிப்போயின. சமயத்தின் பேரால் ஏற்பட்ட கொந்தளிப்பில் ஏராளமானவர்கள் தமது இன்னுயிர்களை இழந்தனர். ஒரு நூற்றாண்டுக் காலம் ஐரோப்பா போர்களம் போல் காட்சியளித்தது. தாக்குதல்களும் எதிர்த்தாக்குதல்களும் எங்கும் தொடர்ந்தன. உலகக் கிறித்துவ வரலாற்றின் கறை படிந்த பக்கங்களாகவே இவை காட்சியளிக்கின்றன.

சமயச் சீர்த்திருத்தம் என்ற பெயரால் தொடங்கப்பட்ட லூதரின் இயக்கத்துக்கு, தனிமாந்த விருப்பு வெறுப்புகளும், பொருளியல் மற்றும் அரசியல் கூறுகளுமே அடிப்படைகளா யிருந்தன. ஐரோப்பாவெங்கும் பரந்து விரிந்து கிடந்த கத்தோலிக்கத் திருச்சபையின் சொத்துக்களை, மன்னர்கள் கூடத் தொட்டுப்பார்க்க இயலாத நிலை இருந்தது. மன்னர் களுக்கும் மன்னராகப் போப்பாண்டவர் திகழ்ந்தார்.

போப்பாண்டவரின் அமைதியின்றி எந்த ஐரோப்பிய மன்னரும், ஓரசைவை கூடச் செய்ய இயலாத நிலையிலிருந்தனர். லூதரின் செயலால் மன்னர்கள் மகிழ்ந்தனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கத்தோலிக்கத் திருச்சபையின் ஏராளமான சொத்துக்கள் மன்னர்களின் கைகளுக்கு மாறின. குறிப்பாக செர்மனியிலிருந்த மன்னனும் பிரபுக்களும் ஆயிரக்கணக்கான வேலி நிலங்களைக் கைப்பற்றிக் கொண்டனர் மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்ற கொள்கைக்கேற்ப லூதரின் பிரிவினைத்

திருச்சபைக்கு வலுவூட்டப்பட்டது. ஆயிரக்கணக்கில் மக்கள் லூதரின் பின்னால் செல்வதைக் கண்ட கத்தோலிக்கத் திருச்சபையின் உண்மையான பற்றாளர்கள் துணுக்குற்றனர். இப்போக்கை உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால் உரோமன் கத்தோலிக்கச் சமயமே அழிந்துபோகும் என்று அஞ்சினர். இத்தரணியங்களின் அடிப்படையில் தொடங்கப்பட்டதே இயேசு அவை என்ற அமைப்பாகும்.

இக்னேசியஸ் லொயோலா:

இனிகோ லோபஸ் தெ ரிகால்தே (Inigo Lopez de Recalde) என்ற இயற்பெயர்க் கொண்ட லொயோலா ஸ்பெயின் நாட்டின் வடபகுதியான பாஸ்க் என்ற பகுதியில் (Guipuzeoa) பிறந்தார்.[192] லொயோலா என்பது ஓர் ஊரின் பெயராகும். போர்ப்படையில் சேர்ந்து மன்னருக்காகப் போரிட்ட லொயோலா, போரில் தனது ஒற்றைக்காலையிழந்தார். மருத்துவமனையில் படுத்திருந்த லொயோலாவுக்குப் புதிய சிந்தனைகள் தோன்றின. உலகமெல்லாம் தன்னுடைமையாக்கிக் கொண்டாலும் ஒருவன் தன் ஆன்மாவை இழந்து போனால், அதனால் பயனேதுமில்லை என்ற இயேசு கிறித்துவின் சொற்கள், அவரது வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்தன. இவ்வுலகியலுக்காகப் போரிடுவதை விடுத்து இயேசுவுக்காகப் போராடத்துணிந்தார். 1522ஆம் ஆண்டில் எருசலேம் நகருக்குப் பயணம் மேற்கொண்டார். தனது கொள்கையை ஏற்றுக்கொண்ட மேலும் சிலருடன் சேர்ந்து 1534ஆம் ஆண்டில் இயேசு அவை (Socity of Jesus) என்ற சங்கத்தை நிறுவினார்.[194] இந்த அறுவரில் பிரான்சிசு சேவியரும் ஒருவராவார். இச்சங்கத்தைப் போப்பாண்டவர். 1539ஆம் ஆண்டில் செயல்பட அனுமதி அளித்தார்.[195] 1540 ஆண்டிலிருந்து முறைப்படி இச்சங்கம் செயல்படத் தொடங்கியது.[196]

1540 முதல் 1773 வரையிலான காலத்திலும் அதற்குப் பின்னரும் இயேசு அவையினரின் செயல்பாடுகள் உரோமன்

---

192. The Cambridge Encylopaedia, London.p.

193. Ibid.

194. Ibid.

195. Ibid.

196. Ibid.

கத்தோலிக்கத் திருச்சபைக்கு வலுசேர்த்தன, மக்கள் பணி சமூகப்பணி, கல்விப் பணி, இவற்றிற்கும் மேலான சமயப் பணி ஆகியவைகளால் இயேசு அவையினர் உலக வரலாற்றில் மிக உயந்த இடத்தைப் பிடித்துள்ளனர் இயேசு அவையினர் தம் கால்களைப் பதிக்காத உலக நாடுகளே இல்லையெனக் கூறலாம். தங்கள் பணிகளால் தங்கள் சங்கம் புகழ் பெற்றதைவிட கத்தோலிக்கச் சமயம் புகழைப் பெற்றுப் பெருமையடைந்தது. குறிப்பாகத் தமிழகத்தில் இயேசு அவையினரின் பணிகள் ஈடிணையற்றவை. இன்றுள்ள கிறித்துவ மக்களில் பெரும் பாலோர் இச்சங்கத்தினரால் சமயமாற்றச் செய்யப்பட்டவர்களே.

கத்தோலிக்கத் திருச்சபையைக் கட்டிக்காக்கும் பணியில் இயேசு அவையினர் நடத்திய தீர்ப்பு மன்றங்கள் (Inguisition Court) இச்சங்கத்தினரின் வரலாற்றில் கறைபடிந்த பக்கங்களைக் கொண்டதாகும்.[197] போப்பாண்டவர் ஒன்பதாம் கிரகோரி இம் மன்றங்களை நடத்த அனுமதியளித்தார். இதனைத் தவிர்த்த செயல்பாடுகள் அனைத்தும் இயேசு அவையினருக்கும் பெருமை சேர்ப்பனவாகும். லொயோலா தொடங்கிய இச்சங்கம், மிகக்குறுகிய கால அளவுகளிலேயே பெரும் வளர்ச்சியைப் பெற்றது. ஒரு அமைப்பை இளைஞர்களுக்காகவே உருவாக்கி அவர்களின் அளப்பரிய ஆற்றல்களை மடைமாற்றம் செய்து, கிறித்துவ உணர்வைச் செங்குருதியில் பாய்ச்சி, ஒரு தற்கொலைப் படை போன்ற தன்னலமற்ற இளைஞர்களை அவ்வமைப்பில் இணைத்து, கிறித்துவத்துக்குத் தூணாகவும் அரணாகவும் நின்ற இயேசுஅவையின் தலைவரான லொயோலா இக்னேசியஸ் வரலாற்றுச் சிறப்புமிக்க மாந்தராவார்.

மிகவும் நெருக்கடியான காலத்தில் போப்பாண்டவரின் போர்ப்படைத் தளபதி போலவும் வலதுகரமாகவும் விளங்கிய இயேசுஅவை பிற்றைநாளில் பல்வேறு கரணியங்களால் போப்பாண்டவராலேயே பணிமுடக்கம் செய்யப்பட்டதும் தடை செய்யப்பட்டதும் கிறித்துவ வரலாற்றில் வருந்தத்தக்க நிகழ்வாகும். இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் தொலை கிழக்கு நாடுகளிலும் இயேசு அவையினரின் செயல்பாடுகள் முடக்கப்பட்டபோது போப்பாண்டவரின் ஆணைக்குக் கட்டுப் படவும் பலர் மறுத்தனர். தங்களுடையத் தலைவர் போர்த்துக்கல்

---

197. Ibid,

மன்னரே என்றும் போப்பாண்டவர் அல்லர் என்றும் வெளிப் படையாகவே அறிவித்தனர். இவர்கள் மீது நடவடிக்கை மேற் கொள்ளவும் சமயத்தைவிட்டு விலக்கி வைக்கவும் கத்தோலிக்கத் திருச்சபை திணறியது. இக்கட்டான இக்கால நிகழ்வுகளில் இவர்களுக்கு வழிகாட்ட இக்னேசியஸ் போன்ற தலைவர் களும் இல்லாமற் போயினர். ஐரோப்பாவில் தொடங்கிய இக்குழப்பம் அய்யம் பேட்டையிலும் எதிரொலித்தது.

இயேசு அவை முடக்கம்

போர்த்துக்கல் மன்னருக்கும் போப்பாண்டவருக்கு மிடையே எழுந்த கருத்து வேறுபாடுகள் தமிழகத்தின் சமயப் பணிகளையும் முடக்கிப்போட்டன. இதுவரையில் போர்த்துக்கல் மன்னரின் செலவில் செயல்பட்டு வந்த இயேசு அவையினர் போன்று பிரெஞ்சுக் குருமார்களின் தமிழகச் செலவுகளைப் போர்த்துக்கல் மன்னர் ஏற்க மறுத்துவிட்டார். கி.பி. 1749ஆம் ஆண்டில் போர்த்துக்கல் மன்னர் இமானுவேல் இயேசு அவையைச் சேர்ந்த சில துறவிகளைமீது ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொண்டார்.[198] இதற்கும் பின்னணியில் அமைச்சர் போம்பால் என்பவர் இருந்ததாக இயேசு அவை யினர் ஐயுற்றனர் மன்னரை தம் போக்கில் இழுக்க முயன்ற இயேசு அவையினர் தோல்வியையே கண்டனர். அமைச்சர் போம்பால் போப்பாண்டவரின் அன்பையும் அரவணைப்பையும் பெற்றிருந்தவர். தனக்குச் சரியென்றுபட்டதைத் துணிந்து செய்யும் ஆற்றலுள்ளவர். போப்பாண்டவரின் செயல்களுக்கு அமைச்சர் மறைமுகமான ஒத்துழைப்புகளை அளித்துவந்ததாக இயேசு அவையினர் கருதினர். இறுதியாக, 1773ஆம்ஆண்டு இயேசு அவையினரின் செயல்பாடுகள் நிறுவப்பட்டன.[199]

இது நாள் வரையிலும் தமிழகத்தின் பங்குத்தளங்களில் பணியாற்றி வந்த இயேசு அவையிரை உடனடியாக வெளி யேற்றுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவ்விடங்களில் பிரெஞ்சுக் குருமார்கள் பணியிலமர்த்தப்பட்டனர். பல இடங் களில் இயேசு அவையினர் வெளியேற மறுத்தனர்.[200] இவர் களுக்கு அப்பங்குகளின் கிறித்துவர்களின் சார்புடையோரா

198. வரலாறும் வழக்காறும், ப. 58.

199. மேலதே.

200. மேலதே, ப. 59.

யிருந்தனர். அக்காலத்துக் தமிழகக் கிறித்துவர்களுக்கு அதிமுக மாயிருந்த இயேசு அவையினரை வெளியேறவிடாமல் கிறித்து வர்களே அரண்போன்று நின்றனர். மக்களோடு மக்களாகப் பழகி, பங்கு மக்களை ஒரு குடும்பம் போலக் கருதிச் செயல்பட்டு வந்த இயேசு அவைக் குருமார்களை வெளியேற்ற இயலாமல் பிரெஞ்சுக் குருமார்கள் தவித்தனர். உணர்வுகளின் பிடிப்பி லிருந்த கிறித்துவர்கள் திருச்சபையின் சட்டங்கள் பற்றியோ போப்பாண்டவரின் ஆணைகள் பற்றியோ சிந்திக்கவில்லை.

பிரெஞ்சுக் குருமார்கள்

அய்யம்பேட்டை மக்களும் இந்த மன உணர்வுகளில் தான் இருந்தனர். பிரிட்டோ பெஸ்கி போன்ற மிகச்சிறந்த பண்பாளர்களின் வழிகாட்டுதலில் வளர்ந்திருந்த அய்யம் பேட்டைக் கிறித்துவர்கள், போப்பாண்டவரைவிட இயேசு அவைத் துறவிகளே தங்களுக்கான வழிகாட்டிகள் என அறிவித் தனர். பிரெஞ்சுக் குருமார்களை ஊருக்குள் வர அனுமதிக்க வில்லை. இவ்வூர் ஏற்கனவே மயிலாப்பூர் ஆயத்திற்குட்பட் டிருந்தது. 1650 ஆண்டுகளில் கொழையில் கிறித்துவர்களின் குடியேற்றங்கள் தொடங்கின. 1711ஆம் ஆண்டில் கொழை அய்யம் பேட்டைப் பகுதிகள் இணைக்கப்பட்டடன. அதே ஆண்டில் மயிலாப்பூர் ஆயத்தில் அய்யம்பேட்டை பங்குத்தள மாகவும் அறிவிக்கப்பட்டது. இச்சூழலில் இயேசு அவையினரின் பிடிப்பு அய்யம் பேட்டையில் வலுவுற்றிருந்தது என்பதும் தெளிவு. பிரெஞ்சுக் குருமார்கள் அய்யம் பேட்டைக்கு வந்த போது அவர்களை வேற்றுச் சமயத்தினர் போன்றே அம்மக்கள் கருதினர்.

1773-1801 ஆகிய கால அளவுகளில், பன்முறையும் அய்யம் பேட்டையில் பிரெஞ்சுக் குருக்களின் நுழைவு தடுக்கப்பட்டது. இதே கால அளவில் அய்யம்பேட்டை மக்களிடையே காணப் பட்ட ஒற்றுமையைக் குலைக்கவும் திரை மறைவில் பணிகள் தொடங்கின. புதுச்சேரியில் தங்கியிருந்த பிரெஞ்சுக் குருக்கள் காப்பிரி நாட்டார் என்பாரைத் தம் வயப்படுத்தி அய்யம் பேட்டைக்கு தெற்கே குடியேறச் செய்தனர்.[201] இந்த வகையில் முதல் வெற்றியைப் பெற்றனர். இக்காலத்தில் மேலும் பல குடும்பங்களையும் பிரிந்து அவர்கள் வாழ்ந்த பகுதிக்குத்

201. திரு. ஜோசப் மரியநாதனின் குறிப்புகள்.

தென்னூர் என்றுப் பெயரிட்டுக் கொண்டனர். வீரெங்கராயர் வகையறாவைக் சேர்ந்த பாப்பு நாட்டார் என்பார் தனது பங்காளிகளுடம் பல்வேறு நடப்புகளில் முரண்பட்டார். இம்முரண்பாடுகளை ஊதிப் பெரிதாக்கி, பாப்புநாட்டாரை பிரெஞ்சு குருக்கள் தம் வயப்படுத்திக் கொண்டனர்.[202] பாப்பு நாட்டாருக்கும் புதுச்சேரியில் உறவுகள் இருந்தன. இவ்வுறவுகள் வழியில் பாப்புநாட்டார் அய்யம்பேட்டைக் குருவான வரை எதிர்த்து. தனது இடத்திலேயே அற்புதமாதா பெயரில் ஒரு சிற்றாலயம் ஒன்றைக் கட்டிக் கொண்டார்.[203]

தென்னூர் என்ற புதிய குடியிருப்பு, காப்பிரி நாட்டார் என்பவராலும் வேளாண்மைச் செய்வதற்கேற்ற நிலங்கள் இருந்த பகுதியில் வாழத்தொடங்கிய அவரது மரபுவழினராலும் தோற்றுவிக்கப்பட்டதாகும். தென்னூர் குடியிருப்பு தோன்றிய காலத்தும், அப்பகுதி மக்கள் அய்யம்பேட்டையுடன் இணைந்தே இருந்தனர். அய்யம்பேட்டைக் கிறித்துவர்கள் பிரெஞ்சுக் குருக்களை ஏற்றுக் கொள்ளாத நிலையில், தென்னூர் பிரெஞ்சு குடும்பங்களுக்கு ஒரு நுழைவிடமாக மாறியது. இக்காலத்தில் பாப்பு நாட்டாரும் அவரைச் சார்ந்தவர்களான காங்கிய சவரிராய படையாட்சி, வாழ்க்கொல்லை தோட்டக் காரன் வகையறா, கோவிலண்டை வீட்டு சவரிராய படையாட்சி போன்றோரும், அய்யம் பேட்டை நாட்டார்களுடன் முரண் பட்டு, தென்னூர் காப்பிரி படையாட்சியுடன் இணைந்து கொண்டனர். தென்னூரில் புதிதாக வந்துற்ற பிரெஞ்சுக் குருவானவர், அய்யம்பேட்டைக்கு வந்து, பாப்புநாட்டாரின் சிற்றாலயத்தில் சமய வழிபாடுகள் செய்யலானார். இவ்வழி பாடுகளில் மேற்கண்ட வகையறாவினரும் கலந்துகொண்டு, தென்னூர் பகுதிக்குச் சார்புடையவர்களாய் மாறினர்.[204]

எப்படியாவது அய்யம் பேட்டையில் நுழைந்து, இயேசு அவைக் குருக்களுக்கு இடையூறுகள் செய்ய வேண்டுமெனக் கருதியிருந்த தென்னூர் குருவானவருக்கு, பாப்புநாட்டாரின் அழைப்பு நல்வாய்ப்பாய் அமைந்தது. வீரமாமுனிவரால் தோற்றுவிக்கப்பட்ட ஒற்றுமையுணர்வுகள், ஒரு நூற் றாண்டுக்குப் பிறகு உடைந்து போயின. தென்னூர் ஒரு பங்குத்

202. மேலதே.

203. மேலதே.

204. மேலதே.

தளமாக அறிவிக்கப்பட்டது. தென்னூரில் ஒரு குருவானவரும், அய்யம் பேட்டையில் ஒருவருமாக, இணக்கமற்றச் சூழலை அப்பகுதியில் உருவாக்கி விட்டனர். இவ்விரு ஊர்களுக்கு மிடையே தோன்றிய பகைமை, குருக்களால் ஊதிப் பெரிது படுத்தப்பட்டன. கிறித்துவர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டிய குருக்களே, அவர்களைப் பிளவுபடுத்தி, குழம்பிய குட்டையில் மீன்பிடித்ததைப்போன்று, தத்தம் அணிகளுக்கு வலுசேர்த்தது, கிறித்துவ வரலாற்றின் கறைபடிந்த பக்கங்களாகும். பாப்பு நாட்டார், தனது உடைமையான 25 காணி நிலத்தை, தென்னூர்ப் பங்கிற்கு உரிமையாக்கினார்.[205]

இக்காலத்தில், ஆங்கிலேய அரசு இந்தியாவில் முதன் முதலில் நில மற்றும் இட அளவுப்பணிகளை (First Survey) மேற் கொண்டது.[206] இந்த நிலைமையை நல்வாய்ப்பாகப் பயன் படுத்திக் கொண்ட பிரெஞ்சுக் குருவானவர், தென்னூரைத் தனி ஊராக அரசாங்க ஆவணங்களில் ஏற்றிவிட்டார். அய்யம் பேட்டை - தென்னூர் இடையே எல்லைக்கோடுகள் வரையப் பட்டன. அவை ஆவணங்களிலும் பதிவு செய்யப்பட்டன. தென்னூருக்கும் அய்யம் பேட்டைக்கும் இடையேயிருக்கும் ஏரியொன்று, யாருக்கு உரிமையானது என்று கேள்வி எழுந்தது. இருவரும் தத்தம் ஊருக்கே உரிமையானது என மோதிக் கொண்டனர். இறுதியில் ஆங்கில அரசு, ஏரியை இரண்டாகப் பிரித்து வட பகுதியை அய்யம் பேட்டைக்கும், தென்பகுதியைத் தென்னூருக்கும் எனப் பிரித்துக் கொடுத்தது.[207] இந்நிகழ்வால், இருவரிடையே தோன்றிய சண்டை, கைகலப்பிலும் வெடித்தது. ஏற்கனவே காப்பிரி நாட்டார், அய்யம் பேட்டைத் தேவாலயத் துக்கு மரியன்னையின் திருவுருவச் சிலையை வழங்கியிருந்தார். அச்சிலையைத் தமக்குத் திருப்பித்தர வேண்டுமென்றும், தமது உடைமையேதும் அய்யம்பேட்டையில் இருக்கக் கூடா தென்றும் முழங்கினார்.[208]

இச்சிலை தொடர்பாக மேலும் மேலும் இடையூறுகள் தொடர்ந்தன. காப்பிரி நாட்டாரின் தென்னூர் ஆட்கள்,

205. மேலதே.

206. the Aristocracy of southern india p. 203.

207. திரு.ஜோசப் மரியநாதனின் குறிப்புகள்.

208. மேலதே.

இரவிலும் கூட திருட்டுத்தனமாக வந்து சிலையை எடுத்துச் சென்று விடுவார்களோ என அச்சமும் ஐயமும் கொண்ட அய்யம் பேட்டை மக்கள், இரவு பகலாகத் தேவாலயத்தைச் சுற்றி நின்று காவல் செய்தனர்.[209] தென்னூரில் அற்புதமாதா வின் பெயரில் இருந்த ஒரு சிற்றாலயம், பிற்காலத்தில் லூர்து மாதாவின் பெயரில் பெரிதாகக் கட்டப்பட்டது. 1800 ஆண்டு களில் அய்யம்பேட்டை, மயிலாப்பூர் ஆயத்திலும், தென்னூர் புதுவை ஆயத்திலும் இருந்தனவென்று குறிப்புகள் தெரிவிக் கின்றன. பிரெஞ்சுக் குருமார்கள், எல்லா நிலைகளிலும் தென்னூரை முன்னிலைப்படுத்த வேண்டுமென்ற உறுதியுடன் செயல்பட்டனர். அய்யம்பேட்டை மக்கள், தங்களது ஆயருடன் தொடர்பு கொள்வதைவிட, தென்னூர் மக்கள் தங்கள் தலைமை யிடம் தொடர்பு கொள்வதும் எளிதாயிருந்தது. போக்குவரத்துத் தொடர்புகள் அற்ற அக்காலத்தில், மயிலாப்பூர் செல்வதும், அங்கிருந்து அறிவுரைகளைப் பெறுவதும் கடினமான முயற்சி களாயிருந்தன. 1800 ஆண்டுகளில், அய்யம்பேட்டையில் 3000 கிறித்துவர்களும், தென்னூரில் 1000க்கும் குறைவான கிறித்துவர் களும் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் பிரெஞ்சுக் குறிப்புகள் கூறும் செய்திகள், தவறானவைகளாகவே தோன்றுகின்றன. அய்யம்பேட்டையை விட மக்கள் தொகைக் கூடுதலாக தென் னூரில் இருந்ததாக அறியப்படும் செய்திகள் உண்மையற்றவை களாகும். அய்யம் பேட்டை மக்களில் பெரும்பாலோர் தென் னூருடன் இணைந்துவிட்டனர் என்ற தோற்றத்தை உருவாக்கு வதற்காகவே இவ்வாறான பொய்க் குறிப்புகள் எழுதப்பட் டுள்ளன.[210]

1750ஆம் ஆண்டுகளிலேயே ஈஸ்திரிய வகையறாவில் சாமிக்கண்ணு படையாட்சி என்பவரால் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடம் அய்யம்பேட்டையில் நடைபெற்று வந்ததாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.[211] அக்காலத்தில் இப்பகுதி யில் இருந்த ஒரே பள்ளிக் கூடம் இதுவேயாகும். தனது வீட்டிலேயே, நீண்ட திண்ணைகளை அமைத்து, அங்கே பள்ளியை நடத்தி வந்தார். மாணவர்களின் பெற்றோர்கள் அளிக்கும் உதவித் தொகையால் அப்பள்ளி நடைபெற்றது.

---

209. மேலதே.

210. குடந்தை மறை மாவட்டப் பொன்விழாமலர், 1949.

211. திரு. லாட்டு மரியநாதன் அளித்த தகவல்கள்.

சாமிக்கண்ணு படையாட்சிக்குப் பிறகு அவ்வீடு, திண்ணைக் காரர் வீடு என்றே இன்னும் அழைக்கப்படுகிறது. 1884ஆம் ஆண்டில், இப்பள்ளியில் அனைத்து மாணவர்களையும், அய்யம்பேட்டையில் தொடங்கப்பெற்ற தொடக்கப்பள்ளியில் இணைந்துவிட்டனர். அய்யம்பேட்டைத் திண்ணைப் பள்ளிக் கூடத்திற்கும் போட்டியாக, 1846ஆம் ஆண்டில் தென்னூரில் ஒரு தொடக்கப்பள்ளியை, பிரெஞ்சுக் குருமார்கள் நிறுவினர்.[212] பின்னர் அது நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது.

1886ஆம் ஆண்டில் அய்யம் பேட்டை புதுவை ஆயத்தில் இணைக்கப்பட்ட பிறகும் கூட அய்யம்பேட்டையில் ஒரு நடுநிலைப் பள்ளியைத் தொடங்க, அனுமதி வழங்கப்பட வில்லை. 1800 ஆண்டுகளில் தொடங்கி இன்று வரையிலும் கூட இவ்விரு ஊர் மக்களையும் ஒன்றுசேரவிடாமல், கத்தோலிக்கத் திருச்சபை பிரித்தாளும் சூழ்ச்சியை மேற்கொண்டு வருவது, வருந்தத்தக்க செய்திகளாகும். இவைகளை மெய்ப் பிக்கப் பல்வேறுச் சான்றுகளைக் காட்ட இயலும். ஒரே மரபைச் சேர்ந்த கிறித்துவ மக்களை, தொடக்கம் முதல் பிளவுபடுத்தி, அவர்களது ஆற்றல்களையும் வளர்ச்சியையும் தடுத்து, ஊர்ப் பிணக்குகளிலேயே மூழ்கடித்து, தங்கள் நலன்களை அறுவடை செய்து கொண்ட திருச்சபையின் குருமார்களின் இடையூறு களையும் மீறி, இன்று அவ்விரு ஊர்மக்களும் ஒற்றுமையுடன் வாழ்வது மகிழ்ச்சியான செய்தியாகும். பிரிந்துகிடந்த இவ்வூர் களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அய்யம் பேட்டை - தென்னூர்ப் பகுதிகள் இன்று வரதராசன் பேட்டை என்ற பெயரில் ஒரே ஊராட்சியாக, பேரூராட்சியாக மாற்றம் செய்யப் பட்டுள்ளது. தனித்தனி ஊராட்சிகளாகப் பிரிக்க முயன்றவர் களின் செயல்களை முறியடித்து, இவ்வூர்களின் ஒற்றுமையைக் கருதி, மேனாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் மறைந்த கா. காளிமுத்து அவர்கள், நன்னோக்குடன் 1980ஆம் ஆண்டில், பேரூராட்சியாக மாற்ற ஆவன செய்தார்.

✧✧✧

212. குடந்தை மறைமாவட்டப் பொன்விழா மலர், 1949.

23

நூறாண்டு காலக் குழப்பம்

1776 முதல் *1886* வரையிலும், தமிழகத்தில் நிலவிய சமயக் குழுக்களுக்கிடையேயான குழப்பங்கள், பகைமையுணர்வுகள், வினைகள், எதிர்வினைகள் யாவும், கிறித்துவ சமயத் தலைவர் களுக்குப் பெருமைசேர்ப்பனவாக அமையவில்லை. தமிழகத்தின் கிறித்துவ வரலாற்றை எழுதிய பல்வேறு ஆயங்களும், தங்கள் தங்கள் பகுதியில் கிறித்துவம் தழைத்தது பற்றிய செய்திகளை எழுதியுள்ளனர். மேற்றிராசன வரலாறுகள் என்ற பெயரால் எழுதப்பட்டுள்ள அக்குறிப்புகளில் பல்வேறு செய்திகள் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக நூறாண்டுக் காலக் குழப்பங்களும் கிறித்துவத்தில் சாதியச் சண்டைகளும் உண்மை நிலைகளை எடுத்துக் கூறுவனவாக இல்லை. சில ஆயங்கள் வெளியிட்டுள்ள செய்திகளில், சாதிய அமைப்பு முறைகளை நேர்மைப்படுத்தும் செய்திகள் காணப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களே இன்றைய கிறித்துவ சமயத்தில் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இன்றும் கூட அவர்களால் சமூக, பொருளியல், கல்வி, வேலை வாய்ப்பு போன்ற நிலைகளில் உயர இயலவில்லை. கடந்த காலங் களைவிட தற்போது முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், எதிர்பார்த்த உயர்வுகள் இன்னும் கூடக் கிட்டவில்லை.

நூறாண்டுக் காலக் குழப்பங்கள் தமிழகம் எங்குமே பரவ லாக அறியப்பட்டுள்ளன. போப்பாண்டவரால் தமிழகத்தில் சமயப் பணிகளாற்ற அனுமதிக்கப்பட்ட பிரெஞ்சுக் குருமார்கள் (Paris Mission), *1776*ஆம் ஆண்டில் தங்களது பணிகளை மேற் கொள்ளத் தொடங்கினர்.[213] இருநூறு ஆண்டுகளாகத் தமிழகத்

213. Societe des Missions Etrangers de Paris.

தில் பணியாற்றிய இயேசு அவையினர், தங்கள் பணியாற்றிய ஊர்களில் மிக ஆழமான அடித்தளங்களை அமைத்திருந்தனர்.[214] பிரெஞ்சுக் குருமார்களை அவ்விடங்களில் பணியாற்ற அனுமதித்த வேளையில், ஆங்கிலேய அரசு (கிழக்கிந்தியக் குழுமம்) தனது அரசியல் பணிகளில் வெற்றி கண்டு வந்தது. வாரன் ஹேஸ்டிங்சு என்ற ஆளுநர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளைத் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவர முயன்றார். இவ்வேளையில், புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயருக்குக் கடுமையான எதிர்ப்புகளை அரசியல் மற்றும் வணிகத் துறைகளில் உருவாக்கிக் கொண்டிருந்தனர். புதுச்சேரிக்கு வந்த பிரெஞ்சுக் குருமார்களை, ஆங்கில அரசு ஐயக்கண் கொண்டு பார்த்தது.[215] தங்களது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிரெஞ்சுக்குருமார்கள் பணியாற்றுவதை ஆங்கில அரசு விரும்பவில்லை. ஏற்கனவே இயேசு அவையினர் அளித்த எதிர்ப்புகளோடு, ஆட்சியாளர்களின் எதிர்ப்புகளும் சேர்ந்த நிலையில், புதிய சமயப் பணியாளர்கள் சிக்கலான சூழல்களில் தள்ளப்பட்டனர்.

போர்த்துக்கல், ஸ்பெயின், இத்தாலி போன்ற நாட்டவர்களான இயேசு அவையினரை ஆங்கில அரசு ஒருவகையில் ஊக்கம் கொடுத்தது என்றும் கூடச் சொல்லலாம். ஆங்கிலேயர்களின் நேரிடையான பகைவர்கள் பிரெஞ்சுக்காரர்களே என்பதனால், இச்சூழலை இயேசு அவையினரும் பயன்படுத்திக் கொண்டனர். இயேசு அவையினரைப் பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கில ஆட்சியின் அடிவருடிகள் என்றும் கைக்கூலிகள் என்றும் இழித்துரைத்தனர். மயிலாப்பூரில் இருந்த இயேசு அவையினரின் ஆயரை முறையான கத்தோலிக்கக் கிறித்துவ ஆயராக ஆங்கில அரசு உறுதிப்படுத்தியது.[216] அதே வேளையில் சென்னையிலிருந்து ஆயரை (Bishop of Madras), அவர் பிரெஞ்சுக் குழுவினர் என்பதால் ஆங்கிலேயர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் இயேசு அவையினுக்குச் சமயப் பணிகளாற்ற ஏற்பும், பிரெஞ்சுக் குருக்களுக்கு மறுப்பும்[217] தெரிவிக்கப்

---

214. Lafrenex Jean, precis d' Historic de la mission de Pondicherry, 1953, p. 209.

215. Mission History, Hull Earnest, Bombay, 1927, p. 493.

216. Ibid, p. 493.

217. Ibid, p. 493.

பட்டன. போப்பாண்டவரால் தடைசெய்யப்பட்ட ஓரியக் கத்தை, ஆங்கிலேய ஆட்சியாளர்கள் அனுமதித்தது, அரசியல் பின்னணியில் நிகழ்வுற்றவைகளே. இதனால் வெறுப்புற்ற பிரெஞ்சுக் குழுவினர், இயேசு அவையினரை எவ்வகையிலேனும் வெளியேற்றத் துடித்தனர்.[218]

தமிழகத்திலிருந்த கிறித்துவர்கள், தொடக்கத்தில் பிரெஞ்சுக்காரர்களை ஏற்க மறுத்த போதிலும் போப்பாண்டவ ரால் அனுமதிக்கப்பட்டவர்கள் தாங்களேயென்று மக்களி டையே எடுத்துச் சொல்லியதால் நிலைமைகளில் மாற்றங்கள் காணப்பட்டன. 1850 ஆண்டுகளில் பல இடங்களில் பிரெஞ்சுக் குருமார்கள் கிறித்துவர்களால் ஏற்கப்பட்டனர். இருந்தாலும் சில இடங்களிலிருந்த கிறித்துவர்கள், அவர்களை ஏற்கவில்லை. இதனால் கிறித்துவர்களின் ஒத்துழைப்பின்றி ஒருரில் பணி யாற்ற, இவ்விரு குழுக்களாலும் இயலவில்லை. கிறித்துவர் களைத் தங்கள் பிடியில் வைத்துக்கொள்ள நிறைவேற்ற இயலாத வாக்குறுதிகளும் உறுதிமொழிகளும் கூறப்பட்டன. இந்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட சில தன்னலம் கொண்ட கிறித்துவத் தலைவர்கள், பங்குக்குருமார்களை தம் கைக்குள் போட்டுக் கொண்டனர். பல்வேறு இடங்களில் சாதியக் குழப்பங்கள், நேர்வாகச் சிக்கல்கள், பதவிச் சண்டைகள் போன் றவை வெடித்தன. உயர்சாதிக் கிறித்துவர்கள், ஆதி தமிழ்க் கிறித்துவ மரபினரை ஒதுக்கிவைக்க முற்பட்டனர். இதற்குத் திருச்சபையின் குருமார்களும் ஒத்துழைத்தனர். வேறேதும் குருக்களால் செய்ய இயலவில்லை.

மேல்சாதியினரின் பிடியில் குருமார்கள் சிக்கிக் கொண் டனர். குருமார்களுக்குத் தாங்கள் செய்வது மாந்த நேர்மைக்கு மாறானது என்பது தெரிந்திருந்தாலும், எதிர்த்துப் பேசினால் அடுத்த குழுவிடம் பேச்சைத் தொடங்குவோம் என்ற துருப்புச் சீட்டை கிறித்துவத் தலைவர்கள் பயன்படுத்தினர். இதன் விளைவாக, பங்குத் தளங்களில், குருமார்களின் பேச்சுக்கள் எடுபடாமல் போயின. ஒரு நூறாண்டுக் காலம் தமிழகத்தில் இந்நிலையே தொடர்ந்தன. இவ்வாறான சூழலில், கிறித்துவ சமயத்தைப் பரப்பவும், கிறித்துவின் நற்செய்தியை மக்களுக்கு

218. Ibid, p. 493.

அறிவிக்கவும் இரு குழுக்களுக்குமே நேரம் கிடைக்கவில்லை. என்ன நோக்கத்திற்காக இவ்விரு குழுக்களும் தமிழகம் வந்தனவோ, அந்நோக்கம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, பங்குத் தளங்களைக் கைப்பற்றுவதிலும், கைப்பற்றப்பட்ட இடங் களை நழுவ விடாமல் பாதுகாப்பதிலுமே செலவிடப்பட்டன. மேலும் கிறித்துவர்கள் பெருமளவிலிருந்தாலும் அத்தொகைக் கேற்ற குருமார்கள் இல்லாமற் போனதாலும், மக்களுக்கும் கிறித்துவத் தலைமைக்குமிடையேயான தொடர்புகள் பல விடங்களின் அறுந்துபோயின.

இக்குழப்ப நிலையை ஆங்கில அரசும் ஊக்குவித்து வந்தது. ஆங்கிளிக்கன் சீர்த்திருத்தக் குழுவினரான ஆங்கில ஆட்சி யாளர்கள், இக்குழுக்களின் குழப்பங்கலிலிருந்து நல்ல அறுவடையை அடைந்தனர். கத்தோலிக்கத் திருச்சபையினின் றும் பலர் பிரிவினைச் சீர்த்திருத்தச் சபைகளில் இணைந்தனர். நெல்லை, மதுரை, திருச்சி போன்ற இடங்களில் பலர் வெளி யேறினர். இவர்களைத் தடுத்து நிறுத்த இவ்விரு கத்தோலிக்கக் குழுக்களாலும் இயலவில்லை. கத்தோலிக்கச் சமயத்தைக் கட்டிக்காப்பதற்கென்றே உருவாக்கப்பட்ட இயேசு அவை யினரால், தமிழகத்தில் அச்சமயம் கலகலத்தபோது, அவர் களால் ஏதும் செய்ய இயலவில்லை. குறிப்பாக, மேல்சாதிக் கத்தோலிக்கர்களின் சாதீயப் போக்குகள் ஆதிதமிழர் மரபைச் சார்ந்த கிறித்துவர்களை பிரிவினச் சபைகளில் கொண்டு சேர்ந்தன. பொதுவாக, தமிழகத்திலுள்ள கிறித்துவர்களில் ஆதி தமிழரே பெரும்பான்மையாயிருந்தனர் என்றாலும் பிரிவினைச் சபைகளில் இன்னும் பெருமளவில் உள்ளனர் என்பதற்கு மேற் கண்ட நிகழ்வுகளே கரணியங்களாகும்.

தொடர்ந்து ஐரோப்பாவில் நிகழ்வுற்ற அரசியல் மாற் றங்கள், நெப்போலியனின் வீழ்ச்சி போன்றவை பிரெஞ்சுக் குழுவினருக்குப் பின்னடைவை ஏற்படுத்தின. தமிழகத்தின் பணியாற்ற ஊக்கத்தோடும் எழுச்சியோடும் வந்திறங்கிய பிரெஞ்சுக் குழுக்களுக்கு, தமிழகத்தின் சூழல்கள் வெறுப்பை யும் எரிச்சலையும் மூட்டின. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு, 1816ஆம் ஆண்டில் பல பிரெஞ்சுக் குருமார்கள் புதுவை வந்து சேர்ந்தனர். இவர்கள், சமயப் பணிகளுக்குப் பொறுப் பாளராகவும் தலைவராகவும்இருந்த தந்தை எர்பேர் என்பாரின்

சீரிய வழிகாட்டுதலில் செயல்படத் தொடங்கினர்.[219] இராம நாதபுரம், கல்லடித்திடல் என்ற ஊரில் ஏறக்குறைய 20,000 கிறித்துவர்கள் (உடையார் மரபினர்) தங்களுக்குக் குருவானவர் இல்லாத குறையைத் தெரிவிக்க தங்களின் தலைவர்களின் சிலரைப் புதுவைக்கு அனுப்பிவைத்தனர். இவர்கள் 22 பங்குத் தளங்களிலிருந்து வந்தவர்கள் என்று குறிப்புகள் கூறுகின்றன.[220] நெல்லையிலிருந்த 12,000 கிறித்துவர்களின் (பரவர்கள்) தலைவர்களும் புதுவைக்கு வந்தனர்.[221]

இவர்களது கோரிக்கைகள் போப்பாண்டவர்க்கு அனுப்பப் பட்டபோது, நெகிழ்ந்துபோன கிரகோரி XVI என்னும் போப் பாண்டவர், உடனடியாகப் பல குருமார்களைத் தமிழகம் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தார். தமிழகத்தில் கிறித்துவ மக்கள் தொகைக்கேற்ற குருக்கள் இல்லையென்ற செய்தி காலம் தாழ்ந்து போப்பாண்டவருக்குத் தெரிவிக்கப்பட்டதால் கடுஞ் சினமுற்றார். அவரது இக்கடுஞ்சினம் போர்த்துக்கல் மன்னர் மீது திரும்பியது. மன்னர் மீது வெறுப்படைந்த போப் பாண்டவர், இத்தகையச் சூழல்களுக்கு மன்னரே பொறுப் பேற்க வேண்டும்மெனவும் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைத் திரும்பப் பெறப் போவதாகவும் மிரட்டினார். போர்த்துக்கல் மன்னரிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை. இரு நூறாண்டுகளாக, பெருந்தொகையைச் செலவிட்டு, தமிழகத்தில் சமயப்பணிகளை மேற்கொண்டிருந்த மன்னருக்கு, போப் பாண்டவரின் மிரட்டல் கடுஞ்சினத்தை வரவழைத்தது. தமது அரிய பணிகளுக்கு ஊக்கம் தராமல், நன்றி மறந்தவராகப் போப்பண்டவர் செயல்படுவது கண்டு வருத்தமுற்றார்.

தம்மைக் கறிவேப்பிலையாகப் பயன்படுத்திக் கொண்ட போப்பாண்டவர் மீது கடுஞ்சொற்களை வீசினார். இந்நிலை யில் அடுத்துவந்த போப்பாண்டவர் ஏழாம் பயசு (Pious VII) 1817 ஆம் ஆண்டில் போர்த்துக்கல் உரோமை ஒப்பந்தத்தை ஒரு சார்பாக மீறி சென்னையில் புதிய தலைவரை (விக்காரியேத்)ப் பணியிலமர்த்தினார்.[213] இதே கால அளவுகளில் மயிலையில் ஒரு

219. Dominicia Perumalic.

220. Bimbay Mission History, p. 284.

221. Ibid. 272.

213. Ibid.

தலைமையும் சென்னையில் ஒரு தலைமையும் கத்தோலிக்கத் திருச்சபையில் இருந்தன. மயிலைத் தலைமையை ஆங்கில அரசு ஏற்றுக்கொண்டு சென்னைத் தலைமையைக் கண்டு கொள்ளாமல் விடுத்தது. பிற்காலத்தில் திருச்சபையில் ஒற்றுமை நிலைநாட்டப் பெற்றபோது இப்பகுதிகளின் ஆயர், சென்னை - மயிலைஆயர் என்றே அழைக்கப்பட்டார் இதே நிலையைப் புதுவை கடலூர்ப் பகுதிகளிலும் காணலாம்.

1838ஆம் ஆண்டில் புதுவையிலிருந்து குருமார்களில் குழுக்கள் முறையே திருச்சி மதுரை நெல்லைப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஏற்கனவே அவ்விடங்களில் பணி யாற்றி வந்த இயேசு அவையினர் இக்குருமார்களைத் தங்கள் பணியிடங்களில் அனுமதிக்கவில்லை. வேறுவழியறியாத பிரெஞ்சுக் குருமார்கள் நடுவர் மன்றத்தை நாடினர்.[214] அக்கால நடுவர் மன்றங்கள் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. இருந்தாலும் பிரெஞ்சுக் குருமார்கள் போப்பாண்டவரின் ஆணைகளை நடுவர் மன்றத்தில் காட்டி இப்பணியிடங்களில் பணியாற்றத் தகுதி பெற்றவர்கள் தாங்களே என்பதை எடுத் துரைத்தனர். ஆங்கிலேய ஆங்கிளிக்கன் நடுவர்கள் உண்மை நிலையறிந்து பிரெஞ்சுக் குருமார்களுக்குச் சார்பாகத் தீர்ப்பளித்து, இயேசு அவையினர் தங்களது பழைய இடங் களை விட்டு வெளியேற வேண்டுமென ஆணையிட்டனர்.[215] இத்தீர்ப்பு இயேசு அவையினருக்கும் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியது. பிரெஞ்சுக் குருமார்கள் தடையின்றிப் பணி களை மேற்கொண்டனர்.

பிரெஞ்சுக் குருக்களில் இயேசு அவையைச் சார்ந்த சிலரும் இருந்தனர். இக்காலக் கிறித்துவர்களுக்கு இயேசு அவையினர் மீதிருந்த கண்மூடித்தனமாக நம்பிக்கையை இக்குருமார்கள் போக்கினர். இதோ இவர்களும் இயேசு அவைக்குருக்களே என்று பலவிடங்களில் அறிமுகம் செய்விக்கப்பட்டனர். அதற்கு நல்ல பலனும் விளைந்தன. இந்நிலையில் மதுரை நடுவர் மன்றம் அளித்தத் தீர்ப்பை எதிர்த்து இயேசு அவையினர் சென்னையில் மேல்முறையீடு செய்தனர். மேல் முறையீட்டில் இயேசு அவை

214. Ibid.

215. Ibid.

யினர் போர்த்துக்கல் மன்னர் போப்பாண்டவரிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தமிழகம் வந்ததாகவும், அவ்வொப்பந்தம் இன்னும் சட்டப்படி உயிருடன் இருப்பதாக வும், ஒருதலைப்பக்கமாகப் போப்பாண்டவர் இவ்வொப் பந்தத்தை முறித்துக் கொண்டது தங்களைக் கட்டுப்படுத்தாது எனவும், இவ்விருவரும் சேர்ந்து ஒப்பந்தத்தை திரும்பப் பெற்றுக் கொண்டால் தாங்கள் தங்கள் பணியிடங்களைவிட்டு வெளி யேறவிடுவதாகவும், எடுத்துரைத்தனர்.

இருதரப்பினருக்கும் எடுத்துவைத்த ஆவணங்களின் அடிப் படையில் இயேசு அவையினர் பக்கமே நேர்மம் அமைந் துள்ளன, என்பதை நடுவர்கள் அறிந்து கொண்டனர். இருப் பினும் பங்குத்தளங்களில் உள்ள கிறித்துவ மக்களில் பெரும் பாலோர் எந்தக் குழுவை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர் களே அப்பங்குத் தளங்களில் நீடிக்க வேண்டும் என்ற முடிவை அறிவித்தனர்.[216] இதனால் இயேசு அவையினர் மகிழ்வுற்றாலும் குழப்பங்களுக்கான தெளிவான முடிவை நடுவர் மன்றத் தீர்ப்பு வெளிப்படுத்தவில்லை. ஒரு பங்கில் உள்ள கிறித்துவர்களில் பெரும்பாலோர் எந்தக் குழுவினர் பக்கம் உள்ளனர் என்பதை யார் முடிவு செய்வது என்பதற்கான விளக்கம் தீர்ப்பில் இல்லை. 1857ஆம் ஆண்டில் இத்தீர்ப்பு வெளியிடப்பட்டது.

இத்தீர்ப்பு வெளியானவுடன் கோவா ஆயர் சுறுசுறுப் படைந்தார். ஏற்கனவே தமிழ்நாட்டு மக்கள் இயேசு அவையினர் பக்கமே உள்ளனர் என்பதை அறிந்திருந்த ஆயர், புதிதாக இயேசு அவைக் குருக்களைத் தமிழகத்துக்கு அனுப்பி வைத்தார். இவர்கள் முறையாகப் படித்துக் குருப்பட்டம் பெற்றவர்கள் அல்லர் என்றும். போர்த்துக்கீசிய அரசுப் பணியிலிருந்த பலருக்கு வெள்ளை அங்கியை மாட்டி அனுப்பிவிட்டனர் என்றும் எதிர்த்தரப்புக்குற்றம் சாட்டியது. உண்மையில் இப்புதிய குருக்கள் குறுகிய காலப் பயிற்சி பெற்றவர்கள் என்றும் கோவா ஆயர் தனக்கிருந்த குருப்பட்டம் அளிக்கும் உரிமையைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் கருதக் கிடக் கின்றது. இவர்களுக்கு போர்த்துக்கீசிய மொழி மட்டுமே தெரிந் திருந்தது. சிலருக்கு அரைகுறை இலத்தீனும் ஆங்கிலமும் தெரிந்திருந்தன. இவர்களில் ஒரு குருவானவர் தான் அய்யம் பேட்டைக்கும் அனுப்பிவைக்கப்பட்டார் என்று பிரெஞ்சுக்

குருமார்களின் குறிப்புகள் கூறுகின்றன.[217] பூசைச் சடங்குகளில் சொல்லப்படும் இலத்தீன் மொழியிலான மந்திரங்களை இலத்தீன் படித்தறியாத உபதேசியாரும் கிறித்துவர்களும் கூடப் பயிற்சியின் அடிப்படையில் சொல்வர். அவர்களுக்கு அம்மந்திரங்களுக்கான பொருள்தெரியாது என்பது வேறு செய்திகளாகும். பல பிராமணர்களும்கூட சமஸ்கிருத மொழியை இவ்வாறுதான் பொருள் தெரியாமல் கிளிப்பிள்ளைகள் போல் சொல்லி வந்தனர்.

இக்காலத்தில் புதுவையில் ஆயராயிருந்த பொன்னாந்து என்பார் (1836-61) உண்மையில் நல்ல கிறித்துவத் தொண்டராவார்.[218] அவருக்கு முன்பிருந்தோர் நடத்திய ஏட்டிக்குப் போட்டி நடப்புகளையெல்லாம் விலக்கினார். இயேசு அவையினரின் செயல்பாடுகளை அவர் கண்டுகொள்ளவில்லை. அவர்களுக்கெதிராகச் செயல்படுவதை உடனடியாக நிறுத்தச் சொன்னார். உருப்படியான சமயப் பணிகளை உடன் மேற்கொள்ள ஆணையிட்டார் எல்லாக் கிறித்துவர்களுக்கும் திறந்த மடல்களை எழுதினார். அனைவரும் இயேசுவின் பிள்ளைகளே என்று எடுத்துரைத்தார். புதுவை ஆயத்தில் மளமளவென வளர்ச்சிப் பணிகளை முடுக்கிவிட்டார். புதுவையில் ஓர் அச்சுக் கூடமும். இந்திய மாணவர்களைப் பயிற்றுவிக்கக் குருமடமும் தோற்றுவிக்கப்பட்டன.

1850ஆம் ஆண்டுகளில் சென்னையிலும் மயிலையிலுமாக இரண்டு ஆயர்கள், கத்தோலிக்கத் திருச்சபையின் பெயரால் செயல்பட்டனர். இப்பகுதியிலுள்ள கிறித்துவர்களுக்கு யார் உண்மையான ஆயர் என்று விளங்கவில்லை. பிரெஞ்சுக் குழுக்கள் வீடுவீடாகச் சென்று தமது பக்கம் கிறித்துவர்களை ஈர்த்தனர். சென்னை நகரிலிருந்த ஆர்மீனியன் தெரு புனித அந்தோனியார் கோயிலில் 1839ஆம் ஆண்டில் 3000 பேருக்குத் திருமுழுக்கு அளித்ததாக குறிப்புகள் கூறுகின்றன. இத்தேவாலயம் பிரெஞ்சுக் குழுக்களிடமிருந்தது. பல பிரிவினைச் சபையை சேர்ந்தவர்களையும் கூட கத்தோலிக்கத் திருச்சபைக்கு மாற்றினர்.[219]

---

217. Ibid.

218. Lafrenez Jean, p. 109.

219. Madras Catholic Directory, 1855, p. 135.

சென்னையில் பிரெஞ்சுக் குழுக்கள் சிறப்புடன் செயல்படத் தொடங்கினர். 1842க்குப் பிறகு பல தேவாலயங்களைக் கட்டினர். 1. மரியன்னை ஆலயம் -சாந்தோம், 2. அந்தோணி யார் ஆலயம்-சாந்தோம், 3. -பாட்ரிக்ஆலயம் பறங்கி மலை, 4. சவேரியார் ஆலயம் -பிராட்வே, 5. லூர்தன்னை ஆலயம் பெரம்பூர், 6. லாசர் ஆலயம்- சிந்தாதிரிப்பேட்டை, 7. அந்தோணியார் ஆலயம் -புதுப்பேட்டை என நீண்டன.[220] வட தமிழகத்தில் பிரெஞ்சு குருமார்களும் தென்தமிழகத்தில் இயேசு அவையினரும் தங்கள் பணிகளைத் தொடர்ந்தனர் எனக் கருதலாம்.

✧✧✧

220. Norbertines in south India, J.B. Lasners, 1978, p. 72.

24

நூற்றாண்டுக்காலக் குழப்பங்களின் விளைவுகள்:

1. கட்டுக்கோப்புக்கும் கீழ்ப்படிதலுக்கும் எழுத்துக்காட்டு களாய் விளங்கிய ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில். பதவிச் சண்டைகளும் ஆளுமைப் போட்டிகளும் வெளிச் சத்துக்கு வந்தன.

2. போப்பாண்டவரின் அசைக்க வியலாத ஆளுமை, தமிழ கத்தில் கேள்விக் குறியாக்கப்பட்டது.

3. பழம் பெருமைகளையும் உயர்ந்த ஒழுக்க நெறிகளையும் கொண்ட ஒரு சமயம். கத்தோலிக்கக் கிறித்துவம் என்பதை இரு குழுக்களும் மறந்து, ஒருவர் மீது ஒருவர் வசைச் சேற்றை வாரி வீசிக்கொண்டனர்.

4. தங்களது இலக்குகளையும், கோட்பாடுகளையும் பல நேரங் களில் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

5. தமிழகத்தின் பல பங்குத் தளங்களில் சமயப் பணிகள் நின்று போயின. மேய்ப்பர்களை அடையாளம் கண்டு கொள்ளவியலாத ஆடுகளாய், கிறித்துவர்கள் தவித்தனர்.

6. பிரிவினைத் திருச்சபையின் வளர்ச்சிக்கு, இவ்விரு குழுக் களுமே கொழு கொம்புகளை நட்டு வைத்தனர். ஏராள மான கத்தோலிக்கர்கள், பிரிவினைச் சபைகளுக்கு மாறிப் போயினர்.

7. சிலர் பிராமண சமயத்துக்கும் திரும்பிப் போயினர். பிராமண சமயத்தலைவர்கள் இச்சூழலை நன்கு பயன் படுத்திக் கொண்டனர்.

8. கிறித்துவத்தை ஏற்றுக்கொண்ட வறிய மக்களுக்கு, இக் குழப்பங்களுக்கொல்லாம் கரணியம் யாதெனத் தெரிய வில்லை.

9. பங்குத் தளங்களில் பிரிவினைத் திருச்சபைக்கு மாறி யவர்கள். தேவாலயம் தங்களுக்கே என உரிமை கொண் டாடினர். பல தேவாலயங்களிலிருந்த புனிதர்களின் சிலைகள் உடைத்தெறியப்பட்டன.

10. சாதியத் தலைவர்களின் செல்வாக்குப் பங்குத்தளங்களில் உயர்ந்தது. நாட்டார்கள் என்ற பெயரில் குருக்களுக்கு ஆணைகளும் அறிவுரைகளும் வழங்கலாயினர்.

11. சாதியச் சிக்கல்கள் பங்குத்தளங்களில் தோற்றுவிக்கப் பட்டன.

12. கிறித்துவர்களில் தாமே உயர்ந்த சாதியினர் எனக் கூறிக் கொண்ட சிலர், தேவாலயத்தின் நடைமுறைகளைத் தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீண்டாமை தேவாலயத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது. தங்களைக் கிறித்துவ பிராமணர்கள் என்றும் பலவிடங்களில் கூறிக் கொண்டனர். திருச்சி போன்ற இடங்களில் சாதிவாரியாகத் கல்லறைகளும் ஒதுக்கப்பட்டன கடந்த நூற்றாண்டுகளில் கட்டிக் காக்கப்பட்டு வந்த சமூக ஒற்றுமை, மாந்தநேயம், சமய வழிபாட்டு முறைகளில் நாட்டம், பொது நல நோக்கு போன்ற பண்புகள் காற்றில் பறந்தன.

13. போட்டிக் குழுக்கள், பணம் பதவிகளைக் காட்டி பலரை யும் ஈர்த்தனர். பதவி ஆளுமை போன்ற உலகியல் நோக்கங் களுக்காக, கிறித்துவ சமயத்தில் கோட்பாடுகள்கூட வளைக்கப்பட்டன.

14. இந்தச் சண்டைகளுக்கெல்லாம் தொடர்பில்லாத திரு வாளர் கிறித்துவர், போட்டிக் குழுக்களால் குற்றவாளி எனக் கருதப்பட்டார். தங்களுக்கு சார்புடையவராய் மாறாத கிறித்துவர்களை கிறித்துவர்களே அல்லர் என்றும் கருதினர்.

15. இந்தக் கொடுமைகள், இனியொரு காலங்களில் கிறித்துவ சமயத்துக்கு வரக்கூடாது என்ற எண்ணம் பிற்காலத்தில் எல்லோராலும் உணரப்பட்டது.

அய்யம் பேட்டையிலிருந்த கிறித்துவர்கள் பிரெஞ்சுக் குருமார்களை ஏற்றுக் கொள்ளாமலும் புதுவை ஆயத்துக்குக் கட்டுப்படாமலும், மயிலை ஆயத்துடன் தொடர்புகொண்டிருந்தனர். எனவே அய்யம் பேட்டைப் பங்கில் தங்கள் மேலாண்மையை நிலைநாட்டவும் இயேசு அவைக்குருவானவரை அங்கிருந்து வெளியேற்றவும் எந்தெந்த வகையிலெல்லாம் இயலுமோ அனைத்து முயற்சிகளையும் பிரெஞ்சுக் குருமார்கள் மேற்கொண்டனர். அதன் முதற்படியாக அய்யம்பேட்டை மக்களின் ஒற்றுமையைச் சிதைத்தனர். தென்னூர் என்ற புதிய குடியிருப்பைத் தனிப் பங்குத் தளமாக அறிவித்தனர். அங்கு ஒரு குருவானவரைப் பணியிலமர்த்தினர். அய்யம்பேட்டையிலிருந்த ஜோசப் டயசு என்ற இயேசு அவைக்குருவானரைப் பற்றியும், அவர் முறையாகப் பட்டம் பெற்றவர் அல்லர் என்பது பற்றியும், அவதூறுகளைக் கிளப்பினர். டயசுப் பாதிரியார் நிறைவேற்றும் சமயம் சடங்குகள் செல்லத்தக்கவையல்ல என்று மக்களிடையே செய்திகள் பரப்பப்பட்டன. இதனால் நொந்துபோன டயசுக்கு ஆறுதலாக அய்யம்பேட்டை மக்கள் செயல்பட்டு வந்தனர்.

வன்னியர் இனத்தைச் சார்ந்த அய்யம்பேட்டை தென்னூர் மக்களை சமயப் போட்டிக்குழுக்கள் பிளவுபடுத்தினர். அய்யம் பேட்டை மக்களில் பெரும்பாலோர் தென்னூர்ப் பங்கில் இணைந்து விட்டனர் என்றும், புதுவை ஆயரை ஏற்றுக் கொண்டு விட்டனர் என்றும் செய்திகள் எங்கும் பரப்பப் பட்டன. 1858ஆம் ஆண்டில் புதுவை ஆயகுறிப்புகளில், அய்யம் பேட்டை என்ற ஊர், எங்கும் காணப்படவில்லை. ஆனால் 1861ஆம் ஆண்டுக் குறிப்புகளில், தென்னூர்ப் பங்கின் கிளைப் பங்காக அய்யம்பேட்டை இருந்தது என்று எழுதப் பட்டுள்ளது. இந்த இடையிலான மூன்றாண்டுகளில் என்ன மாற்றங்கள் நிகழ்வுற்றன என விளங்கவில்லை. 1860ஆம் ஆண்டில் புதுவை ஆயர் பொன்னாந்து அய்யம் பேட்டைக் குருவானவருக்கு மடல் ஒன்றை விடுத்து. தனது தலைமையை ஏற்கும்படிக் கேட்டுக் கொண்டார். இம்மடலுக்கு பதில் எழுதப் பட்டதாகத் தெரியவில்லை.

1846ஆம் ஆண்டில் தென்னூரில் முறையான பங்குத்தளம் உருவாக்கப்பட்டது. 1550 முதலே கிறித்துவர்கள் அய்யம்

பேட்டையில் வாழ்ந்துள்ளனர் என்பதும், வரலாற்றுப் புகழ் மிக்க ஆந்திரே பிரெயர். பிரிட்டோ போன்றவர்கள் கொழை யில் பணியாற்றினர். என்பதும் 1711ஆம் ஆண்டில் இணைக்கப் பட்ட ஊர்களின் முதல் பங்கு குருவாக வீரமாமுனிவர் இருந் தார் என்பதும் வரலாற்றுச் செய்திகளாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க அய்யம்பேட்டையை தென்னூர் பங்கின் கிளைப் பங்காகப் புதுவை ஆயர் அறிவித்தது. ஒருதலைப்பக்கமான செய்தியே யன்றி உண்மையில் அவ்வாறு செயல்படவில்லை என அறியலாம். தென்னூரில் பங்குத் தளம் உருவாக்கப்பட்டது போட்டி மனப்பான்மையில்தானே யன்றி, அய்யம்பேட்டை புதுவை ஆயருக்கும் பணிந்து போயிருந்ததால், தென்னூர் என்ற பங்குத்தளமே உருவாக்கப்பட்டிருக்காது என்பதே உண்மை நிலையாகும். 1842ஆம் ஆண்டில் இருந்ததாகச் சொல்லப்பட் டுள்ள மக்கள் தொகைக் கணக்கொன்று, புதுவைக் குறிப்புகளில் காணப்படுகின்றது. அதனையே குடந்தை மறைமாவட்டம் பொன்விழா மலர் (1949) எடுத்தாண்டுள்ளனர். அதன்படி, அய்யம் பேட்டையில் 4000 கிறித்துவர்களும், தென்னூரில் 4000 கிறித்துவர்களும் இருந்தனர் என விளக்கப்பட்டுள்ளது.

இக்குறிப்பு, அய்யம் பேட்டைக்கு இணையான மக்கள் தொகை தென்னூரிலும் இருந்தது என்பதைச் சுட்டவே குறிக்கப் பட்டுள்ளது எனக் கருதலாம். உண்மையில் தென்னூரில் 4000 கிறித்துவர் இருந்தனர் என்பது ஐயத்திற்குரியதாகும். தங்க ளுக்குக் கிறித்துவர்களுடையே வரவேற்பு இருந்தது என்பதற் காகக் கொடுக்கப்பட்ட தகவலே இது எனக் கருதலாம் மக்கள் பெருக்க விதிப்படி (Population Explotion law) 1842இல் இருந்த 8000 மக்கள் இன்றைக்கு 4 மடங்காகப் பெருகி 32,000 பேராகப் பெருகியிருக்க வேண்டும். ஆனால் உண்மையில் இவ்வூர்களின் மக்கள் தொகை மற்ற ஊராட்சிகளில் பரவி வாழ்பவரையும் கணக்கில் கொண்டால் 16,000 எனக் கருதலாம்.

அய்யம் பேட்டையில் அலங்கார அன்னையின் பெய ராலும், தென்னூரில் லூர்தன்னையின் பெயராலும் ஆலயங்கள் உள்ளன. அலங்கார அன்னையின் பெயரை வீரமாமுனிவரே சூட்டியிருக்க வேண்டும். அலங்கார அன்னையும் லூர்தன்னை யும் ஒரே பெண்மணி தானே என்பதும் இயேசுவின் தாய் என்பதால் வணக்கத்துக்குரியவளானாள் என்பதும் வெள்ளிடை

மலை. ஆனால், பகைமையின் கரணியமாக அலங்கார அன்னையைத் தென்னூர் மக்களும், ஷூர்தன்னையை அய்யம்பேட்டை மக்களும் பல காலம் வழிபடாமலிருந்தது, வேடிக்கையான செய்தியாகும். சுருக்கமாகக் கூறுமிடத்து போட்டிக்குழுக்கள் தங்களுடைய விருப்பு வெறுப்பிற்கேற்றவாறு, இவ்விரு ஊர் மக்களையும் அறியாமையிலேயே வைத்திருந்தனர் என்பதே உண்மை நிலையாகும்.

✧✧✧

25

கிறித்துவமும் சாதியமும்

குடந்தை மறைமாவட்ட மலர் (1949) வெளியீட்டுள்ள குறிப்புகளைக் கீழே காண்க.

ஊர்	கி.பி. 1842இல்	கி.பி. 1861இல்	எண்ணிக்கை வேறுபாடுகள்
1. அய்யம்பேட்டை	4000	4000	மாற்றம் இல்லை?
2. தென்னூர்	3000	4618	+1618?
3. குடந்தை	12000	2545	- 9455
4. புறத்தாக்குடி	10500	3805	- 6695
5. காக்காவேரி	2000	3700	+1700
6. ஆத்தூர்	1500	2500	+1500

மேற்கண்ட கணக்கெடுப்பு 20 ஆண்டுகள் இடைவெளி களில் எடுக்கப்பட்டதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த 20 ஆண்டுக் கால அளவுகளில் 20,332பேர் கத்தோலிக்கத் திருச்சபையை விட்டு வெளியேறிவிட்டனர். இது 50 விழுக்காடு கள் எனக் கருதும் போது, இப்பெரும் சரிவு கத்தோலிக்கத் திருச்சபைக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பதை, எவரும் விளக்க முன்வரவில்லை. மேற்கண்ட ஆறு ஊர்களிலும் இருந்த கிறித்துவர்கள் 41500, இவர்களுக்குக் கிறித்துவ சமயத்தில் இருந்த பிடிப்பு ஏன் தளர்ந்து போயிற்று? இவர்களைக் கிறித்துவ சமயத்தில் இணைக்க எவ்வாறெல்லாம் உழைக்க வேண்டி யிருந்தது? இந்த பெரும் சரிவை யார் உருவாக்க கரணியமாய் இருந்தனர் என்ற கேள்விக்கு விடையாக சொல்லப்படும் பதில் கசப்பானது என்பது மட்டுமே உண்மையாகும். அடியிற்காணும்

செய்திகள், மேற்கண்ட வினாவிற்கு விடையாக அமையும் எனக் கொள்க. ஒரு ஆலயத்தின் எல்லைக்குட்பட்ட சில ஊர்களில் இந்த நிலையென்றால், தமிழகம் எங்கும் கணக்கெடுத்தால் அதன் முடிவுகள் உண்மையில் அதிர்ச்சிக்குரியதாகவே இருக்கும் எனக் கருதலாம்.

ஐரோப்பியக் கிறித்துவ சமய ஊழியர்கள் முதன் முதலில் இந்தியாவுக்கு வந்தபோது, இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் நிலவி வந்த சாதிய முறைகள் பற்றி அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை. (இச் செய்திகள் பற்றி ஆசிரியரின் தமிழ்நாட்டுக் கிறித்துவம் பகுதி 1 என்ற நூலைக் காண்க) சங்ககாலம் எனப்படும் கிறித்து பிறப்பாண்டுகளில், சாதியம் என்ற பாகுபாடுகள் தமிழகத்தில் அறியப்படவில்லை. ஆரிய பிராமணர்கள் சங்கககாலத்தில் தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர் என்றாலும் அவர்தம் மாந்த நேய மற்ற சாதிக்கொள்கைகள் தமிழகத்தில் எந்தத் தாக்கங்களையும் ஏற்படுத்தவில்லை. கி. பி. 300 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழகத்தில் தமிழர் ஆட்சி மறைந்து போயிற்று. மீண்டும் கி.பி. 900 ஆண்டுகளில், பிராமணவழி விளக்கங்கள், சமய மறுமலர்ச்சி என்ற பெயரால் ஆரியப் பிராமணீயக் கொள்கைகள் திணிக்கப்பட்டது, கடவுளின் பெயரால் சாதிய முறைகள் புகுத்தப்பட்டது போன்ற மாற்றங்களால் தமிழகம் முன்எப்போதும் இல்லாத தனித்தன்மையை இழந்திருந்தது. இக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சோழர்களின் ஆட்சி, ஆரியம் பிரமணர்களுக்கு அளப்பரிய சலுகைகளை அளித்து, தமிழகத்தின் முதல்தட்டு மக்களாகப் பிராமணர்களைத் தூக்கி நிறுத்தியது.

பிராமணர்களுக்கு ஏராளமான நிலங்கள் நன்கொடைகளாக அளிக்கப்பட்டன. அந்நிலங்களுக்கு வரிவிலக்குகளும் கொடுக்கப்பட்டன. பிரம்மதேயம், பார்ப்பனச் சேரி, அக்கிரகாரம் போன்ற பகுதிகளில் பிராமணர்களின் நிலையான குடியிருப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.[221] ஒவ்வொரு ஊரிலும் பிராமணர்கள் குடியிருக்க அரசாங்மே ஏற்பாடுகள் செய்து கொடுத்தது. இவ்வாறன அரசின் சார்பு நிலைகளால், காட்டுப்புறங்களில் பிரமணர்களின் பிடிப்புகள் இறுதி, தமிழகம் தழுவி, சாதியம் புகுத்தப்பட்டது. பிராமணர்கள் தாம் இன்னலின்றி

---

221. பிற்காலச் சோழர்வரலாறு, சதாசிவ பண்டாரத்தார்.

வாழவும், தம் பிற்கால வழி மக்கள், இடையூறின்றி நிலைக்கவும், மற்றவர்களைப் பற்றிய சிந்தனைகள் ஏதுமின்றி, தன்னலத்துடன், பிராமணர்களால் பிராமணர்களுக்காக உருவாக்கப்பட்ட, பிராமணக் கொள்கையே, சாதியம் ஆகும்.

பிராமணன் தன்னைச் சுவாமி என்று மறறவர்கள் அழைக்க வேண்டும் என வலியுறுத்தினான். ஸ்வம் - ஸ்வ என்ற சமஸ் கிருதச் சொல், சிவ என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். இதனைப் பிற்காலத்தில் சுவாமின் (Swamin) என்றனர். சுவாமின் - சுவாமி எனத் தமிழில் சொல்லப்பட்டது. உண்மை யில் இது சிவன் என்ற தமிழ் மூலச்சொல்லே. ஸ்வ என்பது தன்னையே (self) இறைவனுக்கு அடிமையாக்கிக் கொள்வது எனவும் பொருள் கூறினர். மாந்தன் இறைவனுக்கு அடிமையாவது தெய்வ நம்பிக்கையோடு இயற்கையின் பாற்பட்டது. மாந்தனை மாந்தன் சுவாமி என்றழைப்பது அடிமைத் தனத்தை விளக்குவது. இதன் பொருளை அறியாத தமிழர்கள், பிராமணனையும் இன்னும் சிலரையும் சுவாமி என அழைக்கின்றனர். எந்த பிராமணனும் மற்ற பிராமணனை ஸ்வாமி என அழைத்துக் கொள்வதில்லை. ஐயப்பன் கோவிலுக்குச் செல்வோர், தங்களைச் சுவாமி என்று அழைத்துக் கொள்கின்றனர். இதன்வழியே சாதிப் பாகுபாடுகள் களைப்படுவதாகவும், மேல்சாதிக்காரரும் கீழ்சாதிக்கராரைச் சாமி என அழைப்பமாகவும் கூறுகின்றனர். பிராமணர்களில் பெரும்பலோர் குறிப்பாக வைணவர்கள், ஐயப்பாசாமி கோவிலுக்குச் செல்வதில்லை என்பது, எந்தச் சூத்திரனையும் சாமி என அழைக்க முன்வருவதில்லை யென்பது நடைமுறைச் செய்திகளாகும்

பிரமாணனுக்கு அடுத்த உயர் சாதிக்காரன் யார் என்பது பற்றி தமிழகத்தில் பெருஞ்சண்டையே நடைபெற்றது. இதன் வழியே, பிராமணனை உயர்சாதிக்காரன் என்று ஏற்றுக் கொள் கிறோமே என்ற வெட்கம் அற்றுப் போய், தமக்குக் கீழிருக்கும் சில சாதிக்காரர்களையாவது அடக்கியான முயன்ற தமிழர் களின் அறிவின்மையை என்னவென்று சொல்வது ?

சமணம் தமிழகத்திற்கு வந்தது – தமிழை வளர்ந்தது – தானும் வளர்ந்தது.

புத்தகம் தமிழகத்திற்கு வந்தது – தமிழை வளர்ந்தது – தானும் வளர்ந்தது.

கிறித்துவம் தமிழகத்திற்கு வந்தது – தமிழை வளர்ந்தது – தானும் வளர்ந்தது.

இசுலாம் தமிழசத்திற்கு வந்தது – தமிழை வளர்ந்தது – தானும் வளர்ந்தது.

ஆனால், ஆரியம் தமிழத்துக்கு வந்தது - தமிழை அழித்தது - தமிழ்ச் சமயத்தை அழித்தது - தான் மட்டும் வளர்ந்து கொண்டது.

ஆரியக் கொள்கைகள் புகுந்த எந்த நாடும், எந்த சமயமும், எந்த சமூகமும் முன்னேறியதில்லை என்பதும், ஆரியக் கொள் கைகள் ஒன்றுபட்ட சமூகத்தைப் பிரித்துப் போடுவதையே கடமையாகக் கொண்டிருந்தன என்பதும் கடந்தகால வரலாறு களாகும்.

இவ்வகையிலான ஆரியப் பிராமணக் கொள்கையை இசுலாம் நுழையவிடவில்லை. ஆரியரின் அனைத்துக் கொள்கை களையும் இசுலயம் எதிர்த்தது. தமிழகத்திலுள்ள இசுலாமியன் அரபு நாட்டினின்றும் வந்தனல்லன். வள்ளுவனும் கம்பனும் ஒட்டக் கூந்தனும் அவனது கொள்ளுப் பாட்டன்களே தமிழகத்து இசுலாமியனை அந்நியன் எனக்கூற, ஆரியப் பிராமண அமைப்புகளுக்கு எந்தத் தகுதியும் இல்லை. ஏனெனில், தமிழகத்துக்கு ஆரியனே அந்நியன் ஆவான். தந்திரமிக்க பிராமணக் கொள்கையை இசுலாம் எதிர்த்த வேளையில், கிறித்துவம் அதனை உள்வாங்கிக் கொண்டது, தமிழநாட்டுக் கிறித்துவம் செய்த வரலாற்றுத் தவறாகும். இசுலாத்தைத் தமிழ கத்தில் பரப்பியவர்கள் தமிழர்களே என்பதால், சாதியத்தின் ஆழத்தை அவர்கள் அறிந்திருந்தனர். தமிழகத்துக்கு வந்த கிறித்துவ விடையூழியர்களில் வீரமாமுனிவர் மட்டுமே, பிராமணர்களின் கொள்கைகளைக் கடுமையாக எதிர்த்தார் என்பதை, அவருடைய குறிப்புகளிலிருந்து அறிந்து கொள்ள லாம். மிகச் சிறந்த பன்மொழி அறிஞரான இராபர்ட் - டி - நொபிலி, தமிழ் நாட்டின் நாகரிகம் பண்பாடுகள் பற்றித் தெளி வாக அறிந்திருக்கவில்லை.

நொபிலி உருவாக்கிய பிராமணசாமி, பண்டாரகிய உத்திகள், கிறித்துவ சமயத்தில் தலைகளின் எண்ணிக்கையை வேண்டுமனால் கூட்டியிருக்கலாமேயன்றி, கிறித்துவம் என்ற தெளிந்த பாலில், சாதியம் என்ற நச்சைக் கலக்க அந்நிகழ்வுகளே வித்திட்டன என்பதே உண்மை நிலையாகும் கிரேக்க மொழியில் காணப்படும் விவிலியச் செய்திகளின் படி, இயேசு தனது தொண்டர்களை அழைத்து, உலகெங்குமுள்ள மக்களுக்கு நற்செய்தியை அறிவியுங்கள் என்றவாரே எழுதப்பட்டுள்ளது. ஆனால் பிராமணர்கள் எழுதிக் கொடுத்த தமிழ் விவிலிய

நூலில், "உலககெங்குமுள்ள சகல சாதி சனங்களுக்கும் " என்ற சொற்றொடர் திணிக்கப்பட்டுள்ளது இதன்வழியில், கிறித்து வமே சாதிகளை ஏற்றுக்கொண்டுள்ளது என்ற தவறான சிந்தனைக்குச் சிலர் தள்ளப்பட்டனர். அக்காலத்தில் விவிலியத்தைத் தழிழ்ப்படுத்த பிராமணக்களைவிட்டால் வேறு ஆட்களில்லை என்ற நிலையில், ஐரோப்பியர்கள் பிராமணர் களை நாடினர். பிராமணர்கள் தங்களது நச்சுக் கொள்கையை விவியத்திலும் விதைத்துவிட்டனர்.

கிறித்துவத்தில் சாதிகள் இல்லை ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்று பலரும் சொல்லிக் கொண்டிருந்தாலும், தமிழ்நாட்டுக் கிறித்துவத்தில் சாதியக் கொள்கைகள் புரையோடிப் போயுள்ளன என்பதே உண்மை நிலையாகும். இதனைப் போக்கவும், இசுலாமியர்களைப் போன்று, சாதிகளற்ற கிறித்து வத்தை உருவாக்கயும், இதுவரையில் எந்த முயற்களும் தமிழ் நாட்டில் எடுக்கப்படவில்லை என்பது உண்மையான செய்தி யாகும். இன்று தமிழகத்தின் மறைமாட்டங்களில் ஏற்பட்டுள்ள அனைத்தக் குழப்பங்களுக்கம் அடிப்படைக் கரணியம் சாதி களே என்பது தெளிவு. இந்த நடைமுறைகள் சிலருக்கு நல்வாய்ப்பாகவும், பல்வேறு நிலைகளில் தேவைப்படுவதாகவும் உள்ளதால், இதனை மாற்ற எந்த முயற்சிகளும் எடுக்கப்போவ தில்லை என்பதும் தெளிவு - பாவம் கிறித்துவர்கள்! தங்களது ஞான மேய்ப்பர்கள் தங்களுக்கு நல்வழியே காட்டுவார்கள் என இன்னும் சிலர் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

தாங்கள் வஞ்சிக்கப்படுகிறோம் என்று அறிந்த கிறித்து வர்கள், மறைமாவட்ட வாரியக கிறித்துவர்களின் சாதிவழிக் கணக்கெடுப்புகளை நடத்த வேண்டுமென இன்று கேட்கத் துணிந்துவிட்டனர். தங்களது பெரும்பான்மைன் கேற்ற வாய்ப்புகள் பல்வேறு சூழல்களின் மறுக்கப்படுகின்றன என்பதை அவர்கள் அறிந்து கொண்டுள்ளார்கள். ஆனால் திண்டுக்கல் மறை மாவட்டத்தைத் தவிர்த்து, மற்ற மறை மாவட்டங்களில், இவ்வாறான கணக்கெடுப்பை நடத்தத் தயங்குகிறார்கள். கரணியம் யாதெனில், தங்களையே பெரும் பான்மையினர் என்று கூறிக் கொண்டிருக்கும் சிலர் அடிபட்டுப் போவர்கள் என்பதும், கல்வி வேலைவாய்ப்புகள், சமயப் பதவிகள், போன்ற அனைத்துத்துறைகளிலும், ஒரு சில சிறு பான்மைக் குழுக்களே வல்லாண்மைச் செலுத்துகின்றன என்ற

உண்மை வெளிப்பட்டு விழும் என்பதுமேயாம். இந்தக் கிறித்துவ பிராமணர்களை, காலம் களையெடுத்துவிடும் என்பது உண்மை.

தந்தை பெரியார் அடிக்கடி கூறுவார். தமிழ்நாட்டில், தமிழர்களால் நடத்தப்படும் எந்தச் சங்கங்கள், இயக்கங்கள் கட்சிகள் ஆகியவைகளில் பிராமணனை ஊறுப்பினராகச் சேர்க்காதே என்பார். உறுப்பினராகச் சேர்ந்த பிரமாணன் தலைமைப் பதவியையே பிடித்துவிடுவான் என்பது பெரியாருக்குத் தெரிந்திருந்தது, தமிழகக் கிறித்துவ சமயத்தில் பிராமணர்களின் சேர்க்கை குறிப்பிடத்தக்க அளவில் இல்லை யென்பதே ஆறுதலான செய்தியாகும். மனு கொடுத்துள்ள சட்டங்களின் படி, சாதிகளைக் கடவுளே தோற்றுவித்தார் என்பதும், பிராமணனே மாந்த இனத்தின் முதல் குடிமகன் என்பதும் மற்றவரெல்லாம் அவனுக்கு ஏவல் செய்யப் பிறந்தவர் களே என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்த பிராமணீயக் கொள்கையால் ஒடுக்கப்பட்டவர்களும் நசுக்கப்பட்டவர் களும் கிறித்துவத்தை நாடியது இயல்பு. மனுவின் சட்டங்களே கிறித்துவத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டால் கிறித்துவத்தில் இணைந்ததே பொருளற்றதாகிவிடும்.

ராபர்ட் - டி - நொபிலி, தன்னை ரோம்நகரத்துப் பிராம ணன் என்று சொல்லிக் கொண்டாலும், பிராமணர்களில் எத்தனைபேரைக் கிறித்துவ சமயத்துக்கு மாற்றினார் என்பதற் கானத் தெளிவானச் சான்றுகள் இல்லை. 1540 ஆம் ஆண்டு களில் மங்களூர் பிராமணன் ஒருவன் கிறித்துவத்தை எற்றச் செய்திகளும், துத்துக்குடி பரவக்கிறித்துவர்களின் சமய மாற்றத்துக்கு அவனும் ஒரு காரணியாய் இருந்தான் என்பதும் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. குடகு, மங்களூர், கோவா போன்ற பகுதிகளில் சில பிராமணர்கள் கிறித்துவத்தை ஏற்றனர். 1550களில் தமிழ்நாட்டின் வடமாவட்டப் பகுதிகளிலுள்ள அய்யம் பேட்டையில், சிதம்பரத்துத் தீட்சிதப் பிராமணன் ஒருவன், கிறித்துவத்தை ஏற்றது பற்றிய செவிவழிச் செய்திகள் அறியக்கிடக்கின்றன. 1866ஆம் ஆண்டில் மதுரையில் சில பிராமணர்களும்,[222] 1891இல் ஸ்மார்த்த பிராமணர்களும் தங்கள் இல்லத்தாருடன் கிறித்துவத்தில் இணைந்த செய்திகள் காணக் கிடக்கின்றன. இவர்களைத் திருச்சியிலிருந்த இயேசு அவை

222. South Indian Mission, Houpert, p.74.

யினர், மரியன்னைத் தோட்டம் என்ற இடத்தில் குடியமர்த் தினர். 1932ஆம் ஆண்டுக் கணக்கின்படி திருச்சியில் 91 பிராமணர்கள் மரியன்னைத் தோட்டத்தில் வாழ்ந்திருந்தனர் என அறியலாம்.[223] மேலும் இதே கால அளவுகளில் சென்னை, திண்டிவனம், புதுச்சேரி, நாகர்கோயில் போன்ற இடங்களிலும் சில பிராமணர்கள் கிறித்துவராயினர். சீர்திருத்தச் சபையின் சிறப்புமிக்கக் கிறித்துவர்களாக, இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலை எழுதிய கிருஷ்ணப் பிள்ளையும், எ.எஸ். அப்பாசாமி என்பாரும் அறியப்படுகின்றனர். முன்னவர் வைணவரும் பின்னவர் சைவருமாவர்.

இசுலாத்திலிருந்து கிறித்துவத்துக்கு மாறியவர்கள் பற்றிய குறிப்புகள் ஏதுமில்லை. என்றாலும், சீர்திருத்தச் சபையில், 1856ஆம் ஆண்டில், அப்துல்காதர் மற்றும் அப்துல்அல் என்ற இருவர் கிறித்துவத்தை ஏற்றுக் கொண்டதாகச் சில செய்திகள் கூறுகின்றன.[224] அடுத்த 25 ஆண்டுகளில் மேலும் 12 பேர் இணைந்ததாகவும் கூறப்படுகின்றது. கிறித்துவத்திலிருந்து இசுலாத்துக்குச் சென்றவர்கள் பற்றிய தகவல்கள் இல்லை.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டபோது, பல ஆங்கிலேயர்கள் இந்தியப் பெண்களை மணந்து கொண்டனர் அல்லது வைப்பாட்டிகளாக வைத்துக் கொண்டனர். இவர் களின் வழியில் உருவான ஒரு மரபினர் ஆங்கில - இந்தியர் எனப் பட்டனர். குறிப்பாகத் தமிழகத்தில் இந்த மரபினர் சென்னை, விழுப்புரம், திருச்சி போன்ற நகரங்களில் வாழ்கின்றனர். ஆதி தமிழர் இனப் பெண்களையே இவர்கள் மணந்து கொண்ட தாகச் சொல்லப்படுகின்றது. இவர்களில் 50 விழுக்காட்டினர் கத்தோலிக்கச் சமயத்தில் இருந்தனர் என்று குறிப்புகள் கூறு கின்றன. இவர்கள் திருவனந்தபுரம், கொச்சி போன்ற நகரங் களிலும் வாழ்ந்திருந்தனர். பொதுவாக இவர்களைச் "சட்டைக் காரர்கள்" என்று தமிழகத்து மக்கள் அழைத்தனர்.[225]

வேளாளர் என்ற மரபினர் இன்று கிறித்துவ சமயத்தில் காணப்படுகின்றனர். கத்தேலிக்க மற்றும் பிரிவினைச் சபை

---

223. Indian Catholic Truth Society, L. Lacombe S.J, Trichirappalli, 1923.

224. True Yoke Felliws in the Mission field, Braidwod, 1862, p.560.

225. Missionary conference , 1879, p. 423.

களிலும் இம்மரபார் உள்ளனர். பிராமணர்களுக்கு அடுத்த நிலையில் வேளாளர்கள் கருதப்பட்டனர். இடைக்காலச் சோழர்கள், வேளிர்கள் போன்றோர் வேளாண்மையைச் சேர்ந் தவர்களே என்று சொல்லப்படுகிறது. இடைக்காலச் சோழ மரபினர் கள்ளர் மரபினரே என்ற கருத்தும் உண்டு. விள்ளுதல் என்பதற்குத் தோண்டுதல் என்ற பொருளுண்டு நிலத்தைத் தோண்டி பயிர்த்தொழில் செய்தவன், விள் - வேள் - வேளாளன் எனப்பட்டான். கிழவன், வேலன், வெள்ளாழன், உதயன் காராளன், குடியானவன் போன்ற பெயர்களும் இம்மரபினருக்கு உண்டு. சோழப் பேரரசின் உயர் அலுவலர்களாக, வேளாளர்கள் இருந்தனர். குறிப்பாகக் காணிவரி, ஊர்வரி, கோயில் வரவு செலவுகள் போன்ற பணிகளை இவர்கள் மேற்கொண்டனர் (Village Administrative) இவர்களை, "புறவு வரி திணைக் களம்" என்று கல்வெட்டுகள் கூறுகின்றன.

சோழர்காலத்தில், இம்மரபினர் செய்த குற்றங்களுக்கு, குறைவான ஒறுப்புகளே வழங்கப்பட்டன. போர்த்துக்கீசியர் சமயப் பணியாற்ற வந்த காலந்தொட்டு, பல வேளாளர் மரபினர் கிறித்துவத்தில் இணைந்தனர் குறிப்பாக இயேசு அவையினர், தங்களுடைய சமயப் பணிகளுக்கு வழிகாட்டி களாக இம்மரபினரையே நாடினர். இவர்களுடைய வழி காட்டுதல் அவர்களுக்கு ஊக்கமளிப்பனவாகவும் இருந்தன. அதனால், தேவாலயங்களில் தங்களுக்கு அடுத்த நிலையில் வேளாளர் மரபினரை, இயேசு அவையினர், பணியமர்த்தினர். குறிப்பாக, உபதேசியார் என்ற பணிக்கு இவர்களே தேர்வு செய்யப்பட்டனர்.

உபதேசம் என்பது. உப்தேஷ் (Up.Desh) என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ் ஒலிப்பாகும். தேசம் என்பது தேயம் அல்லது நாடு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. தேசம் சுற்றி வருபவர்களே அக்காலத்தில் அறிவு பெற்றவர்களாகக் கருதப்பட்டனர் தேசி என்பான் ஆசிரியன் அல்லது குழு எனப்பட்டான். உப என்பது இரண்டாம் நிலையைக் குறித்த சமற்கிருதச் சொல்லாகும். (A Sanskrit prefix inplying that which is secondary, auxillary and so on) உப-தேசி என்பது இரண்டாம் நிலை ஆசிரியன் என்ற பொருளைத் தரும். பொதுவாக உபதேசி என்ற சொல்லைக் (Catechist) கிறித்துவர்கள் மட்டுமே பயன்படுத்துகின்றனர்.

மந்திரோபதேசம்: மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்தல்.

ஞானோபதேசம்: சமயத்தின் உட்பொருளை விளக்கிச் சொல்லுதல்.(Catechist)

(இப்பணியிலுள்ளவர்களை ஓசி என்றும் ஓச்சி என்றும் நாட்டுப்புறக் கிறித்துவர்கள் கூறுகின்றனர். ஓசியார் அல்லது ஓச்சியார் என்பது உபதேசியார் என்ற சொல்லின் சுருக்கமாகத் தெரியவில்லை. ஓசன்-ஓச்சர் உவச்சன் என்ற சொல்லுக்கு கோவிலில் பணியாற்றுபவன் என்பதே பொருளாகும். (A priest who offciates in the temple) ஓச்சர் என்பதே ஓச்சியார் எனத் திரிந்தது. மேலும் குருவானவருக்குச் சமையல் செய்யும் பணி யாளனை, சோம்பாயி என்று அழைக்கின்றனர். இதன் பொரு ளைப் பலரும் அறிவதில்லை. சுயம்+பாகி என்ற சமற்கிருதச் சொற்கள் தனக்கு மட்டும் சமைத்துக் கொள்பவன் என்ற பொருளைத் தருவதாகும். சுயம்பாகி (பாகம்-உணவு) என்பதே சோம்பாயி என்ற வழக்கில் சொல்லப்படுகின்றது).

வேளாளர்கள், குறைந்த எண்ணிக்கையிலேயே கிறித்துவ சமயத்திலிருந்தாலும், அவர்களின் செல்வாக்கு சிறப்பாகவே அமைந்திருந்தது. எதிர்பார்த்த அளவுக்கு பிராமணர்களின் வரவு கிறித்துவத்தில் அமையாததால், வேளாளர்களின் நிலை கிறித்துவத்தில் சிறப்பிக்கப்பட்டது. இவர்களை கிறித்துவ பிராமணர்கள் என்று கூறும் நிலை இருந்தது. கிறித்துவத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த இவ் வேளாளர்கள் கிறித்துவ வேளாளர்களுடனேயே திருமண உறவுகளைக் கொண்டனர். வேளாளர்களுக்கென தனியான கல்லறைகளும் இருந்தன. மற்ற வகுப்பாரை இங்கே புதைக்க அனுமதிக்கப்படவில்லை. இவையெல்லாம் கிறித்துவத்தை மக்களிடையே பரப்புவதற் கான உத்திகளாகக் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. தாழ்த்தப்பட்ட வகுப்பாராக கருதப்பட்ட மக்கள் தாங்கள் கடவுளால் தாழ்த்தப்பட்டவர்களாகவே படைக்கப்பட்டதாக வும் மேல் சாதிக்காரர்களின் உரிமைகளைத்தாம் பெற முயல்வது தவறானது என்று வெள்ளந்தித்தனமாகக் கருதிக் கொண்டிருந்தனர். அந்த அளவுக்கு அறியாமையும் கல்வியறி வற்ற சூழலும் அவர்களிடையே காணப்பட்டன.

வன்னியர்கள் என்ற மரபினர் இன்றைய தமிழ்நாட்டுக் கிறித்துவ சமயத்திலுள்ளவர்களில் முப்பது விழுக்காட்டினராக

உள்ளனர் என்றவாறு சில குறிப்புகள் கூறுகின்றன. வேலூர், செங்கல்பட்டு, கடலூர், புதுவை மாநிலத்தின் பரவலான பகுதிகள் (காரைக்கால் உள்ளிட்ட) தஞ்சாவூர், பெரம்பலூர், நாகை, திருவாருர், திருச்சி, திண்டுக்கல், சேலம், தருமபுரி போன்ற மாவட்டங்களில் பரவலாக வன்னியர் மரபுக் கிறித்து வர்கள் வாழ்ந்து வருகின்றனர். இடைக்காலச் சோழர்கள் காலத்தில் தொண்டை நாடு காவிரிக் கரைப் பகுதிகள் பச்சை மலைப் பகுதிகள் கொள்ளிடம் மற்றும் வெள்ளாற்றுக்கரை களின் பகுதிகள் கரைக்காட்டு நாடு, துண்டை நாடு, சென்னி வனக் கூற்றம் (செந்துறை) ஆகியவை வன்னியர் வாழ் பகுதி களாயிருந்தன என்று கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

அரையன், பேரரையன், நாடுடையான், ஊருடையான், காணியுடையான், கங்கை கொண்டான், கல்யாணபுரங் கொண் டான், கடந்தையான், சம்புவராயன், முனிதரையன், வில்விஜயன், கச்சிராயன், இருங்கோளன், வீரமைந்தன், காங்கேயன், வான திரையன், சேனைக் கஞ்சான், களத்துப்பரியன், கலிங்கத்தான், கர நாட்டான், கண்டியன், சேனையன், சல்லியன் என நூற் றுக்கும் மேற்பட்ட பட்டப் பெயர்களால் இவர்கள் அழைக்கப் படுகின்றனர். வில் வித்தையில் வல்லவர்களான வன்னியர்கள் பள்ளிப்படை (Palli Regiment) என்ற சோழர் படையில் பணி யாற்றியவர்களாவர். இவர்களில் செம்பை வாண கோவரையர், சம்புவராயர், கச்சிராயர், துண்டை நாடுடையார் போன்றோர் குறுநில மன்னர்களாகவுமிருந்தனர். தந்திரிமார் எனவும் இவர்கள் சிறப்பிக்கப்பட்டனர். பதினெட்டுப் பற்றுக்கு உரிமை யாளர்கள் என்று போற்றப்பட்டனர் சிவ பற்றாளனான கண்ணப்ப நாயனார், சிவனிடம் காட்டிய முரட்டுப் பற்று (பக்தி) பற்றிப் பல்வேறு தொன்மங்கள் உள்ளன. வன்னியர்கள், கண்ணப்பநாயனாரைத் தமது குடித்தலைவனாகக் கூறுகின் றனர். போர்க்குணமும் முரட்டுத் தன்மையும் கொண்ட இம் மரபு மக்கள், கடந்த காலங்களில் உணர்வுகளுக்கு முதலிடம் கொடுத்து வாழ்ந்தவர்கள். உணர்ச்சிப் பிழம்புகளான இம் மக்கள், இன்றும் கூடத் தங்களது மரபுவழிகளிலிருந்து, விடுபட வில்லை யென்பதால்தான் இன்னும் பிற்படுத்தப்பட்ட மக்களினமாகவே வாழ்கின்றனர். இவர்களைக் கிறித்துவ சமயத்திற்கு மாற்றுவதென்பது அவ்வளவு எளிதான செயலாக

இருந்திருக்க இயலாது. கி.பி. 700 ஆண்டுகளுக்கு முன்பு வன்னியர் இனமக்கள் சமண சமயத்தில் இணைந்திருந்த தாகவும் அதனாலேயே அவர்களுக்கும் பள்ளிகள் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சிலர் கருதுகின்றனர். திருநாவுக்கரசர் இவர் களைச் சிவநெறிக்குத் திருப்பியதாகவும் சொல்லப்படுகின்றது. இராமானுசர் காலத்தில் சிலர் வைணவ நெறிக்குத் திருப்பப் பட்டதாகவும் சிலருக்கும் பூனூல் அணிவிக்கப்பட்டு பிராமணர் நிலைக்கு உயர்த்தப்பட்டதாகவும் கூறுவர். வைணவச் சமயத்தில் காணப்படும் கறுப்பு பிராமணர்களான தென்கலைப் பிரிவினர், வன்னியர் மற்றும் ஆதி தமிழர் வகுப்பைச் சார்ந்தவரே என்றும் உண்மையில் அவர்கள் பிராமண மரபு வழியில் வந்தவர் களல்லர் என்பதும் வடகலைப் பிரிவினர் கூறிவருகின்றனர் இச்செய்திகள் எந்த அளவுக்கு உண்மையானவை என விளங்க வில்லை. இராமானுசர் தனது கொள்கைகளை அறிவித்த காலங் களில் பிராமணர்கள் அவரது அத்வைதக் கொள்கையை ஏற்கவில்லையென்பதால் வன்னியர் ஆதிதமிழர் போன்றோர் பிராமணர்களாக்கினார் என்ற செய்தியுமுண்டு.

சமண சமயத்தினின்றும் சிவநெறிக்கு வந்ததால், தங்களைப் பிராமணர்கள் வெறுத்தனர் என்ற அடிப்படையில் பெரும் பாலான வன்னியர்கள் கிறித்துவ சமயத்தைத் தழுவியிருக்க வேண்டும். பெருவாரியாக வாழ்ந்திருந்த வன்னியர் இனம், ஆதி தமிழரைப் போல் தீண்டாமைக் கொடுமையைப் பெற்றிருக்க வில்லையென்பது தெளிவு. வேளாளர்களைப் போலவே வன்னியர்களும் திருமண உறவுகளைத் தமக்குள்ளேயே வகுத்துக் கொண்டனர். கிறித்துவ சமயத்தில் வேளாளர்களுக்கு அடுத்த நிலையிலேயே இவர்கள் வைக்கப்பட்டிருந்தனர். போர்க் குணம் கொண்ட இந்த வீர மரபினர் கிறித்துவ சமயத்தில் இணைந்ததற்குப் பிறகு, தங்களது தனித்தன்மைகளை இழந்து போயினர். கிறித்துவ சமயத்தில் பிடிப்புள்ளவர்களாக மாறிய வன்னியர்கள் சமயத்தலைமைக்குக் கட்டுப்பட்டு வாழும் பண்புகளைப் பெற்றனர். கிறித்துவம் தமிழகத்துக்கு அளித்த அருங்கொடையான கல்வியை வன்னியர் இன மக்கள் பெற் றனர். இன்று தமிழகத்தில் வாழும் வன்னியர் கிறித்துவர்கள் மற்ற வன்னியர்களைவிட கல்வியறிவில் முன்னேறியுள்ளனர் இருப்பினும் நாட்டுப் புறங்களில் வாழும் வன்னியக் கிறித்துவர் களின் பொருளியல் கூறுகள் பின்தங்கியே உள்ளன.

தொண்டை நாட்டு வேளாண்மரபினரின் ஒரு பிரிவே நத்தமன் எனப்படுவதாகும். நத்தமான் எனவும் வழங்குவர். நீர் நிறைந்து காணப்பட்ட பகுதிகளை நத்தம் என அழைப்பர். நத்தம் என்ற சொல்லுக்கு நீர் என்பது நேரிடையான பொருளில்லை. சங்கு, கிளிஞ்சல், நத்தை போன்றவை நீர் நிறைந்த பகுதிகளில், நீரை நத்தி வாழ்வனவாகும். நத்தை நத்தி வாழ்வது என்றே பொருளாகும். அதியமான், நெடுமான், நத்தமான் என்பன தமிழ் வழக்குச் சொற்களாகும். மலையை அடுத்து வாழ்ந்தவர்கள் மலையமான் எனப்பட்டனர். ஒரே சுற்றமாக ஒரு பகுதியில் வாழ்ந்தவர்கள் சுருளிமான் எனப்பட்டனர். இவர்கள் எல்லாம் வேளாண்மரபின் பிரிவுகளேயாவர். சித்தர மேலி நாட்டார், அஞ்சு நாட்டார், சுருளிமான் நாட்டார் போன்ற பிரிவுகளும் காணப்படுகின்றன. உடையார் மூப்பனார் என்றழைக்கப்படும் பிரிவுகள் வேளாண்மைக் குடியின் கிளைகளே. இவை பொதுப்பெயர்களேயன்றி மரபுகளின் இனப் பெயர்களாக அமையவில்லை. பாரி வள்ளல் என்பான் உடையார் குடியின் முன்னோன் என்றதற்குச் சான்றுகள் இல்லை. அவன் தமிழ்க்குடிமகனே. மூத்த தலைவர்களின் இனவழி மூப்பனார் எனப்பட்டது. வேளாண்தொழிலில் செல்வம் ஈட்டியவர்கள், உடையார் எனப்பட்டனர் அறிவுடையார், எல்லாம் உடையார் என்கிறார் வள்ளுவர்.

கடலூர், கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், அரியலூர் புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம் போன்ற மாவட்டங்களில் உடையார் இனத்தவரும், தஞ்சை, குடந்தை, அரியலூர், பெரம்பலூர் போன்ற பகுதிகளில் மூப்பனார் இனத்தவரும் வாழ்ந்து வருகின்றனர். இராமநாதபுரம் பகுதியில் வாழ்ந்திருந்த உடையார்களில் பலர் கிறித்துவத்தை ஏற்றனர். இயேசு அவையினர் குறிப்பாகப் பிரிட்டோ போன்றவர்கள். இம்மரபினரைக் கிறித்துவத்தின்பால் இணைத்தனர். பிரிட்டோவின் மறைவுக்குப் பிறகு பல உடையார் குடியினர் வடக்கு நோக்கிப் புலம் பெயர்ந்ததாகக் கூறப்படுகின்றது. இன்று உடையார் பாளையம் பகுதியில் வாழ்கின்ற உடையார்க்குடிக் கிறித்துவர்கள் இராமநாதபுரத்திலிருந்து வந்தவர்களே எனக்கருத இடமுண்டு. மூப்பனார் குடியில் கிறித்துவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. தமிழ்க்குடியான இம்முக்குடிகளும் பார்க்கவ குலம் என்ற சமற்கிருதச் சொல்லால் தம்மை அழைத்துக் கொள்வது வேடிக்கையானது.

பார்க்கவன் என்பதும் தமிழ் மூலத்தைக் கொண்டதே. வெறும் கண்ணாலேயே பார்க்கக் கூடிய வெள்ளியை, பார்க்கவ என்று சமற்கிருத்ததில் கூறினர். பரசுராமனுக்கும் பார்க்கவன் என்ற பெயருண்டு பார்கவி=பார்வதி அல்லது இலக்குமி. இவையெல்லாம் இம்மரபினருக்குத் தொடர்பில்லாத பெயர்களே எனக் கூறலாம். பிராமணர்களின் தாக்கங்கள் தமிழகத்தில் அறியப்பட்டபோது, இவ்வாறான தொன்மக்கதைகள் இத்தமிழ்க் குடியுடன் இணைக்கப்பட்டன. பாண்டியர்கள் தம்மை மதியின் மரபினர் (சோமகுலம்) என்றும் சோழர்கள் கதிர் மரபினர் (சூரிய குலம்) என்றும் கூறிக் கொண்டது போல், தொண்டை நாட்டு மரபினர் தம்மை வெள்ளி (சுக்கிரன் அல்லது பார்க்கவன்) மரபினர் எனக் கூறிக் கொண்டனர்.

தற்காலக் கிறித்துவ உடையார்கள், கிறித்துவ சமயத்தில், வன்னியர்களுக்கு அடுத்த எண்ணிக்கையைக் கொண்டவர்களே. ஆனால் வன்னியர்களைக் காட்டிலும் பொருளியல் கூறுகளில் உயர்ந்து காணப்படுகின்றனர். கிறித்துவ சமயத்தின் உயர் பொறுப்புள்ள பதவிகளில் பலர் உள்ளனர். கல்வித் துறையிலும் உயர்ந்து காணப்படுகின்றனர். கடலூர், இராமநாதபுரம், சிவ கங்கை, புதுக்கோட்டை, பெரம்பலூர், விழுப்புரம் மாவட்டங் களில் கிறித்துவ உடையார் மரபினர் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர்.

முலக்குலத்தோர் எனப்படும் கள்ளர், மறவர், அகமுடையார் என்றும் மூன்று மரபுகளின் தாயகமும் தொண்டை நாடே தொண்டை நாட்டவர் தொண்டைமான் எனப்பட்டனர். திருப்பதி வேங்கடபதித் திருக்கோயிலைக் கட்டுவித்தவன் தொண்டைமான் என்ற மன்னனே என்று அவ்விடத்தின் தொன் மங்கள் (ஸ்தல புராணம்) கூறுகின்றன. தென் பாண்டியர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பலர். தென்தமிழ் நாட்டில் குடியேறினர். இவர்கள் அனைவரும் பாண்டிய மன்னர்களுக் காகப் போரிட வந்தவர்களே. இடைக்காலச் சோழர்கள் காலத்திலும் மதுரையிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் பலர் குடியமர்த்தப்பட்டனர். முக்குலத்தோர், மெள்ளமெள்ள வெள்ளாழராயினர் என்ற பழமொழியைக் கூறுவர் அது முற்றிலும் தவறானதாகும். வேளாண் மரபினரே முக்குலத் தோராகப் பிரிந்தனர் என்பதே உண்மையான செய்தியாகும். சோழ பாண்டிய மன்னர்களுக்கும் பின், தென்தமிழ் நாடு,

வடுகர்களுக்கும் இசுலாமிய வல்லாட்சியாளர்களுக்கும், வந்தேறிகளுக்கும் அரசியல் அரங்கமாக மாறிப்போறிற்று. போர்த்தொழில் செய்துவந்த முக்குலத்தோருக்கு வேலை வாய்ப்புகள் இல்லாமற் போயின. வறுமையில் வாடிய அம் மக்களுக்கு வந்தேறி அரசுகள் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் அரசாங்கத்தின் சொத்துக்களைச் சூறையாடத் தொடங்கினர். நாயக்கர்கள் காலத்தில் கள்ளர் என்ற பிரிவாகக் கருதப்பட்டனர். தன்மானம் மிக்க சிலர் சில பகுதிகளைத் தமக்கென வளைத்துக் கொண்டு ஆளத் தலைப் பட்டனர். இவர்களை மறவர்கள் என்றனர். ஊர் நாட்டாண் மைப் பொறுப்பு ஏற்றிருந்தவர்கள், அகமுடையான் அல்லது மன்றுடையான் எனப்பட்டனர்.

போர்த்திறனும் ஆற்றலும் மிக்க இம்மக்களின் தலைவ னாக அறியப்பட்டவனே கிழவன் சேதுபதியாவான். இவனது மைத்துனனான தடியத்தேவன் கிறித்துவ சமயத்தில் இணைந்தது, கிறித்துவ வரலாற்றில் சிறப்பான திருப்பமாகும். தடியத் தேவனைப் பின்பற்றி ஏராளமான மறவர் குடும்பங்கள் கிறித்து வத்தை ஏற்றன. பிரிட்டோவைக் கொலைசெய்த ஓரியூர்க் கிழவனின் மனைவியே கிறித்துவ சமயத்தைத் தழுவியிருந்தாள். இவ்வாறாக, மறவ நாட்டில் கிறித்துவம் தழைத்த செய்தியை சேதுபதியின் சிறப்புக்குப் பிறகு அறியலாம். இன்றும் புதுக் கோட்டை, இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர் மாவட்டங் களிலும் திருச்சி மாவட்டத்தில் வடுகர் பேட்டையை ஒட்டியுள்ள பகுதிகளிலும் கள்ளர் இனக் கிறித்துவர்கள் வாழ்கின்றனர்.

நாடார்கள் என அறியப்படும் தற்கால வணிகர் இனம், தொல்தமிழ் நாட்டின் பழம்பெரும் இனமாகும். கடந்த 20 ஆம் நூற்றாண்டுகளிலே இவர்கள் வணிகர்களாக அறியப்பட்டனர். பனைத்தொழில் செய்துவந்த இம்மக்கள், குமரிக் கண்டத்தின் ஏழ்தெங்கநாட்டு மக்களாகச் சொல்லப்படுகின்றனர். குமரிக் கண்டத்தின் வடக்குப் பகுதியில் ஏழ்தெங்க நாடு இருந்தது. இந்நாடு தென்னை மரங்களால் செழிப்புற்றிருந்தது. இங்கு வாழ்ந்திருந்த மக்கள் ஈழகுலச் சான்றோர்கள் என்றவாறு அறியப்படுகின்றனர். சான்றோர் - சான்றோன் என்றவாறு அறியப்பட்டவர்களைப் பிற்காலத்தில் சாணார் என்று திரித்துக் கூறினர். தென்னை மற்றும் பனைமரத் தொழில் செய்துவந்த இம்மக்கள், தமிழகத்தின் சர்க்கரைத் தொழிலுக்கு முன் னோடிகள் ஆவர்.

ஆரிய பிராமணர்களின் வருகைக்குப் பின்னர், சாணார்களைத் தீண்டத்தகாதவர்கள் என்று பிராமணர்கள் ஒதுக்கினர். கோவில்களில் நுழைய இவர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. தற்பாதை குமரி மாவட்டம், அக்காலத்தில் திருவாங்கூர் மன்னராட்சியின் ஒரு பகுதியாக இருந்தது. அரசும், வேளாளர் மற்றும் நாயர்களும் இம்மக்களைக் கொத்தடிமைகளாக ஆட்டிப்படைத்தனர். பல முதலாளிகளுக்கு பணி அடிமைகளாக்கப்பட்ட நாடார் இனத் தொழிலாளர்களுக்கு, விடுதலையென்பதே பகற்கனவாயிருந்தது. நாடார் இனப் பெண்டிர்கள், தங்களது மார்பகங்களைக் கூட சேலையால் மறைத்துக் கொள்ளக் கூடாது என, அரசும் சமூகமும் சட்டமியற்றின. இக்கொடுமைகளை எதிர்த்துப் போரிட கிறித்துவம் அம்மக்களுக்குத் துணையாக நின்றது. பல்வேறு போராட்டங்களுக்கு இடையில் 1812ஆம் ஆண்டில், திருவாங்கூரிலிருந்த ஆங்கில ஆட்சியாளர் மன்றோ பிரபு, நாடார் குலப் பெண்கள், இரவிக்கை அணிந்து கொள்ளலாம் என ஒரு சட்டம் இயற்றினார். பெண்கள் மேலாடை அணிந்துகொள்ள, அரசாங்கமே ஆணையிட்டது போன்ற நிகழ்வு, உலக வரலாற்றில் காண இயலாதது. மன்றோவின் ஆணைப்படி இரவிக்கை அணிந்து கொண்ட நாடார் குலப் பெண்களை, ஆதிக்க சாதி வெறியர்கள், பாலியல் கொடுமைகளுக்கு உட்படுத்தினர். அவர்களது இரவிக்கைகள் கிழித்தெறியப்பட்டன. வீடுகள் கொளுத்தப்பட்டன. சாதி மரபுகளை நாடார்குலப் பெண்கள் மீறி விட்டார்கள் என வழக்குகளும் தொடுக்கப்பட்டன.

எல்லாத் திக்குகளிலிருந்தும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டதால் நிலைகுலைந்துபோன அம் மக்களுக்குத் தோள் கொடுக்க கத்தோலிக்கத் திருச்சபை முன்வந்தது. 1859ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்தின் ஆங்கில ஆளுநர் சார்லஸ் ட்ராவல்யன் என்பாரைச் சந்தித்து, நாடார்குலப் பெண்களின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் பற்றிய மனுவொன்றை அளித்தது. இதன்படி, ஆளுநர் நல்ல தீர்ப்பை வழங்கினார். நாடார்குலப் பெண்கள் மேலாடை அணிந்து கொள்ள அனுமதி அளித்தார். இதனை எதிர்ப்போரைச் சட்டப்படிக் கைது செய்யவும் ஆணை பிறப்பித்தார். ஆனால், மற்ற உயர்சாதிப் பெண்களைப் போல், இரவிக்கைக்கு விலையுயர்ந்த துணிகளைப் பயன்படுத்தக்கூடாது என்றும் ஆணையிட்டார்.

இந்த நடவடிக்கைகளில் முன்னின்று போராடிய கத்தோலிக்கத் திருச்சபையின் பால், நாடார்களின் பற்றுதல் திரும்பவே, ஏராளமான குடும்பங்கள் கிறித்துவத்தில் இணைந் தன. இன்று தென்தமிழ்நாட்டில், நாடார் இனக் கிறித்துவர்கள் பெருமளவில் உள்ளனர். சிலர், சமயக் கட்டுகளையும் மீறி, தங்களுடைய இனத்திலேயே திருமண உறவு கொள்கின்றனர். இம்மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் சி.பா. அதித்தனார் என்பது உண்மைச் செய்தியாகும்.

பரவர், பரதவர், செம்படவர், என்றவாறு அழைக்கப்படும் மீனவத் தொழிலாளர்கள் குமரிக் கண்டத்தின் தொல்தமிழ்க் குடியினராவார் குமரிக் கண்டத்தில் தோற்றுவிக்கப்பட்ட பாண்டிய அரசு, மீனவர்களின் அரசே என்பதும், பாண்டியர்கள் மீனவர்களே என்பதும் வரலாற்று உண்மையாகும். அது பற்றியே மீனைத் தங்களது அரசுக் குறிப்பாகப் பாண்டியர்கள் தேர்வு செய்திருந்தனர். நான்கு புறமும் கடலால் சூழப்பெற் றிருந்த குமரி நாட்டில், மீனவர்களே பெருமளவில் வாழ்ந்திருந் தனர் இக்காலத்தில அறியப்படும் சாதிகள் போல் அல்லாமல், தொழில் செய்வோரின் அடிப்படையில் தொல்தமிழ் மக்கள் அறியப்பட்டனர். குமரிக்கண்டம் கடல்கோள்களால் அழிவுற்ற போது, இங்கிருந்து தப்பிச்சென்று வடக்கிலும் மேற்கிலும் குடியேறியவர்கள் தமிழ்ப் பரவர்களே என்பது தெளிவு. சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட பலசொற்கள், இம்மக்களைப் பற்றி விளக்குகின்றன. பர - பரவன் - பரதவன் - பரதன் போன்ற சொற்கள், பானை ஓடுகளில் காணப்படுகின்றன. பாபிலோன் நாட்டில் குடியேறிய தமிழர்களும் மீனவர்களே. அம்மக்களின் தெய்வமாக, கடல் தெய்வமே காணப்படுகின்றது.

தொல்தமிழ்க் குடியான பரவக்குடி, காலப்போக்கில் தனது பெருமைகளையிழந்து, மீன்பிடித் தொழிலாளர்களாக மாறியது. கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக, மீனவர்களின் உழைப்பால், வணிகர்கள், தங்கள் பொருளியல் கூறுகளை வளப்படுத்திக் கொண்டனர். குறிப்பாக, இடைக்காலத்தில் மீனவர்களின் நிலை, பெரும் சரிவைச் சந்தித்திருந்ததை வர லாற்றில் காணலாம். நகர்ப்புற மக்களின் வாழ்க்கை முறைகள் பற்றி அறிந்திராத இம்மக்கள், கடற்கரைகளில் குடிசைகளில் வாழ்ந்திருந்தனர். அன்றாட உணவுக்கே அல்லல்பட்டனர். உள்நாட்டு, வெளிநாட்டு வணிகர்களால் கொத்தடிமைகளாக

நடத்தப்பட்ட கி.பி. 14ஆம் நூற்றாண்டுகளில், பரவர்களின் வாழ்க்கையில் விடிவெள்ளியாகக் கிறித்துவம் புகுந்தது. பரவர் கள் கிறித்துவத்தில் இணைந்தது பற்றிய செய்திகளை, "தமிழ் நாட்டுக் கிறித்துவம் - பகுதி 1இல் காண்க.

கிறித்துவம் தமிழ் நாட்டுப் பரவர்களின் வாழ்க்கை நெறி களில் பல மாறுதல்களைச் செய்துள்ளது. சிக்கலான, வாயில் நுழையாத போர்த்துக்கீசியப் பெயர்களைக் கொண்டுள்ள இத்தமிழ்ப் பரவர்களின் எண்ணிக்கை, தென் தமிழ் நாட்டில் பெருமளவில் உள்ளது. தென் தமிழ்நாட்டின் கிறித்துவமே நாடார் மற்றும் பரவர்களின் எண்ணிக்கையால் மதிப்பிடப் பட்டுள்ளது மாசற்ற வெண்மையின் அடையாளமாகத் திகழும் மரியன்னையை, பனி மாதா என்று அழைத்த போர்த்துக் கீசியர்களின் வழியில் தூத்துக்குடியிலுள்ள பனிமயமாதாவின் தேவாலயம் திகழ்கின்றது. திரு. எஸ்.பி. ரைசு (S.P.Rice) என்பார் கூறுகிறார். "ஜோங் பெர்ணாண்டஸ், மரிய சந்தியாகோ என்ற பெயர்களைக் கொண்டிருப்பவர்கள், வேறு யாருமல்லர். தூத்துக்குடியில் உள்ள பரவர்களே. கடலுக்குச் செல்லும் போது அவர்களிடமிருப்பவை, இடையில் கட்டியுள்ள சிறிய துளியும், மரியன்னையின் திருவுருவப்படமுமே".

பிராமணர்களின் வருகைக்குப் பிறகு பல்வேறு தொன்மக் கதைகள் பரவர்கள் பற்றி உருவாயின. மகாபாரதத்தில் பரவர் களைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளதைக் காட்டி மகிழும் பரவர்கள், உண்மையான வரலாற்றை இன்னும் அறிந்து கொள் ளாமலிருக்கிறார்கள். கி.மு. 1000ஆண்டுகள் நிகழ்வுற்றதாகக் கருதப்படும் பாரதக் கதைக்குப் பலவாயிரம் ஆண்டுகட்கு முன்பே, குமரிக் கண்டத்தில் (கி.மு. 20,000). கோலோச்சியவர்கள் பரவர்கள் என்ற பாண்டியர்களே என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பரவர்களின் பிறப்பை, ஒரு பிராமணனுடன் தொடர்புபடுத்திக் கூறும் கதையானது, தொல் தமிழ்க்குடியைக் கொச்சைப்படுத்தும் கதையாகும் பிராமணனுக்கும் பரவர் களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை எனத் துணிந்து கூறலாம்.

தூத்துக்குடிப் பகுதியில் வாழும் பரவர்களில் பெரும் பாலோர் கிறித்துவத்தை ஏற்றுள்ளனர். கேரளத்திலுள்ள பரவர்கள், கிளிஞ்சல்களைப் பொறுக்கியெடுத்து, சுண்ணாம்பு விளைத்தவர்கள், மேலும் சிலர் களரி என்ற ஓகக் கலையையும்,

நீண்ட வாளைக் கொண்டு போரிடும் கலையையும் கற்றறிந்தவர்கள். இன்றும் அக்கலைகள் அழிந்துவிடவில்லை. பரவப் பெண்களே அக்கால மருத்துவச்சிகளாக இருந்தனர். குருப் (kurup), வாரக்குருப் (Vaara kurup), நூரன் குருப் (Nuran kurup) போன்ற பிரிவுகள் மலையாளத்தில் காணப்படுகின்றன.[226] நூரன் என்ற சொல், நீர் - நீரன் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. சுண்ணாம்பை நீர் என்று அழைப்பதும் தமிழர் மரபே. கன்னடப் பகுதியில் வாழும் பரவர்கள், தாழங்குடைகளைப் பின்னுவதில் கைதேர்ந்தவர்கள். கல்கத்தாவிலிருந்து தொடங்கி குமரிமுனைவரையிலான கிழக்குக் கடற்கரையிலும், குமரி தொடங்கி வேம்பாய் வரையிலான மேற்குக் கரையிலும் வாழ்ந்திருந்தவர்கள் தமிழ்ப் பரவர்களே. இவர்கள் தண்ணீரில் உழைத்து தரையில் வாழ்ந்தவர்கள் என்று முசுகுந்தப் புராணம் கூறுகிறது. "த்ர" என்ற சமற்கிருதச் சொல்லால் அழைக்கப் பட்ட இவர்கள் "த்ரவிட்" என்ற இனமாகக் கருதப்பட்டனர். த்ர என்பது தரை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. திராவிடர் என்ற சமற்கிருதச் சொல் குறிப்பிடும் தென்னாட்டு மக்கள் பரவர்களே என்பது தெளிவு. பரவர்களையே முதலில் சுட்டிய அச்சொல், பிறகு தென்னாட்டில் வாழ்ந்த அனைவருக்கும் பொதுவான சொல்லாயிற்று. பொருளியல் கூறுகளில் இன்றும் பின்தங்கியவர்களாகக் கருதப்படும் கிறித்துவப் பரவர்களின் வாழ்க்கை முறைகள், ஏழ்மையை எதிரொலிப்பனவாகவே உள்ளன. தமிழ்நாட்டில் கிறித்துவ சமயத்துக்கே பெருமை சேர்த்த இப்பரவர்களுக்குக் கிறித்துவம் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த பரவர்களில், இந்திய விடுதலைப் போரில் பங்குபெற்ற ஜே.பி. ராட்ரிக்ஸ் (திரைப்பட நடிகர் மறைந்த சந்திர பாபுவின் தந்தை), தமிழறிஞர் ரம்போலோ மாங்கரனேஸ் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். தமிழ்நாட்டின் காவல்துறைத் தலைவராயிருந்த திரு. ஏ. எக்ஸ். அலெக்சாந்தர் இந்திய அளவில் அறியப்பட்ட காவல்துறையின் சிறந்த அலுவலர்களில் ஒருவராவர்.

ஆதி திராவிடர்கள் என அறியப்படும் தொல் தமிழர் இன்று இந்தியாவெங்கும் பரவி வாழ்கின்றனர். திராவிடர் என்பது சமற்கிருதச் சொல் என்பதாலும் தமிழரைக் குறிக்க ஆரியர்

---

226. மேலதே.

பயன்படுத்தியச் சொல் என்பதாலும், தமிழர் அச்சொல்லைத் தவிர்ப்பதே நல்லது. தமிழரைத் தமிழ்ச் சொல்லால் அடையாளங் காணுவதே சிறப்பானது என்பதை இன்றும் பலர் உணரவில்லை. தென்னாட்டில் வாழும் தொல்தமிழரை ஆதித்தமிழர் என அழைப்பதே சரியானதாகும். இன்று, வட இந்தியப் பகுதிகளில் வாழும் தொல்குடி மக்களை தலித் என்ற சமற்கிருதச் சொல்லால் அழைக்கின்றனர். இச்சொல்லும் கூட, தலை என்ற மூலச் சொல்லினின்றும் தோன்றியதே. தலை என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பழமை, முதன்மை, முதுமை என்ற பொருளும் உண்டு. தென்னிந்தியரை ஆதி திராவிடர் என்றும், வட இந்தியரை தலீத் என்றும் ஆரியர்களே அழைத்தனர். உண்மையில் இவ்விரு குடிகளும் தொல்தமிழ்க் குடிகளே. வட இந்தியாவில் வாழ்ந்திருந்த தமிழர் இனம், ஆரிய பிராமணர்களால் தலித் என்று (தலையகத்து = நாட்டின் தொன்மைக் குடி) ஆதி என்ற சொல்லுக்குத் தெற்குத்திசை என்பதே உண்மைப் பொருளாகும். (விளக்கம் ஆசிரியரின், அயன் மொழிகளில் தமிழின் வேர்ச் சொற்கள், பகுதி 2ஐக் காண்க). ஆதி தமிழர் என்பார், தென் பகுதியான குமரிக்கண்டத்தில் வாழ்ந்திருந்த தமிழரே என்று பொருள்கொள்ள வேண்டும். இன்று வழக்கிலுள்ள சாதிகள் எல்லாம், இத்தமிழ்க் குடியை ஆதிதமிழர் என ஏற்றுக் கொள்வதின் மூலம், தங்கள் தொல் தமிழரல்லர் என்பதையும், இடையில் எங்கிருந்தோ வந்தவர்கள் என்று பொருள் அமையும். ஆனால் உண்மையில், ஆதி தமிழரின் விரிவுகளே இன்றுள்ள வேளாளர், வன்னியர், முக்குலத்தோர், உடையார் நாடார், பரவர்கள் என்பதையுணர வேண்டும். தொல்காப்பியர் காலத்தில் (கி.மு. 1000) சாதி அமைப்புகள் தமிழகத்தில் இல்லை. அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்பது, தமிழர் நாகரிகத்தின் வெளிப்பாடுகளே இவை தொழில் முறையில் அமைந்தனவேயன்றி, சாதிகள் முறையில் அமையவில்லை. அந்தணர் என்போர் அந்தண்மை கொண்டோர் அல்லது பெரியோர் என்ற பொருளில் சொல்லப்பட்ட தமிழ்ச்சொல்லே. எத்தொழில் செய்தோரிலும் அந்தணர் இருந்தனர். எந்தவொரு தமிழனும் எத்தொழிலையும் செய்ய உரிமை பெற்றிருந்தான். தமிழ்க் குடிமகனான கரிகாலன் மன்னனானது எப்படி?

அரசனான இளங்கோ அந்தணனானது எப்படி? பரவனான பாண்டியன் குமரி நாட்டை ஆண்டது எப்படி? சிந்திக்க

வேண்டும். தமிழரின் வாழ்க்கை முறைகளே எழுதப்படாத சட்டங்களாயிருந்தன. வட இந்தியத் தமிழரும் குறிப்பாகச் சிந்துவெளித் தமிழர் இச்சட்டங்களையே கொண்டிருந்தனர். வந்தேறிகளாக வந்த ஆரிய இனம், இதன் அடிப்படையில் சாதிகளைத் திரித்து வகுத்தனர். அரசனுக்கு முன்பு பிராமணன் வைக்கப்பட்டான். பிராமணன் சத்திரியன், வைசியன் சூத்திரன் என்ற வர்ணாசிரமமுறைக்கு, மாந்த நேயம் அடிப்படையாக அமையவில்லை என்பதை கடந்தகால வரலாறுகள் உணர்த்தும் தமிழகத்தில் இந்நிலைப்பாடு அமைந்திருக்கவில்லை. தமிழகத் தில் பிராமணனைத் தவிர்த்த அனைவரும் சூத்திரர் என்றே அறியப்பட்டனர். பொருளியல் துறைகளில் முன்னேறியிருந்த சில தமிழர் பிரிவுகள், பிராமணக் கொள்கையை ஏற்றுக் கொண்டதோடு, பிராமணர்களுக்கு அடுத்த உயர்சாதியார் தாங்களே எனக் கூறிக் கொள்வதில் பெருமை கொண்டனர். ஏழ்மை நிலையிலிருந்த தமிழர் அனைவரும் சூத்திரர் என ஒதுக்கப்பட்டனர். நில உடைமையாளர் வேளாளர் எனவும், நிலமற்றவர் பணியாட்களாகவும் மாற்றப்பட்டனர். வேளாண் தொழில், கோயில் கட்டுதல், அரண்மனை போன்ற இல்லங்கள் கட்டுதல், ஏரிகுளங்களை வெட்டுதல், சாலை அமைத்தல், காட்டை அழித்தல் போன்ற உடல்வலி தொடர்பான அனைத்துப் பணிகளையும் ஏழைத் தமிழரே செய்தனர் - இவரை தீண்டத் தகாதவர் எனவும் ஆரியர் சொல்லி வைத்ததை, அடுத்த நிலை *(?)*த் தமிழரும் அரங்கேற்றினர்.

கோவில் கட்டவும், அதற்கான கற்களை உடைக்கவும், தேர்கள் செய்ய மரங்கள் வெட்டவும், ஆலயக் குளங்களை அமைக்கவும், பிராமணர்களுக்கு வீடுகள் கட்டித்தரவும் தேவைப்பட்ட ஆதிதமிழன், கட்டிமுடிக்கப்பட்ட ஆலயத் திற்குள் அனுமதிக்கப்படவில்லை. ஆலயமும் ஆண்டவனும் ஆதி தமிழரால் தீட்டுப்பட்டு விடுமென, பிராமணர்கள் உரைத் ததை பிராமண அடிவருடித் தமிழரும் ஏற்றுக் கொண்டனர். பறையன் என்றும் பள்ளன் என்றும் ஒதுக்கப்பட்ட ஆதி தமிழர், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு அறிஞர்களாகவும் அறிவியலாளர் களாகவும் அறியப்பட்டிருந்தனர். தீண்டாமையை ஏற்றுக் கொண்ட பலர், திருவள்ளுவருக்கு விழா எடுத்துச் சிறப்பித் தனர். தமிழரின் பெருமை உலகளாவிப் பரவியது ஒரு பறைய னால் தான் என்பதை இவர்கள் உணரவில்லை. துடியன், பாணன்,

பறையன் என்ற தொல்தமிழ்ப் பிரிவினர், தொழில் வழியில் சொல்லப்பட்டவர்களே என்பதைப் பலரும் உணர்வதில்லை.

கி.பி. 14ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் தீண்டாமைக் கொடுமையின் தீவிரம் உணரப்பட்ட காலத்தில்தான், போர்த்துச்கீசியர்கள் தமிழகம் வந்தனர் - ஏறக்குறைய விலங்கு களைப் போலவே நடத்தப்பட்ட ஆதி தமிழர்கள், தங்கள் விடுதலையை எதிர்நோக்கிக் காலத்திருந்த வேளையில் கிறித்துவ விடையூழியர்கள், தாங்கள் சமயத்தைத் தமிழகத்தில் பரப்பத் தொடங்கினர். விடுதலையை வேண்டியும், சமுக அச்சுறுத்தல் களிலிருந்து விடுபடவும், பல ஆதி தமிழர் கிறித்துவத்தில் இணைத்தனர். உண்மையில், கிறித்துவச் சமயப் பரப்பாளர்கள், ஆதி தமிழரிடம் அன்பு காட்டினர், அரவணைத்தனர். கிறித்துவ சமயத்துக்கே ஆயுதமாக விளங்கிய மாந்தநேயத்தை மக்களிடம் எடுத்துரைத்தனர். அதில் வெற்றியும் கண்டனர். ஆனால் கிறித்து வத்தில் இணைந்த ஆதிக்க மனப்பான்மை கொண்டோரும், கிறித்துவத்துக்கு வெளியே இருந்த உயர் சாதியினர் என்று சொல்லிக் கொண்டோரும், கிறித்துவ சமயப் பரப்பாளர்களின் அணுகுமுறைகளைக் கடிந்து கொண்டனர். இச்சூழல்களை முற்றிலும் எதிர்பாராத விடையூழியர்கள் உயர் சாதியினரின் வற்புறுத்தல்களுக்குப் பணிய வேண்டியதாயிற்று. சாதியம் கிறித்துவ சமயத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரான்சிஸ் சேவியரிடம் காணப்பட்ட மாந்தநேயமும், பிரிட்டோவிடம் இருந்த கொள்கைப்பிடிப்பும், வீரமாமுனிவர் கைக்கொண் டிருந்த தமிழ்ப் பற்றும், மற்ற விடையூழியர்களிடம் காணப் படவில்லை. மேற்கண்ட மூவரிடமும் எந்த உயர்சாதியினரும் எதிர்த்துப்பேசக்கூடத் துணியவில்லை. பிராமண சமயம் என்ற அலைக்காற்றில் அல்லலுற்ற ஆதிதமிழர், (கிறித்துவ சமயத்தில்) எதிர் காற்றில் இன்னலுற வேண்டியதாயிற்று.

கிறித்துவ சமயத்தில் ஆதி தமிழர் எதிர்கொண்ட இன்னல் களைப் பற்றி, எந்தக் கிறித்துவ செய்திகளும் எடுத்துரைக்க வில்லை. அவர்களின் கருத்துக்களும் கிறித்துவ சமயத்தில் ஏற்கப் படவில்லை. வெளி நாட்டு விடையூழியர்களுக்கு, சாதியத்தின் ஆழம் சரியாகப் புரியவில்லை. இருப்பினும், தங்களுடைய சாதிய நிலைப்பாடு, கிறித்துவக் கொள்ளைகளுக்கு எதிரானவை என்பதை, பல்வேறு விடையூழியர்களும் உணர்ந்திருந்தனர்.

குறிப்பாக, 1800 ஆண்டுகளுக்குப் பிறகு கிறித்துவ சமயம் எதிர் கொண்ட நிகழ்வுகள் வரலாற்றில் கறைபடிந்தவைகளே. தங்கள் உரிமைக்காகக் கிறித்துவ சமயத்தில் போராடிய குறிப்பிட்ட சிலர், கண்டிக்கப்பட்டனர் அல்லது கவனிக்கப்பட்டனர். கிறித்து வத்துக்கு எதிரானவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டனர்.

கி.பி. 1840 ஆண்டுகளில், கிறித்துவத்தின் குருக்களைப் பயிற்றுவிக்கும் கல்லூரியில் எந்த ஆதி தமிழரும் சேர்த்துப் கொள்ளப்படவில்லை. அக்கால அளவுகளில் கிறித்துவ விடை யூழியர்களால் நடத்தப்பட்ட ஒரு சில பள்ளிகளிலும், அவர்கள் கல்வி பயில அனுமதிக்கப்படவில்லை. 1890 ஆண்டுக்குப் பிறகே ஆதி தமிழர், கிறித்துவப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். அவர்களுக்குத் தனி இருக்கைகள் ஒதுக்கப்பட்டன. 1844 ஆம் ஆண்டு புதுவையில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் (சினாட்), கிறித்துவத்தில் சாதிக் கொடுமைகள் களையப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதனை வலியுறுத்திப் பேசியவர்கள் பிரெஞ்சுக் குருமார்களேயாவர்! புதுவை ஆயர் பொன்னாந்து என்பார், நல்ல கிறித்துவ சிந்தனைகளைக் கொண்டிருந்தவர். தனது நேர்வாகத்தில், புதிய மாறுதல்கனைக் கொண்டுவரக் கடுமையாக உழைத்தார்.

இக்கால அளவுகளில், புதுச்சேரியில் சாதி உணர்வுகள் தலைதூக்கின. சாம்பா கோவில் எனப்படும் தேவாலயத்தில், எந்தெந்த சாதியார் எங்கெங்குகே அமர வேண்டும் என்பது பற்றியும், அவர்கள் நுழைய வேண்டிய வாயில்கள் பற்றியும் முடிவு செய்யப்பட வேண்டுமென, ஆதி தமிழர் அல்லாதார் விரும்பினர். ஆயர் பொன்னாந்து, ஆதி தமிழரின் சார்பானவர் எனக் குற்றம் சாற்றப்பட்டார்.[227] ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையன்றும் தேவாலயத்துக்கு வருவோரின் எண்ணிக்கை, குறைந்து கொண்டே போனது. முதலில் நடைமுறையிலிருந்த "நியாயமான" வழக்கப்படியே, ஆதிதமிழர்கள் அமர்த்தப்பட வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. இதனிடையே குரு மடத் திலும், பள்ளிக் கூடங்களிலும் மாணவர்கள் இருபிரிவாக அமர்த்தப்பட வேண்டும் என்ற "நியாயமான" கோரிக்கையும் வலுத்தது. ஆதி தமிழருடன் இணைந்து படிக்க இயலாது எனக் கூறி, குருமடத்திலிருந்த உயர்சாதி மாணவர்களை, அவர்களின்

227. A Historic de Missions, A. Aloysius xavicr, 1963, pp. 289 - 291.

பெற்றோர்கள், திரும்ப அழைத்துக் கொண்டனர். இதனை எதிர்பாராத குருமடத்தின் முதல்வர், தனது பொறுப்பிலிருந்து விலகிப் போனார்,[228] ஆயர் பொன்னாந்துக்குக் கைகொடுக்க எவரும் முன்வரவில்லை. இறுதியில், பழைய "நியாயமான" முறைப்படியே, ஆதி தமிழரைத் தனியாக அமர்த்துவது என முடிவு செய்யப்பட்டு, அதற்கான ஆணையையும் ஆயர் பிறப்பித்தார்.

இந்த நிலை, 1740ஆம் ஆண்டுகளிலே புதுவையில் காணப் பட்டதாகவும், தூய்ப்ளேயின் மனைவி, ஆதி தமிழருக்காகப் பரிந்து பேசியதாகவும், சம்பாகோயில் குருவானவரை அழைத்துக் கடித்து கொண்டதாகவும், அனந்தரங்கம் பிள்ளை குறிப்பிடுகின்றார். 1840ஆம் ஆண்டுகளிலும் இதே நிலை தொடர்வதையே காணலாம். இக்கால அளவுகளில் மூன்று வகையான தேவாலயங்கள் புதுச்சேரியில் இருந்தது.[229] ஆதி தமிழருக்கென ஒன்றும், மற்றவர்க்கென ஒன்றும், பொதுவாக ஒன்றும் இருந்தன. மற்ற சாதியார் மற்றம் பொதுவான தேவாலயத்தில், வேளாளர் இனத்தைச் சார்ந்தவர்களே உபதேசி களாக அமர்த்தப்பட்டனர்.[230] தேவனுடைய நற்கருணை, இறுதி யாகவே ஆதிதமிழரிடம் போய்ச் சேர்ந்தது. தேவாலயத்தில் உயர்சாதியினரின் பார்வைக்குப் படாதவாறு, ஆதி தமிழரின் இடம் ஒதுக்கப்பட்டு, தடுப்புச் சுவர்களும் கட்டப்பட்டன. இச்சுவர்கள் இடிக்கப்பட வேண்டுமெனச் சிலர் எதிர்ப்புக் குரல் கொடுத்தபோது, அது "சூத்திரர்களின் நியாயமற்ற கலகம்" என்ற பெயரால் பதிவு செய்யப்பட்டது.

இதே நிலைமைகள் திருநெல்வேலி வடக்கன் குளம், நாகர்கோயில் போன்ற இடங்களிலும் காணப்பட்டன. தேவாலயத்தில் தனி இடங்கள் ஆதி தமிழருக்கு ஒதுக்கப் பட்டிருந்த நடைமுறைகளை எதிர்த்துச் சிலர் நடுவர் மன்றம் வரையிலும் சென்றனர். பிற சமயக் கோயில் எவ்வாறு ஆதி தமிழர் அனுமதிக்கப்படுவதில்லையோ, அதுபோன்றே தேவாலயங்களிலும் அவர்களை அனுமதிக்கக் கூடாது என்றும், "பெரிய மனது" பண்ணியே அவர்களுக்குத் தனியிடம் ஒதுக்கப்

228. Melo, 1955, pp. 325 - 327.

229. Mission and kaste, p. 113.

230. La Mission, R. Besse, p. 168

பட்டது என்றும் உயர்சாதியினர் எதிர் வழக்குரைத்தனர்.[231] ஆனால் நடுவர் மன்றத்தின் தீர்ப்பு வேறு வகையில் இருந்தது. இந்துக் கோயில்களைத் தேவாலயங்களோடு ஒப்பிடக்கூடாது என்றும், அவை ஆகம விதிகளின் படியும், மனுதர்மச் சட்டங்கள் படியும் இயங்கி வருகின்றன. என்றும் தீர்ப்பில் கூறப் பட்டது. மேலும், கத்தோலிக்கத் திருச்சபைச் சட்டங்களில் ஆதி தமிழர் தனியே அமர்த்தப்பட வேண்டும் என்ற விதி எங்கும் காணப்படவில்லையென்பதால், தேவாலயத்தின் குறுக்கே எழுப்பப்பட்டிருந்த தடுப்புச் சுவர்களை உடனடியாக இடித்துத் தள்ளுமாறு நெல்லை நடுவர் மன்றம் ஆணையிட்டது.[232]

இதுபோன்ற கலவரங்கள், 1921இல் மயிலாப்பூரிலும், 1924இல் திருச்சியிலும் வெடித்தன. 1933ஆம் ஆண்டில் நடை பெற்ற தென்னிந்திய ஆயர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு களின் படி,

1. தேவாலயங்களில் சாதிப்பிரிவினைகள் காட்டப்படக் கூடாது.
2. இவை கிறித்துவின் மாந்த நேயத்துக்கு எதிரானவை.
3. எல்லோருக்கும் தேவாலயத்தில் சம உரிமைகள் உண்டு.
4. இனவேறு காட்டப்படும் தேவாலயங்களை உடனே இழுத்து மூட வேண்டும்.

என்றவாறு வலியுறுத்தப்பட்டன.

இதனால் வெறுப்புற்ற சிலர், 1936ஆம் ஆண்டில், திருச்சி இரட்சகர் தேவாலயத்தில் அமர்ந்துகொண்டு, உள்ளிருப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். தொடர்ந்து ஞாயிற்றுக் கிழமைப் பூசை வேளையின் போது, தண்ணீர்ப் பாம்புகளைத் தேவாலயத்துக்கள் சிலர் விட்டனர். மக்கள் எங்கும் சிதறி யோட, குழப்பங்கள் ஏற்பட்டன.[233] 1936ஆம் ஆண்டில், குடந்தை யிலும் இதுபோன்ற போராட்டங்கள் தொடர்ந்தன. (1932 முதல் மகாத்மா காந்தி, "அரிசனங்களுடன் ஆலயப் பிரவேசம்" செய்துவந்தது, ஆதி தமிழருக்குத் தெம்பூட்டுவதாக அமைந்தது)

231. Examiner, March 24, 1917, p. 116.

232. Ibid.

233. Depressed classes, pp. 129 - 32.

குடந்தை, காவிரிக் கரையில் நிகழ்வுற்ற ஆதிதமிழ்க் கிறித்துவர்களின் மாநாடு, அவர்களின் உரிமைகளைக் கேட்டு அறைகூவல் விடுத்தது. ஆதி தமிழர் (திராவிடர்) கிறித்துவர் நல்வாழ்வுச் சங்கம் என்ற பெயரில் அமைப்பொன்றும் செயல்படத் தொடங்கியது.[234]

அடுத்த ஆண்டு ஏப்ரல் திங்களில், இச்சங்கம் குடந்தை மறைமாவட்ட ஆயருக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தது. ஆதி தமிழ்க் கிறித்துவர்களின் திருமணங்கள், தேவாலயத்தின் நடுப் பகுதியில் வைத்து நிகழ்பட வேண்டுமென்றும், அவ்வாறு நிகழ்த்தப்பட மறுக்கப்பட்டால், அரசாங்கப் பதிவாளர் முன்னிலையில் திருமணங்களை நடத்திக்கொள்ளப் போவதாக மிரட்டியது. அதே ஆண்டில் தஞ்சாவூரில் நடைபெற்ற இச்சங்கத்தின் மாநாடு பிராமண (இந்து) சமயத்திலிருந்து ஆதி தமிழர்களும், தங்கள் கோரிக்கைகளுக்கு உதவ முன்வர வேண்டுமென அழைப்பு விடுத்தது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் கத்தோலிக்கத் திருச்சபையில் நடைபெற்றவைகளாகும். இவற்றுக்குச் சற்றும் குறையாத குழப்பங்களும் கலவரங்களும் சீர்திருத்தச் சபைகளிலும் திகழ்வுற்றன. கத்தோலிக்கத் திருச்சபையில் சாதி வெறியர்கள் இருந்ததால், நாங்கள் பிரிவினைச் சபைகளில் இணைந்தோம். நீங்கள் அவர்களை நல்லவர்களாக்கி விடுவீர்கள் போல் தெரிகின்றது" என அங்கும் குரல்கள் எழுந்தன.

1944ஆம் ஆண்டில், அய்யம்பேட்டையில் பெருங்குழப்பமொன்று நிகழ்ந்தது. அதன் விளைவாக, தேவாலயம் இழுத்து மூடப்பட்டது. சூசைநாதர் என்ற பங்கு குருவானவர் தாக்கப் பட்டார். இந்நிகழ்வைப்பற்றி அறிய விரும்பியும், மக்களைக் காணவும் வந்த குடந்தை ஆயர், ஊருக்குள் நுழையவிடாமல் தடுக்கப்பட்டார்.[235] இந்நிகழ்வுகளுக்கு, சாதிக்குழப்பம் மட்டுமே கரணியம் அல்லவென்றும், குடந்தை மறை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் அய்யம்பேட்டை மக்கள் புறக்கணிக்கப் பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. எப்படியிருப்பினும், அய்யம்பேட்டை வரலாற்றில் இது கரும்புள்ளியாகவே கருதப் படுகின்றது.

---

234. Ibid.

235. வரலாறும் வழக்கலாறும்.

1871ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட குறிப்புகளில் அடியிற் கண்ட புள்ளி விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.[236]

	கத். திருச்சபை	சீர்திருத்தத் திருச்சபை	கூடுதல்
1. பிராமணர்கள்	76	-	76
2. கணக்கர்கள்	73	-	73
3. ஆதி தமிழர் (பறையர், பள்ளர், சக்கிலியர்)	1,25,356	20, 894	1, 46, 250
4. வன்னியர்கள்	93 914	11, 699	1, 05, 613
5. வேளாளர்கள்	32 348	5852	38200
6. சாணார்கள்	27,017	35081	62098
7. செட்டியார், இடையர், கம்மாளர், கைக்கோளர், குயவர், சதானி, முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளிகள்	7500		

இக்கணக்கில் புதுச்சேரி - கடலூர் மறைமாவட்டம், பிரெஞ்சுக்காரர் ஆட்சியிலும், கன்னியாகுமரிப் பகுதிகள் திருவிதாங்கூர் ஆட்சியிலும் இருந்ததால், அப்பகுதி மக்களின் தொகை பற்றிய குறிப்புகள் சேர்க்கப்படவில்லை. மேலும் முக்குலத்தோர், பரவர், உடையார் போன்ற மரபுகளின் கணக்குகள் தெளிவாக்கப்படவில்லை.

1970ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சட்டநாதன் பணிக் குழு தமிழகக் கிறித்துவர்களில் 30 விழுக்காடுகள் ஆதி தமிழரே என்று கூறுகிறது.

1987ஆம் ஆண்டின் புதுவை - கடலூர் மறைமாவட்டக் கணக்குப்படி, அப்பகுதிகளில் 80 விழுக்காடுகள் ஆதி தமிழரும், 20 விழுக்காடுகள் மற்றவரும் இருந்தனர் என்று கூறுகிறது. இந்த 80 விழுக்காடுகள் ஆதிதமிழரில், 6 விழுக்காடு அளவி

236. Our oldest Indian Mission, A. Westcott, 1897,p. 108.

லேயே குருக்கள் இருந்தனர். 20 விழுக்காடுகள் உள்ள மற்ற வகுப்பார், 94 விழுக்காடுகள் குருக்களாயிருந்தனர். இந்தக் கணக்கின் சாயல்கள் தமிழகத்தின் அனைத்து ஆயங்களிலும் இருக்கும் எனக் கூற இயலாது. அண்மையில் திண்டுக்கல் ஆயத்தில் எடுக்கப்பட்ட கணக்கில் வன்னியர்கள் பெருவாரி யாக இருந்தது தெரிய வருகின்றது. இதுபோன்று ஒவ்வொரு ஆயங்களிலும் கணக்கெடுக்கத் தயக்கம் காட்டுகின்றனர்.

ஆனால் தமிழகக் கிறித்துவர்களில், மக்கள் தொகைக் கேற்ற சமயத் தலைமைப் பொறுப்புகள் இல்லை என்பது மட்டும் தெளிவான உண்மையாகும். தற்போது, ஆதிதமிழர் மரபுகளிலிருந்து சில ஆயர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இந்திய அரசியல் சட்ட விதிகளின் படி, புத்த-சமண-சீக்கிய சமயங்களில் உள்ள தலீத் எனப்படும் வகுப்பாருக்கு தாழ்த்தப் பட்டவருக்கான உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட்டுள் ளன. ஆனால், கிறித்துவர்களுக்கு அவ்வுரிமைகள் மறுக்கப் பட்டுள்ளன. விடுதலை பெற்று 60 ஆண்டுகள் கடந்தும், இவ் வுரிமைகளை வழங்க அரசு மறுத்து விடுகின்றது. கிறித்துவர் களுக்கு சிறுபான்மையினர் என்ற சலுகை அளிக்கப்பட்டுள்ள தால், அச்சலுகையைப் பயன்படுத்தி, கிறித்துவர்கள் முன் னேற்றம் காணவேண்டுமென அறிவுரை வழங்கப்படுகிறது.

தமிழகத்தில், 1983ஆம் ஆண்டில், மேனாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், பரவர்களை, மிகவும் பிற்படுத்தப்பட்ட வர் பட்டியலில் இணைத்தார். இதனால், பெருவாரியாகக் கிறித்துவத்தில் இணைந்த பரவ மக்கள் பயன்பெறும் வகையில், இச்சலுகை அமைந்துள்ளது எனக் கருதலாம். 1993ஆம் ஆண்டில், கிறித்துவ வன்னியர்களுக்கு, ஜெயலலிதா தலைமை யிலான அரசு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சலுகையை வழங் கியது. அது முறையான விதிமுறைகளின்படி அளிக்கப்பட வில்லை எனக்கூறி, சென்னை உயர்நடுவர் மன்றம், அவ்வாணையை நீக்கிவிட்டது. பிற்பட்ட நலத்துறையின் பணிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அவ்வாணை சட்டமாக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் கூறியது ஆதி தமிழரைப் பொருத்தவரையில், அவ்வகுப்பார் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலிலேயே உள்ளனர். இவர்களைத் தாழ்த்தப்

15

பட்டோர் பட்டியலில் இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன, வருகின்றன, வருகின்றன.

இந்திய அரசு அளித்துள்ள சிறுபான்மைச் சலுகை, கிறித்துவர்களுக்கு எந்த அளவில் பயன்பட்டுள்ளது என்பது கேள்விக்குறியே. அரசின் முன் அனுமதியின்றிக் கல்விக் கூடங் களைத் திறப்பதற்கும், திறக்கப்பட்ட அக்கல்விக் கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளம் பெறுவதற்கும், அரசியல் சட்டம் சிறுபான்மையினருக்கு வழிசெய்கிறது. அக்காலத்தில் கல்விக் கூடங்கள் மக்கள் நலன் கருதியே தொடங்கப்பட்டன. எந்தச் சமூகத்தினரும் நுழையாத கல்வித் துறையில், கிறித்துவம் நுழைந்து அளப்பெரிய மாற்றங்களைச் சமூகத்திற்கு அளித்தது. இன்று கல்வி வணிகமயமாக்கப்பட்டு விட்ட நிலையில், கிறித்துவக் கல்வி நிறுவனங்களும் வணிக நோக்கிலேயே செயல்படுகின்றன என்பது இரங்கத்தக்க செய்தி யாகும். அரசுப் பணிகள், இட ஒதுக்கீடுகள் முறையில் அளிக்கப் பட்டு வரும் நிலையில், கிறித்துவக் கல்வி நிலையங்கள், அம் முறையைக் கிறித்துவர்கள் நிலையில் பின்பற்றவில்லை. ஒவ்வொரு மறைமாவட்டமும் ஓர் அலகாகக் கொண்டு செயல் பட்டு வரும் நிலையில், ஆசிரியப் பணியிடங்களை நிரப்புவதற் கான அலுவலகங்கள், ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் செயல் பட்டு வருகின்றன. அவ்வலுவலகங்களின் செயல்பாடுகள் வெளிப்படையாக அமையவில்லை என்ற குற்றச்சாட்டுகள் தமிழகமெங்கிலும் எழுந்துள்ளன. ஒவ்வொரு மறைமாவட்டத் தின் கிறித்துவ மக்களின் இன அடிப்படையில் வேலை வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. மூப்புப்பட்டியல் என்ற முறை, சரியாகப் பின்பற்றப்படுவதில்லை. அப்பட்டியலை, கிறித்து வர்களின் பார்வைக்கும் வைப்பதில்லை. சமயத்தலைவர்கள், அவர்களுக்கு வேண்டியவர்கள், உறவினர்கள் என்றவாறு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு களுக்குச் சரியான விளக்கங்களைக் கூறவும் முன்வருவதில்லை.

பேராசிரியர் சூசை[237] இக்குறைபாடுகள் பற்றிய குறிப்பு களைக் கொண்டு பின்வருமாறு கூறுகிறார்.

ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் சாதிவாரியான கிறித்து வர்களின் கணக்குகளை எடுக்க வேண்டும். அதனடிப்படையில்,

237. பேராசிரியர், தமிழ்த்துறை, தூயவளனார்க்கல்லூரி, திருச்சி.

கல்வி நிலையங்களில், வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும். எண்ணிக்கைக்கேற்ற விழுக்காடுகளில் வேலை வாய்ப்புகள் அமைய வேண்டும். இக்கணக்கெடுப்பை எடுக்கத் தயக்கம் காட்டுவதிலிருந்து முறையான வேலைவாய்ப்புகள் அளிக்கப்படவில்லை என்பதை அறியலாம். மூப்புப் பட்டியலை ஆண்டுக்காண்டு வெளியிட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் வேலை வாய்ப்பு பெற்றோரின் பட்டியலையும் வெளியிட வேண்டும். ஆயர்களும் அவர்தம் அலுவலர்களும் இட ஒதுக்கீட்டு முறையை கையாளவேண்டும். கிறித்துவர்களுக்கு அளிக்கப்படும் வேலை வாய்ப்புகள் கிறித்துவர்கள் பால் கருணை கொண்டு கையேந்துபவர்களுக்கு அளிக்கப்படும் கைம்மாறாகக் கருதக் கூடாது. 15 ஆண்டுகளாகக் காத்திருப் போர் இடையில், 5 ஆண்டுகளில் பதிவு செய்தோர் பலர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். தம்மை எவரும் கேள்விகள் கேட்கக்கூடாது என்ற மனப்பான்மை, சமயத் தலைவர் களிடையே இன்று காணப்படுகின்றது. கிறித்துவர்களுக்காகத் தான், ஆயர் மற்றும் குருக்களேயன்றி, தங்களுக்காகவும், தங்க ளுடைய ஆணைகளை நிறைவேற்றுவதற்காகவுமே கிறித்து வர்கள் இருக்கின்றார்கள் என்ற நிலை மாற்றப்படவேண்டும்.

பலர் தங்களுடைய மனக்குறைகளை வெளியிட இயலாமல் தவித்துவருவது கண்கூடு அரசாங்கம் அளிக்க முன்வந்த சில சலுகைகளைக் கூட, கிறித்துவர்களில் பலர் அடைய முடியாத நிலை இருந்து வருவதும் கண்கூடு இவைகளில் ஏற்படும் தடை களைக் களைய சமயத் தலைவர்கள் எந்த முயற்சிகளையும் மேற்கொள்வதில்லை. எடுத்துக்காட்டாக வன்னியர் இனக் கிறித்துவர்களுக்கு அளிக்கப்பட்ட சில பயனுள்ள சலுகைகள் சில நடைமுறைச் சிக்கல்களால் தடைப்பட்ட நிலையில் சமயத் தலைவர்கள் அக்கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி, அரசாங்கத்திடமிருந்து பெற்றுத்தர முன்வரவில்லையென்று, திண்டுக்கல் மரியராஜ் கூறுகிறார்.[238] தமிழ் நாடு ஆயர் பேரவை, இது போன்ற செயல்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை யென்றும் கருதுகிறார். கிறித்துவ சமயத்தில் சாதிப்பிரிவினை

238. தலைவர் தமிழ்நாடு கிறித்துவ வன்னியர் கூட்டமைப்பு, சென்னை- 23.

களின் தாக்கங்கள் ஒரு பிரிவினருக்குக் கிடைக்கும் பயன்கள் மற்ற பிரிவினர் தடுத்து நிற்கும் அளவிற்கு பிளவுபட்டுள்ளன என்று மனம் குமுறுகிறார். கிறித்துவின் அன்பும், கிறித்துவத்தின் மாந்தநேயமும் தற்காலக் கிறித்துவ சமயத் தலைவர்களிடையே காணப்படவில்லை என்று கூறப்படுவது பற்றி சீர்திருத்தச் சபையின் சமயத்தின் சிறப்புக்குரியவரும் சிறந்த தமிழறிஞரு மான முனைவர் தெய்வநாயகம்,[239] தமது உள்ளக் குறைகளை வெளிப்படுத்துகிறார். சாதிப் பிரிவினைகள், தற்காலக் கிறித்து வத்தில் புரையோடிக் கொண்டிருக்கும் புற்றுநோய் என்பது அவரது கருத்தாகும். உலகெங்கும் உண்மைக்குச் சான்றாக விளங்கிய கிறித்துவ சமயம், தமிழகத்தில் சாதியத்துடன் சமரசம் செய்வதாகக் கூறுகிறார்.

கிறித்துவ சமயம் தமிழகத்தில் விதைக்கப்பட்டதின் அடிப் படை நோக்கமே இன்று மாறிப்போய்விட்டதாகப் பலரும் கருதுகின்றனர். எல்லாச் சபைகளுமே இக்குற்றச்சாட்டுகளுக் குட்பட்டு நிற்கி-ாறன. சமயத்தின் பேரால் பல்வேறு பொரு ளியல் தொடர்பான தவறுகள் நிகழ்வுற்று வருவது கண்கூடு. சமயத் தலைமையின் நேர்வாகங்கள், அரசு அலுவலகங்கள் போன்றே செயல்படுகின்றனவென்றும், அங்கு காணப்படும் கையூட்டு முறையின்மை, பரிந்துரைகள், பொருளியல் குற்றங்கள் அனைத் தும் சமயத் தலைமை அலுவலகங்களிலும் காணப்படுகின்றன என்பது குற்றச்சாட்டு. கிறித்துவக் கண் ணோட்டம், மக்கள் தொண்டு ஆகியவை பின்னுக்குத் தள்ளப் பட்டு, பொரும்பாலான கிறித்துவ மையங்கள் வருவாய்த்துறை அலுவலகங்களாகவே மாறிவிட்டன. வரவு செலவு கணக்கு களை எழுதவும், எழுதப்பட்ட கணக்குகள் பொய்யானவை என்ற எதிர்க்குரல்களுக்கு மறுப்பளிக்கவும் முடிந்தால் மிரட்டிப் பணிய வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிறித்துவைத் தாங்கி நின்ற தேவாலயங்கள், இன்று கருவூலங் களாகவே காட்சியளிக்கின்றன. குறிப்பாக, வருமானம் பெரு மளவில் வரக்கூடிய பங்குத் தளங்களுக்கு, குருமார்களிடையே போட்டா போட்டிகள் நடக்கின்றன. இந்த வரம்புமீறிய

239. தலைவர், திராவிட ஆன்மீக இயக்கம்,அயன்புரம், சென்னை -23. "திருக்குறள் தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நூலே" உள்ளிட்ட 26 நூல்களுக்கும் மேல் எழுதியுள்ளார்.

நடைமுறைகளைத் தட்டிக்கேட்க, கிறித்துவர்கள் முன்வருவதில்லை. கர்த்தர் அவர்களுக்கான கூலியைக் கொடுத்துவிடுவார் என்ற நம்பிக்கையில், கிறித்துவர்கள் வாழ்ந்து வருகின்றனர். கிறித்துவக் கொள்கையில் மிகுந்த பிடிப்பும் பற்றும் கொண்ட குருமார்களை, பிழைக்கத் தெரியாதவர்கள் என்றும், பழைய பஞ்சாங்கங்கள் என்னும் முத்திரை குத்தி விடுகின்றனர்.

எதிர்காலக் கிறித்துவம் தமிழகத்தில் எவ்வாறு இருக்கும் என்ற கேள்விக்கு விடையளிப்பது கடினமானதாகும். ஏனெனில், தமிழகத்தின் கிறித்துவ சமயத் தலைமைகள், கிறித்துவத்தில் உலகியல் தொடர்பான தலைவர்களை உருவாக்கத் தடையாக உள்ளனர் என்பது வெள்ளிடைமலை. சர். ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களுக்குப் பிறகு, தமிழகம் அறிந்த கிறித்துவத் தலைவர் எவருமே உருவாகவில்லை. பன்னீர்செல்வமும்கூடத் தனது உழைப்பாலும், பொதுநலத்தொண்டாலும், தனது செல்வத்தைச் செலவழித்தும், உயர்ந்த பெருமகனாவார். கிறித்துவச் சமயத் தலைவர்கள் எவரும் பன்னீர்செல்வம் அவர்களைத் தலைவராக உயர்த்தத் துணைபுரியவில்லை. என்பது ஒரு புறமிருக்க, அவரால் கிறித்துவ சமயத் தலைவர்கள் பயன் பெற்றனர் என்பதே உண்மை நிலையாகும்.

கிறித்துவத் தலைமைகளின் தொடர்கட்டுப்பாடுகளினால், கிறித்துவ மக்கள் போராடும் குணத்தை முற்றிலுமாக இன்று இழந்துவிட்டனர். சமையத்தலைமைக்கும் அரசாங்கத்துக்கும் எதிராகப் போராடுவதே பாவம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். நிலமானிய முறையில் இயங்கிவரும் ஒவ்வொரு கல்வி நிறுவனங்களுக்கும் இடையூறுகள் தோன்றினால், கிறித்துவர்களைப் போராட்டத்தில் இறக்கி, சமயத்தலைவர்கள் தங்கள் அறுவடையை முடித்துக் கொள்கின்றனர். எந்தக் கிறித்துவனுக்காகவும் இதுவரையில் தனிப்பட்ட போராட்டங்கள் எதனையும் கிறித்துவத் தலைமைகள் நடத்தவில்லையென்பது வரலாற்று உண்மையாகும். கர்நாடகத்தில் தமிழ்க் கிறித்துவர்கள் கன்னடக் கிறித்துவர்களால் தாக்கப்பட்டபோது, தமிழ் நாட்டில் எவ்வகையான எதிர்ப்பும் புறப்படவில்லை. மங்களூர், மைசூர், பெங்களூர் போன்ற நகரங்களில், தமிழரின் கண்காணிப்பில் இயங்கிவந்த தேவாலயங்களைக் கன்னடர் கைப்பற்றியபோது, ஓர் அறிக்கைகூட மறுப்பாக வெளிவரவில்லை. அண்மையில் செங்கல்பட்டு மறைமாவட்டத்தி

லுள்ள ஒரு பங்குத்தளத்தில், தெலுங்கு மொழியில்தான் பூசைச் சடங்குகள் நிறைவேற்றப்பட வேண்டுமெனவும், இதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் தேவாலயத்துக்கு வரத் தேவை யில்லையென்றும் ஒரு தெலுங்குப் பிரிவினர் கூறியதைச் செய்தி யாக அறியமுடிந்தது. சில நூறு தெலுங்கர்கள், ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களைத் தேவாலயத்துக்குள் நுழையாதே என்று கூறியதை, கத்தோலிக்கத் திருச்சபை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததோடு, அவர்களோடு சமரசம் செய்து கொள் ளவும் இறங்கிப்போனது, கிறித்துவர்களுக்குச் சமையத் தலைவர் களின் பாதுகாப்பில்லை என்பதை வெட்ட வெளிச்சமாக்கியது. தமிழ்நாட்டில், ஓர் ஆதிதமிழர் இனத்தைச் சேர்ந்த ஆயரை, தெலுங்கு மக்கள் எதிர்த்துப் போராடுவதும், அவரை மாற்றச் சொல்வதும் தமிழ்நாட்டுக் கிறித்துவம் எங்கே போய்க் கொண் டிருக்கிறது என்ற கவலையை உருவாக்கியுள்ளது. ஏழ்மையிலும் வறுமையிலும் உழன்று கொண்டிருக்கும் தமிழ்க் கிறித்துவன், தனது மனக்குமுறல்களைக் கர்த்தரிடம் முறையிடுவதொன் றையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறான். கர்த்தர், தமிழ்க் கிறித்துவர்களின் கோரிக்கையை ஏற்று கிறித்துவ சமயத்தில் காணப்படும் சமூக அவலங்களைக் களைவார் என்றே நாமும் வேண்டி நிற்கிறோம். வேறென்ன செய்ய இயலும்?

✧✧✧

26

சிறுபான்மைக் கிறித்துவர்

விரிந்து பரந்துள்ள இந்திய நாட்டில் கிறித்துவ மக்கள், தமிழ்நாடு கேரளம் கர்நாடகம் ஆந்திரம் போன்ற தென் மாநிலங்களில் அறியப்படுகின்றனர். குமரி முனையிலிருந்து வடக்கே செல்லச் செல்ல கிறித்துவர்களின் எண்ணிகையும் குறைந்து கொண்டே போவதைக் காணலாம். வட மாநிலங் களில் நகர்ப்புறங்களில் கிறித்துவர்கள் அறியப்படும் அளவிற்கு, ஊர்ப்புறங்களில் இல்லை எனலாம். வடகிழக்கு மாநிலங்களில் கிறித்துவர்கள் பெருமளவு வாழ்கின்றனர். இந்திய மக்கள் தொகையில் ஐந்துவிழுக்காட்டிற்கும் குறைவாகவே கிறித்து வர்கள் உள்ளனர். இசுலாமியர்களின் எண்ணிக்கை பன்னி ரெண்டு விழுக்காடுகள் என்று கூறப்படுகின்றது. எண்பத்தைந்து விழுக்காட்டு மக்கள் பிராமண சமயத்தவராகக் கருதப்படுகின் றனர். கிறித்துவரையும் இசுலாமியரையும் சமய அடிப்படையில் சிறுபான்மை இனத்தவராக இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்டுள்ளது. யாரெல்லாம் கிறித்துவர்கள் இல்லையோ, யாரெல்லாம் இசுலாமியர் இல்லையோ அவரெல்லாம் பிராமண சமயத்தவர் (இந்துக்கள்) என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இந்த அளவில் சீக்கியர், புத்தர், சமணர், பார்சி போன்ற சமயத் தினரும் இந்துக்களாகச் சொல்லப்பட்டுள்ளனர். இந்துமதக் கொள்கையை ஏற்காத நாத்திகர்களும்கூட, இந்து சமயத்தவ ராகவே கருதப்படுகின்றனர். எண்பத்தைந்து விழுக்காடுகள் இந்தக் கணக்கில்தான் கூறப்பட்டுள்ளது.

இடஒதுக்கீடுகள் (Reservations) பற்றிய தெளிவான சிந்தனையைத் தமிழரே முதன்முதலில் கொண்டிருந்தனர். இதன் அடிப்படையில் இக்கொள்கைக்கு முன்னோடிகளாக நீதிக் கட்சியினரையே குறிப்பிடவேண்டும். 1920களிலேயே இட

ஒதுக்கீடுகள் தொடர்பான சட்டங்கள் தமிழகத்தில் நிறை வேற்றப்பட்டன. அக்கால அளவுகளில் கிறித்துவர், இசுலாமியர், பிராமணர்களுக்கென்று இடஒதுக்கீடுகள் அளிக்கப்பட்டன. இந்திய அளவில் பிராமணர்களின் எண்ணிக்கை, கிறித்துவ மக்கள் தொகையினும் குறைவானதே என்றாலும், விடுதலை பெற்ற இந்தியாவில், மற்றெந்த வகுப்பாரும் பெற்றிராத வேலை வாய்ப்புகளை பிராமணர்கள் பெற்றிருந்தனர். பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படையில் வேலைவாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும், கல்விச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் கரணியமாக, ஆதி தமிழருக்கும் மலைவாழ் மக்களுக்கும் இடஒதுக்கீடுகள் அளிக்கப்பட்டன.

தமிழகத்தின் பார்வை, மற்ற இந்திய மாநிலங்களைக் காட்டிலும் மாறுபட்டிருந்தது. மறைந்த மேனாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். காலத்தில் இந்தியாவில் எங்கும் இல்லாத அளவுக்கு 67 விழுக்காடுகள் அளிக்கப்பட்டன. பிற்பட்டவர்களுக்கு 50 விழுக்காட்டு உயர்வு அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வட மாநிலங்களிலும் இக்கோரிக்கைகள் வலுப்பெற்றபோது மண்டல் குழு அமைக்கப்பெற்று, அதன்பரிந்துரையின் பேரில், வி.பி.சிங் அரசு இடஒதுக்கீடுகளை அறிவித்தது. இம்முடிவுகளை எதிர்த்து, பிராமணர் உள்ளிட்ட உயர்சாதி அமைப்பினர் தொடர் போராட்டங்களை வட மாநிலங்களில் நடத்தினர். உச்ச நடுவர் மன்றத்திலும் வழக்கு தொடுக்கப்பட்டது. பாராளு மன்றமோ, சட்ட மன்றமோ நிறைவேற்றும் இடஒதுக்கீட்டுச் சட்டங்களை மறு ஆய்வு செய்வதற்கு உச்ச நீதி மன்றத்துக்கு உரிமையுண்டென்றும், கூடுதலான ஒதுக்கீடுகள் 50 விழுக் காட்டுகள் விஞ்சக் கூடாது என்றும் அண்மையில் உச்சநீதி மன்றம் கருத்துரைத்தது. இதன் கண்ணோட்டத்தில் தமிழகத்தி லுள்ள 69 விழுக்காட்டு இடஒதுக்கீட்டுச் சட்டம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மிகவும் பிற்படுத்தப் பட்டவருக்கான இடஒதுக்கீடுகளின் விழுக்காடு, இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இருபது விழுக்காடு களாக உள்ளது. இதுவும்கூட, மக்கள் தொகையில் (தமிழகத்தில்) குறைவானதே என்ற கோரிக்கையும் உள்ளது. இதனடிப்படையில் வன்னியர் உள்ளிட்ட 108 சாதிப்பிரிவினர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் உள்ளனர் கிறித்துவர் களில் மீனவர்களுக்கு இச்சலுகைகள் தனிப்பிரிவாக அறிவிக்கப்

பட்டுள்ளன. கிறித்துவ வன்னியர்களுக்கு அறிவிக்கப்பட்டுப் பிறகு நீக்கப்பட்டது. மீண்டும் கிறித்துவ வன்னியர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்க கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வேண்டுகின்றன. இதற்குத் தற்போது பட்டியலில் உள்ளவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

7.2.2006 அன்று அப்போதைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களிடம் கிறித்துவ வன்னியர்களைப் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் மீண்டும் இணைக்க வலி யுறுத்தி கோரிக்கை வைக்கப்பட்டதாக, திண்டுக்கல் திரு. மரியராஜ் கூறுகிறார். அடுத்த ஓராண்டு வரையில் அக்கோரிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்திய அரசியல் சட்டம் ஆதி தமிழருக்கு (தலித்துகள்) அளித்துள்ள அனைத்துச் சலுகைகளும் சமயம் மாறிய ஆதி தமிழருக்கு நிறுத்தப்பட்டுள்ளன. குறிப்பாகக் கிறித்துவ சமயத் துக்கு மாறிய ஆதி தமிழர் எச்சலுகையுமின்றி உழன்று வருகின் றனர். இதற்கு அளிக்கப்படும் கரணிமென்ன வென்றால், கிறித்துவர்களுக்கு சிறுபான்மையினருக்கான சலுகை ஏற்கனவே அளிக்கப்பட்டுவிட்டதென்றும், அச்சலுகை வழியாக அவ் வினத்தார் பயன்பெற்றுக் கொள்ள வேண்டும்மென்பதாகும். சிறுபான்மைச் சலுகைவழியே கிறித்துவ ஆதிதமிழர்கள் எந்தப் பயனையும் பெறவில்லை என்பதை, கிறித்துவ சமயத்தினரே வெளியில் கூறுவதில்லை. கிறித்துவ சமயத்தில் ஆதிதமிழரின் நிலை என்னவென்பதை இதுவரையில் தெளிவாக அச்சமயத் தினர் வெளிப்படுத்தவில்லை, அரசாங்கம் கூறும் கரணியம் தவறானது என்பதைப் புள்ளி விளக்கங்களுடன் எடுத்துரைக்கத் தயக்கம் காட்டுவதிலிருந்து, கிறித்துவ சமயத்திலேயே அந்த வகுப்பாருக்குச் சரியான இட ஒதுக்கீடுகள் இல்லையென்பதை யும் புரிந்து கொள்ளலாம். கிறித்துவ ஆதிதமிழரின் கோரிக்கை யான, தமக்கும் இந்து சமயத்தார் பயன்பெறும் தாழ்த்தப் பட்டோர் உரிமையை அளிக்கவேண்டுமென்பதே. இவ்வகுப் பினரின் தலையாய இக்கோரிக்கையை மைய அரசு சட்டத் திருத்தம் கொண்டுவந்தே நிறைவேற்ற வேண்டும். அதற்கான முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ளன. எந்த அரசும் இக்கோரிக்கையை நிறைவேற்றாது. பிராமணர்களின் பிடியிலுள்ள பாரதீய சனதா அரசு எக்காலத்தும் இக்

கோரிக்கையை ஏற்கப்போவதில்லை. கத்தோலிக்கக் கிறித்து வரைத் தலைவராகக் கொண்டிருப்பதாகச் சொல்லிப் பெருமை கொள்ளும் பேராயக் கட்சி அரசும் இதுவரையில் எந்த முயற்சி யையும் மேற்கொள்ளவில்லை. இந்திய அரசியல் அமைப்புக் குழுவில் உறுப்பினராயிருந்த ஜெரோம்டிசூசா என்பவர் மங்களூரைச் சேர்ந்த இயேசு அவைத்துறைவியாவர். அவர் கிறித்துவத்தில் சாதிகள் இல்லையாதால், எவருக்கும் கிறித்து வத்தில் இடஒதுக்கீடுகள் தேவையில்லை என்று அக்குழுவிலேயே கூறிவிட்டார். இந்தியக் கிறித்துவர்களில் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைப்பாட்டை ஜெரோம் டிசூசா வலியுறுத்தவில்லை. அவருக்குக் கிறித்துவத்திலுள்ள சாதிப்பாகுபாடுகள் எவையும் தெரியாது என்பதால், அவர் அவ்வாறு கூறிவிட்டார் எனச் சிலர் சப்பைக்கட்டு கட்டு கின்றனர். எதுவுமே தெரியாத ஒருவரை கிறித்துவர்களின் சார்பில் பேச எப்படி அனுமதித்தார்கள் என்றும் தெரிய வில்லை. சிறுபான்மை ஆங்கிலோ இந்தியர்கள் சார்பில் பேசிய பிராங்க் அந்தோணி, பாராளுமன்றத்திலும் சட்டமன்றங் களிலும் (தேர்தலில் போட்டியிடாமலேயே) ஒவ்வோர் உறுப் பினரைத் தமது வகுப்பார் சார்பில் நியமனம் செய்துகொள்ள உரிமையைப் பெற்றார். டாக்டர். அம்பேத்கர், இந்திய அளவில் ஆதிதமிழருக்கான இட ஒதுக்கீடுகளைப் போராடிப் பெற்றார். அதுவும் கூட இந்திய நாட்டிலுள்ள ஆதி தமிழரின் மக்கள் தொகைக் கேற்றவாறு அமையவில்லை என்பது வெள்ளிடை மலை.இவ்வாறு ஆதிக்க சாதியினர், தங்கள் நலனை ஆட்சியில் சட்ட அமைப்பின்போது பெற்றுக் கொண்டனர் கிறித்துவர் களோ தங்களுக்கு வழங்கப்பட்ட சிறுபான்மை சலுகையை பெற்றுக்கொண்டு அமைதி காக்க வேண்டியதாயிற்று.

இந்தச் சிறுபான்மைச் சலுகையைக் கொண்டு,

1. கிறித்துவர்களுக்கென தனித்தொகுதிகள் ஒதுக்கப்படுவ தில்லை.
2. அமைச்சரவைகளில் கிறித்துவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை.
3. மைய, மாநில அரசுகளால் நிறுவப்பட்டுள்ள சிறுபான்மை ஆணையங்களுக்கு எவ்வகையிலான நிதி ஒதுக்கீடுகளும் இல்லை.

4. சிறுபான்மை ஆணையங்கள் அதிகாரமற்ற அமைப்புகளாகவே உள்ளன.

5 அண்மையில் அமைக்கப்பட்ட சிறுபான்மையினருக்கான இட ஒதுக்கீட்டுக் குழுவில், ஒரு இசுலாமியர் கூட உறுப்பினராக சேர்க்கப்படவில்லை (2006) தமிழ்நாடு அரசின் நடைமுறைகள்

6. மாநிலக் காவல்துறைகளிலும் ராணுவத்திலும் பணியாற்றும் சிறுபான்மையர் பற்றிய புள்ளி விளக்கக் கணக்குகளை வெளியிட மைய மாநில அரசுகள் முன்வரவில்லை.

நீதித் துறையில் சிறுபான்மையினருக்கான நியமனங்கள், சிறுபான்மையினரின் மக்கள் தொகையின் அடிப்படையில் வழங்கப்படவில்லை.

இன்னும் இவ்வாறான புள்ளிக்கணக்குகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இசுலாமியர்கள் தங்கள் உரிமைக்காகப் போராட வீதிக்கு வந்துவிட்டனர். பர்தா அணிந்த இசுலாமியப் பெண்கள் கூட பதாகைகளை ஏந்தி முழுக்கமிடுகின்றனர். இசுலாமியரிடம் காணப்படும் சமய ஒற்றுமையும் எழுச்சியும் இன்று ஆட்சியாளர்களைச் சிந்திக்க வைத்துள்ளன. இமாம்கள் போன்ற சமயத்தலைவர்களை நம்பி இன்று இசுலாமியர் இல்லை. தங்களையொத்த சிறுபான்மை இசுலாமியர்கள், உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கத் துணிந்து விட்ட நிலையில் கிறித்துவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்.

வீர வன்னியர்களும் வெற்றி மறவர்களும் கிறித்துவத்தில் இருக்கிறார்களே! எங்கே போய்விட்டது அவர்களின் வீர வரலாறு! போர்குணமெல்லாம் பொசுங்கிப் போய்விட்டனவா? தென்தமிழ் நாட்டின் எதிர்நீச்சல் போட்ட பரவர்படை ஏன் இன்று சிறுத்துப் போய்விட்டது? ஆலயங்களில் நுழையக் கூட அனுமதிக்கப்படாத சான்றோர்ச் சமூகம் இன்றும் பொருளியல் கூறுகளில் முன்னேறி வருகின்றதே! அது எப்படி? மற்றவர்கள் சிந்திக்க வேண்டாமா?

தொட்டால் தோஷம், கைப்பட்டால் தீட்டு என்று ஒதுக்கப்பட்ட ஆதிதமிழர் இனம் கிறித்துவத்தில் இணைந்தது எதற்காக? தன்மானத்தைத் தக்க வைத்துக் கொள்ளத்தானே! இன்று தமிழகத்திலுள்ள ஆதி தமிழர் அனைவரும் கிறித்து

வத்தைவிட்டு வெளியேறிவிட்டால் பிறகு கிறித்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவில் விஞ்சும்? இலட்சோப இலட்சம் மக்கள் கிறித்துவ சமயத்திலுள்ளார்கள் என்ற கணக்கை நீட்டி முழுக்க ஆதிதமிழர் தேவை. ஆனால் அவர்களது கோரிக்கை களை நிறைவேற்றித் தர எவரும் முன்வருவதில்லை.

இச்சூழலில்தான் இன்று சிறுபான்மையினருக்கென தனி ஒதுக்கீடுகள் தரப்போவதாக அரசியல் கட்சிகள் தேர்தல் வாக்குறுதிகளை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கின்றன. இந்திய அரசியலைப்புச் சட்டவிதிகளின் படி சிறுபான்மையின ருக்கு இட ஒதுக்கீடுகள் அளிக்கப்பட்ட இயலாது என்பதைத் தெரிந்து கொண்டே அரசியல் கட்சிகள் இவ்வாறான பொய் வாக்குறுதிகளை அளித்து வருகின்றன. ஆந்திர அரசு அளித்த சிறுபான்மையிருக்கான ஐந்து விழுக்காட்டு ஆணை நடுவர் மன்றத்தில் அடிபட்டுப் போனது. ஆந்திர முதலமைச்சரைக் கிறித்துவர் என்று சொல்கிறார்கள். ஆந்திரத்துக் கிறித்துவர் களுக்கு அவர் என்ன சலுகைகளைச் செய்துவிட்டார் என்பது கேள்விக் குறியே! பிரம்மானந்த ரெட்டி முதலமைச்சராயிருந்த போதே கிறித்துவர்களுக்கென எந்தச் சலுகையையும் அவர் செய்யவில்லை. ராச சேகர ரெட்டி என்ன செய்துவிடப் போகிறார்.

சிறுபான்மையினர் நலன் பற்றி ஆராய விடுதலை பெற்ற 60 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக தமிழகத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. 1.3.2006இல் நிறுவப்பட்ட இக்குழு ஓராண்டுக்குள் தனது பரிந்துரையை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அடுத்த இரு திங்களில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தற்போது அதன் பணிக்காலத்தை இரண் டாண்டுகளாக நீட்டித்து அரசு ஆணையிட்டுள்ளது. இரண் டாண்டுகளில் அறிக்கை கிடைக்குமா அல்லது அடுத்த தேர்தல் வரை நீளுமா என்பதையும் கூறுவதற்கில்லை. இந்தக்குழு என்னென்ன துறைகளில் தனது ஆய்வறிக்கையைத் தரப் போகிறது என்பதும் எவருக்கும் தெரியாத நிலையில், இக்குழு அமைக்கப்பட்டதற்கான வரவேற்பும் நன்றியும் அறிக்கை களாக வெளிவந்தன. அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டுமே கிறித்துவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தும் தவறானவை என்பதை அண்மைக்கால நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன.

தமிழகத்தில் உள்ள கிறித்துவர்களில் பெரும்பான்மை யோராய் இருக்கும் ஆதிதமிழர்களுக்கும், அவர்களுக்கடுத்த நிலையிலுள்ள வன்னியர்களுக்கும், தாங்கள் கிறித்துவ சமயத்தில் வஞ்சிக்கப்படுகிறோம் என்ற உணர்வு தலைதூக்கியுள்ளது. இந்நிலையில் சிறுபான்மையோருக்கு இடஒதுக்கீடு என்றக் கொள்கையை இருவருமே எற்க மறுக்கின்றனர். ஆதிதமிழர், தாழ்த்தப்பட்டோருக்கான சலுகையையும், வன்னியர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் (இந்து வன்னியர் களைப் போல) தம்மையும் இணைக்க வேண்டும் என்ற சலுகை யையும் எதிர்பார்க்கின்றனர். ஏற்கனவே கிறித்துவப் பரவர் இனத்துக்கு மிகவும் பிற்பட்டோர் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுபான்மையினருக்கான இடஒதுக்கீடு வழங்கப் பட்டால், மேற்கண்டவர்களின் கோரிக்கைகளும் நடப்புச் சலுகைகளும் கிட்டாமற் போவதுடன், சிறுபான்மையினத் தவரில் சிறுபான்மைச் சமூகங்கள், அச்சலுகையைத் தட்டிப் பறித்துக் கொள்ளும் என அஞ்சுகின்றனர். ஆதி தமிழர் பிரிவி லுள்ள கிறித்துவர்களின் 95 விழுக்காட்டினர் இன்னும் பொரு ளியல் கல்வி, மற்றும் வேலை வாய்ப்புகளில் மற்ற கிறித்துவர் களைக் காட்டிலும் பின்தங்கியே உள்ளனர்.

சிறுபான்மையினருக்கானச் சலுகை என்பது இசுலாமியரை யும் சேர்த்து 5 விழுக்காடுகள் அளிக்கப்படும் என்பதே ஐயப்பாட்டுக்குரியது. இதில் 2 விழுக்காடுகள் கிறித்துவர்களுக்குக் கிடைக்கலாம். இந்த இரண்டு விழுக்காட்டில் எத்தனை ஆதி தமிழருக்கு இச்சலுகை கிடைக்கப் பெறும் என்பதை எண்ணிப் பார்த்தால், சிறுபான்மைச் சலுகை என்பது வெறும் கண்துடைப்பே என்பது தெரியவரும். தற்போது ஆதி தமிழரும் மற்றவரும் கோரிவரும் சலுகைளை நீர்த்துப் போகச் செய்யுவும், கிறித்துவர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்காத சிறுபான்மைச் சலுகையை அறிவிக்கப் போராடுவதாகச் கூறு வதும், அரசியல் கட்சிகள் கையாண்டுவரும் தேர்தல் நோக்குத் தந்திரமேயன்றி, வேறல்ல.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் நூற்றுக்கு மேற் பட்ட சாதிகள் இருந்தாலும், அச்சாதிகளில் வன்னியர்கள் மட்டுமே பெரும்பான்மையாக உள்ளனர் என்பது, மற்றவர்கள் மிகச் சிறிய சமூகங்கள் என்பதும் வெள்ளிடைமலை. இந்தப்

பட்டியலில் கிறித்துவ வன்னியர்களையும் இணைத்தால் குறைந்தது 2 விழுக்காடு இடங்களை இந்துவன்னியர்கள் இழக்க வேண்டிவரும் என்பதால், இந்து சமய வன்னியர்கள், கிறித்துவ வன்னியர்களை இப்பட்டியலில் இணைப்பதை எதிர்க்கின்றனர். வன்னியர் இனம் ஓரினம் என்றும் நாமெல்லாம் சொந்த பந்தங்கள் என்று கூறிவரும் அரசியல் கட்சிகள் கூட, கிறித்துவ வன்னியர்களுக்கு சலுகைகளை அளிக்க எதிர்ப்புக் காட்டுகின்றனர். வன்னியர்கள் எந்தச் சமயத்திலிருந்தாலும் வன்னியர்களே என மேடையில் முழங்கி வாக்குகளைக் கேட்கும் கட்சிகள் உண்மையில் நாடமாடுகின்றன என்பதே கடந்தகால நிகழ்வுகளாகும். அரசியல் கட்சிகள் இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கும் நிலையில் கிறித்துவ சமயத்திலுள்ள சமயத்தலைவர்களே கிறித்துவ வன்னியர்களுக்கு இச்சலுகை கிடைக்கத் தடையாக உள்ளனர் என்பது வெள்ளிடை மலை. கிறித்துவ சமயத்தில் பெரும்பான்மையோராக உள்ள பிரிவுகளுக்கு அரசியல், சமூக பொருளியல், கல்வித் துறைகளில் சலுகைகள் கிடைக்கவும் அதற்கான போராட்டங்களை முன்னிறுத்தவும் கிறித்துவ சமயத் தலைவர்கள் தயக்கம் காட்டுவார்களேயானால், எதிர்காலத்தில் கிறித்துவ சமயத்தின் கட்டுகோப்பான தன்மை உடைந்து போகும் என்பதைப் பலரும் இன்று உணருகின்றனர். கிறித்துவர்களின் சமூக நீதியைக் காக்க, அச்சமயத் தலைவர்களே வழி காட்ட வேண்டும் என இன்றைய நிலையில் கிறித்துவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவ்வாறான வழிகாட்டுதல் கிடைக்காது என்பது தெரிந்த ஒன்றாகும். கிறித்துவ சமயத் தலைவர்களுக்குத் தமது மக்களிடம் உண்மையான பற்றிருக்குமானால், அச்சமூக நீதியைத் தாங்கள் ஆளும் மறைமாவட்டங்களில் முதலில் செயல்படுத்திக் காட்டட்டும். பெருவாரியானக் கிறித்துவச் சமூகங்களிலிருந்து குருக்களையும் கன்னியர்களையும் தேர்வுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இதெல்லாம் தேவ அழைத்தல் தொடர்பானவை என்ற சமயப் பூச்சுக்களை இன்னும் கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்பதை உணர்தல் வேண்டும். மறைமாவட்ட வேலைவாய்ப்புகளில், பெரும்பான்மையோருக்கு இட ஒதுக்கீடுகள் அடிப்படையில் வேலைவாய்ப்புகளை அளிக்கப்படும் பள்ளிகள், கல்லூரிகள் ஆலயங்கள் நிலபுலன்கள், வருமானங்கள் ஆகியவை மட்டுமே கிறித்துவ சமயத்தலைவர்கள் ஈடுபடும் பணிகள்

என்று இன்னும் கருதிக் கொண்டிருந்தால், எதிர்காலக் கிறித்துவ உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாமற் போகும். இவை போன்ற நடப்புகளை வெளிப்படையாகப் பேசுவோரையும் எழுதுவோரையும் தனிமைப்படுத்தும் முயற்சிகள் கடந்த காலங் களில் நிகழ்வுற்றன என்றாலும், எதிர்காலத்தில் இவர்களை யாராலும் கட்டுப்படுத்த இயலாமற்போகும் கிறித்துவத் தலைமையைப் புகழ்ந்து கொண்டும், தமது தேவைகளுக்காக நாடகமாடிக் கொண்டும், கிறித்துவத்தின் அடிப்படை நோக்கங்களையே தகர்த்துக் கொண்டிருக்கும் சுயநலக் கும்பல்களை விடுத்து, பொது நோக்கில் கிறித்துவத்தலைமை மீண்டும் ஈடுபட வேண்டும் என்பதே நமது வேணவா. நமது எண்ணம் ஈடேற இறையருள் துணைபுரியட்டும்.

சர். ஏ.டி. பன்னீர் செல்வம் போன்ற தலைவர்கள் கிறித்து வர்களிடையே உருவாக வேண்டும். உலக வரலாற்றில் எந்தத் தலைவனும் உருவாக்கப்படவில்லை. எனவே தன் சமூகமோ, சமயமோ சமயத்தலைமையோ யாரையும் தலைவனாகச் செய்துவிட முடியாது. தன்னலமற்ற மக்கள் தொண்டு, சமூகப் பணிகள், கடுமையான உழைப்பு, இவற்றிற்கும் மேலான மாந்த நேயப் பண்புகள் இருந்தால் யாரும் தலைமை தாங்க இயலும். கிறித்துவ மக்களில் இப்படியொரு தலைமை உருவாக வேண்டும் என்ற பலரின் எண்ணங்கள், 21ஆம் நூற்றாண்டிலாவது நிறைவேறட்டும்.

✧✧✧

ஆசிரியரின் பிற நூல்கள்

1. வெள்ளக் குயில்
   (வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்று நூல்)
2. எபிரேயத்தின் தாய்மொழி தமிழே
   (சொல்லாய்வு நூல்)
3. வானியலின் மூலவர் தமிழரே
   (சொல்லாய்வு நூல்)
4. சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே
   (வரலாற்றுச் சொல்லாய்வு நூல்)
5. தொல்காப்பியச் சிந்தனைகள்
   (வரலாற்றுச் சொல்லாய்வு நூல்)
6. உலகளாவிய தமிழ்
   (சொல்லாய்வு நூல்)
7. உலக மொழிகளில் தமிழின் வேர்ச் சொற்கள்
   (சொல்லாய்வு நூல்)
8. எல்-யா
   (சொல்லாய்வு நூல்)
9. சமற்கிருதத்துக்கும் தாய்மொழி தமிழே
   (சொல்லாய்வு நூல்)
10. Thamizh - The Mother of Hebrew, Semetic and Western Languages
    (English)
11. The Babylonian Thamizh
    (English)
12. தமிழ் நாட்டுக் கிறித்துவம் பகுதி - I
    (வரலாற்று நூல்)
13. தமிழ் நாட்டுக் கிறித்துவம் பகுதி - II
    (வரலாற்று நூல்)

○○○